
# இக்கால உலகிற்குத்
# திருக்குறள்

தொகுதி-2

தொகுப்பாசிரியர்
முனைவர் தி.சே.சுப்பராமன்
முனைவர் சேயோன்
பதிப்பாசிரியர்
முனைவர் சா.கிருட்டினமூர்த்தி



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# இக்கால உலகிற்குத் திருக்குறள்

## தொகுதி - 2

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் தி.சே. சுப்பராமன்
முனைவர் சேயோன்

பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
**International Institute of Tamil Studies**
*II Main Road, C.P.T. Campus, Taramani, Chennai 600 113*

பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு
அண்ணா பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம்
நாள் : 15-01-2004 - 18-01-2004

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Ikkāla Ulakiṟkut Tirukkuṟaḷ - Vol. II |
| Compilers | : | Dr. T.S. Subbaraman<br>Director,<br>Centre for Development of Tamil in Engineering and Technology, Anna University, Chennai-25<br><br>Dr. Cheyon<br>Honorary Secretary<br>Mylai Thiruvalluvar Tamil Sangam<br>Mylapore, Chennai - 600 004 |
| Editor | : | Dr. S. Krishnamoorthy<br>Director, International Institute of Tamil Studies<br>II$^{nd}$ Main Road, C. P. T. Campus<br>T.T.T.I. Post, Chennai - 600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II$^{nd}$ Main Road, C. P. T. Campus, T.T.T.I. Post, Chennai - 600 113; Phone : 2254 2992 |
| Publication No. | : | 476 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2004 |
| Paper used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 points |
| No. of Pages | : | xvi + 288 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 85/- (Rupees Eighty Five Only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road, Chennai - 4 |
| Subject | : | Studies on Tirukkural |


கட்டுரைக் கருத்துகட்குக் கட்டுரையாளரே பொறுப்பு

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# பதிப்புரை

'தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி' என்பார் பரிதிமாற் கலைஞர். இம்மொழியின், உயர்தனிச் செந்நூலாக அமைவது திருக்குறள். திருக்குறள் ஒரு நூல் மட்டுமன்று; அது ஒரு வேதம். குடிமகனிலிருந்து இறைமகன் வரை அனைவர்க்கும் அறிவூட்டும் ஒரு சட்டப் புத்தகம். 'திருக்குறள் தனிமனிதத் தத்துவம்' என்பார் சிலர். 'பொதுவாழ்க்கைத் தத்துவம்' என்பார் பலர். 'இறைத் தத்துவம்' என்பார் இன்னும் பலர். 'உலகத் தத்துவம்' என்பார் உலகோர். இந்நூலைப் படிப்பவர், படித்துப் பயன்பெறுபவர், ஆய்ந்து இன்பம் காண்பவர் என இத்திறத்தார் எண்ணிலடங்கார். மொழி அறிஞர், இலக்கிய அறிஞர் மட்டுமல்லாமல், அறிவியலாளர், பொறியாளர், மருத்துவர், சட்ட வல்லுநர், ஆன்மீகச் சிந்தனையாளர், நாத்திக நோக்காளர், கணிப் பொறியாளர் என இன்ன பிற புதுத்துறை சார்ந்தோர் பலரும் திருக்குறளைத் 'தத்தம் துறை சார்ந்த நூல்' என்று பறைசாற்றிக் கொள்ளுகின்றனர். ஒவ்வொருவரும் இந்நூலைத் 'தனது தனது' என்று உரிமை கொண்டாடும் நிலையிலிருந்தே இந்நூல் அனைவர்க்கும் பொது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இந்நூலுக்கு உரைகண்ட பதின்மர் அல்லாமல், இன்றைய நிலையில் விரிவுரை, விளக்கவுரை, தெளிவுரை, நயவுரைகளுமாக மேலும் பல உரைகளைப் பலரும் இந்நூலுக்கு எழுதியுள்ளனர். திருக்குறளை ஒவ்வொருவரும் தத்தம் நோக்கிலும், போக்கிலும், கருத்திலும், கருத்தர்க்கத்திலும் ஏற்றுக் கொள்கிற நிலையில், இந்நூல் மேலும் விளக்கம் பெற வேண்டிய நூல் என்பதை நாம் அறியலாம். ஏறத்தாழ 150க்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் இந்நூலுக்கு வந்துள்ள நிலையில், எஞ்சியுள்ள உலக மொழிகள் அனைத்திலும் இந்நூல் மொழியாக்கம் பெறும் காலம் சேய்மையில் இல்லை. எந்த மதத்தாரும், எந்த நாட்டாரும், உலகில் எம்மூலையில் உள்ளாரும் தம் வாழ்க்கைக்கும், வழி நடத்துதலுக்குமான பல நெறிமுறைகளை இத்திருக்குறளில் காண்கின்றனர். இதனால்தான், இந்நூல் உலகப் பொதுநூல் எனும் நிலையையும் தகுதியையும் பெறுகிறது.

திருக்குறளைப் பற்றி மேற்கொள்ளப் பெற்றுள்ள ஆய்வுகள், எண்ணிலடங்கா. அறிவுக்கு வள்ளுவர் கூறிய தொட்டனைத் தூறும் மணற்கேணி என்ற தொடர் திருக்குறளுக்கும் பொருந்தும். அறிதோறும் அறியாமை கண்டற்றால் என்ற வள்ளுவத்தின் அறிவூக்கச் சிந்தனைகூட திருக்குறளுக்கும் பொருந்தும். எனவே, தானே விதிகளாய் அமைந்து, அவ்விதிகளுக்கு இலக்கணமாகவும் அமைகிற திருக்குறளை மறை என்றும், அறம் என்றும், ஆணை என்றும் கூறுவதில் வியப்பேதுமில்லை. திருக்குறள் நேற்று மட்டுமன்று; இன்று மட்டுமன்று நாளையும் இம்மன்பதையை வாழ்விக்கிற, வழிநடத்துகிற நூலாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

இத்தகைய திருக்குறள் நம்மைப் பொறுத்தவரை தமிழகத்திற்குரிய நூல் மட்டுமன்று; ஒரு தேசிய நூல் என்பதற்குரிய அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருக்கிறது என்பதை எவராலும் மறுக்க இயலாது. இந்நூலை இன்றைய உலகிற்கு மறுவாசிப்புச் செய்வதன் மூலம் வாழ்க்கை சீரமையும்; வளம்பெறும். இந்நோக்கில் எக்காலத்திற்கும் பொருந்துவதாக அமைந்த திருக்குறள் கருத்துகளை இக்கால உலகிற்கு எடுத்துக் கூறும் நிலையில் இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை என்ற உயிரோட்டப் பொருண்மையை மையமாக வைத்து அண்ணா பல்கலைக்கழகமும், மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து பன்னாட்டு அளவிலான ஒரு கருத்தரங்கை நடத்த ஏற்பாடு செய்யப்பெற்றது.

இக்கருத்தரங்கு சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் நடைபெறுவதற்கான அனைத்துப் பணிகளையும் ஆர்வத்துடனும் பெருமையுடனும் அப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் முனைவர் எ. பாலகுருசாமி அவர்கள் மேற்கொண்டார். அண்ணா பல்கலைக்கழக அறிவியல் தொழில்நுட்பத் தமிழ் மையத்தின் இயக்குநராகிய முனைவர் தி.சே. சுப்பராமன் அவர்கள் ஒருங்கிணைப்பாளராக இருந்து கருத்தரங்கப் பணிகளுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டார். சென்னை வானொலி நிலையத்தின் துணை இயக்குநர் முனைவர் சேயோன் இவ் ஒருங்கிணைப்புப் பணிகளில் இணைந்து செயலாற்றினார். இப்பன்னாட்டுக் கருத்தரங்கிற்குக் கட்டுரைகள் வரவேற்கப்பட்ட நிலையில், பலதுறை ஆய்வாளர்கள், அறிஞர்கள், ஆர்வலர்களிடமிருந்தும் கட்டுரைகள் பெறப் பட்டன. இக்கட்டுரைகள் திருக்குறளைப் பல்வேறு பரிமாணங்களில் கண்டு மகிழ்ந்து அனுபவித்த தன்மையை

வெளிப்படுத்துகின்றன. அறிவியல் பற்றிக் கட்டுரைகள் வந்தன; பொறியியல் தொழில்நுட்பம் பற்றிக் கட்டுரைகள் வந்தன; மென்பொருள் பற்றியும் கட்டுரைகள் வந்தன. அரசியல் பற்றிய கட்டுரைகளும் பெறப்பட்டன; சட்டம் பற்றியும் கட்டுரைகளும் பெறப்பட்டன. இல்லறம் பற்றிய கட்டுரைகளும் ஏராளம். தெலுங்கு வேமன்னா சதகம் முதல், இந்தி ரகீம் சத்சாயீ வரையிலும் கன்னடம், மராட்டி, ஒரிசா போன்ற மொழி ஒப்பீட்டுக் கட்டுரைகளும் பெறப்பட்டன. அனைத்துக் கட்டுரைகளும் அறநூலாம் திருக்குறளை அனைவர்க்கும் எளிய முறையில் எடுத்து விளக்குவதாக, ஆய்வு செய்வதாக அமைந்திருந்தன என்பது குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒன்றாகும். சட்டம் பற்றிய கட்டுரை ஒன்றில் நீதி அரசர் தி.நெ. வள்ளிநாயகம் அவர்கள், 'சட்டவிதிகளை இ.பி.கோ. என்று வழங்குவதைப் போலத் திருவள்ளுவர் கூறும் அறநெறிகளைத் தி.பி.கோ. என்று கூறலாம்' என்று கூறியிருப்பதை, உண்மையிலேயே திருக்குறளின் எழுச்சியும், தாக்கமும் எந்த அளவிற்கு இருந்திருக்கின்றன என்பதற்குச் சான்றாகக் கூறலாம்.

இக்கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாகக் கருத்தரங்க நாளன்றே வெளியிட வேண்டும் என்று கருதி, இப்பொறுப்பை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஏற்றுக்கொள்ள, அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக் கொண்ட அமைச்சர் அவர்கள் இக்கட்டுரை நூல் மாநாட்டின் நிகழ்வன்றே வெளிவரவேண்டுமென்பதில் தனிக்கவனம் செலுத்தி எங்களுக்கு அறிவுரை வழங்கினார். இதற்கு மாநாட்டுக் குழுவின் சார்பாகவும், நிறுவனத்தின் சார்பாகவும் நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை அவர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகிறேன். கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொகுத்து, நூலாக வெளியிட எங்களுக்கு அளித்த முனைவர் தி.சே. சுப்பராமன் அவர்களுக்கும், முனைவர் சேயோன் அவர்களுக்கும் நன்றி. இக்கட்டுரைகளை முறையாகச் செப்பம் செய்து, நூல் வடிவில் பதிப்புச் செய்து, மூன்று தொகுதிகளாக அழகிய முறையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளிக்கொணர்ந்துள்ளது. திருக்குறளின் 133 அதிகாரங்களைக் குறிப்பிடும் வகையில் இந்நூலின் இரு தொகுதிகளிலும் 133 கட்டுரைகள் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்க பதிப்புப் பணியாகும். ஒவ்வொரு கட்டுரையிலும் ஒரு திருவள்ளுவர்

வரைபடமாக, 133 திருவள்ளுவர் வரைபடங்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

இந்நூலின் பதிப்புப் பணி தொடங்கிய நாள் முதல் பணி நிறைவுறும் நாள்வரை உடனிருந்து அனைத்து நிலைகளிலும் உதவிய இந்நிறுவனத் திட்டக் கல்வியர் முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கு என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் தொகுதிகளுக்கு மெய்ப்புத்திருத்தம் செய்யும் நிலையில் உதவிபுரிந்த இந்நிறுவனப் பேராசிரியர் முனைவர் அன்னி தாமசு, இணைப் பேராசிரியர் ச. சிவகாமி, ஆராய்ச்சி உதவியாளர் முனைவர் கு. நிர்மலாதேவி, ஆய்வு மாணவி செல்வி க. ஜெயந்தி ஆகியோர்க்கு என் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப. அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இத்தொகுதிகளுக்குக் கூடுதல் பொறுப்புடனும், கவனத்துடனும் ஒளி அச்சுக் கோப்புச் செய்து தந்த நிறுவனக் கணிப்பொறியாளர்கள் ஸ். கோபிநாத், திருமதி ந. லட்சுமி, திருமதி பி. கௌசல்யா, திருமதி இரா. வெண்ணிலா, திரு. சு. கண்ணன் ஆகியோர்க்கு என் நன்றியும் பாராட்டுகளும். அழகிய முறையில் மேலட்டை வடிவமைத்து இத்தொகுதிகளை அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத் தார்க்கு என் நன்றிகள் உரியன.

சென்னை
13-01-2004

சா. கிருட்டினமூர்த்தி

# முன்னுரை

வழிபாட்டிற்கும் போற்றுதலுக்குமுரிய வள்ளுவரின் திருக்குறள் நாடு, மொழி, இனம், மதம், காலம் இவற்றைக் கடந்து வாழ்கின்ற கருத்துக் கருவூலம். இப்பொதுத் தன்மையே அதன் தனிச்சிறப்பு. தமிழனை உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கச் செய்தது பொய்யாமொழிப் புலவரின் முப்பால். மனித வாழ்வோடு இயைந்த பல்வேறு துறைகளும் சிறந்து விளங்கத் திருக்குறள் வழிகாட்டுகிறது. என்றைக்கும் எத்துறை சார்ந்த வல்லுநர்க்கும் அவரவர் துறைகளில் ஏற்படுகின்ற சிக்கல்களுக்குத் தீர்வு சொல்லும் ஞானப்பேழை வள்ளுவனின் வாய்மொழி. இதனாலே தான்,

எல்லாப் பொருளும் இதன்பாலுள விதன்பா
லில்லாத வெப்பொருளும் இல்லையால்

என்றார் மதுரைத் தமிழ்நாகனார். திருக்குறளின் இத்தன்மையை வலியுறுத்தும் வகையில் மாநாடு நடத்திட வேண்டுமென நம் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா, மாட்சிமை பொருந்திய திரு அப்துல் கலாம் அவர்கள் தன் கருத்தினை அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் தெரிவிக்க, இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை என்ற தலைப்பில் பன்னாட்டுத் திருக்குறள் கருத்தரங்க மாநாடு நடத்தத் திட்டமிடப்பட்டது. மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் கைகொடுத்தன. அன்று விதைத்த விதை இன்று மரமாகிப் பூத்து மணம் பரப்புகிறது. அதன் எழில்மிகு கிளைகளில் பூத்த இனிய மலர்களே இந்நூலில் காணக்கிடக்கின்ற கட்டுரைகள். எங்கள் எதிர்பார்ப்புக்கும் மீறிய எண்ணிக்கையில் வந்து குவிந்தன தமிழ் ஆர்வலர்களின் கருத்துப் படையல்கள்.

தமிழ்த்துறை மட்டுமன்றி அனைத்துத் துறையைச் சார்ந்தவர்களும் திருக்குறள் இன்றைய சிக்கல் தீர்வுக் களஞ்சியமாக விளங்குவதை வெளிப்படுத்தும் வகையில் எழுதிய

கட்டுரைகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அழகிய நூலாகப் பதிப்பித்திருக்கிறது. திருக்குறளின் கருத்துகள் மற்றமொழி இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் அவற்றின் மேன்மையைப் போற்றும் வகையில் பிறமொழி வல்லுநர்களின் கட்டுரைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இக்கால உலகிற்குத் திருக்குறள் என்ற இந்நூல் உருவாகக் காரணமாய் இருந்த அனைத்து நல்லிதயங்களுக்கும், ஊக்கமும் ஆக்கமும் அளித்த அரசிற்கும் நன்றி பாராட்டுகிறோம். பலரும் தங்கள் தங்கள் துறைகளில் சிறந்து மேலோங்க இந்நூல் பயன்படுமென உறுதியாக நம்புகிறோம்.

முனைவர் தி.சே. சுப்பராமன்
முனைவர் சேயோன்

# கட்டுரையாளர் பட்டியல்

## பொருளாதாரம்

1. முனைவர் சி. சந்திரோய பெருமாள்
இணைப்பேராசிரியர்
மேலாண்மையியல் துறை
ஸ்ரீ முத்துகுமாரன் தொழில்நுட்ப நிறுவனம்
சென்னை 600 069

2. திருமதி செ. ஹேமலதா
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்
சிதம்பரம் 608 002

3. திரு. இரா. செல்வராஜ்
ஆய்வாளர், தமிழ்த் துறை
அறை எண் 59, ஆடவர் விடுதி
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை - 46

4. முனைவர் கோ. ஜெயபாலன்
இயற்பியல் துறை
அண்ணா பல்கலைக்கழகம்
சென்னை - 600 025

5. திரு. நா. ஜானகிராமன்
ஆய்வாளர், தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி - 24

6. டாக்டர் என். ராஜலட்சுமி
பொருளாதாரப் பேராசிரியர்
டபிள்யூ-79, அண்ணா நகர்
சென்னை - 600 040

7. எ. ஜுலியட்
சென்னை

8. செல்வி ப. யசோதா
தரவு உள்ளீட்டாளர்
பொறியியல் தொழில்நுட்பத் தமிழ் வளர்ச்சி மையம்
அண்ணா பல்கலைக்கழகம்
சென்னை - 25

## அரசியல்

1. திருமதி ஆர். அனுராதா
முதுநிலை விரிவுரையாளர்
மொழித்துறை - தமிழ்
எம்ஓபி. வைணவ மகளிர் கல்லூரி
20, 4வது சந்து,
நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம்
சென்னை - 34

2. திருமதி கோ. இராதிகா
த/பெ. கி. கோதண்டபாணி
7/பி/4சஞ்சீவிராயர் கோவில் தெரு
பரங்கிப்பேட்டை - 608 502
சிதம்பரம் தாலுகா
கடலூர் மாவட்டம்

3. திருமதி யு. ஜெயபாரதி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்
சிதரம்பரம் - 608 002

4. திரு க. விநாயகமூர்த்தி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 5

5. முனைவர் இரா. சந்திரசேகரன்
தமிழ் விரிவுரையாளர்
கே.எஸ்.ரெங்கசாமி காலை
மற்றும் அறிவியல் கல்லூரி
திருச்செங்கோடு - 637 209

6. நீதியரசர் தி.நெ. வள்ளிநாயகம்
ஜம்புபாலா டவர்ஸ்
எண். 2,3 வது மெயின்ரோடு
அண்ணாநகர் கிழக்கு
சென்னை - 40

7. முனைவர் மு. முத்துவேலு
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி
நந்தனம், சென்னை - 35

## மதநல்லிணக்கம்

1. திரு சோ. சண்முகம், எம்ஏ, பிஎட்
கருத்தியல் கண்காணிப்பாளர்
தேர்வுத்துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர் - 608 002

2. எஸ்மா கவிஞர் சூலம் சுப்பராயன்
6/263, முத்தமிழ் நகர்
சென்னை - 118

3. முனைவர் இஎம். இராமச்சந்திரன்
91, செங்குந்தர் வடக்குத் தெரு
அம்பாசமுத்திரம் - 627 401
திருநெல்வேலி மாவட்டம்

4. திரு. கச. பெரியநாயகம்
தேவநல்லூர் அஞ்சல்
அ.கு.எண். 627 401
நாங்குநேரி வட்டம்
திருநெல்வேலி மாவட்டம்

5. திருமதி ச. அனிதா
விரைவுரையாளர்
தகவல் தொழில்நுட்பப்பிரிவு
ஆர்எம்கே. பொறியியல் கல்லூரி
கவரைப்பேட்டை
கும்மிடிப்பூண்டி தாலுகா
திருவள்ளூர் மாவட்டம்

6. திருமதி க.ஜீ. உஷா நந்தினி
உதவியாளர்
பொறியியல் தொழில்நுட்பத்
தமிழ் வளர்ச்சி மையம்
அண்ணா பல்கலைக்கழகம்
சென்னை - 600 025

## இல்லறம்

1. செல்வி க. ஆதிரை
தகவல் தொழில்நுட்பம்
முதலாம் ஆண்டு ஜி பிரிவு
எஸ்எஸ்என்பொறியியல் கல்லூரி
காலவாக்கம், சென்னை - 603 110

2. திருமதி நா.து. சிவகாமசுந்தரி
எம்.ஏ., எம்.பில்.
கௌரவ விரிவுரையாளர்
சென்னை சமுதாயக் கல்லூரி
சென்னை

3. திரு. வ. வேம்பையன்
தொல்காப்பியர் இல்லம்
3/25 வள்ளலார் தெரு
இணைவு - 2
மறைமலை நகர் - 603 209

4. திரு. அ. கோவலன்
ஆராய்ச்சி மாணவர்
அறைஎண்.63, ஆடவர் விடுதி
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641 046

5. திரு. வே. இராஜா
ஆய்வாளர், தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 46

6. திருமதி தா.க. அனுராதா
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்
சிதம்பரம் - 608 002

7. திரு.கே.எஸ். இராமநாதன்
உதவிப் பேராசிரியர்
இயந்திரவியல் துறை
எம்.ஏ.எம். பொறியியல் கல்லூரி
சிறுகனூர், திருச்சி - 621 105

8. திருமதி. ஆ. இலலிதா சுந்தரம்
எம்.ஏ., எம்.எட்
திருக்குறள் இல்லம்
திருவள்ளுவர் திருக்குறள்
நற்பணி மையம், 14, வள்ளலார் தெரு
ஜெகதாம்பிகை நகர்
பாடி, சென்னை - 50

9. திரு. இரா. முருகன்
ஆய்வு மாணவர், தமிழியற் புலம்
47, தெற்குத் தெரு
பூரணாங்குப்பம் அஞ்சல்
புதுவை - 605 007

10. திருமதி கமலாசுதன்
53/இ, டைப் 1 குடியிருப்பு
வட்டம் 22, நெய்வேலி - 7

11. திரு. கா. காந்தி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
கிராமியப் பல்கலைக்கழகம்
காந்தி கிராமம் - 624 302
திண்டுக்கல் மாவட்டம்

12. திருமதி ஜெ.கெ. வாசுகி
செண்பகம் இல்லம்
68, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை
மைலாப்பூர், சென்னை - 4

13. திருமதி அ. தேவகி
கல்வியியல் விரிவுரையாளர் (தமிழ்)
361 எ/இ.பி. காலனி
பெருமாபாளையம்
வாசவி கல்லூரி அஞ்சல்
ஈரோடு - 638 316

14. திரு. மதியழகன்
ஈரோடு

15. முனைவர் அ. அறிவுநம்பி
பேராசிரியர் - தலைவர்
சுப்பிரமணிய பாரதியார்
தமிழியற்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி - 605 014

16. திரு. வீ. பாலமுருகன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வு மையம்
அய்யநாடார் ஜானகியம்மாள் கல்லூரி
சிவகாசி

17. முனைவர் சி. கலைமகள்
விரிவுரையாளர் - தமிழ்
6, சாய்விஷால்
பாடியா கார்டன் எதிரில்
மணப்பாக்கம் மெயின் ரோடு
மணப்பாக்கம், சென்னை - 116

## சமுதாயநோக்கு

1. திரு. பி.டி. கிங்ஸ்டன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
அறை எண் 93
ஆண்கள் விடுதி
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 046

2. திரு எம். முத்துக்குமார்
விரிவுரையாளர், ஆங்கிலத் துறை
ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்லூரி
எஸ். ஆர். கே. வி. அஞ்சல்
கோயம்புத்தூர்

3. Dr. E.R. Subrahmanyam
Reader in Chemistry
S.K.B.R. College
Amalapuram - 533 201
E.G.DT. (A.P.)

4. திரு. நாராயணதுரைக்கண்ணு
எம்.ஏ., எம்பில்., பி.எட்., டி.எஸ்.எஸ்.
பணி நிறைவுற்ற ஆசிரியர்
இ 3, அரசு குடியிருப்பு
பூதாமூர் 606 001
விருத்தாசலம் வட்டம்
கடலூர் மாவட்டம்

5. திரு. சி.கே. இரவிசங்கர்
துகிலியல் துறைத்தலைவர்
கே.எஸ்.ஆர். பொறியியல் கல்லூரி
கே.எஸ்.ஆர் கல்வி நகர்
திருச்செங்கோடு - 637 209

6. திரு. சி. அழகர்
முனைவர்பட்ட ஆய்வாளர்
அய்யநாடார் ஜானகியம்மாள் கல்லூரி
சிவகாசி

7. திரு. தா. டைட்டஸ் ஸ்மித்
முனைவர் பட்ட ஆய்வாளர்
அய்யநாடார் ஜானகியம்மாள் கல்லூரி
சிவகாசி

8. முனைவர் நா. தனராஜன்
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
ம.இரா.அரசினர் கலைக் கல்லூரி
மன்னார் குடி - 614 001

## பொருளடக்கம்

### பொருளாதாரம்

1. The Factors of Production in Thirukkural and World Peace 3
- C. Chendroyaperumal

2. திருவள்ளுவர் கூறும் பொருளாதாரம் 15
- செ. ஹேமலதா

3. திருக்குறள் கூறும் வருவாய் முறைகள் 19
- இரா. செல்வராஜ்

4. மேழியின் மேன்மை 23
- கோ. ஜெயபாலன்

5. திருவள்ளுவரின் பொருளாதாரச் சிந்தனைகள் 30
- நா. ஜானகிராமன்

6. Economics of Thiruvalluvar on Water and Agriculture 36
- N. Rajalakshmi & A. Juliet

7. வள்ளுவரின் பொருள் ஆதாரக் கோட்பாடுகள் 43
- ப. யசோதா

### அரசியல்

8. திருக்குறள் காட்டும் அரசியல் 51
- ஆர். அனுராதா

9. திருவள்ளுவர் கூறும் அரசியல் பொதுநெறி 59
- கோ. இராதிகா

10. திருவள்ளுவர் உணர்த்தும் அரசியல் 66
- யு. ஜெயபாரதி

11. அரசியல் - சொற்பொருள் விளக்கம் 72
- விநாயகமூர்த்தி

12. திருக்குறள் - மநுதர்மம் அரசியல் நெறிகள் ஒப்பியலாய்வு 80
- இரா. சந்திரசேகரன்

13. சட்டம் - வள்ளுவர் காட்டும் வழியில் 87
- தி.நெ. வள்ளிநாயகம்

14. திருக்குறளும் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டமும் 98
- மு. முத்துவேலு

## மதநல்லிணக்கம்

15. திருக்குறளில் சைவ சமயம் 107
- சோ. சண்முகம்

16. இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை மதநல்லிணக்கம் 114
- சூலம் சுப்பராயன்

17. இக்கால உலகின் மதநல்லிணக்கத்திற்குத் திருக்குறள் தேவை 121
- இ.எம். ராமச்சந்திரன்

18. மதநல்லிணக்கம் 127
- க.ச. பெரியநாயகம்

19. மதநல்லிணக்கத்தில் திருக்குறளின் பங்கு 131
- ச. அனிதா

20. மனிதமும் மதமும் 138
- க.ஜீ. உஷா நந்தினி

## இல்லறம்

21. இல்லறம் 147
- க. ஆதிரை

22. வள்ளுவர் காட்டும் இல்லறப் பண்பாடு 151
- நா.து. சிவகாமசுந்தரி

23. இல்லறம் - வாழ்வியல் வெற்றிக்கு வள்ளுவம் 157
- வ. வேம்பையன் & அ. கோவலன்

24. வள்ளுவர் காட்டும் இல்லற மாண்பு 161
- வே. இராஜா

25. திருவள்ளுவர் உணர்த்தும் இல்லறம் 166
- தா.க. அனுராதா

26. வள்ளுவத்தில் இல்லறம் 174
- கே.எஸ். இராமநாதன்

27. நல்லாண்மை என்பது இல்லாண்மையே 178
- இலலிதா சுந்தரம்

28. வள்ளுவ இல்லறம் 186
- இரா. முருகன்

29. அறன் எனப்படுவது........? 192
- கமலா சுதன்

30. திருவள்ளுவர் கண்ட இல்லறச் சமூகம் 198
- கா. காந்தி

31. வளமான இல்லறத்திற்கு வள்ளுவர் தரும் காமத்துப்பால் 206
- வாசுகி

32. இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை 215
- அ. தேவகி & து. மதியழகன்

33. இன்றைய தேவை: அறவியல் நோக்கிலான வள்ளுவம் 222
- அ. அறிவுநம்பி

34. இன்றைய குடும்பச் சிக்கல்களும் வள்ளுவர் தரும் தீர்வுகளும் 227
- வீ. பாலமுருகன்

35. வள்ளுவரின் வாசிப்பும் விழைவும் - இல்லறம் 235
- சி. கலைமகள்

சமுதாய நோக்கு

36. சமுதாயத்தில் வள்ளுவர் சுட்டும் அன்பு 243
- பி.டி. கிங்ஸ்டன்

37. Thiruvalluvar's Social Realism to the Modern world 249
- M. Muthukumar

38. The Need for inclusion of Thirukkural in the Curriculam 254
- E.R. Subrahmaniyam

39. வள்ளுவம் காண விரும்பிய சமுதாயம் 258
- நாராயண துரைக்கண்ணு

40. இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை சமுதாயநோக்கு 262
- சி.கே. இரவிசங்கர்

41. வள்ளுவரின் பெண்மையும் இக்காலப் பெண்ணியப் பார்வையும் 271
- சி. அழகர்

42. இன்றைய இளைஞர்களுக்குத் திருவள்ளுவரின் வாழ்வியல் நெறிகள் 276
- தா. டைட்டஸ் ஸ்மித்

43. வள்ளுவம் காட்டும் வாழ்வியல் நெறி 281
- நா. தனராசன்

# பொருளாதாரம்

# THE FACTORS OF PRODUCTION IN THIRUKKURAL AND WORLD PEACE

C. Chendroyaperumal

## Capitalism, Socialism and World Peace

*Thirukkural,* where *Thiru* means 'success' and 'wealth' and *Kural* means 'in brief', states that "the harm caused to one's own self by the self for lack of wisdom is so great that even one's own warning enemy cannot do it" (kural-843). This statement aptly describes the long-fought wars of the mankind, armed or economic whether overt or covert, in the 19th and recent centuries, causing enormous harm to themselves defending capitalism or socialism or communism out of fear and suspicion for want of clear, correct and full wisdom on the 'factors of production'. For, the root cause of this conflict between capitalism and socialism seems to lie on the competing claim to a lion's share in the output-effect of the conversion process by two factors of production namely 'labor' under socialism and 'capital' under capitalism. The mankind continues to suffer even today from this clashing man-made'isms' either being at the



extremes of socialism or capitalism, or somewhere in between as mixed economies.

**The Economy and Factors of Production**

An economy is a system of circular flow of four basic economic activities namely production, distribution, exchange and consumption. These are to be carried out continuously for perpetual survival of the mankind. Production, in general, is defined as the process of conversion of the inputs into outputs. A 'factor' of production is that without which the 'output' of the production process would not result. Economic Literature has identified Land, Labor and Capital as factors of production' (Hicks, p.46). Entrepreneurship is considered to be the fourth factor. 'Land' is defined to mean the resources on the surface of the Earth, below it and above it. Labor is the human labor. Capital is money and machines of all types. Entrepreneurship is risking the money into productive activities and succeeding in it. The resultant of the production process is the 'output' in physical units or the revenue in monetary terms. It is to be distributed to these factors as a share of their contribution to the production process as rent, wages, interest and 'normal profit' revenue after paying for the factors of production is termed as profit under capitalism or surplus value under socialism. The people, owners of these factors of production, use these distributed shares for consumption which in turn causes the economic-activities-cycle to continue. Conflict arises when profit arises. The owner of capital claims this above-normal profit on the basis of 'capital is the cause of profits', whereas the labor claims this as surplus value as their rightful due on the basis of 'labor is the cause of production, thus the cause of surplus value.' Though economic literature lists a number of objectives for the firms, theoretically and empirically, an undisputed objective is to break-even or profit making. This is possible either by maximizing revenue or minimizing costs or a combination of both. Minimizing costs, by whatever means like mechanization, innovations and computerization means minimizing the shares distributed to the factors which reduces their consumption and thereby reduces the circular flow a economic activities, thus the continued livelihood of all. Moreover all instruments are basically meant to substitute the functions of human organs, thus they substitute human labor resulting in reduced employment of human labor. So when the livelihood is threatened the obvious consequences are conflicts

and violence deteriorating the economy further causing a vicious cycle of harm to all.

**The factors of Production in Thirukkural**

Text books define production as the process of conversion of inputs into outputs. Bhagavat Gita defines production as 'work' as the creative acts which bring forth all 'forms' into existence (Bhagavat Gita: chapter-8, Sloka-3) whereas *Avvaikkural* defines production as *"Paramaaya Sakthiyul Panchamaa Bhudham Tharam maaril thondrum Pirappu"* (Singaravelan, p. 1) meaning 'production or birth occurs when the qualities[1] of the five great 'forms' (namely solids, liquids, fire, gases and space) of the eternal Energy change 'in' the greatest Energy-sphere. The scientific approach is to study a thing through the objective-eyes of cause-effect relationships. All modern sciences study only the indestructible Energy in three states, namely solid, liquid and gas and list the different cause-effect relationships uniquely as Physical Laws or Effects named after the scientists or some other basis. Therefore a scientific study of production refers to identifying the causes of production. *Thirukkural's* scientific definition of the factors of production is found in the chapter entitled 'Production Technology' *(vinai cheyalvagai)* as:

**Porul Karuvi Kaalum Vinai Idanodu Eyndhum**
**Irul theera Yenni Cheyal** *(Kural 675)*

It means that 'materials *(porul)*, instruments *(karuvi)*, time *(kaalam)*, work *(vinai)* and place *(idam)* are the five causes or factors to be thought about, planned and measured before acting to remove the darkness of ignorance. 'To remove the ignorance about the production function, this couplet can be remembered as 'Production is a function of (1) materials, (2) instruments, (3) time, (4) work, and (5) place'. Materials are those that become the output. Instruments are those materials or non-materials that merely aid the production process but they do not become a part of the output. Time refers to activity time. Work is a set of operations. Place refers to land area.[2] It is important to note the sequence in which the factors are to be analyzed. These factors of production are heterogenous in nature and therefore one factor cannot be substituted for another, unlike the Economic Literature which assumes substitutability between labor and capital. *Thirukkural's* five factors seem to explain all 'conversions' or 'productions'

universally and explain the factors of production identified by the western economic literature also as given below:

| | | | | |
|---|---|---|---|---|
| **Thirukkural :** | | | | |
| | Production = f (Material, | Instruments | Time, Work, | Place) |
| **Economic Literature :** | ↓ | ↓ | | ↓ |
| | Production = f (Land. | Labor<br>Capital<br>Entrpreneurship | | Land |

'Land' comes under both 'Materials' and 'Place' since 'land' is defined to mean both land area and resources. 'Labor, Capital and Entreneurship' come under 'Instruments', since they merely help in the process of producing the output without converting themselves to become a part of the output. Thus labor, entrepreneuship are only human actions and capital (money and machines which substitute human actions) are only 'instruments' and homogenous in their function. Bhagavat Gita also clarifies the role of labourer as the doer as an instrument as: "always you are responsible only to perform the action and not for its effects and do not let the effects of your actions neither be the cause of your performance of action nor for addiction for the non-performance of action' (Bhagavat Gita, Chapter-2, Sloka-47), for, 'human being is only an instrument' (Bhagavat Gita, Chapter-11, Sloka-33). The functional organs (instruments), the performance or action and the doer are the constituent components of any work (Bhagavat Gita, Chapter-18, Sloka-18). *Thirukkural* recognizes 'time' explicitly as a separate factor of production unlike the western economic literature and the later recognizes the 'place-factor' under 'land'. But 'materials' and 'place' are heterogeneous in nature, thus they have zero substitutability between them. Hence these two need to be recognized as two distinct factors of production, else considering these two factors as a single factor as in the Western Economic Literature, is unscientific, erroneous and invalid.

**Causal Time**

There is always a time-distance between the occurrence of the cause and the occurrence of its effect. That is, any effect has more than one cause namely Time as the primary cause and others. This is known variously as causal-time or gestation-time or time-lag. The nature of Time is that it is a unique non-Energy entity, omnipresent, universal, causeless primary necessary and sufficient

cause for all effects. Therefore time is the primary cause and controls all other factos of production, all phenomena and all living beings proving Subramanya Bharathi's claim that "the source of materials is one, called Energy, all the three worlds are Energy's play on the plane of Time..." Therefore the Time as a cause of all productions has a share in the output.

## Causal Function

From the view of causality if the 'product' is the effect caused by five causes then all the five causes have an equal share in the effect because even if one cause becomes zero then the effect will also become zero. No single cause of production can be more important than any other, for, in any causal relationship each one of the causes is 'equally' important. For instance all the nine systems in a human being are equally important for living irrespective of their size. Therefore all the human beings should realize that (1) the three factors namely 'Labor, capital and entreneurship' are only 'instruments' and that they are only one of the five causes merely helping in the conversion of the materials into output and that they are not the cause of other factors also. Human beings with the aid of other factors of production make change one in the 'form' of the ever existing and indestructible Matter; (2) the human beings do not even cause their own 'labor, for, it is only the inputs into the human being that cause labor; (3) all the human beings are made up of the same Omnipresent, Omnipotent Energy, controlled and killed by Time in the Energy-sphere. This implies that the human being (whether laborer or capitalist) is only one among the components of 'work'. This being so, attributing the cause of the output-effect to this 'doer' alone is irrational and unscientific. (4) All the five causes are heterogeneous and are therefore equally important. Hence they should have an equal share in the effect-output.

## System Objective of the World Economy

The system objective of the Economy is 'to acquire, maintain (subsistence of) the mankind and the Earth containing the mankind' as can be inferred from the definition of the 'Science of Wealth', Arthasastra, (Shamasastry, p. 469) by Kautilya long before Adam Smith, the Father of Modern Economics. It is true wisdom, indeed, to view the whole world as a single integrated economic system simply because the Earth is one single object with water

determining the land boundariés on its surface. Any change occurring on the Earth, whether caused by the cosmic bodies or human beings, certainly affects the whole Earth though mankind is unable to predict the timing, place and its intensity. All the beings are one and the same Earth taking different forms and colors. Therefore people in one part of the Earth should care for the needy people in other parts of the Earth as brothers and sisters with kindness and share their wealth to help them remove the most painful of the worst disease of hunger. For, the first idea of prime importance, from the knowledge of scholars, is to produce, maintain, protect and grow all living beings through 'sharing' with all living beings and consume (kural -322). Else, 'what is the use of intelligence if one does not feel others pain as one's own? (kural 315). Therefore 'those who have wealth should give and help the poor without expecting anything in return like the rain giving drinkable water essential for survival and welfare of the whole world' (kural 211). For, wealth surely removes poverty as light surely removes darkness in any land we thing of (kural 753). 'The one with wealth who lets others use it is like a use-tree yielding wealth-fruits to the local area' (kural 216). A seed of a wealth-fruit from the use-tree (or consumption tree) will give rise to many more use-trees implying a chain of use-tree yielding wealth-fruits reproducing use-tree, ad infinitum. (This implies the concepts of Multiplier, Accelerator and the Leverage effect in Economic Science!). Hence *Thirukkural* strongly advocates for making wealth (kural 759) and advises the business people 'to do business and foster it with the business people considering all others as if they are their own (kural 120), for, a soul profits only in giving (wealth) to the poor and in living a praiseworthy life (kural 231). For this to happen 'only those who have the holistic or macro-macro view of human activities, akin to seeing the battle of elephants from atop at hillock, should undertake work to produce anything' (kural 758). The only sure solution to the problem of conflicts, by inference, is to be generous and 'give wealth (kural 851) to one's mite' (to the needy people) for the growth and maintenance of wealth (kural 477), for, 'the wealth with a very generous person is like a medicinal-tree giving unfailing cures' (kural 217).

**Owners of Factors of Production**

Economic Literature presumes that the factors of production are owned by human beings and hence their competing claims on

the output cause conflicts. A scientific study of human beings would show the obviously the simplest truth that they are also the Earth as only bundles of billions of atoms since the human body grows from a single cell converting the food and other inputs, which are also nothing but atoms. So are the factors of production namely materials, land and instruments. These atoms are nothing but the same all-might 'Energy'. Therefore this infinitely vast Energy is the materials, the products, and also the owner or possessor. Do the human beings hold the Earth or the Earth holds the human beings? All the beings are one and the same Earth taking different forms and colors and become part of the Earth again on death. Thus all human beings irrespective of place or time or color or group are the same in 'content' and therefore all are equal proving Subramaniya Bharathi's claim, "crows and sparrows are our kind; the long seas and mountains are our clan" (Bharathiar Kavidhaigal, p.181). One can not claim possession (ownership) of even ones labor (including entrepreneurship) also, since it is only the food and other inputs consumed that cause the human organs to function, for, their stoppage stops the human functioning, consequently their labor. Mankind's own thing is only their own children whereas their wealth comes from their own works' (kural 63). Therefore human beings are not the owners of the factors of production as maintained in the economic literature. All the human beings of the present and future have equally equal claim on the resultant of the production process since they are the same Earth, without any exception!

**Resolution of conflict between Capitalism and Socialism for World Peace**

**(A) Labor**

*Thirukkural* helps in resolving the conflict between capitalism and socialism for world peace. The conflict is due to the competing claim for a bigger share in the above normal profit by claiming their dominant influence on the effect. *Thirukkural* also maintains that both labor and capital are essential. It emphasizes that 'labor produces wealth and the absence of labor will introduce poverty' (kural 616). 'If something is not possible even by the all-mighty God labor straining the human body and applying the truth (i.e. cause-effect relationships) will certainly yield the wage' (kural 619). By inference 'if the truth is not exploited by labor, then even the all-mighty God can not give it.'

## (B) Capital

*Thirukkural* also categorically states that 'there is no profit for those who do not have the capital and there is no stability without production produced by the desire-base' (kural 449). *Thirukkural* strongly advocates for making wealth (wealth maximizing objective!) (kural 759) for the following reasons: (1) Wealth is a powerful sharp weapon (kural 759), and (2) wealth can certainly cut/remove poverty as light removes darkness in any land (kural 753), (3) Wealth gives 'order' and pleasure (welfare) if it is the resultant of due consideration to order, wealth, pleasure and threat to life and without making harmful acts (kural 754 and 501) and if it is produced without killing and with kindness (kural 212). (4) The very purpose of all industrious labor in producing wealth is only to help the related people by giving it[3] (kural 212) and (5) the skill of those performing (productive activities) is to satisfy the hunger of people after production (kural 225). (6) Wealth with those of higher (or holistic) intelligence is so very useful like a public tank full with drinkable water for all the people (kural 215). (7) There is no better superior welfare act in this whole of the modern world than sharing wealth to others as help (kural 213), since (8) 'poverty is the most painful of the painful' (kural 1041). Though *Thirukkural* clearly maintains that wealth and labor are essential and though the sequence in kural 675 shows clearly wealth as the 'initial' factor and labor as the final and deciding factor (for, when labor is zero, *ceteris paribus,* production would be zero and when labor is zero capital would also be zero as implied in kura 616) it also clarifies that they are merely two of the five factors in any production function (kural 675).

## (C) Conflicts

Peace means absence of conflicts. 'Conflict is a disease to all beings caused by the absence of the characteristic of sharing' (kural 851). It is very important not to cause harm in view of conflict even if one is miserly with respect to sharing' (kural 852). The removal of the distressing conflict-disease will yield stable (i.e. never decreasing) and non-destructive peace (kural 853). If the pain-cycle-causing conflict is destroyed then that will yield pleasure-cycle (kural 854). Else, the life of those saying that 'increasing conflicting is good' will be of much instability and destruction (kural-856). For, those who increase conflicts will not see real wealth

since taking to conflicts is of harmful intelligence (kural 857). 'It is productive (of wealth) to take to not-to-conflict whereas encouraging increased conflicts will only increase destruction (kural 858). Because, one will not be able see conflicts when wealth is coming in and will only increase conflicts to cause destruction (kural 859). Hence *Thirukkural* urges that all conflicts be removed.

**(C) World Peace**

*Thirukkural* provides the solution also for world peace by (i) identifying 'the absence of the characteristic of sharing in people' as the cause of conflicts (kural 851); (ii) identifying the very purpose of all industrious labor in producing wealth is to help the human beings to giving it (kural 212). They produce nothing really even if multiplies of billions are produced, who neither give to others nor consumes (kural 1005). Also *Thirukkural* sternly warns that 'huge wealth is pain for those who neither consume nor have the character of giving a thing to people as help' (kural 1006). 'Those wealthy who do not help others by giving a thing are like a tree bearing poisonous fruits at the center of the place (these inconsumable poisonous useless-trees multiply through their seeds of their unconsumed-wealth-fruits and infest the area useful only for killing human beings and other creatures, for poison only kills)' (kural 1008). One who has huge wealth but does not consume it and will not do anything with it is only a dead body in fact (since a dead body neither consumes nor does anything) (kural 1001). *Thirukkural* chides that 'the birth of those do not like the fame from giving help to other, due to miserliness, are merely dead-weight to this Earth' (kural 1003). 'The wealth of those haves that do not give a thing to the have-nots is as useless as a very beautiful young girl attaining old age unenjoyed (neither she enjoys mutually-pleasing beauty herself nor lets others enjoy it as in love-making) (kural 1007). Finally, 'all the amassed wealth earned by one by straining hard without the objectives of sharing and helping others will be taken away by others' (kural 1009)

**Implications of the Factors of Production in *Thirukkural*:**

(1) Alfred Marshall was also "aware of ... and emphasized the importance of production period, the element of Time which is the centre of chief difficulty of almost every economic problem" (Bannock, et. al. p. 276).

(2) The primary objective of division of labor, besides others, is to turn out more output by minimizing the 'time-factor.

(3) With the introduction of Time as a 'factor', minimizing the Time-factor (i.e. time-cost) in increasing production capacity explains mergers, acquisitions and takeovers of corporations.

(4) How to allocate and account cost to the time factor, that too when there is no owner?

(5) Any economic or econometric modeling to study causalities should incorporate Time-cause explicity to be true and scientific. The trend-fitting method is not useful in Economic Science since it unrealistically assumes that an effect is a function of only one cause ignoring time as a cause.

(6) The theories of income distribution and economic growth need to be revisited in the light of the factors of production in *Thirukkural.*

(7) The various types of production functions with only labor and capital as the factors in the economic literature become invalid for being unreal.

**Notes**

1. A change in 'qualities" may be understood as a change in one or a combination of the following: (1) the contents, (2) The number of the content, (3) size of the contents, (4) distance, (5) direction, (6) order or arrangement, (7) area, (8) causes, (9) effects, (10) direction of the causal relationship, (11) nature of the effect whether positive or inverse, (12) the quantum of the influence of the cause on the effect, (13) causal time and (14) life of the 'form' in terms of time, i.e. life-time. In other words conversion refers to making changes in attributes only and not in quantity. The Bhagavat Gita defines production as 'work' as "the creative acts which bring forth all 'forms' into existence" (Bhagavat Gita: chapter-8, sloka-3). Thus production refers to only a change in 'form' of 'Matter' which already existing and not creating any new quantity which did not exist before.

(2) The meaning of these five factors of production as meant in *Thirukkural* at various places is given below: **(a) 'Materials'** refer to all those resources which becomes a part of the output after the production process, thus the materials become the 'product' of production. 'Materials' mean the following also: (1) product (kural 63, 462, 746), (2) objective (kural 122, 434, 741), (3) materials and the content of the materials (kural 355), (4) word and the true meaning (kural 423, 583, 588, 695, 1046), (5) wealth or materials (kural 5, 63, 501, 592, 660, 757, 760, 870, 909, 911, 913, 914, 1002, 1046). (6) use or meaning (kural 583), (7) protection (kural 741), (8) significance (kural 751), (9) things (kural 901), (10) income (kural 756, 933), (11) price (kural 925, 938). **(b) Instruments** mean all those materials or entities, whether tangible or intangible, which merely help in converting the materials into output but without becoming a part of the output. Examples of instruments in *Thirukkural* are: (1) intelligence (kural 421), (2) machines (kural 483, 631), and (3) non-fatigueness (kural 537). **(c) Time** can be understood as, by inference from *Thirukkural* under 'Time study'. (1) the time of the day whether it is day time or night time (work time or rest time) (kural 481), (2) the seasons (kural 482), (3) the machine-time or the time taken by an instrument to do a given task, (kural 483), (4) time of the place (the day time or night time or the seasons vary across places globally) (kural 484), (5) waiting time (kural 485), (6) the preparation time (kural 486), (7) reaction or response time (kural 487), (8) performance time or activity time and the time to stop (i.e. time schedule) (kural 488). (9) opportune time or the right time (kural 489) and (10) timing with reference to the occurrence of an event (kural 490). **(d) Work** refers to a job or a set of operations that are to be done (e.g. building a ship is a work). 'The operations to be done, the doer, the technology are the work (kural 677). The functional organs (instruments), the performance of action and the doer are the constituent components of any work (Bhagavat Gita, chapter-18, Sloka-18). **(e) Place,** by inference from the Location Analysis in Thirukkural, referes to: (1) the whole area or location (kural 491), (2) protection required for the area

(kural 492), (3) the hurdles of the place (kural 493), (4) the layout of the place (kural 494), (5) advantages and disadvantages unique to the location (kural 495), (6) possibility of transportation to and from the place (kural 496), (7) optimum quantity of area or alternative locations (kural 497), (8) suitability of the place for the work (kural 498), (9) the nature of the inhabitants (kural 499), and (10) the nature of the land or soil (kural 500).

(3) Throughout Thirukkural the word 'giving' wealth means 'sharing' or distributing wealth, in essence.

## REFERENCE

1. **Avvaikkural**, Singaravelan, S., The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnelvelly Limited, Chennai, 1987.
2. **Bharathiyar Kavithaigal**, Poompuhar Publishing House, Chennai, 1986.
3. **Causality in Economics**, Hicks, J.R., Basil Blackwell, London, 1979.
4. **Kautilya's Arthasastra**, Shamasastry, A., Mysore Printing and Publishing House, Mysore, 1967.
5. **Science of Bhagavat Gita**, Virajeshver, Spiritual India Publishing House, New Delhi, 1979.
6. **The Penquin Dictionary of Economics**, Bannock, G., Baxter, R.E., and Rees, A., The Viking Press, New York, 1977.
7. **Thirukkural: Parimelalagar Urai**, 4th Edn. Puliyur Kesigan, Poompuhar Publishing House, Chennai, 1986.

# திருவள்ளுவர் கூறும் பொருளாதாரம்

செ. ஹேமலதா

மனிதன் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்று பொருள் ஈட்டுதல். பொருளில்லாமல் எந்த நன்மையையும் அடைதல் முடியாது. புறவாழ்க்கைக்கு அது இன்றியமையாதது. மற்றும் தீய வழிகளில் பொருள் ஈட்டாமல் அதை முறையாகத் திறனறிந்து பொருள் ஈட்டுதலே அறத்தையும் இன்பத்தையும் தரவல்லது என்று வற்புறுத்துகிறார் வள்ளுவர்.

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

என்று கூறுகின்றார். மேலும்,

அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருள்இலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு



அருள் இல்லாதவர்க்கு மேலுலகில் மட்டும் தான் இடம் இல்லை. ஆனால், பொருள் இல்லாதவர்க்கு தான் வாழ்கின்ற உலகில் இடம் இல்லை என்று பொருட் செல்வத்தின் பயனைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

### பொருளியல் (Economics)

கிரேக்கச் சொல் 'Eco' என்ற அடிச்சொல்லிலிருந்தே 'Economics' என்ற சொல் வந்தது. இச்சொல்லுக்குக் குடும்ப நிர்வாகம் என்று பொருள். கிரேக்கச் சொல்லும் திருவள்ளுவர் பொருள் பற்றிக் குறிப்பிடும் சொல்லும் ஒன்றாகவே காணப்படுகிறது.

தலைவியின் பொருளாட்சியில் தான் இல்லறமே சிறந்து விளங்கும். இதனை நம்நாட்டில் வழங்கும் "நாட்டுக்கு அரசன்", "வீட்டுக்கு மனைவி" என்ற பழமொழி இதனை விளக்கும்.

### வாழ்க்கை நெறி

திருவள்ளுவர் தம் முப்பாலிலும் தாம் பாடுதற்குரிய பொருளாக மனிதனையே எடுத்துக் கொண்டார். திருவள்ளுவர்க்கு மனிதனே, வானவரைவிடச் சிறந்தவனாகத் தோன்றுகின்றான். மண்ணுலகில் தோன்றிய மனிதன் சிறப்பாக வாழ்ந்து, விண்ணுலகச் சிறப்பினை இந்த மண்ணுலகிலேயே அடைய வேண்டும். அதற்கு என்ன வழி என்று ஆய்ந்து அதனை முப்பாலிலும் வகுத்துக் கூறுகிறார்.

மனிதன் உய்யும் நெறி பற்றிப் பண்டைக் காலந் தொட்டே எண்ணி வந்தனர். தொல்காப்பியனார் அதனை அகம், புறம் என்ற இரண்டு இலக்கிய நெறிகளாக வகுத்துக் காட்டினார். பின் வந்த நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் "அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே" என்றார்.

திருவள்ளுவர் முப்பாலாகப் பகுத்துக்கூறிய வாழ்க்கை நெறியைக் கீழ்க்காணும் பகுப்பு முறையோடு கூறலாம்.

1. தனி மனிதன், மணந்து கொள்ளாது வாழும் தனி வாழ்க்கை
2. தன் மனைவியுடன் நடத்தும் காதல் வாழ்க்கை
3. கணவனும் மனைவியும் சேர்ந்து சமுதாயத்தில் வாழும் சமுதாய வாழ்க்கை

மனிதனாகப் பிறந்தவன் மனப்பக்குவம் அடைந்து பிறர்க்கெனவே தன்னை அர்ப்பணம் செய்து கொண்டு தெய்வ நிலையடைகின்றான். இது மனம் வளரும் நிலை. சமுதாயத்தில், சமுதாயப் பங்கு கொள்ளத் தம்மை மறக்கும் நிலை உருவாகின்றது.

மனிதன் மனத்துக்கண் மாசு இலாது வாழக் கற்றுக் கொள்கிறான். காதலிக்கிறான்; இருவர் ஆயினர். பலர் பொருட்டு

வாழ்ந்து படிப்படியாக உலகுக்கே வாழத் தொடங்குகின்றனர். தமக்கு என ஒன்றையும் வைத்துக் கொள்ளாமல், எம்முடையது என்று எந்தப் பொருள் மீதும் உரிமை பாராட்டாமல் பற்றற்ற நிலையில் பிறர்க்கெனச் சமுதாய நலன் கருதி வாழக்கற்றுக் கொள்கின்றனர். ஆசையிலிருந்து விடுதலை அடைவதால் இந்த நிலையை வீடு' என்றும் குறிப்பிடுவார்கள். இதை,

> வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும் (குறள் 50)

என்பதால் மனிதன் தெய்வ நிலையினைப் பெறலாம் என்று கூறுகின்றார். இதற்கு அடிப்படையாய் இருப்பது அவன் பொருளை ஆளும் திறனேயாகும். பொருளாட்சியால் ஒருவன் தெய்வத்துள் வைக்கப்படும் நிலையை அடைகிறான்.

திருவள்ளுவர் மனைவியைப் பற்றிக் குறிப்பிடுகின்ற போது, அவளுடைய மாண்புக்குப் பல காரணங்கள் அமைகின்றன. அவற்றுள் ஒன்று 'கணவனுடைய வருவாய்க்கேற்பச் செலவு செய்வது. இதனை வளத்தக்காள் என்று குறிப்பிடுகின்றார். வளத்தக்காள் என்பதை வீட்டை நிருவாகம் செய்வது எனலாம். கணவனுடைய வருவாய்க்கு ஏற்பக் குடும்பத்தை நடத்துகின்றவளே உண்மையான பொருளியல் நுட்பம் அறிந்தவள் என்பது பொருள்.

## ஈட்டலும் பகிர்தலும்

பொருளைப் பொருளுக்காகவே மட்டும் பெறுதல் கூடாது. அதனை அறவழியிலும் ஈட்ட வேண்டும். அதற்காகத் திருவள்ளுவர் பழியஞ்சிப் பொருளைத் தேடு என்று கூறுகிறார்.. முயற்சி செய்து பொருளை அறவழியில் தேடு. தேடிய பொருளைப் பகிர்ந்து கொடு. பிறரும் பெற்று நுகரட்டும். இதுதான், நூலோர் கூறும் சிறந்த நெறி என்கிறார்.

> தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
> வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள் 212)

உழைத்துப் பணத்தைத் தேடித் தேடிய பொருளைத் தக்கார்க்கு அளிக்க வேண்டும். தக்கார்க்கு உபகாரம் செய்வதற்கே பணம் திரட்டப்படுவதாகப் பகிர்ந்து கொடுத்தலை வலியுறுத்துகிறார்.

> பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
> வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல் (குறள் 44)

அறவழியில் பழிபாவத்திற்கு அஞ்சிப் பணம் சேர்த்து அதனைப் பலர்க்கும் பகிர்ந்து அளித்து வாழ்ந்து வந்தால்

ஒருவனுடைய சந்ததி வாழையடி வாழையாகத் தொடர்ந்து வரும். தனக்கு இன்பமும், தன்னைச் சார்ந்தார்க்கும் குடும்பத்தார்க்கும் சமூகத்தார்க்கும் நலமும் பயக்கும்.

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை** *(குறள் 322)*

திருவள்ளுவர் பொருள் பற்றிய தம் அரிய கருத்தினைத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். தேடிய பொருளைப் பகிர்ந்துண்டு (Distribution), பல உயிர்களையும் காப்பாற்றி வாழும் நெறியே சிறந்த நெறியாகும்.

திருவள்ளுவர் பொருட்பாலிலும் பொருளுக்கு ஏற்றம் தருவதோடு அது வரும் வழிக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார். இதனைச்

**சிறப்பீனும் செல்வமும்ஈனும் அறத்தி னூங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு** *(குறள் 31)*

என்கிறார். அதாவது அறம் மக்களுக்குச் சிறப்பையும் செல்வத்தையும் கொடுக்கும். எனவே அவ்வறத்தைக் காட்டிலும் நன்மை தருவது வேறில்லை எனக் கூறியுள்ளார்.

## துணை நூல்கள்


1. ச. மெய்யப்பன் - திருக்குறள் தெளிவுரை - அருளுடைமை (கு. 237).
2. மேலது, இல்வாழ்க்கை (கு. 50).
3. மேலது, ஒப்புரவறிதல் (கு. 212).
4. மேலது, இல்வாழ்க்கை (கு. 44)
5. மேலது, அருளுடைமை (கு. 31)


※ ※ ※

# திருக்குறள் கூறும் வருவாய் முறைகள்

இரா. செல்வராஜ்

உலகப் பொதுமறைகளில் ஒன்று திருக்குறள். திருக்குறளின் பெருமைகளை அறியாதவர் இவ்வுலகில் யாருமில்லை. திருக்குறளின் பெருமைகளையும் திருவள்ளுவரின் பெருமைகளையும் விளக்கிச் சான்றோர்கள் பாடிய பாக்களின் தொகுப்பே 'திருவள்ளுவ மாலை'. இக்குறள் வெண்பாவைக் கண்டாலே குறளின் பெருமை விளங்கும்.

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

என்று ஔவையாரும்,

எல்லாப் பொருளும் இதன்பால்உள
இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்

என மதுரைத் தமிழ்நாகனாரும், திருக்குறளைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்கள். இங்ஙனம் சிறப்பித்த திருக்குறளின் மூலம் அரசாங்கங்கள் எவ் வகை முறைகளில்



எல்லாம் வருவாய்கள் பெற்றன என்பதைப் பற்றிய செய்திகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வருவாய் பெறக் கூடிய வழிமுறைகள்

அரசுகள் வருவாய் பெறக் கூடிய வழிமுறைகள் மூன்று எனப் பழங்காலத்து நூல்கள் தெரிவிக்கின்றன. அவையாவன,

1. மக்களிடமிருந்து பெறும் வரி
2. வாணிகப் பொருட்களுக்கான சுங்கவரி
3. சிற்றரசர்களிடமிருந்து பெறும் திறை

இவ்வடிப்படையில் அரசுகள் வருவாய் பெற்றுவந்தன.

மக்களை நீதி முறை செய்து காப்பதற்காகவும் பகைவரிடமிருந்து நாட்டைக் காப்பதற்காகவும் மக்கள் தங்கள் வருவாயில் இருந்து ஒரு பங்கையும், உழவர்கள் விளைச்சலில் ஆறில் ஒரு பங்கையும் அரசுக்கு வரியாகச் செலுத்தி வந்தார்கள். மன்னருக்கு மக்கள் வரி செலுத்துகின்ற முறை இருந்தது என்பதை உறுபொருளும்" என்ற சொல் மூலம் அறிய முடிகிறது.

> **உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்**
> **தெறுபொருளும் வேந்தன் பொருள்** *(குறள் 756)*

என்ற இக்குறள் மூலம் அரசு ஏற்றுமதி இறக்குமதி வரிகளோடு உள்நாட்டுச் சுங்க வரிகள் மூலமும் வருவாய் சேகரித்து வந்தது என அறிகிறோம். இதற்கு,

> **அணர்ச் செவிக் கழுதைச் சாத்தோடு வழங்கும்**
> **உல்குடைப் பெருவழி** *(80-81)*

எனப் பெரும்பாணாற்றுப்படை சான்று அளிக்கிறது.

அரசுகள் பெற்றுவந்த மூன்றாவது வருவாய் முறை திறையாகும். பகை நாட்டார் இடத்தும், சிற்றரசர்களிட மிருந்தும் அரசு வருவாய்களைச் சேகரித்து வந்தது. மேலும், வள்ளுவர் கூறும் பொருளியல் இலக்கணமாய்,

**'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும்'** என்பதைப் பற்றிப் பரிமேலழகர் வழங்கிய பொருளை நாம் அறிந்தாலும் இவைதான் Public Revenue, Public Expenditure, Public Distribution என அறிகின்றபோது எவ்வளவு புத்துணர்ச்சி தோன்றுகிறது. இத்தொடரிலே பொருளியலின் மையக் கருத்துகளான Production, consumption and distribution என்பவற்றைக் காண்பாரும் உண்டு என தி. முருகரத்தினம் குறிப்பிடுகிறார்.

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு** *(குறள் 385)*

ஓர் அரசானது பொருள் வரும் வழிகளை மேன்மேலும் உருவாக்குதலும், வந்தவற்றைத் தொகுத்தலும், தொகுத்த வற்றைப் பிறர் கொள்ளாமல் காத்தலும், காத்தவற்றை அறம், பொருள், இன்பங்களின் பொருட்டுக் கொடுத்துத் தன் கடமையைச் செய்ய வல்லது என்று கூறுகிறார். அரசு இம்முறையில் செயற்பட்டால் தான் நாடு தன்னிறைவு அடையும், தன்னிறைவு பெற்றால்தான் உலக நாடுகளுடன் போட்டிபோட முடியும், போட்டிபோட வேண்டும் எனில் நாடு செல்வ நிலையில் செழித்து இருக்க வேண்டும்.

அரசு எப்போதும் செல்வ நிலையில் வலிமை பெற்றுத் திகழ வேண்டும். செல்வ நிலையில் வலிமை பெற்றால்தான் உலக நாடுகள் மத்தியில் நிலைத்திருக்க முடியும். இன்று படை பலத்திலும் செல்வ நிலையிலும் வலிமை பெற்ற நாடுகள் தாம் வல்லரசுகளாய் மதிக்கப்படுகின்றன. வல்லரசு ஆவதற்கு நாட்டின் பொருளாதாரம் முன்னேற வேண்டும். நாட்டின் முன்னேற்றத்துக்கு முதல்படியே செல்வம்தான். அதனால் தான் வள்ளுவமும் செல்வத்தை வலியுறுத்துகிறது,

**பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**
**எண்ணிய தேயத்துச் சென்று** *(குறள் 753)*

என்ற குறளின் கருத்து நோக்கத்தக்கது.

**அல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வர் சிறப்பு** *(குறள் 752)*

என்ற கருத்தும் நோக்கத்தக்கது. அதனால் இவ்வுலகில் நிலைத்திருக்கச் செல்வம் இன்றியமையாதது என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் ஏற்றுமதியை உயர்த்தக் கூடிய வணிகவியலாரின் கருத்தினையே வள்ளுவமும் கூறுகிறது.

**செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும்**
**எஃகுஅதனிற் கூறியது இல்** *(குறள் 759)*

என்ற குறளின் கருத்து நோக்கத்தக்கது. எந்த ஒரு நாடும் பிற நாட்டைத் தன்னுடைய தேவைகளுக்காகச் சார்ந்திருக்கக் கூடாது. அப்படி இருந்தால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைப்படும் என்கிறார். உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடையவேண்டும். அப்போதுதான் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும். வருவாயும் ஈட்ட முடியும்.

## வள்ளுவர் கருத்து அன்றும் இன்றும்

அரசு வணிகத்திற்கும் உழவுக்கும் உறுதுணையாய் இருந்தாலும் அவற்றின் பெரும்பணி நாட்டைக் காவல் செய்வதிலே சென்றுவிடுகிறது. எனவே அரசின் ஆறு அங்கங்களைக் குறிப்பிடும்போது வள்ளுவர் படையை முதலில் வைத்தார். காவற் பணியொடு மக்கள் நல அரசுகளாகவும் செயற்பட அவசியம் தோன்றியுள்ளது. எனவே பழமையிலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடக்கும் சமுதாயத்தை மாற்றியமைத்தல், பொருளாதார நடவடிக்கைகளில் தொழில் முனைவோராய்ச் செயற்படுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளிலும் செயல்பட வேண்டியிருக்கிறது. மக்களின் வறுமையை அகற்றி, வருமான ஏற்றத் தாழ்வை நீக்குவதற்கு வரிக்கொள்கையையும், பணக் கொள்கையையும் அரசு நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. இதனால் அரசாங்கம் மக்களிடமிருந்து வரிப் பணங்களைப் பெறவேண்டியுள்ளது.

மக்களிடமிருந்து வரிபெறும் போது மக்களின் வருமானத்திற்கு ஏற்றவாறும் அவர்களின் ஆற்றலுக்கு ஏற்றவாறும் வரிகளை வசூலிக்க வேண்டும். மக்களும் மனமுவந்து அரசுக்கு வரிகளைச் செலுத்த வேண்டும். அரசும் அவ்வருவாய் மூலம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெற்று உலகத்துக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும்.

### துணை நூல்கள்

1. தி. முருகரத்னம், வள்ளுவர் வகுத்த பொருளியல் (கருத்தரங்க கட்டுரைகள்), மதுரைப் பல்கலைக்கழகம், 1975.
2. ச.வே. சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், 2002.
3. பரிமேலழகர், திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம்.

※ ※ ※

# மேழியின் மேன்மை

**கோ. ஜெயபாலன்**

திருக்குறள், ஒரு ஞானக்களஞ்சியம். அதில் இல்லாத எதுவுமில்லை.

'அகர முதல எழுத்தெல்லாம்....' எனத் தொடங்கி 'கூடி முயங்கப் பெறின்' என்று, தமிழின் முதல் எழுத்தான, 'அ'வில் ஆரம்பித்து, 'ன்' இல் முடித்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என இவ்வையகத்திற்குச் சொன்ன தெல்லாம் நேற்றைக்கும், இன்றைக்கும், நாளைக்கும், ஏன் இனிவரும் யுகங்களுக்கும் பொருந்துகின்றவை.

திருக்குறளும் ஒரு வேதம்தான். அதனால்தான் நம் முன்னோர்கள் திருக்குறளை 'உலகப் பொதுமறை' என்றார்கள்.



பைந்தமிழ்க் குறளைப் பாங்குடன் பயின்ற பன்மொழிப் பாவலன் பாரதி, "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவன் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்றும், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றும் பாடினான்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அது பொருளா தாரத்தில் முன்னேற்றம் காணவேண்டும்.

பொருளுக்கு ஆதாரம் விவசாயம், தாரம் தொழிற்சாலை. தற்போது நம் நாட்டில் தொழிற்சாலைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் வேளாண்மைக்கு அளிக்கப்படவில்லை.

## பசியைப் புசிப்பவர்கள்

எத்தனையோ பேருக்கு ஏகாந்த உணவளித்து, பசியினையும் ஆசையோடு புசித்தவர்கள் விவசாயப் பெருங்குடி மக்கள். இந்தப் பாருக்கே படியளந்து பசிப் பிணியைப் போக்குகின்றவர்கள் பாமர விவசாயிகள்.

பசியினைப் படைத்தவன் பரம்பொருள் என்றால் அதனைப் போக்கிடும் வித்தையறிந்தவன் விவசாயி. அந்தப் பசியால்,

> **மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை**
> **தானம் தவமுயற்சி தாளாண்மை - தேனின்**
> **கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**
> **பசிவந் திடப்பறந்து போம்**

என்றாள் ஔவை. அந்தப் பசிப்பிணியை நீக்குகின்ற பசிப்பிணி மருத்துவர்கள்தான் உழவர்கள். அவர்களின் சிறப்பை, 'தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது' என்றும் 'உழவர்க்கு அழகு ஏர்உழுதூண் விரும்பல்' என்றும் நீதி நூல்கள் நவிலும்.

விவசாயத்தைப் புறக்கணிக்கும் எந்த ஒரு நாடும் வளராது. வளரவும் முடியாது. அதனால்தான் மனிதனின் இன்றியமையாத் தேவையான 'உணவு; உடை, இருப்பிடம்' ஆகியவற்றில் உணவிற்கு முதலிடத்தை நம் முன்னோர்கள் தந்தனர்.

பசி நீங்கினால்தான், உடல் உழைக்கும்; அறிவு வேலை செய்யும், அனைத்தும் நடக்கும். உழவர்கள் வாழ்ந்தால்தான் உலகம் வாழும்.

## புராணங்களில் மேழி

அன்று மிதிலை மன்னனான சனகராசன் 'பொன் ஏர் பூட்டி, பூமியை உழுததாக' இராமாயணம் சொல்லும்.

மகாவிட்ணுவின் தசாவதாரத்தில், ஓர் அவதாரமான பலராமன் தனக்கென ஓர் ஆயுதமாகக் கொண்டதும் மேழிதான்.

அதர்மமான போர்முறையால் துரியோதனனை வென்ற பீமனை, பலராமன் தன் மேழி ஆயுதத்தால் கொல்ல முயன்ற போது, கண்ணன் பீமனைக் காக்க பலராமனைச் சமாதானப் படுத்தியதாகப் பாரதம் பேசும்.

அதுபோல் மேன்மையுற்ற உழவர்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்த்துத் தங்கள் மேழி ஆயுதத்தை ஏந்துவார்களேயானால் அல்லது துறப்பார்களேயானால் இந்த மேதினியே ஏது?

## மேகங்கள்

'வானம் சுருங்கில் தானம் சுருங்கும்' என்பர். மழையின் உதவியால்தான் மண்ணில் விவசாயம் நடைபெறுகிறது. அனைத்திற்கும் நீர் தேவையாகிறது. அதனால்தான் 'கடவுள் வாழ்த்திற்கு' அடுத்து 'வான் சிறப்பை' வள்ளுவன் வைத்தான். "நீரின்றி அமையா துலகு" என்றான்.

அதையேதான் இளங்கோவும் தனது பாயிரத்தில்,

**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றதும்**
**மாமழைப் போற்றுதும் மாமழைப் போற்றுதும்**

என்றான். தற்போது மழையும் விவசாயத்தைப் புறக்கணிக்கிறது.

'வாடிய பயிர்களைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் வாசகத்திற்கு ஏற்ப மேகங்கள் எல்லாம் மழை பொழிந்தால் விவசாயம் செழிக்கும்.

## வள்ளுவன் அறிவியல் முன்னோடி

உலகம் பல தொழில்களைச் செய்து கொண்டு சுழல்கிறது. இந்த உலகத்தின் சுழற்சி உழவர்களின் ஏர்வழியே செல்கிறது என்று மேழியின் மேன்மையை உலகச் சுழற்சி என்ற அறிவியல் மூலம் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்று சொன்னவர் திருவள்ளுவத் தமிழன்.

சுழலுகின்ற பூமியின் உழலுகின்ற அனைவரது வாழ்க்கைக்கும் அச்சாணியாய்த் திகழ்பவர்கள் உழவர்கள். சுழலுகின்ற பூமிக்கு ஓர் அச்சாணி தேவை. இந்தச் சுழலும் பூமியின் அச்சாணியே உழவர்கள் என்பதை அனுபவபூர்வ மாகவும், அறிவுப்பூர்வமாகவும் அன்றே சிந்தித்ததால்தான் 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்றான்.

## நாமார்க்கும் குடியல்லோம்

மன்னராட்சியில் வேளாண்மைத் தொழில் செய்தோர்க்கு ஒரு மகோன்னத மதிப்பிருந்தது. அதனால்தான்,

> நாமார்க்கும் குடியல்லோம்
> நமனை அஞ்சோம்

என்று அப்பர் பெருமானால் பாட முடிந்தது. இன்று மக்களே மன்னர்களானதால் அவர்களுக்கு விவசாயத்தின் அருமை தெரியவில்லை.

உலகிற்கே உழவர்கள் உணவளிப்பதால், உலகமே அவர்களைத் தொழுதுதான் தொடர்ந்து பின் செல்ல வேண்டும் என்று உணர்ந்த வள்ளுவன்,

> உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்

என்றான். உழவர்கள் என்றும் சுதந்திர வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வதால்,

> பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பவர்கள்

என்றான். உழவர்கள் யாரிடமும் யாசிப்பதில்லை; யாசிப்பவர் களுக்கு யோசிக்காது யாசகம் தருபவர்கள். யாசிப்பவர்களை, நேசிப்பவர்கள். விருந்தோம்பலைப் பூசிப்பவர்கள். அவர்களுக்கு ஈடு இணை இப்புவியில் இல்லை. அதனால்தான்

> இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர்

என்றார் வள்ளுவர்.

உழவர்கள் தங்கள் உழவுத் தொழிலை விட்டுவிட்டால் பற்றிலாத் துறவியும் தங்களுடைய துறவுப் பற்றையும்விட்டு விட வேண்டியிருக்கும். துறவிகள் துறவைத் துறந்தால் ஞானமேது? மோனமேது? வேதமேது? நாதமேது?

உழவுத் தொழில் ஒரு புண்ணியமான தொழில். அதுவும் ஒரு தவமே. அவர்கள் வாழ்க்கை ஒரு விரதமே.

> உழவன் கணக்குப் பார்த்தால் உழவுக்கோல் கூட மிஞ்சாது

என்று தெரிந்தும் அவர்கள் செய்வது ஒரு தர்மயாகம்.

## சீரைத் தேடின் ஏரைத்தேடு

நிலத்தைப் பன்முறை உழுது, பண்படுத்திப் பயிரிட்டால் பயிர்செழிக்கும், விளைச்சல் மிகும் என்பதை அறிந்த வள்ளுவர்,

**ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு**

என்று ஏரோட்டி, எருவிட்டு, நீரிட்டு, களைநீக்கிக் காத்திட வேண்டுமென்கிறார்.

இப்படிச் செய்தால்தான்,

வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும்
நெல்லுயர குடியுயரும், குடியுயரக் கோன் உயரும்

என்றார்கள் நம் முன்னோர்கள்.

'பூமியைத் திருத்தியுண்' என்ற ஔவையின் 'கொன்றை வேந்தன்' கொள்கைப்படி காடுவெளிகளைத் திருத்தி, கழனியாக்கி, உணவுப் பஞ்சத்தைப் போக்க, 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்று உழைத்தவர்களுக்கு இந்நாடு செய்த சீர்தான் என்ன?

நாடு காக்க

கிராமங்கள் நாட்டின் முதுகெலும்பு என்று சொன்னார் காந்தி. அந்தக் கிராமத்தின் முதுகெலும்பே விவசாயிகள்தான்.

அவர்கள் செல்வங்களை நாட்டிற்கு அள்ளித்தரும் அற்புத வள்ளல்கள். அவர்களின் செல்வர்கள் கல்வியறிவு பெறுவதே இன்று கடினமான காரியமாகிறது.

அன்று விவசாயத்திற்கு இருந்த ஒரு கம்பீரமான கௌரவம் இன்று ஏனோ ஏளனமாகிவிட்டது. 'மேழிச் செல்வம் கோழைபடாது' என்று 'கொன்றை வேந்தனில்' ஔவை கூறியது, குவலயத்தை விட்டே போகிறது.

இதைப் போக்கக் கல்வியில், வேலையில், சாதிகளுக்கு ஒதுக்கப்படும், இட ஒதுக்கீட்டைப் போலவே அரசு விவசாயிகளுக்கும் செய்து நீதி காத்திட வேண்டும்.

'பருவத்தே பயிர் செய்' என்பது விவசாயத்திற்கு மட்டுமல்ல அரசும் செய்யவேண்டிய பருவமிது. அரசு என்பதும் வேளாண்மை தான். அந்த விவசாயி சேற்றிலே கால் வைக்கவில்லை என்றால் நாடே சோற்றிலே கைவைக்க முடியாது. நட்டத்தில் நாடு நலிவுறும். விவசாயத்தை நாடு காக்க வேண்டும்.

நல்ல நன்செய் நிலங்களை அரசு காத்திட வேண்டும். அங்குப் பல அடுக்குமாடி வீடுகள் விளைவதைத் தடுத்திட வேண்டும். விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்திடல் வேண்டும். அப்போதுதான் நாடு சிறக்கும். இன்றேல் உலகம் தன் நிலையைத் துறக்கும்.

### வயலும் வாழ்வும்

அன்று முதல் இன்று வரை வயலோடு ஒட்டியே வாழ்க்கை நடக்கிறது.

நமது நாட்டிலே திருமணம் ஆகும்வரை கன்னியர்கள் தங்கள் பெற்றோர் வீட்டில் இருப்பதை நாற்றங்காலுக்கும், மணமுடித்து மணாளன் இல்லம் செல்வதை நடவு நட்ட வயலுக்கும் ஒப்புமை கூறுவர்.

கணவன், மனைவியைப் பாதுகாப்பதுபோல், ஒவ்வொரு உழவனும் தனது நிலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறும் வள்ளுவரின்,

**செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும்**

என்ற வாய்மொழி வாழ்வியல் நெறிமுறையாய் நோக்கத்தக்கது.

அதே உழவன் உழைக்காமல், வறுமையால் சோம்பி இருந்தால் நிலமகள் தன்னுள் சிரிப்பாள் என்பதை,

**இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலமென்னும் நல்லாள் நகும்**

என்று கூறுவது உளவியல் ரீதியாக இல்லற வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்க உகந்தது.

சிந்திக்கச் சிந்திக்கக் கவியரசு கண்ணதாசன் கூறியது போல் பொருள் நிறைந்த பாடல் என்றும் புதியதுதான்.

### உழவும் தொழிலும்

**உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்**
**உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்**

என்றான் கவிஞன்.

விவசாயமும், தொழிற்சாலையும் நாட்டின் இரு கண்கள். அதிலும் மேழியின் மேன்மையை உணர்ந்துதான் அன்றே 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்றனர்.

அவரவர் உற்பத்தி செய்யும் பொருளுக்கு அவரவர் விலை நிர்ணயம் செய்யும் உரிமை இருக்கிறது இவ்வுலகில். ஆனால் உணவுப் பொருளின் விலையை மட்டும் நிர்ணயம் செய்யும் உரிமை மட்டும் ஏனோ உழவனுக்கு மறுக்கப்படுகிறது.

நெற்பயிர் விளைத்து உலகுக்கு உணவிடும் உழவனை மட்டும் ஏனோ நித்தம், நித்தம் வறுமை வாட்டும். கடன் சுமையால் அவனது வாழ்க்கை பாலைவனமாகும்.

பெற்று வளர்த்த குழந்தைகள், பெற்றோரையே எதிர்த்துத் துன்புறுத்தி அழிக்கத் துணிவதுபோல் நாட்டு மக்களைக் காத்திடும் விவசாயிகளை நாடே நலிவுக்கு உள்ளாக்குகிறது.

இந்நிலைமாறி வள்ளுவன் காட்டிய வழியின்படி மேழியின் மேன்மை செழிக்க வேண்டும். மேதினியில் வளம் கொழிக்க வேண்டும்.

**வள்ளுவன் வழியினில்**
**வையகம் சென்றால் - நெஞ்சை**
**அள்ளிடும் சொர்க்கம்**
**அருகினில் வந்திடும்.**

※ ※ ※

# திருவள்ளுவரின் பொருளாதாரச் சிந்தனைகள்

நா. ஜானகிராமன்

திருவள்ளுவர் தம் குறள்களில் எண்ணற்ற பொருளாதாரச் செய்திகளைச் சிந்தனைகளாக வடித்துத் தந்துள்ளார். பொருள் வாழ்க்கை என்றால் மிகையாகாது. பொருளுள்ளவர்கள் சமுதாயத்தில் வலிமையுள்ளவர்களாக விளங்குகிறார்கள். பொருளற்றவர்கள் வலிமையிழந்து சமுதாயத்தில் ஏதோ ஓர் மூலையில் ஒதுக்கப்பட்டுப்பின் அடையாள மிழக்கின்றார்கள். ஒவ்வொரு தனி மனிதனையும் வலுப்படுத்தி, வழிப்படுத்தி மனத்தில் வலுவுள்ள, திடமான நம்பிக்கை கொள்ள வைப்பது பொருளே ஆகும் (The Economic Support is a strengthfull and power) எனலாம். பொருளின் நிலை, அது சேர்க்கப் படும் முறை, அவை வழங்கப்படும் ஒழுகலாறு இவற்றினை வள்ளுவர் தமக்கே உரிய முறையில் உலக மக்களுக்கு எடுத்துரைத் துள்ளார்.



## மேலுலகும் இவ்வுலகும்

பிறவிப் பயனும், இப்பிறவியில் நாம் செய்யவேண்டிய கடமைகள் என்ன என்பன

பற்றிப் பல குறள்களில் பேசியுள்ளார். 'பொருள்தனைப் போற்றிவாழ்' எனும் கூற்றுக்கேற்பக் 'கிடைத்த பொருளினை வைத்துக் காத்து வாழ வேண்டும்' என்கின்றார். நேர்மையான வழிகளில் பொருள் தேடி அதனை நன்முறையில் அனுபவித்து வாழவேண்டும்.

அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாயோங்கு (குறள் 247)

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. வள்ளுவர் முதலில் இவ்வுலகத்தைப் பேசுகின்றார். பிறகு மேலுலகத்தைப் பற்றிக் கூறுகின்றார். ஏனெனில் அவ்வுலக வாழ்வில் ஒருவன் இன்ப துன்பத்தினை முழுமையாக உணர்கின்றான். ஆகவே பொருளைப் பிறருக்குக் கொடுத்து ஒரு மனிதன் அருளைப் பெறமுடியும். ஆனால், பொருளற்ற ஒருவன் தம் வாழ்க்கையை நடத்த இயலாது எனும்போது அருள் வாழ்க்கை அவனுக்கேது? தனிமனித வாழ்விற்கும், சமுதாய நிலைப்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அவசியத்தேவை பொருளாதாரப் பெருக்கமாகும். பாரதிதாசனும் 'பணத்தினைப் பெருக்கு' எனக் கூறுகின்றார்.

### ஈட்டும் முறை (To earn Money)

பொருளற்றவரை இச்சமுதாயம் ஒருபோதும் மதிப்பதில்லை என்பதால் பொருள் நிறைய சேர்க்க வேண்டும் எனும் எண்ணமுள்ள உலக மக்களுக்கு வள்ளுவர் சில விதிமுறைகளை/சட்டங்களை (Restriction Law) வகுத்துத் தருகின்றார். நேர்மையான வழிகளன்றி தீயவழிகளில் ஒரு போதும் செல்வம் சேர்த்தல் ஆகாது. அதனைக் கட்டாயம் நீக்கிவிட வேண்டும். இதனை,

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் (குறள் 755)

என்கிறார். அன்பின் வழியாலும், அருளின் வழியாலும் ஒரு மனிதன் சேர்த்து வைக்காத பொருளானது அம்மனிதனுக்கு, அவன் வழித்தோன்றலுக்குத் தீரா இடும்பை தருவதாகும். ஒரு வேளை அப்படிச் சேர்த்த பொருளாயிருந்தால் அது தீக்கிரையாகி விடுதலும் கூடும். அவ்வாறும் இல்லையெனில் அவன் நல்லவனா, தீயவனா என்பதை அவனது மக்கள் அடையாளம் காட்டுவர். இதனையும் வள்ளுவர்

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும் (குறள் 310)

எனக் கூறுகின்றார். அன்பின் வழியாக உலகமக்கள் வாழவும், அன்பே உயிர்நிலையாகக் கொள்ளவும் வேண்டுமெனில் நேர்வழியில் பொருளீட்ட வேண்டும் என வள்ளுவம் உலக மக்களை அழைக்கின்றது.

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் (குறள் 754)

நேர்வழியில் வந்த பொருளானது அன்பினையும், அறத்தினையும் வளர்க்கின்றது. தீமையால் சேர்க்கப்பட்ட பொருள் இந்த இரண்டனையும் இழக்கச் செய்கின்றது. தீதின்றி வாராப் பொருளை வள்ளுவம் வரவேற்கிறது. பிறரின் அழிவிலும்! அழுகையிலும் பெற்ற பொருளை வெறுத்தொதுக்குகின்றது. பர்தருஹரி என்னும் இலக்கியமானது,

அறனின்பங்கல்வியழகு குலனாண்மை யறிவுண்டாம்
செல்வமுளதேல் (பாடல் 22)

என்கிறது.

## பொருளின் தன்மையும் பெருமையும்

பொருளாதாரத்தின் நிலையினைத் தனிமனிதன், குடும்பம், சமுதாயம், நாடு எனப் பல நிலைகளில் வள்ளுவர் விளக்கியுள்ள விதம் சிறப்பானது. பொருளற்றவனை இச் சமுதாயம் மதிப்பதில்லை. அவனை மதிப்பிற்குள்ளாக்குவது பொருள். அறிவால் இழிந்த ஒருவனும் அவையில் பேசப்பட்ட பொருளே காரணமாகும். வாழ்வின் இருளைப் பொருள் அகற்றுகின்றது. பகை நாட்டிலிருந்து வரியாக வந்தபொருள், திறைப்பொருள் போன்றவை அரசனுக்குச் சொந்தம் என்கிறார் வள்ளுவர்.

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் (குறள் 756)

நீ, உன் வீடு! உன் சமுதாயம் இவற்றை யாராவது பார்த்து எள்ளுகின்றனரா? அப்படியென்றால் உன் பொருள் பலத்தைப் பெருக்கிக் கொள். செல்வத்தை நிறைய உன் வசம் சேர்த்துக் கொள் என்கிறார் வள்ளுவர். அரிச்சந்திர புராணத்தில் கூட மயானத்தில் பொருள்தான் முதன்மைப் பட்டுள்ளது என்பது குறிப்பிடற்பாலது. ஆகவே, ஒருவனின் பிறப்பு முதல் இறப்பு வரை செல்வம், செல்வந்தன், செல்வாக்கு எனச் சென்று கொண்டே இருக்கின்றது. ஆகவே நீ பொருளைச் செய். அதுவே உன் பகைக்கு, பகைவருக்குப் பயந்தோடச் செய்யும் ஆயுதம். அதனைக் காட்டிலும் கூரியது, வலிமைமிக்கது வேறொன்று

மில்லை என்பதை உலக மக்களுக்கு உரைக்கும் உன்னத வேதம் திருக்குறள் ஆகும்.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல் (குறள் 759)

என்கிறார்.

## பொருளின் பயன்

ஒருவன் வாழ்வில் ஈட்டிய பொருளை நான்காகப் பகுத்துக் கொள்ள வேண்டும். எதிர்காலத்திற்கு இரண்டு பங்கும், ஏழை எளியவர்களுக்கு ஒரு பங்கும், தன் செலவுகளுக்கு ஒரு பங்கும் என நான்கும் வகையாகப் பிரிக்க வேண்டும் என்பது ஓர் தத்துவம். யாரும் இதனை ஒரு போதும் உணர்வதில்லை. காரணம் அலட்சியப் போக்கும், சமுதாயத்தைப் பற்றிய அக்கறையும் மனிதநேயமின்மையுமே ஆகும்.

பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால்; செல்வம்
நயனுட யான்கண் படின்

என்கிறார் வள்ளுவர். பயன் தரக்கூடிய சிறந்த மரமானது யாவருக்கும் பயனளிக்கும் வகையில் ஊரின் நடுவிலே அமைய வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. ஓர் அஃறிணையான மரத்திற்கு இந்நிலை. ஆறறிவு படைத்த மனிதன் இதனைப் பின்பற்ற வேண்டுமல்லவா? நாம் தேடிய செல்வத்தைப் பிறருக்கு ஈத்துவக்கவேண்டும். ஈத்துவக்கும் இன்பமே வாழ்வின் பெரும் பேரின்பமாகும் என்கிறது வள்ளுவம். மேலோர் பொருளை ஈட்டுதல் பிறர் திறத்துப் பயன் படுத்தற்பொருட்டாகும் (பர்தருஹரி - 41). அறவழியில் தேடிச் சேர்த்த பொருள், அனைவருக்கும் பரவலாக்கப்படவேண்டும். பொருள் ஓரிடத்துக் குவிதல் பலனளிப்பதில்லை. தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் (Globilization) என இவையாவும் பொருளின் பகிர்தலே ஆகும் (Share in Economy).

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள் 212)

என்கிறது குறள். முறையாக நாம் சேர்த்துவைத்த பொருள் யாவும் நம்மைச் சார்ந்தவர்க்கும் நம்மைச் சார்ந்த சமுதாயத்தினருக்கும் பயனளிக்கும் வகையில் இருக்க வேண்டும். இல்லையெனில் 'வீணில் விழலுக்கிறைத்த நீர்போல் ஆகிவிடும். தான் மட்டும் அனுபவிப்போம் என்று நினையினும் எதிர்மறையினதாய் முடியும். ஆதலால் காத்த பொருள் கைவிட்டுப் போகாமல்

இருக்க அதனைத் தகுந்தவர்களுக்கும், இவ்வுலக மக்களுக்கும் ஈந்து மகிழவேண்டும். அத்தகைய வேளாண்மையில் உலகத்தில் பல வித்துகள் விழுந்து பல மரங்கள் விளைய வேர்விடும் என்கிறது குறள்.

## புகழ் வாழ்வு

புகழொடு வாழவேண்டும் என்பது இச்சமுதாயத்தின் எதிர்பார்ப்பாகும். தோன்றின் புகழொடுதான் தோன்ற வேண்டும். இல்லையெனில் தோன்றிப் பயனில்லை எனவும் வள்ளுவம் பகர்கின்றது. பயன் வாழ்க்கை வாழவும் பிறரிடத்து இன்முகத்துடன் பொருள் ஈயவும் குறள் கூறும்' முறைகள் பல உள்ளன. செல்வம், பொருள் என்பது எவரிடத்தும் நிலை யில்லாதது. 'செல்வம் சகடக்கால் போல வரும்' என்பது பழமொழி. இளமை நில்லா, யாக்கை நில்லா, வானாளாவிய வளம் பெருஞ்செல்வமும் நில்லா. ஆகவே பொருளைக் காத்து வைக்கலாமேயொழிய அவை பயனற்றுப்போகுமாறு செய்தல் ஆகாது!

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு** *(குறள் 231)*

என்கிறது வள்ளுவம். தான் சேர்த்து வைத்த பொருளை பிறர்க்களித்து அதனைப் பெறுபவர்களின் முகத்தில் காணும் இன்பத்தைப் பார்த்து வாழவேண்டும். அவ்வாறு வாழும் வாழ்வே ஒருவன் புகழுக்குரிய உண்மையான வாழ்க்கை ஆகும். அவ்வாறின்றிச் சுயநலத்துடன் (Selfish) வாழும் வாழ்வென்பது பயனற்ற வாழ்க்கை ஆகிவிடும். ஒருவன் புகழ்பெற வாழ்தலுக்கு, பிறருக்குப் பொருளைக் கொடுத்தல் என்னும் உண்மையினை வள்ளுவப் பெருந்தகை உணர்த்துகின்றார். உலகிற்கு இது ஒரு வேதாந்தம். உதவுதலுக்கு இது சித்தாந்தமாகும்.

## அளவறிதல்

முயன்று பொருள் தேட வேண்டும். முறையாகத் தேட வேண்டும். அவ்வாறு தேடப்பட்ட பொருள் சிக்கனமாகப் பயன்படுத்தப்படவும் வேண்டும். சிக்கனம் இழந்த குடும்பம் பொருளாதாரத்தால் நலிவடையும். நாடு தன் வலுவிழக்கும். உலகத்தால் இழிவாகப் பேசப்படும் நிலையும் வரும். இதிலிருந்து மீள வள்ளுவர் எச்சரிப்புச் செய்கின்றார்.

**ஆற்றின் அளவறிந்து ஈக; அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி** *(குறள் 477*

கொடுப்பவர், பெறுபவர் இருவருடைய தன்மையையும் கருத்தில் கொண்டு பொருள் வழங்கல் வேண்டும். 'ஆற்றில் இட்டாலும் அளவோடு இடு' என்பது பழமொழி. வள்ளுவரும் இதனை வலியுறுத்துகின்றார். அவ்வாறு கடைப்பிடிக்காதவன் வாழ்க்கை இருப்பதுபோல் இருந்து இல்லாமல் விரைவில் போய்விடும்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும் *(குறள் 479)*

என்பது குறள்.

## முடிவுரை

1. இல்லானை இல்லாள், ஈன்றெடுத்த தாய் எவரும் புறம் தள்ளுவர். அவன் சொல் (பொருளற்றவன்) சபையேறாது.
2. வள்ளுவர், பொருளீட்டுகின்ற முறையினையும் ஒழுங்கினையும் வரையறை செய்துள்ளார்.
3. இவ்வுலக இன்பமும், வீடு பேறு சுகம் காணவும் பொருளே முக்கியமானது. அதனைச் சேமித்துப் பாதுகாக்கவும் பிறருக்கு ஈயவும் வள்ளுவர் அறங்களைப் போதித்துள்ளார்.
4. அளவறிந்து வாழவும், பொருளின் தன்மை, பெருமை, பொருளின் வாயிலாக அடைகின்ற பெருவாழ்வு இவையாவினையும் வள்ளுவம், உலக அளவில் பகர்கிறது.
5. பொருளாதாரச் சிந்தனைகளாக வள்ளுவர் வழங்கியுள்ள பொன்மொழிகள் என்றும் அழியாத் தேவையாகும்.

※ ※ ※

# ECONOMICS OF THIRUVALLUVAR ON WATER AND AGRICULTURE

**N. Rajalakshmi**
**A. Juliet**

Indian Economics begins with Thirukkural of Thiruvalluvar and Arthasasthra of Koutilya. The talent of Thiruvalluvar lies in expressing precisely. Two short lines convey Thiruvalluvar's thoughts on particular aspects of a subject like Hercules in Greek mythology really Herculean. Thiruvalluvar rendered Thirukkural in three main Divisions: 1. Arathupal, 2. Porutpal, 3. Inbathupal. Arathupal deals with ethics and morals. In porutpal, he writes among others, on kingship, Government etc. Inbathupal deals with love and domestic life. Thiruvalluvar stresses the importance of rain by singing in praise of rain. Thereby he establishes that prosperity due to the extent of rainfall are evident.



## AGRICULTURE

According to Thiruvalluvar, the most important economic activity is agriculture. This was not because the poet was living in

a predominantly agricultural society but because it is the most fundamental activity for all time and food is the basis of life and raising food is the primary occupation of mankind. Husbandmen are the axle pin of the world; for on their prosperity revolve the prosperity of the other sectors of the economy. Even saints, who have forsaken wordly needs, must cease from spiritual pursuits, were farmers to sit idle with folded arms. Again "That country which has a peasantry whose fields rustle with thick waves of corn becomes the refuge of several other countries.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து *(குறள் 1032)*

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கும் நிலை *(குறள் 1036)*

பலகுடை நீழும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர் *(குறள் 1034)*

Stating the primacy of agriculture, Valluvar is only particularising and illustrating the idea he postulated in the Chapter on "Rains", in the Payiram or Introduction. He was concerned to establish that material support is essential for a life of positive living and that under ultimate "principle of rain", agriculture assumes a basal character. It is in this context that the stress on the indispensable nature of rain by Thiruvalluvar becomes apt. A stable economy is built on an adequate production of food and not merely on its supply. An element of dependence and instability emerges if food supplies have to come from elsewhere. He expatiates on the horrors of poverty, of course, proposals, suggestions and theories for the eradication of poverty to posterity. Perhaps, he should have been aware that changing times will involve changes in the contents and kinds of poverty demanding suitable theories and measures to eliminate poverty. He visualizes a society that is free from "growing hunger, chronic diseases and perpetual enmity with other nations "Kural 734".

Thiruvalluvar's writings on economics are on the lines of Physiocrates. He assigns paramount importance to agriculture. It does not mean that he has no faith in achieving prosperity through industrial development however. What he emphasizes is that agricultrure as the basic activity of man provides not only food for living on earth but also certain new materials needed by industries.

He implies that a nation should not depend too much and continuously on other nations for its food requirements. After the Green Revolution India has become self-reliant and walking towards developed status. He places great importance on individual values. He stresses the need and importance of accumulation of wealth and status.

While Thiruvalluvar sings in praise of rain, he implies that rain as a natural resource is one dominant causative factor of spatial and regional differentiation and economic disparities.

The major aim of Thiruvalluvar's economic and regional economic thought as revealed in his Porutpal is the total eradication of poverty in all the regions of a nation, in all the constituent parts of a region and in the nation. Thiruvalluvar condemns the evils of poverty and emphatically insists on its total removal at any cost "Nothing is more dreadfully painful than poverty". According to Thiruvalluvar good water, good rain and prosperous agriculture can bring a welfare state. That is true even today. Water has become the public good of prime importance.

India with all her plans and efforts is yet to free her agriculture from the monsoon's gambling and periodical floods and their havoc. Here Valluvar introduces one further argument in favour of the importance of the agricultural sector. Agriculture alone is the most independent vocation. He says "the ploughman alone lives as the freeman of the soil, the rest are more slaves that batten on their toil. A peasant who toils with the sweat of his brow, begs not at other mans's doors, but ungrudgingly shares his bread with those that beg for alms.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் (குறள் 1033)

இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர் (குறள் 1035

Valluvar evites here from his practice of formulating only broad general truths. He proceeds to lay down certain detailed agricultural techniques and cultural practices, which he considers highly important for a successful agricultre.

The type of land tenure that Valluvar visualised was one of peasant proprietorship. He was not in favour of absentee landlordism. "As sulky and sullen as a woman abandoned of her

lord is the land abandoned by her owner. Valluvar's chapter on agriculture opens with the statement that agriculture is superior to all other vocations. "Whirl as the world will, it must after all rely on the plough. Therefore agriculture is the most important of all industries. Again, in the next couplet he says "Husbandmen are the lynch pin of society, for they support all those that take to other work, not having strength to plough" When we come to the third verse we see something very close to the Physiocratic doctrine. Valluvar says, "who ploughing eat their food, they truly live. The rest to others bend subservient, eating what they give."

Quesnay's emphasis on agriculture is revealed in his statement that agricultural nations alone can form empires, which are fied and durable and agriculture is itself the only source of wealth. Physiocrates sought to prove that agriculture alone produced the wealth of the community and that, in contrast to this "productive" activity, all other occupations, however, laudable and necessary were "unproductive" and "sterile". Commerce, like industry, is merely a branch of agriculture. The distinction between agriculture and industry and commerce is further revealed by the fact that in agriculture there is a surplus while the other merely pay their way. This surplus is the famour "product net", the token of Nature's superior bounty in agricultural operations. Explaining the Physiocratic doctrine, Adam Smith wrote Proprietors and cultivators finally pay both the wages of all the workmen of the unproductive class, and the profit of all their employers.

What an anticipation, what a similarity! Nevertheless this does not appear to be the sense in which Valluvar was employing the word "Servant" or "Servile" or "Subservient" as applied to those who are engaged in vocations other than agriculture. There is no suggestion that what they produce has no value, or that their pursuits are "unproductive". All Valluvar meant to convey, it appears, was the basic dependence of all on agriculture for the food requirements; hence the supreme importance of investing it with the primary among human activities, and fostering it with care. The others are "subservient" in the sense that they all have to depend on growers of food in the ultimate analysis. The economic freedom of the grower of food is basic; that of othres only derived. For Valluvar was not living in a primitive or pastoral society. "In his days, Tamil land had reached a high degree of mateiral civilisation- a developed agriculture, a variety of arts and manufacturers, and a

brisk foreign trade with distant Greece and Rome. The Sangam literature, in particular the works like Pattinappalai and Purananuru, bear ample reference to the advanced stage of the arts and crafts. It is with all these advances in the arts and techniques of industry and trade that Valluvar holds, that agriculture has the pride of place among economic activities.

Perhaps there was a period when the neglect of agriculture in Tamil Nadu was serious, the taxes on land extortionate and the oppression of the peasantry severe. There are references in the Sangam literature to farmer-poets exhorting the kings to keep their oppressive hands off the peasantry. There might have been recurrent famines, floods and pestilence and periodical food shortages. It was in times such as these that Valluvar might have lived. It is likely that the Chola Emperor Karikala was either contemporareneous with Valluvar or might have immediately followed him. This Tamil Emperor's achievements in the field of land reclamation, colonisation, construction of dams, and other far reaching works of agriculture development had the impact of Valluvar's thoughts. Nevertheless, Valluvar did not belong to any school of thought.

Rain and water resources should have been recognised by Valluvar as dominant factors responsible for spatial and regional differentiation. But Thiruvalluvar did not theorize on how rain and water resources cause spatial and regional differences. He did not refer to the traditional one sixth or lay down any other fixed proportion of the produce as land tax. This can be ascribed to his recognition of the spatial regional and other differences. According to Thiruvalluvar, the vital agents of economic activity are those who raise food, the body of competent men and the man of wealth.

Thiruvalluvar visualizes a welfare state. In his welfare state there is no unemployment, no poverty, no hunger, no excessive intolerable vertical and horizontal inequalities of wealth and income, no chronic diseases and no perpetual enmity with other nations and no insecurity arising from within Kural 734 and Kural 738.

According to Thiruvalluvar the most important economic activity is agriculture since it is the most fundamental activity for all time and food is the basis of life and raising food is the primary occupation of mankind. The chapter on rains assigns agriculture a basal character. He proceeds to lay down certain detailed

agricultural techniques and cultural practices for successful agriculture - a deviation from his practice of formulating broad general truths. He was not in favour of absentee landlordism. Kural 1039.

It's Thiruvalluvar's idea that has been responsible for turning the belt area of Tanjavur into the rice bowl of Tamil Nadu, then and now, Kumbakonam to emerge and remain one famous manufacturing centre of artistic goods and domestic vessels made of copper and other metals, Karamudai, to be known for its decorative mat weaving, Uraiyur for its cotton handloom, textiles, the belt area of Tiruchirappali to be popular for rice, betel leaves and certain varieties of plantain fruits and mango fruits, Arani of present North Arcot District to remain famous for pure silk sarees. The emergence of Kllekal, Dharmavaram, Bangalore and Benaras as other famous centres of pure silk should have been the upshot of the demonstration effect.

There is more than one stanza in Valluvar's chapter on Agriculture, which seems to anticipate the Physiocratic doctrine and Physiocratic conclusions of Francois Quesnay (1694-1774) who has substantial claims to be regarded as the real founder of political economy in the modern sense. All that Valluvar's meant to convey was the basic dependence of all on agriculture for their food requirements. Others are subservient in the sense that they all have to depend on growers of food in the ultimate analysis. The economic freedom of the grower of food is basic, that of others only derived.

Thiruvalluvar is quite aware that the behaviour of man cannot be gauge and put into test tubes for laboratory experiments to derive conclusions. It is for this reason, Thiruvalluvar lays great emphasis on the significance of the role of individual values and judgements in society. Further, Thiruvalluvar focusses his concern on the horrors of poverty. And the study of poverty is the study of the causes of the degradation of a large part of mankind. His greatest concern is with the common man. He writes for the common man. His commonsense concept urges the establishment of a robust economy and realisation of social justice. Hence, Thiruvalluvar's economic thought is essentially the study of man and his welfare. His implied concern is that every economic theory and every invention in the field of science, medicine and technology should aim at the eradication of poverty is witnessed in the present.

As long as there is poverty even in a single area of the world and as long as there is a single, poor, individual and a single destitute in the world, Thiruvalluvar and his economic idea indicates that there is no single poor individual, no single destitute and no single poverty stricken area. Thiruvalluvar and his economics and his economic thought will continue to exist in order to look back and remind us and the horrors of poverty and check its resurgence. Valluvar ideology on water, agriculture and plenty of food has been forseen for a prosperous Indian economy in Abdul Kalam's vision.

## REFERENCES


1. Ganguli, B.N., Indian Economic Thought, (New Delhi, 1977).
2. Gray, Alexander, The Development of Economic Doctrine, (Longmans, Green, London-1931).
3. Higgins, Benjamin, Economic Development Principles, Problems and Policies, (Central Book Depot, Allahabad - 1966).
4. Abdul Kalam, Vision 2020 (1995).
5. Kurien, C.T., Poverty, Planning and Social Transformation, (Madras - 1978).
6. Meenakshi Sundaram, T.P., Philosophy of Thiruvalluvar, (The Sornammal Endownment Lecture, University of Madras - 1963).
7. Natarajan, B., Economic Ideas of Thiruvalluvar, (The Sornammal Endowment Lectures, 1960-61) University of Madras, 1962).
8. Ribbins, Lord, Political Economics, (Weldenfeld and Nicolson, London - 1969).
9. Shanmugasundaram, V., Economics of Thiruvalluvar, (In Tamil), (Saiva Siddhanta Works - Publishing Society, Tinnevelly, 1977).
10. Grampp William, D., Economic Policy Readings in and Political Economy.
11. Sanjeevi, N. Editor, First All India Thirukkural Seminar Papers. (University of Madras - 1972).
12. Rajalakshmi, N., Tamil Nadu Economy, Business Publications, 1998.

# வள்ளுவரின் பொருள் ஆதாரக் கோட்பாடுகள்

ப. யசோதா

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன்
குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக்
கொருநீதி

*- மனோன்மணீயம்*

இலக்கிய உலகில் திருக்குறள் ஒரு திருப்பு மையம். சிந்தனை வளத்தில் அது ஒரு பேரிமயம். கடந்த காலத்தின் பழுதிலாத் திறங்கண்டு எதிர்காலத்தின் ஏற்றத்துக்கு வழிகாட்டுகின்ற கலங்கரை விளக்கம். அது மனித சிந்தனைகளின் உயரிய வெளிப்படை. இதனை,

**The Kural is the master-piece of Tamil literature, one of the highest and purest expressions of human thoughts**

என்றியம்பிய "ஏரியல்" என்பாரின் வார்த்தைகளால் அறியலாம்.



வாழ்வியல் சிந்தனைகளைப் புதிய வடிவாக, வண்டமிழ்க் கொடையாக, புதுமையாகப் பகுத்து வழங்கியவர் வான்புகழ் வள்ளுவர். பொருளாதாரத்தில் அவர் பங்கு குறிப்பிடத்தக்கது.

காலந்தோறும் பல புதுப்புதுக் கருத்து விளக்கங்களை அறிஞர்கள் விளங்கிக் கொள்ளவும், விரித்து வழங்கவும் குறள்நூல் இடமளிக்கின்றது.

ஒரு கருத்தை எடுத்துக் கொண்டு அதனைப் பத்துவகையில் அலசி ஆராய்தல் அக்கருத்தைக் கசடறத் தெரிந்து தெளிந்து கடைப்பிடிக்க உதவும்.

**கற்க கசடறக் கற்பவைக் கற்றபின்**
**நிற்க அதற்குத் தக** *(குறள் 391)*

என்று தான் கூறியதற்கேற்றாற்போல் வள்ளுவர் ஒரு பொருளின் இயல்பு, அதுபற்றிய விளக்கம், அதன் ஆற்றல், முதன்மை, முறைமை, செயல், வகை, நயம், பயன், நம் கடமை என்பவற்றை அணுகி ஆயும் பத்து முறைகளாக்கிச் சுட்டிக்காட்டியிருப்பது மிகச் சிறப்பானது. கற்றுத் தெளிந்து வாழ்க்கையில் அதனைப் பின்பற்ற உகந்தது.

## கோட்பாடு உருவாக்கம்

ஒவ்வொரு நாட்டிலும் கோட்பாடுகள் உருவாவதற்கு அந்நாட்டில் தொன்றுதொட்டு வந்த நடைமுறைகளும், அதன் பயனாய் வளர்ந்த கொள்கைகளுமே காரணமா கின்றன.

பொருள் + ஆதாரம் = பொருளாதாரம்

எந்த ஒரு தொழிலுக்கும், வாழ்க்கைக்கும் பொருள் தேவை. பொருளே ஆதாரம் என்றும் கூறாவிட்டாலும் பொருளின்றி செய்தல் அரிது.

## பொருளியல் வளர்ச்சி

ஒரு நாட்டின் பொருளியல் வளர்ச்சிக்கு வேளாண்மை அடிப்படையானது என்கிறார் வள்ளுவர்.

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம், அதனால்**
**உழந்தும் உழவே தலை** *(குறள் 1031)*

மக்கள் பல்வேறு தொழில்களைச் சுழன்று சுழன்று செய்தாலும் அவையெல்லாம் உழவுத் தொழிலுக்குப் பிற்பட்டனவே. தொல்லைகள் தந்தாலும், உழவுத் தொழிலே தலைசிறந்த முதன்மையான தொழில் என்கிறார்.

உலக நாடுகள் அனைத்தின் அடிப்படைத் தொழிலான வேளாண்மை பொறியியலின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. "இலாப நோக்கோடு செய்யப்படும் தொழில்களுள்

விவசாயத்தைவிடச் சிறந்தது இல்லை" என்பார் 'சிசிரோ'. ஆகவே பொருள் ஈட்டலில் முதன்மையாகச் செய்யப்பட்ட தொழில் வேளாண்மை. அதிலிருந்தே ஒரு நாட்டின் பொருளாதாரம் வலுப்பெறத் தொடங்கிற்று.

## பொருளின் சிறப்பு

அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருள்இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு *(குறள் 247)*

அருளிலார்க்கு அவ்வுலகமில்லை, பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை. இது அனைவரும் அறிந்ததே. ஆனால் முதலில் வரும் அருள்ளைப்பற்றிச் சிந்திப்பதைவிடப் பின்னால் வரும் பொருளைப் பற்றினதே அனைவர் மனத்திலும் முந்தி நிற்கிறது. பொருளின்றி இவ்வுலகில் வாழ்தல் அரிது என்பதை உண்மை என அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆக வாழ்க்கைக்குப் பொருள் தேவை. முக்கியம் இதை வள்ளுவர்

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு *(குறள் 752)*

என்று கூறி வலுப்படுத்தியுள்ளார். அஃதாவது ஒருவர் சிறப்பெய்த வேண்டுமெனில் பொருள் நிறைந்திருக்க வேண்டும் / செல்வராக இருக்க வேண்டும். செல்வம் இல்லாதவரை எல்லாரும் இகழ்வர். செல்வம் உள்ளாரை எல்லாரும் போற்றுவர் என்று கூறியுள்ளார். இதை உணர்ந்தே நம் நாட்டு இளைஞர்களும் அறிவுச் செல்வத்தைப் பெற்றுக்கொண்டு பொருள் செல்வத்தைத் திரைகடல் ஓடித் தேடுகிறார்கள்.

## பொருள் ஈட்டல்

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்அல்லது இல்லை பொருள் *(குறள் 751)*

ஒரு பொருட்டாக மதிப்பதற்குத் தகுதி இல்லாதவரையும், மதிப்பிற்குரியவராகச் செய்வது செல்வமே அஃதில்லாமல் வேறொன்றுமில்லை என்று கூறியுள்ளார். இதற்கு இக்கால வாழ்க்கை முறையே நல்ல உதாரணம்.

பழந்தமிழரும்,

ஈதல் இரந்தோர்க்கு ஒன்று ஆற்றாது
வாழ்தலின் சாதலும் கூடும் *(கலித்தொகை)*

என்ற ஈதல் இயையாதபோது சாதலே மேல் எனக்கருதி,

அருள் நன்குடையராயினம், ஈதல் பொருள்
இல்லோர்க்கு அஃது இயையாது (அகநானூறு)

என உணர்ந்து பொருள்தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

பொருள் ஈட்ட தொழில்கள் பல உண்டு. தொழில்திறன் இயற்கையின் வரப்பிரசாதம். கிரேக்கப் பேரறிஞர் "பிளேட்டோ" என்பார் "ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு தொழில் செய்வதில் ஆர்வமும் திறமையும் இயற்கையாக உண்டாகின்றன. இதன் விளைவே உழைப்புப் பிரிப்பு (Division of Labour) என்கிறார்.

"பொருளாதாரத்தின் தந்தை" என்றழைக்கப்படும் "ஆடம்ஸ்மித்" அவர்கள் உழைப்புப் பிரிவினையால் உற்பத்தித் திறன் மிகும். உபரியான உற்பத்தியை இலாப நோக்குடன் பிறருக்கு விற்று ஒவ்வொருவனும் தன்னலத்தைப் பேணி வளர்க்க முடியும். இத்தன்னல முயற்சி, பொது நலத்தையும் பேணுவது ஒரு சந்தர்ப்ப விளைவு என்கிறார்.

உலகில் செய்யப்படும் எல்லாத் தொழில்களின் / செயல்களின் இறுதி விளைவும் பொருள் ஈட்டலிலேயே முடிகின்றது அப்பொருள் அடுத்த செயல் அல்லது தொழிலைச் செய்வதற்கு ஆதாரமாகத் திகழ்கின்றது.

## ஆட்சியாளருக்குரிய பொருள்கள்

தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் பொருள் தேவைப்படுவது போல் ஒரு நாட்டின் ஆட்சிப்பொறுப்பை மேற்கொண்டிருக்கும் அரசுக்கும் பொருட்செல்வம் தேவையாகிறது. தென்புலத்தார், தெய்வம், சுற்றம், விருந்து, தான் என்னும் ஐந்தற்கும் ஒவ்வொரு பங்கு போக எஞ்சிய ஒரு பங்கு அரசுக்குரியது என்பது வள்ளுவர் தரும் விளக்கம்.

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் (குறள் 756)

இக்குறளின் படி அரசுரிமையாக / இயற்கையாக வந்த பொருள். வரியாக / தீர்வையாக வந்த பொருள். தன் பகைவரை வென்று திறையாக வரும் பொருள் ஆகியவை ஆட்சியாளருக்குரிய பொருள்களாகும்.

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு (குறள் 760)

பொருளைச் சேர்க்க வேண்டும். அதுவும் நல்ல வழியில் சேர்க்க வேண்டும். நல்ல வழியால் பெரும்பொருளைச் சேர்த்தவர்க்கு அறமும், இன்பமும் ஒருசேர எளிதாய் வந்தடையும் என்கிறார் வள்ளுவர்.

## பொருள் முதன்மை

பொருளின் வன்மையையும் இன்றியமையாமையையும் வள்ளுவர் நன்குணர்ந்தவர். 'பொருளென்னும் பொய்யா விளக்கம்'; 'செல்வரை எல்லோருஞ் செய்வர் சிறப்பு'; 'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்'; 'செறுநர் செருக்கறுக்கும் பொருள்'; 'ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள் ஏனை இரண்டும் ஒருங்கு' என்ற கருத்துகளாலும்,

> அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
> தீதின்றி வந்த பொருள் (குறள் 754

என்று சிறப்பிப்பதாலும், 'பொருளே சிறப்புடையது' என்றும், அதன் வாயிலாய் அறம், இன்பம் இரண்டையும் எளிதாய்ப் பெறலாம் என்றும் வள்ளுவர் வலியுறுத்துகிறார். இதன்மூலம், மற்றவற்றைப் பெற முதன்மையாய்ச் செயல்படுவது பொருளே! என்பது புலனாகிறது.

## சிறந்த பொருள்

வள்ளுவர் பொருளே சிறந்தது என்று வலியுறுத்துபவராயினும் அறவழிப் பொருளையே அரசனுக்கு வலியுறுத்தினார். அரசுக்கு நெருக்கடியான காலத்திலும், பொருளை அறத்துக்கு மாறான வழியிலும் மக்களை ஏமாற்றியும், தண்டனையை மிகுதியாக்கியும் சேர்த்தல் மிகத் தவறானது என்று சாடுகிறார். அறவழிப் பொருளே சிறந்த பொருள் என்றுரைக்கிறார்.

> அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
> செல்வச் செவிலியால் உண்டு (குறள் 757)

அன்பினால் ஈன்றெடுக்கப்பட்ட அருள் என்னும் குழந்தை, பொருள் என்று சொல்லப்படும் செல்வச் செவிலித்தாயால் வளரும். ஆகவே பொருள் என்பது அனைத்திற்கும் வேண்டப் படுவது என்கிறார் வள்ளுவர். பொருள் இல்லாமல் உலக நாடுகள் இந்த அளவுக்கு வளர்ந்திருக்க முடியுமா?

## தொழில் முதன்மை

வள்ளுவர் நாட்டின் தன்மை மற்றும் வளத்தைப் பற்றி விளக்கும்போது, உழவுத்தொழில் சிறக்க வேண்டும். அதற்கு

உழைப்பும், சோம்பலின்மையும் மிகத்தேவை என்கிறார். உழைப்பவர்கள் மிகுதியாய் வேண்டும் மற்றும் அவர்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார். எல்லா மக்கட்கும் தலைசிறந்த தொழிலாக உழவுத் தொழிலைச் சிறப்பிக்கின்றார். மேலும் உழுபவனுக்கே நிலம் சொந்தமாக இருத்தல் வேண்டுமென்ற கொள்கையை அன்றே வலியுறுத்தியுள்ளார். மேலும், பொருள் ஈட்டலில் முதன்மையாகச் செய்யப்பட்ட தொழில் வேளாண்மையே! ஆகவே தொழில்களில் முதன்மையாகச் சிறப்பிக்கப்பட வேண்டியது உழவுத் தொழிலேயாகும் எனக் கூறுகிறார்.

## முடிவுரை

ஒரு நாட்டின் ஏழ்மை நிலையை எப்படிப் போக்குவது என்பதைப்பற்றி விளக்கமாகப் பொருட்பாலில் வள்ளுவர் தெளிவுபடக் கூறியுள்ளார். ஒரு நாடு முன்னேற அந்நாட்டின் பொருளாதாரம் முதலில் ஊக்குவிக்கப்பட வேண்டும். பொருளாதார முன்னேற்றத்திற்கு வறுமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். ஒரு நாட்டின் திட்டங்களை இதனடிப்படையில் படிப்படியாக அமைத்தால் அந்நாட்டின் முன்னேற்றம் மிக விரைவில் எளிதாக ஏற்பட்டுவிடும்.

### துணை நூல்கள்

1. திருக்குறள் அறம் ஓர் ஆய்வு, அ. இளவழகன், மீனாட்சி நூலகம், 1991.

2. புறநூல்களில் பொருளியல் கோட்பாடுகள், மகா. வேங்கடராமன், 1989.

3. திருக்குறள் மக்கள் உரை, குறள்ஞானி கு. மோகனராசு, 1994.

※ ※ ※

# அரசியல்

# திருக்குறள் காட்டும் அரசியல்

ஆர். அனுராதா

நாட்டின் தன்மை, ஆட்சியின் இயல்பு ஆகியவற்றின் உண்மை நிலைகளை எடுத்துக் கூறுவதை அரசியல் எனலாம். இது ஒரு சமூகத்துள் வாழும் மக்களின் செயல்களின் நிலையை எடுத்துக்காட்டும். மனிதனின் எண்ணங்களும் கற்பனைகளும் பிறரால் கட்டுப்படுத்த முடியாதவை. உலகம் ஒரு குடும்பம். மக்கள் அதன் உறுப்பினர். ஆள்வோரும் ஆளப்படுவோரும் வேறல்லர். குடியரசு, முடியரசு, படையரசு என எதுவாக இருப்பினும் சிறப்பான முறையில் அரசு நடத்துவதை நோக்கமாய்க் கொள்ள வேண்டும். வள்ளுவரின் அரசியல் எப்படிப்பட்டது என்பதை அறிவதே இவ் வாய்வின் நோக்கமாகும்.



வள்ளுவர் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழகத்தில் வாழ்ந்த ஒரு தனிப்பெரும் புலவர். வள்ளுவர் வையகம் தழைத்து வாழ அறநூலாம் திருக்குறளை எழுதியுள்ளார். வள்ளுவரின் திருக்குறள் உலகப் பொதுமறையாகப்

போற்றப்படுகின்றது. எக்காலத்தும், எந்நாட்டவராலும், எச் சமயத்தினராலும் பின்பற்றக்கூடிய கருத்துகள் அதில் இடம் பெற்றுள்ளன. வள்ளுவர் வாழ்வின் பல்வேறு கூறுகளை நன்கு ஆராய்ந்து தெளிந்து உலக உயிர்களின் செம்மையான வாழ்க்கைக்கு வேண்டிய அறிவுரைகளை விளக்கி உள்ளார். அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளில் வாழ்க்கை பொலிவடையும் வழிவகைகளை வகுத்துள்ளார். இவர் பொருட்பாலின் முதல் 25 அதிகாரங்களிலும், ஒழிபியல், அங்கவியல் போன்ற அதிகாரங்களிலும் அரசியல் கருத்துகளை உள்ளடக்கி உள்ளார்.

நாட்டிற்கு ஓர் அரசு வேண்டும். அரசுக்கோர் தலைவன் வேண்டும் என்பது வள்ளுவம். தலைவன் வரும் வழி பற்றிக் கவலையில்லை. எவ்வழியாயினும், அரசேற்கும் தலைவனைப் பற்றியே ஆசான் கவலை கொண்டார். அரசன் தவறும் வழி பேசாது இறைமாட்சி அதிகாரத்து அவனுக்கு அமைய வேண்டும் அரசியல்புகளைப் பேசினார்"[1] என்பர் வ.சுப. மாணிக்கம்.

நாடாளுகின்ற அரசன், உயர்ந்த குறிக்கோள் உடையவனாகவும், பண்புடையவனாகவும், ஆற்றல்கள் நிறைந்தவனாகவும் இருக்க வேண்டும் என்பதே வள்ளுவரின் கருத்து. வள்ளுவர் மன்னனும் மக்களும் ஒன்றே என்னும் கருத்துடையவர். மனிதனுக்குரிய சிறந்த குணங்களை அரசன் பெற்றிருக்க வேண்டும் என விரும்புகின்றார். மன்னனிடமிருந்து மக்களை வேறுபடுத்துவது நாடாளும் பொறுப்பு மட்டுமே. மக்களுக்கு ஆட்சிக்கு உட்படும் கடமை. இந்த வேறுபாட்டைத் தவிர பிற வேறுபாடில்லை. பண்டைக் காலத்தில் முடியாட்சி வழக்கத்திலிருந்தது. அரசன் தெய்வீகத் தன்மை வாய்ந்தவன் என்ற கருத்து நிலவி வந்தது. அரசன் தவறு செய்யமாட்டான். அரசனைத் தவறு செய்பவனாக நினைப்பதே மிகவும் பாவம் என நினைத்து வாழ்ந்தனர் மக்கள் என்றால் அது மிகையில்லை.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும் *(குறள் 388)*

என்ற குறளின் மூலம் வள்ளுவர் கூறுவதாவது: அரசனைக் கடவுளாக நினைத்த காலத்திலேயே நீ கடவுள் இல்லை. நீ நல்லபடி நடந்தால் மக்கள் உன்னைக் கடவுளாக நினைத்துப் போற்றுவார்கள் என்றார். இக்கருத்து எக்காலத்திற்கும் பொருந்தும் என்பது எவ்வளவு பெரிய உண்மை. குடியாட்சி மலர்ந்துள்ள இந்த நாளில் கூட மக்கள் அரசிடமிருந்து

எதிர்பார்ப்பதும் இதையே தான். "திருவள்ளுவர் ஆட்சித் தலைவனுக்கு என்று கூறும் இயல்புகள் நாட்டு மக்கள் பலருக்கும் வேண்டிய நல்லியல்புகளாக உள்ளன. நாட்டு மக்களுள் நல்ல இயல்பும் திறனும் கல்வியும் உள்ள பலர்க்கும் ஆட்சித் தலைமை கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கும். அரசியல் முறையே குடியாட்சி முறை"[2] என்ற மு.வ. அவர்களின் கருத்து சிந்தனைக்குரியது.

மன்னன் என்பவன் மக்களைக் கண்ணாகவும் உயிராகவும் உடலாகவும் கருதினான் என்று பல்வேறு காலங்களில் வாழ்ந்த சான்றோர்கள் பல்வேறு கருத்துகளைச் சொல்லிச் சென்றுள்ளனர். வள்ளுவர் அரசன் ஆட்சி செய்த செங்கோல் ஆட்சியினையே இறைமைத் தன்மை உடையதாகக் கருதினார். இதனைப் பின்வரும் குறள் புலப்படுத்தும்.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் *(குறள் 543)*

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் *(குறள் 547)*

தலைவன் செங்கோலாட்சி புரிந்தால் மக்கள் அவனை மதிப்பர். இல்லையாயின் அவனுடைய நிலை கெடும் என்பது,

வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும் *(குறள் 563)*

எனும் குறளால் அறியப் பெறும். வள்ளுவர் கால அரசு மன்னனையும் மக்களையும் மையமாகக் கொண்டது. மக்கள் நினைத்தால் மன்னனை மாற்ற இயலும் என்னும் குரலைப் பல குறள்களில் காணலாம். மக்களை நீக்கியதற்கான சான்றுகள் இல்லை. மறைமுகமாக எடுத்துரைக்கிறார். சான்றாக,

இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும் *(குறள் 564)*

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை *(குறள் 555)*

என்ற குறள்களில் மன்னன் மக்கள் விருப்பத்திற்கு மாறாக ஆட்சி நடத்துவானேயானால் அவனுடைய ஆட்சி விரைவில் அழியும். அதற்கும் மாறாக ஆட்சி புரிபவனாக இருந்தால் அவன் கொடுங்கோலன் என்று மக்களால் தூற்றப்படுவான் என்று கூறுகிறார். அரசன் மக்கள் மனம் மகிழ அரசாட்சி நடத்த

வேண்டும். இதற்கு அரண் சேர்க்கும் வகையில் பின்வரும் கருத்து அமைந்துள்ளது. 'அரசியல் என்பது மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு தத்துவம் கொள்கை. அரசியல் என்பது வாழும் முறை (Way of life) அல்லது வாழ்க்கை முறை (Way of living) ஆகும். அஃதொரு சமுதாய வாழ்க்கை முறை. அரசியல் சமுதாய வாழ்க்கைக்கு ஒருங்கமைதியைத் தருவது. ஒருவர்க்கு மேற்பட்ட பலர் கூடி வாழ்வதற்கும், பொருளியல் ஒழுங்கியல் முறைகளுக்கும் அரசியலே வழிவகுத்துத் துணை செய்கிறது. அறநெறிகளில் மனிதகுலம் ஒன்றி நின்று வாழ்வதை உறுதிப்படுத்தத்தான் அரசியல் தோன்றுகிறது, தொண்டு செய்கிறது. அரசியல் தத்துவங்கள் மனித உலக வரலாற்றின் நிகழ்வுகளிலிருந்து தோற்றம் பெறுகின்றன. சிறந்த அரசியல் நிலவும் நாட்டில் ஒழுங்குகள் நிலவும். வாழ்க்கையின் துய்ப்புக்குரியன அனைத்தும் எளிதில் கிடைக்கும். அறிவுத்துறை மேம்பட்டு விளக்கமுறும். ஆங்குப் பகை ஒடுங்கிப் பண்பாடு விளங்கும். அரசியலின் பயன் அரசியலை நடத்துபவர்களுக் கன்று; மக்களுக்கேயாம்'[3]

'முடி மன்னர்க்கு' என்று வகுத்துக் கூறிய நெறிமுறைகள் குடிமக்களுக்கும் உரியதாக உள்ளன. குழந்தையைக் காப்பாற்றுவது தாயின் கடமை. தாய்மார்களை இரண்டு வகையில் அடக்கலாம். ஒன்று காலமறிந்து உணவு கொடுப்பவர்கள். மற்றொன்று அழுதபின் கொடுப்பது. எப்படி இருப்பினும் குழந்தையைக் காப்பாற்ற வேண்டியது தாயின் கடமை. மன்னன் மக்களைக் காப்பதில் தாயை ஒத்து விளங்க வேண்டும் என்பதனை,

**குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு** *(குறள் 554)*

என்று விளக்கிக் கூறியுள்ளார். "மன்னன்" என்பதை விட்டுவிட்டு வேறு சொல்லால் அழைத்தால் அது இன்று நடைமுறையில் இருக்கும் குடியாட்சியை உடைய எந்தவொரு நாட்டுத் தலைவனுக்கும் பொருந்துவதாக இருக்கும். குடிதழீஇக் கோலோச்சும் ஒருவருக்கு - குடி மக்களைத் தழுவி ஆளும் ஒருவருடைய ஆணைக்கு இவ்வுலகம் கட்டுப்படும். வள்ளுவரின் குறளில் குடியாட்சிக்குப் பொருந்தாத இறை மன்னன் 'வேந்தன் எனப் பல சொற்றொடர்கள் உள்ளன. இச்சொற்கள் பொதுமையாக 'ஆட்சித் தலைவன்' எனும் பொருளில் கையாளப்பட்டுள்ளன. அரசுப் பொறுப்பில் உள்ளவர்கள்

யாராக இருந்தாலும் அவர்கள் குடிமக்களின் நன்மை கருதி வேண்டியன செய்ய வேண்டும். மக்களுக்கு நன்மை செய்ய வேண்டியது அவர்களின் கடமை என்பதை உணர்ந்து பொறுப்பாக நடக்க வேண்டும் எனும் கருத்து மக்களாட்சிக்கும் பொருந்துவதாக உள்ளது.

வள்ளுவர் விவசாயம், தொழில் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். விவசாயத்தை உலகின் உயிர்நாடி என்று கருதி நீர் மராமத்து, குடி மராமத்துகளைப் பெருக்குதல் அரசின் கடமை என்கிறார்.

> **வாரி பெருக்கி வளப்படுத்து உற்றவை**
> **ஆராய்வான் செய்க வினை** *(குறள் 512)*

அரசுக்கு வேளாண்மைத் துறையில் உள்ள பங்கு இதனால் பெறப்படுகிறது.

அரசுப் பொறுப்பில் உள்ளவர்கள் செய்ய வேண்டிய செயல்களை எடுத்துரைத்த வள்ளுவர், அடுத்ததாக அரசுக்குப் பொருள் வருவாயை அதிகரிக்கும் வழிவகைகளைச் சொல்லிச் செல்கிறார்.

> **இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
> **வகுத்தலும் வல்லது அரசு** *(குறள் 385)*

இதில் இடம்பெற்றுள்ள இயற்றல் என்னும் சொல் மிகவும் முக்கியமான சொல்லாக ஆளப்பட்டுள்ளது. புதிய பொருளாதாரக் கொள்கையின் படி, புதிய தொழில்களை நிறுவியதால் ஏற்பட்ட புதிய அமைப்பின் மூலம் தேடிப் பெறப்பட்ட பொருள் என்பதையே இயற்றல் என்கிறார் வள்ளுவர். புதிய வரிகள் எனப் பொருள் கொள்ளக்கூடாது. நேர்மையான முறைகளில் புதிய வழிகளில் பொருளைத் தேடிச் செல்வத்தைக் குவிப்பதைக் கடமையாய்க் கொள்ள வேண்டும். இவ்வாறு பெறப்படும் பொருளை ஒழுங்கான முறையில் சேர்க்க வேண்டும். இதனை ஈட்டல் என்று குறிப்பிடுகிறார். அதைப் பாதுகாப்போடு வைத்திருப்பதைக் காத்தல் என்று கூறியுள்ளார். இயற்றல், ஈட்டல், காத்தல் ஆகியவற்றை அரசின் கடமைகளாக வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலுக்கும், ஆட்சியாளர்களுக்கும், அமைச்சர்களுக்கும் இது சாலவும் பொருந்தக்கூடியது. இறைமாட்சி என்ற அதிகாரத்தில் கூறியுள்ள அறிவுரைகளை அமைச்சர்கள் பின்பற்றி நடந்தால் நாடு நலமுறும். சான்றாக,

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு (குறள் 381)

என்ற குறளின் மூலம் உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்கவும், வெளிநாட்டுப் படையெடுப்பை, எதிர்க்கவும் தேவையான படைகள், ஆட்சிக்கு அடங்கி நடக்கும் மக்கள், தேவையான உணவு, அறிவும் திறமையும் வாய்ந்த அமைச்சர்கள் அண்டை நாடுகளுடன் நட்பு, நாட்டைக் காக்கும் இயற்கை அரண்கள் ஆகிய ஆறு உறுப்புகளைக் கொண்டவன் அரசர்களில் ஏறு போன்றவன். இவ்வடிப்படைத் தன்மைகள் யாரிடம் இருந்தாலும் அவர்கள் அரசாளலாம் என்பதே வள்ளுவரின் எண்ணம். அரசனின் ஆளுகைக்கு உட்பட்ட நாட்டைத் தம் உடைமையெனக் கருதாமல் உயிராகவே கருதுதல் வேண்டும். நாட்டிற்கு அழகு சேர்ப்பது,

பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து (குறள் 738)

எனக் கூறியுள்ளார். நாட்டைப் பாதுகாக்கும் வழி முறைகளையும் கூறுகிறார். இதனை,

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து (குறள் 879)

பகைவர் வலிவடைவதற்கு முன்னரே அவரை வெல்ல வேண்டும். இல்லையாயின் அவர்கள் வலுவடைந்த பின் அவர்களை வெல்வது கடினம் என்று அறிவுறுத்துகிறார்.

ஒரு நாடு சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமானால் வெளிநாட்டுப் பொருள்கள் மீது வரி விதிக்க வேண்டும். உள்நாட்டுப் பொருள்கள் மீது வரி விதிக்கக் கூடாது என்கிறார். இதனை,

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் (குறள் 756)

என்ற குறளின் மூலம் வெளிநாட்டுப் பொருள்களின் மீது மட்டும் தான் வரி விதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

வள்ளுவருடைய அரசு அமைப்பில் ஆள்வோரும் ஆளப்படுவோரும் நெருங்கிய உறவினர்களாகக் காட்டப் பட்டுள்ளனர்.

பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு (குறள் 733)

அரசின் நெருக்கடி உணர்ந்து மக்கள் பொருளைத் தருகிறார்கள். இப்படி அரசை மக்களும், மக்களை அரசனும் புரிந்து நடப்பதையே நாடு என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அரசுக்குப் பலவிதமான அதிகாரங்கள் இருந்தாலும் அதனால் ஏற்பட்ட அகந்தையின் காரணமாய்த் தவறு செய்யாதிருக்கும் அரசே நல்ல அரசு என்றும் குறிப்பிடுகிறார். அதாவது அரசு ஒழுக்கம் நிறைந்ததாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் மக்களும் தவறு செய்ய மாட்டார்கள். மக்கள் தவறு செய்யாமல் வாழ்வதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அரசே நல்ல அரசு என்றும் குறிப்பிடுகிறார். அடுத்து அவர் தீமையை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் கூறுகிறார். அரசு தீய செயல்களை மாற்ற வழிவகை செய்ய வேண்டும். தவறு செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும். தீமை செய்தவர்களைத் தண்டிப்பதும், தீமையை ஒழிப்பதும் அரசின் தலையாய கடமையாகும். இதனை வள்ளுவர்,

குடிபுறம் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் (குறள் 549)

என்று மிகச் சுருக்கமாகவும், தெளிவாகவும் குறிப்பிட் டுள்ளார். அஞ்சாத திண்மை, வறியவர்களுக்கு ஈயும் பண்பு, சோம்பல் இல்லாதிருத்தல், முயற்சியை நட்பாகக் கொள்ளுதல், கல்வி கேள்விகளிற் சிறத்தல், துணிவுடைமை, குடிகளின் குறை தீர்க்கும் மனம், காட்சிக்கு எளிமை, இனிய சொல், நன்மை தீமைகளை ஆராய்ந்து செய்தல் என பல நல்ல குணங்களின் சேர்க்கையே அரசன். இப்பண்புகளைப் பெற்ற ஒருவனால் மட்டுமே நாட்டைச் சிறந்த முறையில் நிருவகிக்க முடியும். இக்கருத்தும் எக்காலத்திற்கும் பொருந்துவன வாகவே உள்ளது.

வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி (குறள் 542)

எனும் குறளும், செங்கோன்மை எனும் அதிகாரத்தில் உள்ள பிற குறள்களும் இக்கருத்திற்கு வலுச்சேர்ப்பனவாக உள்ளன. சுருங்கக் கூறின் திருவள்ளுவருடைய அரசியல் அமைப்பை மக்கள் நல அரசு என்பது பொருத்தமாக இருக்கும்.

பண்டைக் காலத்தில் முடியாட்சியைத் தவிர வேறு அமைப்புகள் இல்லை. எனினும், முடியாட்சியில் மக்களாட்சியையும், குடியாட்சியில் கொடுங்கோலாட்சியையும் காணமுடிகிறது.

ஆட்சி எந்த உருவத்தில் காணப்பட்டாலும். அதன் நோக்கம், பயன் ஆகியவை கருதித்தான் உயர்ந்தது என்றோ, தாழ்ந்தது என்றோ கொள்ளப்பட வேண்டும். திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே "மக்கள் நல அரசுக்கு' வித்திட்டு விட்டார் எனில் அது மிகையாயாது.

## அடிக்குறிப்புகள்

1. வ.சுப. மாணிக்கம், **வள்ளுவம்,** பக். 253-254.
2. ந. சஞ்சீவி, **திருக்குறள் கனிகள்,** ப. 169.
3. குன்றக்குடி அடிகளார், திருவள்ளுவர், சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள், ப. 60.

※ ※ ※

# திருவள்ளுவர் கூறும் அரசியல் பொதுநெறி

கோ. இராதிகா

அறந்திறம்பா நெறியால் பொருளீட்டுமாறும், தன்னைப் போற்றித் தானுந் துய்த்துப் பிறர்க்கும் கொடுக்குமாறும் என்று பொருட்பாலுக்குரிய விளக்கம் கூறும் வள்ளுவர் அரசநீதியையையும் கூறியுள்ளார். ஏனெனில் நாட்டில் உள்ள மெலியார் பொருட்களை வலியார் கவராமல் நாடுவளம் பெற்று, வாணிகம் பெருகிட, நல்லார்க்குத் தீது புரியுங் கொடியாரைக் கண்டித்து முறை செய்யும் மன்னன் இல்லையாயின் பொருளீட்டுதல் நிகழாதாகையால் இங்கு அரசநீதியைக் கூறியுள்ளார்.

## பகுப்பு முறை



அரசியலில், அங்கவியல், குடியியல் என்பன அடங்குகின்றன. அரசன் செங்கோல் நடத்தும் முறையும், அவனுக்குத் துணைக் காரணமாகிய அங்கங்களின் இயல்பும், அவ்வரசனால் பாதுகாக்கப்படும் குடிமக்கட்குரிய ஒழுகலாறும் சொல்லல் என்ற

அடிப்படையில் பகுக்கப்பட்டதால் இறுதி இயல் குடியியல் எனப்பட்டது. அப்பெயரை ஒழிபியல் என மாற்றியோர் பரிமேலழகரோ, அவர்க்கு முற்பட்ட உரையாசிரியரோ என்பது தெளியப்படவில்லை.

## குறிக்கோள்

"திருவள்ளுவர் குறள் முப்பாலால் ஆகியது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன. 'உலகம் ஒரு குலம்' என்பதற்குக் கால்கொள்ளும் இடம் காமத்துப்பால், அப்பாலுக்கு உரம் அளிப்பது பொருட்பால். இரண்டையும் ஒழுங்கில் இயக்கிக்காப்பது அறத்துப்பால். மூன்றன் குறிக்கோளும் 'உலகம் ஒருகுலமாதல் வேண்டும்' என்பதைத் திரு. வி. கலியாணசுந்தரனார் விளக்குகிறார்.

## அரசியல்

அரசியல், அங்கவியல், ஒழிபியல் இம்மூன்றியலுள்ளுங் கூறும் பொது நெறிக்கருத்துகளை இங்குக் கூறுவதென்பது இயலாத செயல். ஆகையால், அரசியல் 25 அதிகாரத்தினுள் கூறப் பட்டுள்ள 250 குறட்பாக்களின் பொது நெறிக் கருத்துகளைக் காண்போம். அவற்றுள் 61 குறள்கள் மட்டுமே அரசுக்கு (அ) அரசனுக்குக் கூறப்பட்டுள்ளன. 189 குறள்கள் ஆட்சித் தலைமை உட்பட "எல்லாருக்கும்" பொருந்தும் பொதுக் கொள்கைகளைப் பேசுகின்றன.

## பொது நெறிக் கருத்துகள்

பண்டைத் தமிழகத்தில் "அறங்கூறும் அவையங்கள்" பல இருந்துள்ளன. அதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. அறம் என்பது மனித வாழ்வில் தீமைகளை அகற்றித் துன்பங்களை விலக்கி இன்பத்தைத் தருவது. இந்த அறநெறி மனித வாழ்வின் படிப்பினைகளிலிருந்தே தோன்றி வரலாற்றுக்கு வளமூட்டுகிறது. இந்த அறநெறிகளில் மனிதகுலம் ஒன்றி நின்று வாழ்வதை உறுதிப் படுத்தத்தான் அரசியல் தோன்றுகிறது; தொண்டு செய்கிறது.

அரசியல் தத்துவங்கள் மனித வரலாற்றின் நிகழ்வுகளி லிருந்து தோற்றம் பெறுகின்றன. வள்ளுவர் காட்டும் அரசு குடியாட்சி தழுவிய முடியாட்சியாகும்.

## அரசர்க்குரிய தகுதிப்பேறுகள்

வடமொழிச் சாத்திரங்கள் கூறுவதைப்போல் ஆட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்கும் வேந்தன் பிறப்பாலோ வழிவழியாகவோ மரபு வழியிலோ அன்றிக் கடவுள்தன்மை பெற்றோ ஆட்சிக்குவர வேண்டும் என்ற எவ்வகை நியதியையும் வள்ளுவர் கூறவில்லை. ஆனால், மக்கள் ஆட்சியை மாண்புற நடத்துவதற்கான தகுதிகளையும், பண்புச் சிறப்புகளையும் ஆட்சித்தலைவருக்குரிய இலக்கணமாக,

> **படைகுடிகூழ் அமைச்சு நட்பு அரண்ஆறும்**
> **உடையான் அரசருள் ஏறு** *(381)*

ஆகிய 6 உடைமைகளையும் பெற்று அரசையும், குடிமக்களையும் நடுமாய்க் கொண்டதாகும்.

> **முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
> **இறைஎன்று வைக்கப் படும்** *(குறள் 388)*

எனவும்,

> **இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
> **வகுத்தலும் வல்லது அரசு** *(குறள் 385)*

பொருள் வருவாய்களை மேன்மேலும் உண்டாக்குதலும், வந்த பொருள்களை ஓரிடத்துச் சேர்த்தலும், சேர்த்தவற்றைப் பிறர்கவராமல் காத்தலும், காத்தவற்றை அறம் பொருள் இன்ப வழிகளில் செலவிடப் பகுத்தலும் வல்லவனே சிறந்த அரசன் என்றும் (386, 387, 390) அறத்தின் வழிநின்று அரசர்க்குரிய தகுதிப்பேற்றுடன் வாழவேண்டும் என்றும் கூறுகின்றார்.

## தலைமை முறைகாத்தல்

அரசனுக்குரிய குற்றங்களையும் (432) அக்குற்றத்தைக் கண்டு அவற்றை நீக்கிவிட்டுப்பின்பு பிறர் குற்றத்தைக் காண வல்லவனாயின், அரசனுக்கு வரக்கூடிய குற்றம் ஒன்றுமில்லை (436) என்றும்,

> **இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை**
> **முறைகாக்கும் முட்டாச் செயின்** *(குறள் 547)*

என்றும் வையகம் முழுவதையும் அரசன் காப்பான், முட்டுப்பாடு நேர்ந்தபோதும் முட்டில்லாது முறை செய்வானானால் அரசனை

அச்செங்கோல் காக்கும் என்றும் கூறுகிறார். செங்கோன்மை (544, 546, 547, 549, 550, 551, 555), மன்னர்க்குச் சிற்றினம் சேராமை (452), குடி தழுவிய கோல், அடிதழுவி நிற்கும் குடி (542, 544), அருளற்ற ஆட்சி (557, 570, 558, 552), மழை விளைவு (545), மழை தவறும் நிலை (559), ஆட்சித் தலைமை கெடல் (548, 563, 564, 569, 567, 448) ஆகிய கருத்துகளும் கூறப்பட்டுள்ளன.

திருவள்ளுவர் சங்ககால மக்களிடம் பரவியிருந்த புராணக் கதையை எடுத்துக்காட்டிச் சோம்பலின்மையின் திறத்தை,

**மடியில்லா மன்னவன் எய்தும் அடியளந்தான்**
**தாஅயது எல்லாம் ஒருங்கு** *(குறள் 610)*

என்ற குறளில் ஓர் அரசன் சோம்பலில்லாத தன் முயற்சியால் திருமால் கடந்த (தாவிய) மாநிலம் முழுவதையும் அடைவான் என்கிறார். மேலும் தன்வலியும், துணை வலியும் அறிதல் பற்றிய கருத்துகளை 471-476 வரையிலான குறள்கள் புலப்படுத்துகின்றன.

**ஊக்கமுடைமை**

கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற மிகச்சிறந்த அழகு பண்புடையவரிடம் இருப்பதனாலேயே இவ்வுலகம் அழியாமல் இருந்து வருகிறது (571, 592, 593, 594, 595, 600, 605, 607). ஊக்கம் உடைமையே நிலையான உடைமை. ஏனென்றால் அது மனத்தில் உள்ள செல்வமாகும். பொருள் உடைமை நிலைத்தது அன்று; அது உடம்பைவிட்டு வேறாக இருப்பது ஆகையால் அழியக்கூடியது. நிலைத்த செல்வமான ஊக்கத்தைத் தம்மிடம் கொண்டவர்கள் பெற்ற நன்மை போய்விட்டதே என்று எப்போதும் வருந்த மாட்டார்கள்; ஊக்கம் கொண்டு உழைத்து மீண்டும் அதை அடையப் பாடுபடுவார்கள். சோர்வற்ற ஊக்கம் உடையவனிடத்தில் நன்மை தானே வழிகேட்டுப் போய்ச் சேரும் (611, 612, 613, 615).

**முயற்சி திருவினை ஆக்கும் முயற்றுஇன்மை**
**இன்மை புகுத்தி விடும்** *(குறள் 616)*

முயற்சி பொருள் வளத்தைப் பெருக்கும். முயற்சி இல்லா விட்டால், வளம் எல்லாம் வறண்டு வறுமை அடையச் செய்யும் (616, 619, 620) என்கிறார் வள்ளுவர்.

## பெரியாரைத்துணைக்கோடல்

அறத்தின் பெருமையை உணர்ந்தவர்களாகவும் தன்னை விட அனுபவம் முதிர்ந்தவர்களாகவும் உள்ள பெரியவர்களின் துணை வேண்டும். அவர்களுடைய துணையை முறை அறிந்து கொள்ள வேண்டும். வந்த துன்பத்தை நீக்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு; இனித்துன்பம் வராமல் காக்கும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு. ஆகையால் அவர்களுடைய துணையைப் போற்ற வேண்டும்.

அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல் (குறள் 441)

அத்தகைய பெரியவர்களின் துணை இருந்தால் அந்தத் தலைவனைக் கெடுக்கவல்ல பகைவர் ஒருவரும் இல்லை. அவ்வாறு இடித்துக் கூறித்திருத்தும் பெரியவர்களின் துணை இல்லாத தலைவன் கெடுவான். அவனுக்குத் தீமை செய்யப் பகைவர் இல்லாவிட்டாலும் அவன் எளிதில் கெடுவான் (447, 448).

## தெரிந்து செயல்வகை

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு (குறள் 467)

செய்யத்தகுந்த செயலையும் வெற்றியாக முடிக்கும் வழிவகைகளையும் ஆராய்ந்து தொடங்க வேண்டும். தொடங்கிய பின் எண்ணுவோம் என்பது குற்றமாகும். எனவே தகுந்த வழியில் செய்யப்படாத முயற்சி, பின்பு பலரும் துணையாக நின்று காப்பினும் கெட்டுப் போகும் (468).

## இடுக்கண் அழியாமை

துன்பம் வரும்போது சோர்ந்து அழியாமல் உள்ளத்தில் மகிழ வேண்டும். வந்த துன்பத்தை வெல்வதற்கு அதைப்போல் சிறந்த வழி இல்லை.

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்துஊர்வது அஃதுஒப்பது இல் (குறள் 621)

வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும் (குறள் 622)

இன்பம் வந்தபோது கடமையைச் செய்வதொடு நின்று இன்பத்தை விரும்பாமல் வாழ்ந்தால், துன்பம் வந்தபோது கடமையைச் செய்து கொண்டு துன்புறாமல் இருக்க முடியும் (622, 629).

## பிறிதுமொழிதல்

திருவள்ளுவர் வேறு எப்பகுதியிலும் இல்லாத அளவிற்கு இப்பகுதியில் பிறிதுமொழிதலாய்க் கருத்துகளை அமைத்துள்ளார். அந்த அமைப்பை எண்ணஎண்ணத் திருவள்ளுவரின் அற நெஞ்சம் புலனாகின்றது. வலியறிதலில் இருமுறையும் (475, 476) இடனறிதலில் மும்முறையும் (495, 496) கூறுகின்றார்.

**கால்ஆழ் களரின் நரிஅடும் கண்அஞ்சா**
**வேல்ஆள் முகத்த களிறு** *(குறள் 500)*

பாகரின் சினந்த பார்வைக்கும் அஞ்சாமல், போர்க்களத்தில் வேல் வீரரைக் கோட்டால் குத்திக் கோத்த மத யானைகளையும், அவை கால் புதையும் சேற்று நிலத்தில் சிக்கிய போது மிகச் சிறிய நரிகளும் கொன்று விடும் என்று பிறிதுமொழிதல் அமைத்துள்ளார்.

அவை அல்லாமல் உவமைகளும், உருவகங்களும் பல உள்ளன. இவற்றை ஆராய்ந்தால் போர் அறநெறியிழந்து கெட்டு வருதலையும், பொது நன்மைக்குப் பயன்படாமல் பொது அழிவுக்குப் பயன்பட்டுவருதலையும் திருவள்ளுவரே உணர்ந்து உணர்ந்து போரை வெளிப்படையாய்க் கூறாமல் விட்டார் என்று எண்ணத் தோன்றுகின்றது. எதிர்காலத்தில் அறிஞர்களாலும், பொதுமக்களாலும் போர் வெறுக்கப்படும் என்று உணர்ந்து போரற்ற காலத்திற்கும் பயன்படுமாறு எழுதினார் என்று கருத இடந்தருகின்றது.

உலகம் முன்னேற ஒழுக்கம் வேண்டும். அவ்வொழுக்கந் தானும் மன்னன் செங்கோலால் எய்தப் பெறுவதாகும். மன்னன் கோல் கோடின் மக்களின் ஒழுக்கங் குன்றும். குன்றின் அரசனுமில்லை, குடிகளுமில்லை. மன்னரும், அமைச்சரும், பிற உறுப்பினரும் தத்தம் பொறுப்புகளையும், கடமைகளையும் உணரப் பொருட்பாலிற் பல அதிகாரங்களை வள்ளுவப் பெருந்தகை வகுத்துள்ளார். திருக்குறள், ஒழுக்கம் கூற வந்த அறநூல் என்பது தெளிவு.

## துணை நூல்கள்


1. திருவள்ளுவர், **சொர்ணாம்பாள் நினைவுச் சொற்பொழிவுகள்,** முதல் பதிப்பு 1981, பக். 62, 63, 65, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
2. மறைமலையடிகள், **திருக்குறள் ஆராய்ச்சி,** இரண்டாம் பதிப்பு, ஏப்ரல், 1960, பக். 51, 52, பாரி நிலையம், சென்னை 1.
3. கு.ச. ஆனந்தம், **திருக்குறளின் உண்மைப் பொருள்,** முதற் பதிப்பு, திசம்பர் 1986, பக். 283, 281, 305, 313-315, 317, தங்கம் பதிப்பகம், கோபி செட்டிபாளையம் - 638 451.
4. டாக்டர் மு. வரதராசன், **திருவள்ளுவர் (அ) வாழ்க்கை விளக்கம்,** ஏழாம் பதிப்பு - 1967, பக். 107-108, 112, 152, 116-117, 119-120, 122, 148, தாயக வெளியீடு, சென்னை - 1.
5. வ.சுப. மாணிக்கம், **வள்ளுவம்,** இரண்டாம் பதிப்பு - 25, திசம்பர், 1993, ப. 214, மணிவாசர் பதிப்பகம், சென்னை - 1.
6. டாக்டர் தி. முருகரத்தினம், **வள்ளுவர் வகுத்த பொருளியல்** (கருத்தரங்கக் கட்டுரைகள்), முதற் பதிப்பு - 1975, பக். 16, 17, திருக்குறள் ஆய்வக வெளியீடு& மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை - 1.
7. இலஞ்சி, வெள்ளிவிழா மலர், ஈஸ்வரன் பிள்ளை, முதல் வெளியீடு - 1953, ப. 274, திருவள்ளுவர் கழகம், தென்காசி.


⁂

# திருவள்ளுவர் உணர்த்தும் அரசியல்

யு. ஜெயபாரதி

அரசியல் என்பதற்கு ஆங்கிலச் சொல் 'பாலிடிக்ஸ்' (Politics). இது கிரேக்கச் சொல்லாகிய 'பொலிஸ்' (Polis) என்ற சொல்லைத் தழுவியதாகும். 'அரசு' என்றால் 'ஆட்சி' அமைப்பாகும். அதற்கு அமைச்சர், தூதுவர், பெரியோர், ஒற்றர், படைவீரர் ஆகியோரின் பணி இன்றியமையாத தேவையாகின்றன.

## அரசன்

நீதி முறை தவறாது ஆள்பவன் மக்களால் இறைவனாய் மதிக்கப்படுவான் என்பதை,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் *(குறள் 388)*



என விளக்குவதொடு அத்தகைய ஆட்சியில்தான் மழையும் விளைச்சலும் ஒருங்கே கிடைக்கும் என்பதனைக் (குறள் 545) குறிப்பிடுகின்றார்.

## அரசனின் இயல்புகள்

அஞ்சாநெஞ்சம், ஈகை, அறிவு, ஊக்கம் ஆகியவற்றைக் கொண்டவனாகவும்

(குறள் 382), எளிதில் காணக்கூடியவனாகவும், இன்சொல் கூறுபவனாகவும் இருக்க வேண்டும்.

> **காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
> **மீக்கூறும் மன்னன் நிலம்.** *(குறள் 386)*

மேலும், சோம்பலில்லாத மன்னன் மாநிலம் முழுதும் ஆள்வான் (குறள் 610). தன் குறைகளைச் சுட்டும்போது அதனைப் பொறுத்துக் கொள்ளும் பண்பும் (குறள் 389) வேண்டும். வறியவர்களுக்குக் கொடுத்தல், அன்பு காட்டுதல், நீதி தவறாமை, மக்களுக்குத் துன்பம் நேராமல் பாதுகாத்தல் ஆகிய பண்புகளும் பெற்றிருக்க வேண்டும் என்பதனை,

> **கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
> **உடையான் வேந்தர்க்கு ஒளி** *(குறள் 390)*

என்ற குறளில் குறிப்பிடுகின்றார்.

ஆளுவோர்க்கு ஆலோசனை வழங்க அமைச்சன், தூதுவன், பெரியோர் ஆகியோரின் துணை அவசியம் எனக் குறிப்பிடுகின்றார்.

### அரசனின் வல்லமை

பொருள் வரும் வழிகளை இயற்றுதல், வந்த பொருள்களைச் சேர்த்தும், பாதுகாத்தும், வகுத்தும் செலவிடல் வேண்டும் என்பதனை,

> **இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
> **வகுத்தலும் வல்ல தரசு** *(குறள் 385)*

என்ற குறளில் குறிப்பிடுகின்றார்.

மேலும் வரக்கூடிய துன்பத்தை முன்பே அறிந்து தடுத்துக் கொள்ளும் அறிவு ஆள்வோர்க்கு வேண்டும் என்பதனையும் (குறள் 429) குறிப்பிடுகின்றார்.

ஆளுவோர்க்கு இடித்துக் கூறும் (அ) குற்றங்களைச் சுட்டிக்காட்டி வழிபடுத்தும் குழு தேவை என்கிறார். ஆலோசனையில் திருத்திக் கொள்ளும்போது அவனை யாராலும் அழிக்க முடியாது என்றும், அத்தகைய இடித்துக் கூறுபவர் இல்லையாயின் பகைவரின்றியே அரசு கெடும் என்றும் குறிப்பிடுகின்றார்.

> **இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே**
> **கெடுக்குந் தகைமை யவர்** *(குறள் 447)*

**இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பா ரிலானுங் கெடும்** *(குறள் 448)*

*மேலும், ஆட்சிப் பீடத்திலுள்ளவர்கள் யாராயினும் அவர்கள் பிறருக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். தன்னைத்தானே உயர்வாக எண்ணுதல் கூடாது. மேலும் நன்மை தராத செயல்களை நினைத்தலும் கூடாது (குறள் 439); ஆராய்ந்த பின்பே எச்செயலையும் செய்ய வேண்டும். தொடங்கிய பிறகு ஆராயக்கூடாது என்பதை,*

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு** *(குறள் 467)*

*என்ற இக்குறளில் குறிப்பிடுகின்றார்.*

### *அரசில் தண்டனை*

*கொலையை ஒத்த கொடுமை செய்கின்றவர்களைக் கொலைத் தண்டனை கொடுத்துத் தண்டித்தல் தவறல்ல என்பதனை,*

**கொலையின் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனொடு நேர்** *(குறள் 530)*

*என்ற குறளில் சுட்டுகின்றார்.*

*"கள்வனைக் கோறல் கடுங்கோலன்று" என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுவதால் அக்காலத்தில் திருட்டுக்குத் தண்டனையாகக் கொலைத் தண்டனை விதிக்கப்படும் வழக்கம் இருந்ததை அறியமுடிகிறது. கொலைத் தண்டனையை ஆதரிக்கும் அதே வள்ளுவர் தான் இவ்விடம் பின்வரும் கருத்தையும் குறிப்பிடுகிறார். ஆட்சியில், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும்போது தண்டனை அச்சத்தைத் தருவதாக (குறள் 562) இருக்க வேண்டுமே தவிர அழித்து விடக்கூடாது என்று குறிப்பிடுகின்றார். மேலும் கல்வி மக்களின் அடிப்படை உரிமை அதனை வழங்குதல் அரசின் தலையாய கடமை என்கிறார்.*

### *அமைச்சன்*

*அனுசரிக்க வேண்டிய அத்துணை முறைகளையும் வகுத்துக் கூறக்கூடிய ஆற்றல் மிக்கவன் அமைச்சன். அவனது இயல்புகளாகச் செயலுக்குரிய கல்வியும் அதற்கேற்ற காலமும் செய்யும் முறையும், செயல்திறனும் இருக்க வேண்டும் என்பதனை,*

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு (குறள் 631)

என்ற குறளில் சுட்டுகின்றார். அஞ்சாமை, அறங்காக்கும் திறன், அறநூல் தெளிவு, விடாமுயற்சி ஆகியவற்றைப் பெற்றவனே அமைச்சன் என்றும் (குறள் 632), செயல்களை ஆய்ந்தும், வழிமுறைகளை ஆய்ந்தும், துணிவாகவும், கனிவாகவும் கருத்தை எடுத்துச் சொல்லுதலும் (குறள் 634); நுண்ணறிவோடு நூலறிவும் பெற்றவனாக இருக்க வேண்டும் என்றும் (குறள் 636) கூறுகிறார்.

**தூதர்**

ஒரு நாடு, மற்றொரு நாட்டில் கண்ணியமாய்க் கருதப்படுவதற்கும் இரண்டு நாடுகளிடையே நேசமனப்பான்மை வளர்வதற்கும் தூதர்களே முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர். தூதர்க்குரிய பண்புகளாக,

அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று (குறள் 682)

இந்த மூன்றிலும் ஆராய்ந்த சொல்வன்மை முக்கியமாய்க் குறிப்பிடப்படுகிறது. இயற்கையான நூலறிவு, காண்போரைக் கவரும் தோற்றம், ஆராய்ச்சியுள்ள கல்வியுடன் (குறள் 684),

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு (குறள் 681)

என மேலும் சிலவற்றைத் தூதுரைப்பார்க்கு உரிய தகுதிகளாய்க் குறிப்பிடுகின்றார்.

தூதுசெல்வான் தொகுத்துக் கூறுதல், கடுமையான சொற்களை நீக்குதல், பிறர்மனம் மகிழச் சொல்லுதல், தன்னரசனுக்கு நன்மை விளைவித்தல் ஆகிய பண்புகளைக் கொண்டவனாக விளங்க வேண்டும் என்பதனை,

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது (குறள் 685)

என்ற இக்குறளில் விளக்குகிறார்.

தனக்கு அழிவே தருவதாயினும் அதற்காக அஞ்சாது, தன் அரசனுக்கு நன்மை உண்டாகுமாறு செய்பவனே தூதுவன் எனத் தூதுவனுக்கு இலக்கணம் வகுக்கும் குறள்,

இறுதி பயப்பினும் அஞ்சாது இறைவர்க்கு
உறுதி பயப்பதாம் தூது (குறள் 690)

என்பதாகும்.

*படை, அரண்*

*நாட்டின் மீது செல்லும் பகைவரைத் தடுக்கவும், நாட்டின் சுய ஆட்சியை நிலைநிறுத்தவும், அரசில் படை முக்கியப் பங்கு வகிக்கிறது.*

கூற்றுவுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் அதுவே படை *(குறள் 705)*

*வீரர்கள், கூற்றுவனே எதிர்வரினும் எதிர்த்து நிற்கும் ஆற்றலுடையவர்கள். இத்தகைய படையை உடைய அரசனுக்குத் தோல்வி என்றுமில்லை என்கிறார். அத்தகைய படையின் முக்கியத்துவத்தைப் 'படைமாட்சி'யில் விளக்குகின்றார். வீரர் தம் மேல் எதிர்த்து வந்த பகைவரின் போரைத் தாங்கி வெல்லும் தன்மை அறிந்து அவரது படையை எதிர்த்து வெல்லும் திறமை உடையவராய் இருக்க வேண்டும் என்பதனை,*

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை யறிந்து *(குறள் 767)*

*என்ற குறளில் கூறுகிறார். அண்டை நாடுகளுடன் போரைத் தவிர்த்து நட்புக் கொள்ள வேண்டும். தற்காப்புக்காக மட்டுமே போர் புரிதல் வேண்டும். போரையும் அறவழியில் நடத்தவேண்டும். போர் நடத்தல் இயல்பாக இருப்பதால் அரண்களை அமைத்தும், படைகள் சேர்த்தும் தன் நாட்டைக் காக்க வேண்டும். தோற்ற பகைவரிடம் திறை பெறுதல் பற்றியும் குறிப்பிடுகின்றார். போரில் காலம், பொருள், ஆற்றல் வீணாவதைக் குறிப்பிட்டுச் சமாதானத்தையே வலியுறுத்து கின்றார்.*

*ஒரு நாட்டிற்குப் பகை நாட்டாரின் தாக்குதலின்று தப்பிக்க வலுவுள்ள அரண்கள் முக்கியம். அவை இயற்கையாக அமைந்திருந்தால் மேலும் நன்மை பயக்கும். எனவே நாட்டுப் பாதுகாப்பில் அரண் முக்கியத்துவம் பெறுகிறது (குறள் 742).*

*இலக்கியத்தின் தரத்தை, பிரான்சிஸ் பேக்கன் என்பவர் "கற்கத்தக்கன, கற்று உணரத்தக்கன, கற்று உணர்ந்து வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தத்தக்கன" என்று வகைப்படுத்தும்போது, இந்த இலக்கிய வரிசையில் வள்ளுவரின் குறள் கற்று உணர்ந்து வாழ்க்கையில் பின்பற்றத்தக்க சிறப்புடைய இலக்கியமாய்த் திகழ்கிறது.*

*அரசியல் மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு தத்துவம். அது சமுதாய வாழ்க்கைக்கு ஒழுங்கமைதியைத் தருவது.*

தமிழகத்தைப் பொறுத்தவரை முடி மன்னராட்சி போற்றும் வகையிலே இருந்துள்ளது. உலக அரசியல் வரலாற்றில் நீதியை நிலைநாட்டும் பொருட்டுத் தன்னுயிரைக் கொடுத்த தமிழ் நாட்டரசர்கள் போல் எவருமில்லை என்பதனை வரலாறு அறிவிக்கிறது.

'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற குடியரசு நாட்டில் வாழும் நமக்கு அரசியல் வழிமுறைகளை, 2000 ஆண்டுகளுக்கு முன்பே ஆட்சிமுறை இருக்க வேண்டிய அமைப்புகளைக் குறிப்பிட்டுள்ள அவரது அரசியல் மதிநுட்பத்தோடு கூடிய, தொலைநோக்குப் பார்வை பாராட்டத்தக்கதாய் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மூதறிஞர், அறநெறியாளர், அரசியல் சிந்தனையாளர், "எல்லா மக்களுக்கும் பொதுக் கவிஞர் என்று ஜி.யு. போப்பாலும் "வள்ளுவன் தன்னை உலகிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியாராலும், குறிப்பிடப்படுவர் வள்ளுவர். அவர் வகுத்துள்ள அரசியல் முறைகளை ஆளும் அரசுகள் (மாநிலமோ, நாடோ) பின்பற்றினால் மட்டுமே அவ்வாட்சி உண்மையான பொற்கால ஆட்சியாக இருக்க முடியும்.

## துணை நூல்கள்


1. **திருக்குறள் அரசியல் அறிவுரை**, மு. முத்துராமன், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1996, ப. 14.
2. **வள்ளுவர் தந்த தமிழகம்**, சாமி சிதம்பரனார், பாவை பப்ளிகேசன்ஸ், 2000, பக். 2, 83, 86, 87, 91, 105.
3. **குறள்மொழியும் நெறியும்**, டாக்டர் கருணாகரன், டாக்டர் ஜெயா, மணியகம் பதிப்பகம், 1993, பக். 201, 150-152.
4. **திருவள்ளுவர்**, தவத்திரு குன்றக்குடி அடிகளார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1981, பக். 1, 82-83, 63.
5. **திருக்குறள் கட்டுரைகள்**, பேராசிரியர் கட்டுரைகள் தொகுப்பு, திருக்குறள் மன்றம், 1995, பக். 126, 129, 35.
6. **திருக்குறள்**, மு.வ. உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1967, பக். 81, 141, 157, 177.

# அரசியல் - சொற்பொருள் விளக்கம்

விநாயகமூர்த்தி

அரசியல் என்னும் சொல்லை இன்று நாம் Politics என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லாக வழங்கிவருகிறோம். அரசு பற்றிய கல்வியே அரசியல், அரசு, ஆட்சி (Government), மக்கள், நாடு (Territor) ஆகியவை யெல்லாம் அரசியலுக்குரியன. திருக்குறளிலுள்ள அரசியலுக்கு அரசனது இயல்புகள் என்று பொருள் கூறுகிறது பரிமேலழகர் உரை. எனவே அரசனது பண்புகளைக் கூறுவதே அரசியல் எனலாம்

## தலைப்பு வரையறை



தொலைநோக்குப் பார்வையுடன் தொட்டுக் காட்டிய வள்ளுவரின் அன்றைய அரசியல் கூறுகள் இன்றைய அரசியலோடு பொருத்திப் பார்க்கும் பாங்கினையே 'திருக்குறளில் அரசியல்' எனும் தலைப்பு வரையறுத்துக் கூறுகிறது. திருக்குறள் முடியாட்சி காலத்தில் தோன்றியது என்றாலும் அவற்றிலே கூறப்பட்டுள்ள

அரசனின் தன்மைகள், அரசாள்வோரின் பணிகள் முதலியவை இன்றைய குடியாட்சி அரசியலின் உட்பிரிவுகளோடு தொடர்புடையனவாக உள்ளதாலும் இதனை ஆய்வோடு பார்ப்பதாலும் இத்தலைப்பு இவ்வாறு அமைந்தது எனலாம்.

## எது அரசு? யார் அரசர்?

குடும்பம், குடி, சமயம், பிற பிற மன்றங்கள் ஆகியவை அடங்கிய பரந்த அமைப்பே சமூகம் (society). சமூகத்திலுள்ள குடும்பம், சமயம், போன்றதே அரசு என்னும் அமைப்பு ஆகும். ஆக அரசு என்பது சட்டம் இயற்றி அதனை நடைமுறைப் படுத்திக் காண்பித்து வரும் ஓரமைப்பு.

அரசுபெற்ற உருவகம் ஆட்சி எனலாம். அரசே தன்னிடம் இயல்பாக அமைந்த அதிகாரத்தை ஆட்சி எனப்படும் ஆளுங்கணத்திற்குத் தந்து செயல்படுகிறது. இவ்வாளுங்கணத்தின் தலைமையே (Governmental Head) அரசன். இது முடியாட்சியின் நிலை. இன்றைய குடியாட்சி நிலையில் இது குடியரசுத் தலைவர் (அ) அமைச்சர் என அமையும்.

இப்படிப்பட்ட அரசனின் அரசியலில் மக்கள் (Population), நிலப்பரப்பு (Territory), ஆட்சி (Government), இறைமை (Sovereignity) என்ற நான்கு கூறுகள் அடிப்படையென இன்றைய அரசியல் அறிஞர்கள் வகுத்துரைக்கின்றனர். இவ்வாறே வள்ளுவரின் அரசியலும் வகுத்துரைக்கிறது. அன்று கூறிய இவை இன்றும் தொடர்புள்ளனவாக உள்ளதால் வள்ளுவரின் தொலைநோக்கு இங்குப் பொருந்துவது புலப்படும்.

## அரசனுக்குரிய பண்புகளும் பணிகளும்

1. அரசாளக்கூடிய தன்மையைப் பெற்றவன் எவர்க்கும் அஞ்சாத திண்மையைப் பெற்றிருக்க வேண்டும்.
2. வறியவர்களுக்கு ஈயும் பண்புடையவனாக இருத்தல் வேண்டும்.
3. சோம்பலைப் பகையாகக் கொண்டு, முயற்சியை (ஊக்கம்) நட்பாகக் கொள்ளுபவனாக இருத்தல் தேவையானது.
4. கல்வி கேள்விகளில் தேர்ந்த நுண்ணறிவு பெற்றவனாகவும் ஒரு பொருளை நன்கு ஆராய்ந்து துணிந்து கருத்துகளை எடுத்துரைப்பவனாக இருத்தல் வேண்டும்.

5. குடிமக்களுடைய குறைகளைக் கேட்டு அதனை உடனடியாக நீக்கும் தன்மையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6. குடிமக்கள் பார்த்து அஞ்சத்தக்க தோற்றத்தினைப் பெற்றிருக்கக் கூடாது. மாறாகக் காட்சிக்கு எளியனாகவும் இன்சொல் கூறுபவனாகவும் இருத்தல் மிகவும் தேவையானது.

7. குடிமக்களே இவன் மனம் புண்படும்படி கடுமையான சொற்களால் கூறினாலும் அவற்றைப் பொறுமையுடன் செவிமடுத்து அவற்றுள் நன்மை தீமைகளை ஆராய்ந்து ஆராய்ச்சியை நடத்துபவனாகவும் இருத்தல் மிகவும் இன்றியமையாத தன்மைகளாக மதிக்கப்படும்.

8. இத்தகு பண்புகளையெல்லாம் ஒருங்கே பெற்றிருக்க வேண்டும் என்பதைக் கீழ்க்காணும் குறள்கள் எடுத்துரைக் கின்றன.

அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு *(குறள் 382)*

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு *(குறள் 383)*

அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு *(குறள் 384)*

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம் *(குறள் 386)*

இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு *(குறள் 387)*

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ் தங்கும் உலகு *(குறள் 389)*

கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி *(குறள் 390)*

அரசனிடம் இப்படி இயல்பாகவே தூங்காமை, துணிவுடைமை, மானமுடைமை, செவிகைப்பச் சொற்பொறுத்தல், அளியுடைமை முதலான பண்புகள் நிறைந்திருக்க வேண்டு மென்று வள்ளுவர் எதிர்பார்ப்பது இன்றை அரசியலுக்கும் எதிர்கால அரசியலுக்கும் பொருந்தும் என்பதைச் சொல்லாமல் சொல்லி இருப்பது உணரமுடிகிறது.

இத்தகைய அரசனின் இயல்புகளைக் கம்பரும் மந்தரை சூழ்ச்சிப்படலத்தில்

இனிய சொல்லினன்; ஈகையன்; எண்ணினன்,
வினையன்; தூயன்; விழுமியன்; வென்றியன்;
நினையும் நீதிநெறி கட வான் எனில்
அனைய மன்னற்கு அழிவும் உண்டாம் கொலோ?

– கம்ப. அ. காண்டம், மந்தரை சூழ்ச்சிப் படலம், 26வது பாடல்

எனச் சொல்வது என காலந்தோறும் இவை பொருந்தி வருவதை இங்கே நினைவுகூரத்தக்கதாகும்.

*அரசனின் பணிகளாவன*

இன்றைய அரசியல் அறிஞர்கள் அரசனுக்குரிய பணிகள் என்னென்ன என்பதை நான்கு வகையில் அதாவது காவற்பணி (Executive duties), போர்ப்பணி (Military duties), ஆட்சிப் பணி (Administrative duties). வருவாய்ப்பணி (Revenue duties) என வகுத்துரைப்பர். வள்ளுவர் கண்ட அறிவியலில் இத்தகைய பணிகள் காத்தல், வினை, தெரிந்து வினையாடல், இயற்றல், ஈட்டல், குடிஓம்பல் முதலானவையாக கூறப்பட்டுள்ளன.

*காவற்பணி (Executive duties)*

வெளிநாடுகளிலிருந்து - அண்டை அயல்நாடுகளில் இருந்தும் - பகை நாடுகளில் இருந்தும் - தோன்றிவரும் தாக்குதல்களிலிருந்து அரசன் தன் அரசையும் மக்களையும் காத்தல் இவ்வகையில் அடங்கும். இதனை வள்ளுவர்,

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் (குறள் 547)

செருவந்த போழ்தின் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து விடும் (குறள் 569)

என்ற குறள்களிலே கூறுவதைக் காணமுடிகிறது.

நாடுகளுக்கு வெளியேயிருந்து வரும் புறப்பகையிலிருந்து காப்பதோடு மட்டுமல்லாமல் உள்நாட்டிலே நிகழும் உட்பகையிலிருந்தும் நாட்டு மக்களைக் காத்தல் அரசனின் பணியென்பதை

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு (குறள் 735)

இக்குறள் உணர்த்துகிறது. மேலும் இத்தகைய உட்பகையைத் தோன்றும் இடத்திலே தோன்றும்போது களைந்தெறிய வேண்டுமென்பதை

இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து (குறள் 879)

என இக்குறளிலே கட்டளையிடுகிறார்.

இன்றைய அரசாட்சியில் இத்தகைய புறப்பகையை எதிர்க்கப் படைகளும் (Military forces) உட்பகையைப் போக்க (Police Force) காவல் படைகளும் உள்ளமை அன்றைய குறளியல் உணர்த்தும் அரசியலோடு இங்கு பொருத்திப் பார்க்கத்தக்க தாகும்.

## போர்ப்பணி (Military duties)

பகைவரிடமிருந்து தன் நாட்டையும் மக்களையும் காக்கும் பொருட்டு அரசன் பகைநாட்டின்மீது போர் செய்ய வேண்டி வரும். அத்தகைய சூழ்நிலையில் அரசன் செய்ய வேண்டிய பணிகளை வள்ளுவர் தெரிந்து செயல்வதை, வலிஅறிதல், காலம் அறிதல், இடனறிதல் முதலான அதிகாரங்களில் பட்டியலிடு கிறார்.

### தெரிந்து செய்தல்

போர்ச்செயலைச் செய்வதற்கு முன்பு அச்செயல் பற்றி ஆராய்ந்து எண்ணிப் பார்க்கவேண்டுமென்பதை

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்று:ம இல் (குறள் 462)

என்ற குறளிலே காணலாம்.

### வலி அறிதல்

போரில் பொருளைச் செலவிடும்போது அதன் வலிமையை உணர்ந்து செயல்பட வேண்டும்; பகையரசரின் வலிமையை அறிந்து செயல்பட வேண்டும் என்பதை,

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல் (குறள் 471)

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும் (குறள் 479)

என இவ்விரு குறள்கள் உணர்த்துகின்றன.

## இடனறிதல்

போரிடுவதற்கு ஏற்ற இடம் தெரிவு செய்வதானாலும் அரசன் விழிப்புடன் செயல்பட வேண்டுமென்பதை

காலாழ் களரின் நரிஅடும் கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு (குறள் 500)

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடம்கண்ட பின்அல் லது (குறள் 491)

நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற (குறள் 495)

முதலான குறள்களிலே வள்ளுவர் எடுத்துரைப்பதை இடனறிந்து செய்தலின் இயல்பு அறியலாகிறது.

### அமைச்சர்

அரசாட்சியில் அரசனுக்கு அடுத்துப் பதவி வகிப்பவர் அமைச்சர் ஆவர். அமைச்சர் மக்களுக்கும், அரசனுக்கும் நெருங்கிய தொடர்புடையவர். இவர் அரசரின் குறிப்பறிந்து நடக்கத் தெரிந்தவராகவும் அரசியல் அறங்களை அறிந்து, கல்வி நிறைந்து, அடங்கிய சொல்லையுடையவராகவும் இருத்தல் வேடும் என்பதை வள்ளுவர் அமைச்சியல் என்னும் பத்து அதிகாரங்கள் வழி உணர்த்துகிறார்.

### தூதுவர்

இன்றைய அரசியலில் தூதுவர்களின் பங்கு குறிப்பிடத் தக்கது. அண்டை நாட்டுடனான தொடர்பை வலுப்படுத்துதலும், நட்புறவை பேணிக் காப்பதுமாகிய பணிகள் இவர்களின் கையில் உள்ளன. அண்டை நாட்டோடு தொடர்பு கொள்ளும்போது சொல்ல வருபவற்றைச் சுருக்கமாக, கடுஞ்சொற்களைத் தவிர்த்துக் கேட்பவர் மகிழும்படி சொல்லி உடன்பாடு செய்ய வல்லவனே சிறந்த தூதுவன் ஆவான் என்று வள்ளுவர் தூதுவருக்கும் இலக்கணம் வகுக்கிறார்,

தூதுவரின் இலக்கணத்திற்கு அனுமானைக் குறிப்பிடலாம், கம்பராமாயணத்திலே இராமனின் தூதுவராகச் செயல்பட்டு, அவன் இலங்கை நாட்டுக்குச் சென்று தான் சீதையைக் கண்டு விட்டேன் என்பதை இராமபிரானிடம் 'கண்டேன் சீதையை' எனச் சொல்கிறான்.

### ஒற்றர்

ஒற்றன் என்பவன் அரசனுக்குக் கண் போன்றவன். பகை நாட்டின் பால் சென்று அங்கேயுள்ள நடப்புகளை அறிந்தும் உள்நாட்டுச் சூழ்நிலைகளைத் தெரிந்து கொண்டு வந்து அரசனிடம் தெரிவிப்பது இவர்களின் பணிகளாகின்றன. இவர்களின் சிறப்பை ஒற்றாடல் எனும் அதிகாரம் விளக்குகிறது. இன்றைய அரசியலை சி.பி.ஐ. என்று கூறப்படும் மத்திய புலனாய்வுத் துறையானது வள்ளுவர் காட்டும் ஒற்றர்களோடு பொருத்திப் பார்த்து அறியத்தக்கதாகும்.

### வருவாய்ப்பணி

அரசன் தன் அரச வாழ்விற்கும் குடிமக்களைக் காக்கும் பொருட்டும் பெரும்பொருளைச் செலவழிக்க வேண்டி இருக்கிறது. அதாவது அயல்நாட்டார் தம் நாட்டை தாக்காமலிருக்க நாட்டு எல்லைகளைப் பாதுகாக்கப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. பாதுகாவலர்களையும், பாதுகாப்பு ஆயுதங்களையும் உருவாக்கப் பொருள் தேவை என்பதால் செலவிடுவதற்குப் பொருள் தேடவும், தேடியவற்றைக் காத்தலும், காத்தவற்றை முறையாக வகுத்தலும் அரசனுடைய தலையாய பணிகளாகும். இத்தகைய பணிகளை,

> இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்லது அரசு (குறள் 385)

> செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும்
> எஃகு அதனின் கூரியது இல் (குறள் 759)

> உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
> தெறுபொருளும் வேந்தன் பொருள் (குறள் 756)

முதலிய குறள்களில் கூறுகிறார்.

இவ்வாறு பலப் பணிகளில் சிறந்து நல்லமுறையில் நீதி வழுவாமல் ஆட்சிபுரியும் மன்னனை வள்ளுவர்,

> முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும் (குறள் 388)

என இறைவனோடு கருதப்படுவான் (சமமாக) என்பதை உணர்த்தும்போது வள்ளவரே ஓர் அரசியல் அறிஞராக இங்குச் செயல்படுவதை உணரமுடிகிறது.

அறிஞர் ரஸ்கின் என்பார் புத்தகத்திற்கு இப்படி வரையறை தருவார். "எந்த புத்தகங்களாக இருந்தாலும் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே இருப்பவை; அழியாப் புகழ் பெற்று என்றுமே சிறந்து விளங்குபவை" (All books are divisible into two classes, the books of the hour, the books of all time). இவர்தம் கூற்று வள்ளுவரின் திருக்குறளுக்குப் பொருந்தி வருகிறது எனலாம்.

உலகமெனும் சமூகத்தின் பால் ஈடுபாடுகொண்டு மனித வாழ்க்கைக்குரிய உன்னதமான இயல்புகளை உரைப்ப தாலேயே திருக்குறள் தரணியிலே உலகப் பொது மறையாய் இன்றும், என்றும் ஆளும் தகுதியினைப் பெற்றுத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது!

※ ※ ※

# திருக்குறள் - மநுதர்மம் அரசியல் நெறிகள் ஒப்பியலாய்வு

இரா. சந்திரசேகரன்

அரசன் நாட்டினை ஆளுவதற்கு ஏற்ற வழிமுறைகளைக் கூறும் வகையில் அரசனின் கடமை, அமைச்சர்கள், தூதர்கள், ஒற்றர்கள், வெளிஉறவு, நீதி, வரி, படை, போர், நாடு, நிருவாகம் முதலானவற்றைப் பற்றித் திருக்குறளும், மநுதர்மமும் விரிவாகப் பேசுகின்றன.

## அரசன்

சங்ககாலத்தில் மக்களைக் காத்து முறையாக நீதி வழங்குகின்றவனே சிறந்த அரசன் என்றும், அத்தகையவனே இறைவனுக்குச் சமம் என்றும் கருதப்பட்டான். அரச தர்மத்தைக் காப்பது மட்டும் அரசனுடைய கடமையில்லை. பொருளுதவி வேண்டி நிற்போர்க்குப் பொருளுதவி அளித்தலும், தன் பாதுகாப்பின்கீழ் இருப்போரை அன்புடன் நடத்தலும், பாகுபாடின்றி நீதி வழங்கு தலும், மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்தலும் அரசர்களின் தலையாய கடமைகள் எனக் குறிப்பிடும் திருவள்ளுவர்,



அவ்வாறு கடமைகளை நிறைவேற்றுவோனை மிகச் சிறந்த அரசனாகவும் கருதுகிறார்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்

என்னும் குறட்பாவில் குறிப்பிட்டுள்ளது இங்கு நோக்கத்தக்கது.

மநுதர்மத்தில் அரசனைப் பற்றிக் கூறும்போது நான்கு வருணத்தாரும், அவர் தம் ஒழுக்கமும் காக்கப்படுவதற்காகவே அரசன் படைக்கப்பட்டான். அரசன் இல்லையேல் எளியோர் வலியவருக்கு அஞ்சிடவே அழிந்திடுவர் என்கிறார்.

வேந்தனுக்கு அமைய வேண்டிய குணங்களாக அஞ்சாமையும், ஈகையும், அறிவும், தளரா உறுதியும் கூறப்படுகின்றன. இக்குணங்கள் வாய்ந்த அரசன் அறத்திலிருந்து தவறாது நடந்து, வீரத்துடன் தன்னையும், குடிகளையும் காத்தல் வேண்டும். மனுவை ஒட்டி வள்ளுவர் குறளும் பொருள் வரும் வழிகளை இயற்றிப் பொருளை மேன்மேலும் சேர்த்து, அதனைப் பாதுகாத்து, அப்பொருளை அறவழியில் பயன்படுத்துதலை அரசனின் கடமையாகக் குறிப்பிடுகிறது. இனிய சொல்லும், இரக்கச் சிந்தனையும், செங்கோன்மையும் கொண்டு அறநெறிப்படி மக்களை ஆள்பவனே அனைவராலும் விரும்பப்படுவான் என்கிறார். அரசன் பிறப்பினாலோ, அரியணைமீது இருப்பதனாலோ தெய்வத் தன்மை கொண்டவன் ஆகான். குணத்தினாலும் செங்கோன்மையினாலும் மக்களைக் காத்தல், தருமத்தை நிலைநிறுத்தல், தீயவரை அழித்தல் ஆகிய பணிகளைச் செய்வதனாலும் மட்டுமே கடவுளின் தன்மைக்கு அவன் உயர்த்திக் கூறப்படுகிறான்.

மனுவும் அரசனைப் பற்றிக் கூறுகையில், அரசனானவன் நண்பரிடத்து வஞ்சகமின்றிப் பழகியும் பகைவரை ஒறுத்தும். மேலோர் சிறுபிழை பொறுத்தும், முறைதவறாது குடிமக்களை வருத்தாமல் ஆண்டு வரவேண்டும். அத்தகைய சிறந்த அரசன் வயலில் உதிர்ந்த நெல்லைப் பொறுக்கிச் சேர்த்துண்ணும் வறுமையை அடைந்தானாயினும் அவன் புகழ் குறையாது. நீரில் மிதக்கும் எண்ணெய் போல் அவன் புகழ்பரவும். அவனே தெய்வங்களின் கூட்டு ஆற்றல் பெற்றவன் என்கிறார்.

ஒருவனைச் சிறந்த அரசனாய்க் கருத வேண்டுமாயின் அவன் சிறந்த படையினையும், வளம் மிக்க மக்களையும், பெருகுகின்ற செல்வத்தையும், நம்பிக்கைக்குரிய அமைச்சர்களையும், சிறந்த நண்பர்களையும் பெற்றிருக்க வேண்டும். சமுதாயத்தின்

காவலன் அரசன். ஆகையால் அதற்குரிய விதிமுறையிலிருந்து வழுவாமல் நடப்பதே அரசனின் முக்கியப் பணியாயிற்று. சமுதாயத்தைக் காக்கின்ற பணியில் ஈடுபட்டுள்ளபோது ஏற்படுகின்ற இடையூறுகள், தொல்லைகள், துன்பங்கள் ஆகியவற்றை அரசன் மிகவும் கவனமாக நோக்கி ஆவன செய்தல் வேண்டும். அரசனுடைய கடமை அரச கருமத்தை நிலைநிறுத்துவது. இக்கருத்தினைத் திருவள்ளுவர் மட்டுமின்றி மநுவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசன் காமத்தில் பற்றுக் கொண்டால் அறம், பொருள் இரண்டையும் இழப்பான். சினம் கொண்டால் தன்னையே இழப்பான். புலனடக்கம் அரசனுக்கு வலிமையாம். அவனுக்குக் குடிமக்களும் அடங்கி வாழ்வர். இரவும் பகலும் எப்போதும் அரசன் புலனடக்கம் உடையவனாய்த் திகழ வேண்டும் என்று மநு அரசனின் ஒழுக்கத்திற்கு இலக்கணம் தந்துள்ளார். இதனையே வள்ளுவர், அரசன் கல்வி, கேள்வி, அறிவு ஆகியவை மிகுந்து, பெரியோரின் துணைக்கொண்டு, காமம், வெகுளி, செருக்கு ஆகியவற்றால் ஏற்படும் குற்றங்களைக் களைந்து, தீயவரின் நட்பை நீக்கி நடப்பானேயாகில் உட்பகை, வெளிப்பகை ஆகிய இரண்டுமே இல்லாதவனாவான் என்று நாட்டின் ஆட்சியாளனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் இவையெனப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

**அமைச்சர்கள்**

நாட்டின் நிருவாகத்தில் அரசனுக்கு உதவக் கல்வி கேள்விகளிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர்களை நியமித்து ஆலோசனை கேட்பதே பெரும்பாலும் வழக்கில் இருந்தது. இவர்கள் அரசனுக்கு உண்மையாய் நடந்து கொள்பவர்களாக இருக்க வேண்டும் என்றே பெரிதும் கருதப்பட்டது. அவர்களே அமைச்சர்களாகக் கருதப்பட்டார்கள். இவர்கள் தான் நிருவாக அலுவல்களைக் கவனித்து ஆவன செய்யும் பொறுப்பைக் கவனித்து வந்தார்கள். இத்தகைய அமைச்சர்களுக்கு மனு தனது நூலில் சில இலக்கணங்களையும் கூறியிருப்பதைக் காணலாம். அமைச்சரவை இவ்வளவுதான் இருக்கவேண்டும் எனத் திட்டமாகக் கூறியுள்ளார். சிறு குடும்பத்தை நடத்துவதே கடினம். பெரியதொரு நாட்டை அரசன் தனியே நிருவகிப்பது இயலாது. எனவே எழுவர் அல்லது எண்மர் கொண்ட அமைச்சரவையை அரசன் துணைக்கொள்க என்கிறார். மேலும் பரம்பரையாக அறம், வேதாந்தம், மந்திரம், நற்குடிப் பிறந்தவராய் அமைச்சர்கள் அமைய வேண்டும். அவர்களுடன் நாடு, நகர், வளம், கொடை, கருவூலம், போர், அமைதி, படை இவை குறித்து அரசன்

ஆலோசனை கொள்ள வேண்டும் என மநு அமைச்சர்களுக்கான இலக்கணத்தை வரையறுத்துள்ளார்.

திருவள்ளுவர் அமைச்சர்களுக்கான விதிமுறைகளைக் கூறியுள்ளது மநு கூறிய இலக்கணங்களிலிருந்து விரிவாகவும், முறையாகவும் இருப்பதைக் காணலாம். அமைச்சருக்கான குண, மன, இன நலன்களைப் பட்டியலிட்டுக் கொடுத்துள்ளார்.

ஒரு செயலைச் செய்வதற்குரிய கருவி, அதனைச் செய்வதற்குரிய காலம், செய்யும் செயல், செயலைச் செய்யும் திறம் ஆகியவை அமைச்சனுக்கு வேண்டும். இதோடு அச்சமின்மையும், குடிகாத்தலுக்கும், கல்வியும், முயற்சியும் அமைச்சனுக்கு இன்றியமையாதனவாம். தேவைக்கேற்பப் போரினையும், அமைதியையும் ஏற்படுத்தும் பொருட்டு நட்பையும், பகையையும் ஏற்படுத்த வலிமை பெற்றவனே அமைச்சனாவான். அவனுக்கு இயற்கையான நுண்ணறிவுடன், நூலறிவும் வேண்டும். அறத்தினை உணர்ந்தவனாகவும், சூழ்ச்சிகளை அறிபவனாகவும் அவன் இருக்கவேண்டும். அரசனுக்கு உண்மையுள்ளவனாகவும், நன்கு ஆராய்ந்து அரசனுக்குத் துணை செய்பவர்களாகவும் அமைச்சர் இருத்தல் வேண்டும். குறளில் அமைச்சனது பிறப்பு, உயர்வு, அமைச்சுத் தொழில் பிறப்புரிமையாக வருவது போன்றவை கூறப்படவில்லை. எத்தனை அமைச்சர்கள் தேவை என்பதையும் கூறவில்லை. ஆனால் அமைச்சருக்கு அமைய வேண்டிய தன்மைகள் இவை இவை என வள்ளுவர் விரிவாகக் கூறியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

### தூதர்கள்

பன்னாட்டு அரசியல் தூதுவர்கள் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். தற்காலத்தில் பல நாடுகளும் தொலைபேசி, கம்பியில்லாத் தந்தி, இணையம், விமானங்கள் மற்றும் இத்தகைய பல முன்னேற்றங்களினால் தூதுவரின் சமயோசித அதிகாரமும், செயலும் குறைந்து காணப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் தன்மேலிடத்து உத்தரவை எதிர்நோக்கியிருப்பது என்பது இயற்கையாய்ப் போய்விட்டது. வள்ளுவரின் காலத்தில் நாடுகளுக் கிடையே உள்ள தூரம் குறுகலாயிருந்தாலும், பல இயற்கை இடர்ப்பாடுகளைத் தாண்டிக் கால்நடையாகவும் சுமக்கும் மிருகங்களையும் நம்பியும் கடந்து சென்று வேற்றரசர் நாட்டிலிருந்து கொண்டு தன்நாட்டின் நலனை முன்னேறச் செய்வதென்பது அவ்வளவு எளிதான செயலன்று என்பது புலப்படும். பகையை நட்பாகவும், நட்பைப் பகையாகவும்

ஆக்குபவன் தூதன். போரும் அமைதியும் வருவன அவனால்தான் என்னும் மநுவின் கருத்துக்குச் செயல் வடிவம் கொடுத்துள்ளார் வள்ளுவர். தூது குறித்துத் திருக்குறளில் ஓர் அதிகாரமே உள்ளது. அவ்வதிகாரத்தில் தூதர்களின் தகுதிகள் யாவை என விளக்கப்பட்டுள்ளன.

### ஒற்றர்கள்

பழங்காலத் தமிழ் மன்னர்கள் உளவாளிகளை நியமித்திருந்தனர். உளவாளிகள் எனப்பட்டோர் ஒற்றர் எனவும், வேவு பார்த்தல் வேய் அல்லது ஒற்று எனவும் அழைக்கப்பட்டன. நட்பும், பகையும் வெளியுறவின் இருகொள்கைகளாக இருந்தன. நாட்டின் நலன் கருதி மனப்பிணைப்பினால் பகை நீக்கமும், பலம் தேடுவதும் வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக விளங்கின. போர் நிகழ்த்துங்கால் எதிரியின் வலிமை, போர் நிகழும் இடம், காலம் இவற்றை அறிந்தும், ஒற்றர் மூலம் பகைவர்களைப் பற்றிய செய்திகளை அறிந்தும் போர் நிகழ்த்த வேண்டுமென்பது அறியப்பட்டிருந்தது. மநு ஒற்றர்களைப் பற்றி நேரடியாகக் கூறாவிடினும் வள்ளுவர் ஒற்றர்களின் நிலை, செயல்கள் ஆகியவை குறித்து விளக்கமான குறிப்புகளைக் கொடுத்துள்ளார். அயல்நாட்டில் என்ன நடந்தது என்பதனை அறிய மட்டுமன்றி, உள்நாட்டிலும் என்ன நடந்தது என்பதை அறிய ஒற்றர்கள் பயன்படுத்தப்பட்டனர். திருக்குறளில் ஒற்றாடல் என்ற அதிகாரத்தில் ஒற்றர்களுக்கான குறிப்புகளைக் கொடுத்துள்ளார்.

> **ஒற்றொற்று உணராமை ஆள்க உடன்மூவர்**
> **சொற்றொக்க தேறப் படும்**

என்று ஒற்றர்க்கென வள்ளுவர் கூறும் இலக்கணம் இன்றைக்கும் பொருந்தும் வகையில் உள்ளதைக் காணலாம்.

### படைச்சிறப்பு

சங்ககாலத் தமிழர்கள் போர் நடவடிக்கைகளில் ஒரு வகையான ஒழுங்கியலைக் கொண்டிருந்தனர். மேலும் சங்க கால அரசர்கள் போருக்குத் தேவையான படையினையும் படைக் கலங்களையும் பராமரித்து வந்தனர். காலாட்படை, குதிரைப் படை, யானைப்படை, தேர்ப்படை ஆகியவை நாற் பெரும்படை என அழைக்கப்பட்டன. மநு படையைப் பற்றிக் கூறும்போது, நாற்படையும் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். அத்தகைய அரசனே சிறந்த பாதுகாப்பான ஆட்சியைத் தரவல்ல அரசனாவான் என்கிறார். மேலும் ஆமை தன் உறுப்பை

உள்ளடக்கி இருப்பதுபோல அரசன் தன் படை வலிமையை மறைத்துக் காத்திடுக என்கிறார். வள்ளுவர் படையைப் பற்றிக் கூறுகையில் ஊறுபடுவதற்கு அஞ்சாது நின்று பகையை வெல்வதான படையே அரசனுடைய செல்வங்கள் எல்லா வற்றிலும் தலையாய செல்வம் எனக் குறிப்பிட்டுள்ளார். சிறிய படையாய் இருப்பினும் அது அஞ்சாது நின்று தாக்கும் வன்கண்மையுடையதாக இருத்தல் வேண்டும். அத்தகைய வீரம் அரசனின் மரபுப் படைக்கே உரியதாகும். இவ்வாறு படைபற்றிப் பல்வேறு கருத்துக்களை வள்ளுவர் குறிப்பிடுவதைக் காணலாம்.

## தற்காப்புத் திட்டங்கள்

ஒரு நாட்டின் தற்காப்பானது அரண், படை இவற்றின் வலிமையைச் சார்ந்தே விளங்கும். அரண் அமைக்கும் விதத்தை மநுவும், வள்ளுவரும் கூறுகின்றனர். அகழிகள், பாலங்கள், பொறிகள், இவற்றால் காக்கப்பட்டு, நால்வகைப் படைகளும் நல்லமுறையில் போரிடும் வண்ணம் அரணமைப்பு இருக்க வேண்டும் என்கின்றனர்.

நாட்டின் தற்காப்பு வெளிநாட்டுக் கொள்கையுடன் பிணைக்கப்பட்டுள்ளது. அந்நியரின் ஆதிக்கத்தை எவ்விதம் தகர்ப்பது, எவ்வெப்பொழுது சமாதான உடன்படிக்கை செய்து கொவ்து, எப்போது போர் செய்வது. எவ்விதக் கொள்கைகளைக் கையாள்வதன் மூலம் நாட்டின் எல்லைகளைப் பெருக்கமுடியும் என்பனவற்றைப் பற்றி இருவரும் கூறியுள்ளனர்.

மநுதர்மம் தரும சாத்திரங்களில் முதன்மையானதாகவும், புகழ் பெற்றதாகவும் விளங்குகிறது. பல துறைகளைப் பற்றி விவரித்துள்ள மநு அரசியல் தொடர்பாகவும் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். இவர் கூறியுள்ள அரசியல் செய்திகள் அக்கால ஆட்சியாளர்களுக்குப் பெரிதும் துணைபுரிவதாக அமைந் திருந்தன. மநுதர்மத்தைப் போன்றே வள்ளுவரும் அரசியல் துறையில் சிறந்த பணிபுரிந்த சான்றோராய் விளங்கியுள்ளதை இவருடைய திருக்குறள் வழி அறியமுடிகிறது. மேலும் தமிழ் இனமானது தன்னெழுச்சியினையும், மேம்பாட்டினையும் கொண்டு நீண்ட சரித்திரப் பின்னணியை உடையதாக இருந்திருக்கின்றது என்பதும் புலனாகின்றன. வடமொழியில் மநு தான் எழுதிய நூலில் அரசியலுக்கு வகுத்த இலக்கணத்தைப் போன்று தமிழில் தமிழர்க்கென வள்ளுவரும் சிலநெறிகளை வகுத்துள்ளார். ஆனால் மநுதர்ம அரசியல் நெறிகளைக் காட்டிலும் வள்ளுவர் கூறும் அரசியல் நெறிகள் விரிவாகவும், சிறப்பாகவும், கோவையாகவும் அமைந்துள்ளன எனலாம்.

## துணை நூல்கள்


1. தமிழ்நாடன், மநுதர்மம் தமிழில், குயில் பண்ணை, சேலம், 1993.
2. ம. பரதன், பழங்கால இந்தியாவில் அரசியல் சிந்தனையும் ஆட்சிமுறையும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977.
3. பரிமேலழகர் உரை, திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1993.
4. மதுரை இளங்குமரன், வள்ளுவர் வழியில் நல்ல ஆட்சியராக, குறளாயம், ஈரோடு -1, 1991.
5. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1985.
6. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977.


* * *

# சட்டம் - வள்ளுவர் காட்டும் வழியில்

தி.நெ. வள்ளிநாயகம்

எழிலோடு வாழ்கின்ற தமிழ். இமயம் பல வென்று தந்த தமிழ், பொழில் நிறை பூவாகப் பூத்த தமிழ் பெற்ற ஒரு கருவூலம் "திருக்குறள்".

வள்ளுவர் செய் திருக்குறளை
மறுஅறநன்கு உணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனு நீதி ஒரு குலத்துக்கு
ஒரு நீதி

என்று "மனோன்மணியமும்" மகிழ்ந்து மொழிகின்றது.

நன்றென எப்பா லவரும் இயைபவே
வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி

என்ற கருத்தினைக் "கல்லாடர்" சொல்லாடக் காண்கின்றோம்.



மனித குணங்கள் அனைத்தையும், சித்திரித்துக் காட்டுகின்ற சிறப்பால் இந்திய இதிகாசங்களில் மகாபாரதத்திற்கும், இராம காதைக்கும் ஒரு தனி மதிப்பு உண்டு. சொத்துரிமை, ஒப்பந்தம், இயற்கை நீதி,

கடமை, பாதுகாப்பு, பெண்ணுரிமை, சூட்சியுரிமை, வாக்குறுதி, மறைகாத்தல் போன்ற பலவற்றைப் பற்றிய சட்ட நுணுக்கங்கள் அவற்றில் புதைந்து கிடக்கின்றன. இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் பல சட்ட விவரங்கள் இலைமறை காய்களாக அமைந்துள்ளன. எப்பொருளையும் தெளிவாக, அறிவு பெறும் வகையில் எடுத்துரைக்கும் திருக்குறளில் எல்லாமே உண்டு என்பதனால்தான் 'இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்' என்று மதுரைத் தமிழ் நாகனார் கூறினார்.

எல்லாம் வல்ல பரம்பொருள், யாரும் அறியாத மறைபொருளான இறைவனை ஆதிபகவன் என வழிபட்டு நின்று, அந்த அகண்ட வானத்தின் சிறப்பினைச் செப்பி, முன்னோடியாகத் திகழ்ந்த ஞானியரை வழிபட்டு, உடனே அறனை வழியுறுத்த வள்ளுவர் வருகின்றார். அறத்தின் அருமையும், பெருமையும் தெளிவாகின்றது. அறம் என்ற பொருளைக் குறிப்பிடும் சொல்லாக, Justice (நீதி) என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. தெய்வீகமான மறை பொருள் அறம் என்பது கிரேக்க ஞானிகளின் கொள்கை. அறத்தின் இரகசியம் என்ன என்பதனை முற்றும் உணர்ந்த சட்ட அறிஞர்களும் உணர இயலவில்லை. பிளேட்டோ நூல்களில் இந்தக் கேள்விகள் எழுப்பப்பட்டாலும் அதற்கான விடை "அறம் என்பது அறிந்துகொள்ள முடியாத தெய்வீகமான மறைபொருளாகும்". இதுவே சட்ட அறிஞர்களின் கருத்து.

அரிஸ்டாட்டில் எழுதிய 'எத்திக்ஸ்' - (அறவழி) என்ற நூலில் "அறத்தால் ஒருவர் பெறுவதே இன்பம்", எனவே இன்பத்திலிருந்து அறத்தை வேறொன்றாகக் காட்ட இயலாது என்ற கருத்தினைக் காண்கின்றோம்.

''இயற்கை நெறி'' (அறம்) என்பது ஆண்டவனின் கட்டளையாகும். மக்கள் இனம் அதற்குப் பணிந்து நடத்தல் வேண்டும். கடவுளுக்கும், மனித இனத்திற்கும் ஒருவன் ஆற்ற வேண்டிய புனிதமான கடமைகளையே அறம் ஆற்றுகின்றது. அக்கடமைகளை ஆற்றுபவர்க்கு நலவாழ்வு உண்டு என்று அறம் கூறுகின்றது. மாறுபட்டு நடப்பவர்க்கு மரணம் தான் என்றும் என அறம் அச்சுறுத்துகின்றது - என்ற கருத்து ஆங்கில நாட்டுத் தெய்வீகப் பேரவையினால் வலியுறுத்தப்பட்டது.

சட்ட வல்லுநர் என்று கருதப்பட்ட Black stone - அறத்தின் இலக்கணத்தைக் கூற முற்பட்ட பொழுது, "அறம் என்பது மனித இனத்தோடு பிறந்ததாகும். அஃது இறைவனால் வகுக்கப் பெற்றது. மற்றைய கடமைக்ளை எல்லாம் விடச் சிறந்தது. உலகனைத்திற்கும்

பொதுவானது. எல்லா நாடுகளுக்கும் எக்காலத்திற்கும் பொருந்துவது" - என வரையறுத்தார்.

இதற்கு அறம் ஆனது சான்றோர் சென்ற நெறி என்று இவர்களுக்கெல்லாம் மேலாகப் புறநானூறு புரியவைக்கின்றது.

> இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
> அறவிலை வணிகன் ஆய் அலன்; பிறரும்
> சான்றோர் சென்ற நெறி என,
> ஆங்குப் பட்டன்று அவன் கை வண்மையே *(புறம் 134)*

எல்லோரும் இன்புற்று இருப்பது அல்லால் வேறொன்றும் அறியேன் பராபரமே' - என்ற அந்திம தத்துவத்தின் அடிப்படையே அதுதான்.

"மக்களின் நல்வாழ்விற்கு ஏற்ற ஒழுக்கத்தைத்தான் பயன் உள்ளது என்று கருத முடியும். மக்கள் நலனுக்கு ஏற்றதா? என்பதை உரைகல்லாகக் கொண்டே மனிதனின் செயல்களை நாம் மதிப்பிட வேண்டும். மக்களின் பொதுவான நல்வாழ்விற்கு ஏற்றம் அளிப்பதாக ஒருவனின் நடத்தை அமைதல் வேண்டும் என்பதையே அறம் அறிவிக்கின்றது" என்று சால்மண்ட் (Salmond) என்ற சட்ட நூலறிஞர் கூறுகின்றார்.

இவையனைத்தும், 'மன நலம் சிறந்தால் மட்டுமே சிறந்திடும்' என்பதனைக் காட்டும் வகையில்

> மனநலம் மன்னுயிர்க்(கு) ஆக்கம் இனநலம்
> எல்லாப் புகழும் தரும் *(குறள் 457)*

என வள்ளுவர் விதிதருகின்றார்.

புறநானூறு கூட,

> சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
> அறத்து வழிபடூ உந் தோற்றம் போல *(புறம் 31)*

எனக் கூறி மகிழ்கின்றது.

மணிமேகலை தந்த புலவர் சாத்தனார் இதுபற்றிக் கூற வருகையில்

> அறம் எனப்படுவது யாது? எனக் கேட்பின்
> மறவாது இது கேள்; மன் உயிர்க்கு எல்லாம்
> உண்டியும், உடையும், உறையுளும், அல்லது
> கண்டது இல் *(காதை 25. வரி 228-231)*

எனப் பாடுகின்றார்.

இத்தகு சட்டத்தினை ஒப்புமை இல்லாத பெட்டகமான வள்ளுவர் திருக்குறளில் வைத்துள்ளார். சட்டத்தின் குறிக்கோள் 'நீதி' ஆகும். அத்தகைய சட்டம் முடிவில் நீதியை உணர்த்திட வேண்டும் என்பது சால்மண்ட்டின் கருத்தாகும்.

**Justice is the end. Law is merely the instrument and the means, and the instrument must be defined by reference to its end.**

***- Juris Prudence***

இத்தகைய நீதி வழங்கிடவும், நிலை பெறவும் இன்றைய சட்டங்கள் அன்றைய ஆங்கில நெறிப்படி வரையப்பட்டுள்ளன. ஆனால் அன்றைய ஆங்கில நெறிமுறைகளும், சட்டங்களும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே விதிமுறைகளாக, அடிப்படையாக வள்ளுவரால் தரப்பட்டிருக்கின்றன என்பதனைக் காண்கின்ற பொழுது நமது புருவங்கள் மேலே உயருகின்றன அல்லவா. "சட்டம் ஒரு இருட்டறை அதில் வக்கிலின் வாதம் ஓர் விளக்கு" என்றார்அறிஞர் அண்ணா. அந்த இருட்டுக் குகையின் ஒளி விளக்காக வள்ளுவம் வாழ்ந்திருப்பது கண்டு அனைவரும் வணங்குகின்றனர்.

'இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் மக்களின் உரிமைகள் அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட வேண்டும்' என்ற விதிமுறையைக் காண்கின்றோம். "கடமைகளை" உணர்த்திக் கட்டுப்பாடுகளை விதித்து மக்களின் வாழ்வை நெறிமுறைப் படுத்துவதற்குப் பிறந்ததுதான் "சட்டம்". அந்தச் சட்டத்தின் கூறுபாடுகளைக் குறளில் காண்கின்றோம்.

பேச்சுரிமை, எழுத்துரிமை, சொத்துரிமை, பாதுகாப்பு உரிமை, வாழும் உரிமை, பணி உரிமை, மறைந்த பின்பும் பெயரும், புகழும் பொருளும் பாதுகாக்கப்பட வேண்டிய உரிமை என மனிதனின் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை அரசியல் அமைப்புச் சட்டம் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமாகத் தந்துள்ளது. அதன் அடிப்படையில் அமைந்த சட்டங்கள் அனைத்தும் இந்த நோக்கை நோக்கிப் பயணம், செய்பவைதான்.

'பேச்சுரிமை' கொடுத்த சட்டம் அதன் எல்லைகளை வள்ளுவர் போல வரையறுக்கவில்லை. புறங் கூறாமை, பயனில சொல்லாமை என்ற அதிகாரங்களில் வள்ளுவர் இதனை அறிவுறுத்துகின்றார். எடுத்துக்காட்டாக அறத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்தாலும் தாழ்வில்லை. புறம் பேசமாட்டான் என்ற பெயரையாவது காத்துக் கொள்ளல் நல்லது என்று

**அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்**
**புறம்கூறான் என்றல் இனிது** *(குறள் 181)*

என எடுத்துரைக்கின்றார்.

'சொல்வன்மை' என்ற அதிகாரத்திலும் கருத்துகளை ஒழுங்காகக் கோர்த்து இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால் உலகம் விரைந்து அவரின் ஏவலைக் கேட்டு நடக்கும் என்கிறார்.

**விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்** *(குறள் 648)*

என்ற குறள் மூலம் வள்ளுவர் அதை உறுதிப்படுத்துகின்றார். குறிப்பாக நாநலம் என்பது நமது உடமை என்று பேச்சுரிமையை விளக்குகின்றார். ஆனாலும் அந்த உரிமையைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதில் வள்ளுவர் மிகக் கவனமாக இருக்கின்றார்.

**நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்**
**யாநலத்(து) உள்ளதூஉம் அன்று** *(குறள் 641)*

இந்தப் பேச்சுரிமை ஏதேனிசு நகரத்தில் தொடங்கி புருட்டஸ், ரோம் நகரத்து மார்க் ஆண்டனி, பிரிட்டனின் சர்ச்சில் தொடர்ந்து கென்னடி வரை சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டது. அதற்கு பேச்சுரிமை தான் வள்ளுவர் காட்டும் கட்டளை.

மற்ற உரிமைகளை வகை வகையாகக் கூறினாலும் அதோடு ஒருவரது கடமைகள் என்னென்ன என்று சுருக்கமாகக் கூற வந்த வள்ளுவர்

**செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்** *(குறள் 466)*

என்று கூறுகின்றார்.

கடமைகள் பற்றிப் பேசும் பொழுது இல்வாழ்வோர் கடமைகள் என்னென்ன என்பதனைத் தெளிவாக விளக்குகின்றார். தனிமனிதன் ஒருவன் உரிமை மட்டும் கேட்டுப் பெற முடியாது. அதற்கான கடமையும் இரட்டைப் பிறவிகள், சமூகத்தாய் தந்த நல்ல குழந்தைகள். அன்றைய இந்து விதிமுறைகள் சட்டமா. வகுக்கப்பட்ட நாளில் தந்தை மகற்கு ஆற்றும் கடமை, மகன் தந்தைக்குச் செய்யும் நன்றிக் கடமை என்பவை வலியுறுத்தப் பட்டுள்ளன. அதையே தான் வள்ளுவர் "அவையத்து முந்தியிருக்கச் செயல் வேண்டும்" என்று அன்றே கூறினார். இது தந்தையின்

கடமைகளில் ஒன்றென மனுவின் இந்துச் சட்டம் கூறுகின்றது. ஒவ்வொருவரும் கல்வி பெறுவது அடிப்படை உரிமை. அந்த அடிப்படை உரிமையைத்தான் வள்ளுவரும் கல்வியின் பெருமையைக் கூறவந்த பொழுது பேசி மகிழ்கிறார்.

திருக்குறள் மானுடத்தின் மொழி! அதுதான் சிறந்த வழி! நடுவு நிலைமை, ஒழுக்கமுடைமை, தீவினையச்சம், கூடா ஒழுக்கம், கள்ளாமை, இறைமாட்சி, குற்றங்கடிதல், சிற்றினஞ் சேராமை, செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை, ஒற்றாடல், அமைச்சு, தூது, நாடு, சூது, கயமை போன்ற பல அதிகாரங்கள் சட்டத்தோடு நெருங்கிய தொடர்புள்ளனவாக அமைந்துள்ளன.

திருக்குறளுக்குத் தனிப்பெருமை சேர்ப்பது இன்பத்துப் பாலாகும். அதனால்தான் திருக்குறளுக்கு இலக்கியத் தகுதி கிடைத்துள்ளது. அது உலகறிந்த உண்மை. இன்பத்துப் பாலிலும், இயற்கையின் நியதியை, சட்டத்தை, தன்மையை, ஆற்றலை மிக அழகாக, நுணுக்கமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

தமிழ் மறையாம் திருக்குறளில் சட்டம், நீதி என்ற சொற்கள் எங்கும் காணக் கிடைக்கவில்லை. எனினும் இந்நாட்டின் மற்ற அறநூல்களில் கூறப்படாத அளவிற்கு, மேலைநாட்டு அறிஞர்கள் அவை பற்றிக் கொண்டுள்ள கருத்துகளுக்கு ஓரளவிற்கன்றி முழு அளவிற்கும் ஒத்த வகையில், இன்றைய சட்ட அறிஞர்களால் உருவாக்கப் பெற்று வரும் சமுதாய நலத் தத்துவங்களுக்கு அடிப்படையாக விளங்கும் அளவிற்குச் சட்டத்தைப் பற்றியும் நீதியைப் பற்றியும் பல கருத்துகள் திருக்குறளில் செறிந்து கிடப்பதைக் காணலாம்.

## வள்ளுவர் வகுத்த அரசியல் – வள்ளுவர் கண்ட சட்டமும் நீதியும்

"இந்தச் சமுதாய இன்பத்தைப் பெருக்க வழி சொல்வதுதான் சட்டங்களின் நோக்கம்; சட்டநெறியின் அடிப்படை".

"வள்ளுவர் வகுத்த அறநெறிகள் சமுதாய இன்பத்தை நிலை நிறுத்தும் நோக்கமுடையனவாக உள்ளன"

சமுதாய இன்பமே அறமாகும் என்பதே இன்றைய சட்டவியல் அறிஞர்கள் கண்ட முடிவாகும்.

"திருக்குறள் பொழுதுபோக்கு இலக்கியமன்று; மனித சமுதாயத்தின் பொதுச் சட்டம். இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்கின்றோமே அதுபோலச் சமுதாயத்தின் அரசியலமைப்புச்

சட்டம் திருக்குறள். மக்கள் சமுதாயம் எப்படியெல்லாம் நாம் வாழ்வதற்கு அவர் 'விதிமுறை'களை வகுத்துத் தந்தார்". (திருவள்ளுவரும் கார்ல் மார்க்சும் (ம.பொ.சி.) பக். 68.)

"மனித வாழ்க்கைக்குரிய விதிமுறைகளை - குறிக்கோள் களைத் திருவள்ளுவர் வகுத்துத் தந்துள்ளார் என்பது ஒன்று; மற்றொன்று, திருக்குறள் மனித சமுதாயம் அனைத்திற்கும் உரியது என்பது" (டாக்டர் ந. சஞ்சீவி).

எனவே, அரசியலார், சட்டத்துறை வல்லுநர்கள் சுருக்கமாக இந்திய அரசியல் சட்டத்தை இ.பி.கோ (இன்டியன் பீனல் கோட்) என்பர்.

திருவள்ளுவர் வழியில் நடைபோடும் தமிழ்ச் சமுதாயத்தினரான நாம் நமது வாழ்க்கைச் சட்டமான வள்ளுவத்தை, "தி.பி.கோ" என்றால் தவறாகாது. "திருக்குறள் பீனல் கோட்" எனலாம்.

ஒவ்வொரு மனித உயிரும் இவ்வுலகில் ஒரு குறிக்கோளைக் கொண்டே வாழ வேண்டும்; வாழ முடியும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை வாழ்க்கையே அன்று.

குறிக்கோளுக்காக வாழும் மனிதன் தன் வாழ்வில் சில கடமைகளைச் செய்ய வேண்டியவனாகிறான். உரிமையை அடைய வேண்டியவனாகின்றான்.

எனவே குறிக்கோள் உடைய ஒவ்வொருவருக்கும் சில 'உரிமைகளும் கடமைகளும்' வேண்டப்படுகின்றன.

'புருடார்த்தம்' என்ற வடமொழிச் சொல்லிலும் 'குறிக்கோள்' என்ற 'உறுதிப்பொருளும்' 'கடமை' என்ற 'பயன்பொருளும்' 'உரிமை' என்ற உட்பொருளும் அடங்கியிருப்பதை ஊன்றிப் பார்த்தால் தெற்றென விளங்கும்.

"சமுதாயக் கட்டமைப்பில் வாழும் மனிதர் தாம், தம் மக்கள், தம் சுற்றம் என நலன்களை நாடும் போதும் சமுதாயத்தின் (சமுதாயத்தில் வாழும் பிற மக்களின்) நலன்களையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு கொள்வது - கொண்டு செயல்படுவது - சமுதாயக் கட்டமைப்பில் அவருக்குரிய 'கடமையும்' ஆகின்றது".

ஒரு தனி மனிதனின் கடமையையும் உரிமையையும் வாழ்க்கை நெறியின் சட்டமாகக் காட்டியுள்ள ஒரு குறளைப் பார்ப்போமா!

முயற்சி திருவினை ஆக்கும் என்று தனிமனிதனுக்குக் கடமையை உணர்த்தினார். அவன் உணர மறுத்தால் விளைவு என்ன? தண்டனை என்ன? என்பதை அடுத்து நான்கு சீரில் தொடர்ந்து விளக்குகிறார்.

"முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்" என்கிறார்.

ஒரே குறளில் ஒரு தனிமனிதனுக்குரிய உரிமை, கடமை மற்றும் சட்டவிதி முறையை யாரால் சொல்ல முடியும்? அதுவும் ஏழே ஏழு சீர்களைக் கொண்டு வாழ்க்கையின் சீரை யாரால் இவ்வளவு செப்பமாகக் கூறமுடியும்.

அடுத்து, திருவள்ளுவர் தனது தி.பி.கோவில் இவையிவை மனிதன் "கொள்ளத்தக்கன" என்று உரிமையையும் கடமையையும் வலியுறுத்திக் கட்டளைச் சொற்களால் காட்டியுள்ள புதுமையைக் காணமுடியும்.

'கொள்ளத்தக்கன' என்பவற்றை ஒரு மனிதன் கொள்ளாவிடினும் பாதகமில்லை; 'தள்ளத்தக்கன' வற்றை அறிந்து தன் வாழ்வில் அவன் தள்ளி வாழ வேண்டும் என்று சட்ட விதி முறைகளையும் கட்டளைச் சொற்களைக் கொண்டே வற்புறுத்தும் பாங்கினைப் பார்ப்போம்.

கொள்ளத்தக்கன - தள்ளத்தக்கன ஆகிய இவற்றில் எதற்கு நாம் முதன்மை கொடுக்க வேண்டும்? எவை எவற்றை நாம் கடமையாகக் கருத வேண்டும்? கடமை என்பது என்ன? என்பவற்றிற்கு ஒரே வரியில் விடை சொல்லும் வள்ளுவனின் திறமையை வியந்து பாராட்டுங்கள்.

"கடன்என்ப நல்லவை எல்லாம்"

இதைவிட உங்கள் வாழ்க்கைக்குச் சூத்திரம் வேண்டுமா? வேதங்களை எல்லாம் படிக்க வேண்டுமா? உலக நீதி நூல்களில் எவற்றில் இவ்வளவு சுருக்கமாக விளக்கமாகக் கடமையைக் 'கடன்' என்ற சொல்லால் விளக்கியுள்ளார்?

குறிப்பாக, பெண்ணின் உரிமை மற்றும் கடமையை எண்ணிப் பார்த்த வள்ளுவர் பல நல்லுரைகளைச் சொல்லியிருப்பினும் அவளைத் 'தக்க' என்ற அடைமொழி கொடுத்து, அழைத்து, 'தக்கவள்' என்று சிறப்பிக்கும் பாங்கே பாங்கு. 'மனைத்தக்க' என்பதிலிருந்தே அவள் குடும்பத்தில் உயர்ந்த நிலையில் வைத்து எண்ணப்பட்டிருக்கின்றாள் என்பது தெளிவு.

'தக்க' என்ற பண்புச் சொல் எதை எதைத் தன்னுள் அடக்கிக் கொண்டு சிறக்கின்றது என்பதைப் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் கருத்து வழிக் கேட்போம்.

'தக்க' என்பது தகுதி வாய்ந்த என்ற கருத்துச் சிறப்பது. இங்கே தகுதி என்பது அன்பு, அன்பின் வடிவான பாசம், நடுவுநிலைமை, அடக்க முடைமை, சமுதாய அறிவு, குறிப்புணர்தல், பிறர்க்குதவும் மனப்பான்மை கால இடச் சூழலுக்கு ஏற்ப நடக்கும் திறமை, தடைகளைத் தாங்கி முயற்சியில் தளராப் பொறுமை, வெற்றி கிட்டும் வரை விடாது உழைக்கும் விடா முயற்சி, முன்னறிந்து செயலாற்றும் திறம், திட்டமிட்டுப் படிப்படியாகச் செயலாற்றும் பண்பு ஆகியவற்றை உட்கொண்ட முழுமைப் பண்புத் தொகுதி ஆகும். (திருக்குறள் மணிவிளக்க உரை (பக். 178)).

'உரிமை'யைப் பற்றித் திருவள்ளுவர் கருதும் சிறப்புப் பார்வையை இப்படியும் தொகுத்துக் காணலாம்.

சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு மனிதரும் சில, பல உரிமைகளைச் சமுதாயத்திலிருந்து பெற்றுள்ளனர். அவ் உரிமைகளை முழுமையாக நுகர வேண்டும் என எண்ணுகின்றனர். உரிமைகளுக்குத் தடை ஏற்பட்டால் தடையை உடைக்க விழைகின்றார். பொருள் சேர்ப்பது, அவற்றை அனுபவிப்பது, மணம் செய்து கொள்ளுவது, மணந்து கொண்டவனைத் தனக்கே உரிமை உடையவனாகக் கருதுவது, குழந்தைகளைப் பெறுவது அவர்களை வளர்ப்பது போன்ற பல்வேறு உரிமைகளைத் தமக்குச் சமுதாயம் வழங்கி இருப்பதாகக் கருதும் அதே மனிதர் பிறருக்கும் அந்த உரிமைகள் உண்டு என்பதை உள்ளார உள்ள வேண்டும். அப்போது தான் பிறர் உரிமைகளை மதிக்கும் பக்குவ நிலை - பண்பட்ட நிலை ஏற்படும். (டாக்டர் கு. மோகனராசு)

என்று கூறியுள்ளமை சிந்தனைக்குரிய செய்தியாகும்.

பெண்ணைப் பற்றிக் குறிப்பிடும்போது, அதுவும் மணமான பெண்ணைக் குறிக்கும்போது,

"பிறனொருவனின் உரிமை" என்றே சிறப்புச்செய்து கூறியுள்ளார்.

'பிறன் பொருளாள், பிறனியலாள், பிறன்மனை, பிறற்குரியாள், பிறன்வரையாள்' என்று கூறியிருப்பதிலிருந்தே பிறன் மனைவி விரும்பும் செயல் 'உரிமை மீறல்' குற்றமாக நம் திபி.கோ. (அதிகாரம் 15) வாயிலாகக் காட்டியிருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதைப் போன்றே ஒருவன் சம்பாதித்து ஈட்டிய பொருளை வெஃகுதல் தவறு என்று 'வெஃகாமை'யிலும் திருடுவதைக் 'கள்ளாமை'யிலும் "உரிமை மீறல்" குற்றமாகத் திருவள்ளுவர் கூறியிருப்பது இ.பி.கோ.விற்கே முன்னோடியாக இருக்கின்றது அல்லவா?

தனிமனிதனிலிருந்து சமுதாயப் பார்வையைப் பார்க்கும் வள்ளுவர் குடி என்ற சொல்லைக் கையாண்டு, குடிமக்களின் பொறுப்புகளை உணர்த்துகிறார்.

'குடி' என்னும் சொல் இருப்பிடம், குடியிருப்போர், குடிமக்கள், குடும்பம், உழவர், பரம்பரை என்ற பலபொருள்களில் வழங்கப்பட்டாலும் திருவள்ளுவர் 'தமிழ்க்குடி'யான தமிழரை எண்ணி - தமிழ்க் குடிமக்களை எண்ணி - அவர்கள் தாம் பிறந்த குடியின் தாழ்வுகளை நீக்கி, பெருமைகளைக் காத்து, குடியின் பெருமையை உயர்த்த வேண்டும் எனப் பலபட எண்ணியுள்ளார்.

ஒருவன் குடிப்பண்பிலிருந்து வழுவினாலும் அவனைச் சார்ந்த குடிக்கே இழுக்கு என்று கூறியுள்ளதை எண்ண வேண்டும். மடியுடைமையும், சிறந்த பண்புகள் இன்மையும் உட்பகையும் குடிப்பெருமையை அழித்து விடும் என்று அடித்துச் சொல்கிறார்.

தான் பிறந்த குடிக்கு எவ்வகையிலும் பழியை விளைவிக்காது பார்த்துக் கொள்ள வேண்டும். பிறராலும் தம் குடிக்குப் பழி ஏற்படுமோ என அஞ்சி அதற்கும் நாண வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்த,

**பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்(கு)**
**உறைபதி என்னும் உலகு** *(குறள் 1015)*

என்று கூறும் நயத்தை வியந்து நோக்குக.

"குடிமகனுக்கு உயிரைவிட நாணம் பெரிது" என்ற குடிப்பண்பை உணர்த்தி, "குடியின் புகழை" உயர்த்திக் காட்டிய அவரே 'தலையின் இழிந்த மயிரனையர்' என்று குடியின் இகழுக்குக் காரணமானவனை ஏசுகின்றார்.

இன்று சமுதாயத்திற்காக இருக்கின்ற சட்டங்களை 'அரசியலமைப்புச் சட்டங்கள்' என்கிறோம். திருவள்ளுவரின் சட்டங்களைச் "சமுதாய அறச் சட்டங்கள்" என்று உலகச் சான்றோர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**Its sentences are counted as binding as the**
**Ten Commandments of the Jews**

*- Charles E. Gover*

**In one hundred and thirty three chapters it treats of almost every veriety of subjects pertaining to relations and duties of life**

*- Ward.*

என்று மேல்நாட்டு அறிஞர்கள் புகழ்ந்து இருப்பதை இங்கு நினைவுகூர்தல் சிறப்புடையதாகும்.

எனவே, கடமை என்பது தனிமனிதன் தன் வாழ்விலும் குடிமகன் என்ற நிலையில் குடிநலனிலும், சமுதாயத்தின் அங்கம் என்ற வகையில் சமுதாய உயர்விலும், மனிதன் என்ற படிநிலையில் உலகத் தொண்டிலும் நாட்டம் செலுத்த வேண்டிய கடமையைத் திருவள்ளுவர் ஒருவர்தான் சிறப்பாகப் படம்பிடித்துள்ளார் எனலாம்.

இதே அடிப்படையில்தான் அரசியல் துறையினருக்கு அறிவுரை கூறும்போதும், 'படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண்' என்ற ஆறு பெரும் பொறுப்புகளோடு பண்புடைமை, அஞ்சாமை, அறன் இழுக்காமை, அறிவுடைமை, ஆள்வினை உடைமை, இடுக்கண் அழியாமை, இன்சொல் உடைமை, செவிகைப்ப சொற் பொறுத்தல், துணிவுடைமை, தூங்காமை, பொச்சாவாமை, மடியின்மை, பெண்வழிச் சேராமை முதலிய நற்பண்புகளைப் பொறுப்புகளாகவும் கடமைகளாகவும் கருத வேண்டும் என்று பட்டியல் இட்டுக் காட்டியுள்ளார்.

"அறநெறியே அரசியலைத் தாங்கும் தூணாக அமைய வேண்டும்" என்பதே 'வள்ளுவர் உள்ளம்' என்று தெரிய வேண்டும். அதனால் தான் "முறை செய்து" என்று அழகான சொல்லால் அரசியலார்க்கு அறிவுரை கூறியுள்ளார். அரசியலில் உள்ளோர் 'முறைசெய்து' மக்களைக் காத்திடின் "முறைசெய்யக் குறை" என்ன இருக்க முடியும். 'முறைசெய்து' என்ற சொற்றொடர்தான் அரசியலார் தம் பொறுப்புணர உணர்த்திய 'செஞ்சொல்' என நினைவு கூர்க. விரிந்து பொருள் காண்க. இதன் பாட்டுப் 'அரசியல்' எனவாகும்.

* * *

# திருக்குறளும்
# இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டமும்

மு. முத்துவேலு

திருக்குறளை அறநூல், அன்புநூல், அருள்நூல், அறிவுநூல், அகநூல் என்று பல்வேறு தலைப்புகளில் அறிஞர்கள் பலரும் ஆய்ந்து வந்துள்ளனர். திருக்குறளைச் 'சட்டநூல்' என்ற நோக்கில் அணுகினாலும் அதில் தமிழரின் சட்டநெறிகள் புலப்படக் காணலாம். அவ்வகையில், 1860ஆம் ஆண்டில் இயற்றப்பெற்று இன்றளவும் இந்திய நீதிமன்றங்களில் பயன்பட்டுவரும் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (The Indian Penal Code) கூறுகள், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழர்களுக்குச் சட்ட நூலாக விளங்கிய திருக்குறளில் பொதிந்திருக்கின்றன என்பதைப் புலப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.



## திருக்குறள் – சட்டநூல்

சங்க இலக்கியங்களில் 'அறம்' என்ற சொல் அறநெறிகளைக் குறிப்பதற்குப் பயன்பட்டது; அத்துடன் இன்று 'சட்டம்'

என்ற சொல் உணர்த்தும் கருத்தமைவு களையும் குறிப்பதற்குப் பயன்பட்டு வந்தது. புறநானூற்றில் குற்றங்களைத் தொகுத்துக் கூறும் தமிழரின் அறநூல் ஒன்றைக் குறிக்கும் பாடலில்,

அறம் பாடிற்றே ஆயிழை கணவ[1]

எனவரும் அடியில் காணப்படும் 'அறம்' என்ற சொல் திருக்குறளைத்தான் குறித்தது என்று கருதுவர். எனவே வள்ளுவர் 'அறம்' என்று குறிப்பதைச் சட்டநெறிகளாகவும், 'தீது' என்று குறிப்பிடுவதைக் குற்றங்களாகவும் கொள்ளலாம்.

## இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டம் – ஓர் அறிமுகம்

இந்தியா, ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் இருந்து 1858இல் ஆங்கிலப் பேரரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் வந்தபின்பு, இந்தியாவிற்கென்று பொதுவான சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அச் சட்டங்களை உருவாக்குவதில் பெரும்பணியாற்றியவர் மெக்காலே பிரபு ஆவார். அவர் வகுத்தளித்த சட்டங்களில் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டம் (இக்கட்டுரையில் இது இ.த.தொ.சட்டம் என்று குறிப்பிடப்பெறும்) குறிப்பிடத் தக்கதாகும். இச்சட்டம் இருபத்தி மூன்று அத்தியாயங் களையும் (Chapters) 511 பிரிவுகளையும் (Sections) கொண்டுள்ளது. இச்சட்டத்தில் குற்றங்களின் வரையறைகள் விளக்கப்பட்டுள்ளன. அக்குற்றங்களுக்கான தண்டனைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. 1860இல் இயற்றப்பட்ட குற்றமிழைக்கும் இந்தியர்களைத் தண்டிப்பதற்கான சட்டமாகப் பயன்பட்டு வருகின்றது.

## பொருந்துறுகை

ஆங்கில அரசினால் இயற்றப்படும் சட்டம் ஒவ்வொன்றும் அது யார் யாருக்குப் பொருந்தும் என்பதைத் தெளிவாகச் சுட்டிவிடும். இ.த.தொ. சட்டமும், அச்சட்டம் இந்தியர் ஒவ்வொருவருக்கும் இந்தியாவில் செய்யும் குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவது தொடர்பாகப் பொருந்தும் என்பதை,

**Every Person shall be liable to punishment under this code[2]**

என்று குறிப்பிடுகின்றது. எனவே இந்தியர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், சட்டத் தொகுப்பின் கீழ்வரும்

குற்றங்களைப் புரியுமிடத்து ஒத்த தண்டனைகளைப் பெறுவர் என்பது தெளிவாகின்றது. சட்ட நூலாக இருந்து தண்டனைக் குரியவர்களைக் குறிப்பிடும்போது, வள்ளுவர் இந்தியாவைக் கடந்து உலக மக்கள் அனைவரும் ஒரே தண்டனையை உறுதி செய்கிறார்.

> பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான் *(குறள் 972)*

என்னும் குறள், 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்பதை உணர்த்துகின்றது. வடமொழியிலுள்ள மனுசாஸ்திரத்தைப் போல 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' என்னும் அறிவுக்குப் பொருந்தாத சட்டத்தை வள்ளவர் வகுக்கவில்லை. இன்றைய சட்டவியலார் போற்றும் இயற்கை நீதி (Natural Justice) என்னும் உயர்ந்தி நீதியை வள்ளுவர் வகுத்துள்ளார் என்று பெறப்படுகின்றது.

### சட்டங்களின் வகைகள்

இன்றைய சட்டவியலார் சட்டங்களை இருபெரும் பிரிவுகளாகப் பகுப்பர். அவை முறையே,

1. நிலைமுறைச் சட்டங்கள் (Substative Laws)
2. நெறிமுறைச் சட்டங்கள் (Procedural Laws)

எனப்படுவன.

நிலைமுறைச் சட்டங்கள் குற்றங்களை வரையறுத்து அவற்றிற்கான தண்டனைகளை எடுத்துக் கூறுவன. இதற்கு இ.த.தொ. சட்டத்தை எடுத்துக்காட்டாகக் கூறலாம். நெறிமுறைச் சட்டங்கள் எனப்படுபவை, குற்றஞ்சாட்டப் பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கிட நீதிமன்றங்களில் மேற்கொள்ளப்படும் நடைமுறை நெறிகளைத் தொகுத்துரைப்பவை. இதற்குக் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தையும் எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

திருக்குறள் நிலைமுறைச் சட்டமாக நின்று குற்றங்களை வரையறுக்கின்றது; நெறிமுறைச் சட்டமாகவும் அமைந்து அக்குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவதற்கான நீதிமன்ற நெறிமுறைகளையும் வழங்குகின்றது. எனவே இ.த.தொ. சட்டம் நிலைமுறைச் சட்டமாக மட்டுமே இருக்கத் திருக்குறள் நிலைமுறைச் சட்டமாகவும் அமைந்து அக்குற்றங்களுக்குத் தண்டனை வழஙகுவதற்காளு நீதிமன்ற நெறிமுறைகளையும் வழங்குகின்றது.

எனவே இ.த.தொ. சட்டம் நிலைமுறைச் சட்டமாக மட்டுமே இருக்கத் திருக்குறள் நிலைமுறைச் சட்டமாகவும் நெறிமுறைச் சட்டமாகவும் விளங்குகின்றது.

## குற்றங்களின் வகைகள்

தண்டனைக்குரிய குற்றங்களின் தன்மைக்கேற்ப குற்றங்கள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை,

1. உரிமையியல் சார் குற்றங்கள் (Civil offence)
2. குற்றவியல் சார் குற்றங்கள் (Criminal offence)

என்பன.

தனிமனிதனின் உரிமைக்கும் உடைமைக்கும் தீங்கு விளைவிக்கும் செயல்கள் உரிமையியல் சார் குற்றங்கள் எனப்படுவன; ஒருவரின் உடலுக்கும் உயிருக்கும் தீங்கு விளைவிக்கும் செயல்கள் 'குற்றவியல் சார் குற்றங்கள்' என அழைக்கப்படுகின்றன. இ.த.தொ. சட்டத்தில் குற்றவியல் சார் குற்றங்கள் (Criminal offence) மட்டுமே வரையறுக்கப் பட்டுள்ளன. திருக்குறளில் குற்றவியல் சார் குற்றங்களுடன் உரிமையியல் சார் குற்றங்களும் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளன. இவ்விரு குற்றங்களின் பகுப்புமுறை பண்டைய நாளில் உலக வழக்கில் இல்லை என்றும், சட்டங்களின் முன்னோடிகளாக உரோமானியர்களின் சட்டநெறிகளிலும் இவ்விருவகைக் குற்றங்களும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டிருப்பதும் ஈண்டு கருத்தில் கொள்ளத்தக்கவை ஆகும்.

## குற்றங்களின் வரையறைகள்

இ.த.தொ. சட்டமும் திருக்குறளும் குற்றங்களை வரையறை செய்வதில் ஒத்திருக்கும் தன்மையுடையன. குற்றங்கள் பலவற்றுள்ளும் 'திருடுதல்' என்பது தொன்றுதொட்டு இருந்து வரும் குற்றமாகும். இக்குற்றச் செயலை இ.த.தொ. சட்டம் வரையறுப்பது பின்வருமாறு அமைகின்றது.

> **Theft - intending to dishonesty any movable property out of possession of any person without that person's consent, moves that property in order to such taking, is said to commit theft[3]**

இந்த வரையரையில் மூன்று தொடர்கள் இன்றியமையாதவை, அவை

1. Dishonest
2. The property
3. without that Person's consent

என்பவை.

இந்த வரையறையைத் திருவள்ளுவர், 'உள்ளத்தால் உள்ளலும் தீதே: பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்" என்னும் குறளில் அமைத்துள்ளார். இந்தக் குறளிலுள்ள 'கள்ளம்' என்பது Dis-honest என்பதற்கும், 'பிறன்பொருள்' என்பது 'the property' என்பதற்கும், 'கள்வேம்' என்பது .'without that person's consent' என்பதற்கும் பொருந்தி வருவதைக் காணலாம்.

### பிறனில் விழையாமையும் வரைவின் மகளிரும்

இ.த.தொ. சட்டத்தின் பிரிவு 497இல் 'Adultry' என்னும் தலைப்பில் வரையறை செய்யப்பட்டுள்ள குற்றத்தின் தன்மையை வள்ளுவர், 'பிறனில் விழையாமை' என்னும் அதிகாரத்திலும் இ.த.தொ. சட்டத்தில் 'Prostitution' என்ற தலைப்பில் வரையறுத்துள்ள குற்றத்தை வள்ளுவர் 'வரைவின் மகளிர்' என்னும் அதிகாரத்திலும் வரையறுத்துள்ளது சட்ட நுணுக்கம் நிறைந்ததாக அமைந்துள்ளது.

### புறங்கூறாமையும் பயனில சொல்லாமையும்

இ.த.தொ. சட்டத்தின் பிரிவு 499இல் விளக்கப்பட்டுள்ள 'Deformation' என்னும் குற்றச்செயல், திருக்குறளில் 'புறங்கூறாமை, பயனில சொல்லாமை' என்னும் அதிகாரங்களில் வரையறுக்கப் பட்டுள்ளன.

அடுத்த நிலையில் தண்டனைகள் குறித்துக் காண்போம்.

### தண்டனைகள்

குற்றம் இழைத்தவர்கள் தண்டனை பெறுதல் வேண்டும்; அத்தகு தண்டனைகள் குற்றங்களின் தன்மைக்கேற்ப அமைதல் வேண்டும். இக்கருத்தின் பொருட்டே இ.த.தொ. சட்டமும் குற்றங்களை வகைப்படுத்தி வேறுபடுத்தியுள்ளது. அதற்கேற்ற வரிகளில் தண்டனை களையும் முறைப்படுத்தி இருக்கின்றது. இக்கருத்தை,

> தக்காங்கு நாடித் தலைசெல்லா வண்ணத்தால்
> ஒத்தாங்கு ஒலுப்பது வேந்து (குறள் 561)

என்னும் குறள் விளக்கக் காண்கிறோம்.

## தண்டனையின் வகைகள்

இ.த.தொ. சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் ஐந்து வகைப்படுவன. அவை,

1. மரணதண்டனை
2. ஆயுள்தண்டனை
3. சிறைத் தண்டனை (இது கடுங்காவல், வெறுங்காவல் என இருவகைப்படும்)
4. சொத்துப் பறிமுதல்
5. அபராதம் அல்லது பணத்தண்டம்

என்பன.

திருக்குறள் தண்டனைகளை வகைப்படுத்தியுள்ளதை உரையாசிரியர் தமது உரையில் சுட்டிக் காட்டுகிறார்.

> குடிபுறம் காத்தோம்பி குற்றம் கடிதல்
> வடுவன்று வேந்தன் தொழில் (குறள் 549)

என்னும் குறளுக்கு உரை வகுக்கும்போது, பரிமேலழகர் தண்டனைகள் துன்பம் செய்தல், பொருள் கோடல், கோறல் என மூவகைப்படும் என்கிறார்.

'துன்பம் செய்தல்' (Penal punishment) என்பதை ஆயுள் தண்டனை மற்றும் சிறைத்தண்டனையுடன் ஒப்பிடலாம்.

'பொருள் கோடல்' என்பதைச் சொத்துப் பறிமுதல், அபராதம் அல்லது பணத்தண்டம் என்பதுடன் ஒப்பிடலாம்.

'கோறல்' என்பதை மரண தண்டனை (Death Sentence) என்பதுடன் ஒப்பிடலாம் இவ்வகையில் இ.த.தொ. சட்டத்தில் விளக்கிக் கூறப்பட்ட ஒருவகையான தண்டனைகளும் ஒறுத்தல் என்னும் வள்ளுவர் வாய்மொழியின்கண் விளக்கம் பெறக் காண்கிறோம்.

ஆதலின், இக்கட்டுரையில், ஆங்கிலேயரின் அறிவாற்றலும் சட்டப்புலமையும் வெளிப்படும் வண்ணம் அமைந்திருக்கும்

இ.த.தொ. சட்டத்தில் காணப்படும் சட்டத்தின் பொருந்துறுகை, குற்றங்களின் வகைகள், தண்டனையின் வகைகள் முதலியவை தமிழரின் சட்ட நூலான திருக்குறளில் வெளிப்படுகின்றன என்பது விளக்கப்பட்டது.

## அடிக்குறிப்புகள்

1. புறநானூறு எண். 32.
2. The Indian Penal Code, 1860 sec. 378
3. The Indian Penal Code, 1860 sec. 53

※ ※ ※

# மதநல்லிணக்கம்

# திருக்குறளில் சைவ சமயம்

**சோ. சண்முகம்**

திருக்குறள் உலகப் பொதுமறை, தமிழர்களின் வேதம், பொய்யா மொழி, உத்தரவேதம், தமிழ் வேதம், எழுதுமறை என ஆன்றோர்களாலும், சான்றோர் களாலும் போற்றப்பட்டு உள்ளது. உலக மொழிகளில் எல்லாம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறளில் வைணவம், பௌத்தம், கிறித்துவம், சமணம், பார்சி போன்ற மதக்கருத்துகள் இடம்பெற்றுள்ளன. ஆயினும் சிறப்பாய்ச் சைவசமயக் கருத்துகள் இடம்பெற்றுள்ளதை இக்கட்டுரை ஆய்ந்துள்ளது.

திருவள்ளுவர் ஐம்பொறிகளின் வாயிலாய்ச் செல்லும் ஆசையை ஒழித்தல் வேண்டும் என்கின்றார். சமணமும், சாக்கியமும், ஐம்பொறிகளை வெல்ல வேண்டும் எனக் கூறும். இதனை வள்ளுவர்,

> பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
> நெறிநின்றார் நீடுவாழ் வார்[1]



எனக் குறிப்பிட்டுள்ளார். திருமூலர் ஐம்பொறிகளை அடக்குதல் பற்றி,

அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்,
அஞ்சும் அடக்கும் அறிவறி வார்இல்லை,
அஞ்சும் அடக்கின் அசேதனமாம் என்றிட்(டு)
அஞ்சும் அடக்காத அறிவறிந்தேனே[2]

எனக் குறிப்பிட்டுள்ளார். இதனை மூன்றாம் திருமுறை,

அஞ்சகம் அவித்த அமர்க்கமரன் ஆதிபெருமான்

என்றும், ஆறாம் திருமுறை,

பொல்லாப்புலன் ஐந்தும் போக்கினான்

என்றும் குறிப்பிட்டுள்ளதை அறியலாம்.

இவ்வுலகில் உயிர்கள் இடையறாது பிறந்தும், இறந்தும் உழல்வதற்குக் காரணம் அவை செய்த வினையே. பிறவி நீங்க வேண்டுமாயின் இருவினையினின்றும் நீங்குதல் வேண்டும். இதற்குரிய ஒரே வழி இறைவன் புகழை எப்போதும் சொல்ல வேண்டும் என்பதனை,

இருள்சேர் இருவினையும் சேரா, இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

என்பதனால் அறியலாம். 'பரவுவார் வினை தீர்க்க நின்றார்' என்றும் 'பாடநீடு மனத்தார் வினை பற்றறுப்பார்களே அடி ஒத்தகவல்லார் வினை வீடுமே' என்றும், நாதனை ஏத்துமின், 'நும்வினைளையவே பாட்டும் பாடிப் பரவித் திரிவார், ஈட்டும் வினைகள் தீர்ப்பார்' எனத் திருமறைகள் வினைகள் தீர இறைவனை எந்நாளும் தொழுதேத்த வேண்டும் என வள்ளுவர் வழி நின்று விரிவுபடப் பேசியுள்ளதைக் காணலாம்.

வள்ளுவப் பெருந்தகை பிறப்புக்குக் காரணம் துன்பமே என்பதனை, 'பிறவிப் பெருங்கடல்' என்றே கூறுவர். இங்குப் பிறவியைக் கடலாக உருவகித்துள்ளதை நாமறிவோம். பிறிதொருக் குறளில்,

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு

எனக் குறிப்பிட்டுள்ளார். "இங்கு மாணாப் பிறப்பு" என்பதற்குப் பரிமேலழகர் இன்ப மில்லாத பிறப்பு எனக் கூறியுள்ளார்.

துன்பமாகிய பிறப்பினைத் தொலைக்கப் பிறக்காமல் இருத்தல் வேண்டும். இதனை,

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது
வேண்டாமை வேண்ட வரும்

எனக் குறிப்பிட்டுள்ளார். அத்தகைய பிறவித் துன்பத்திற்குக் காரணமாகிய அவாவை நீக்குதல் வேண்டும். மீண்டும் மீண்டும் உயிர்கள் இம்மண்ணுலகில் பிறந்து அவாவால் அலைக்கழிக்கப் படாமல் இருக்க உயிர்கள் அவாவினை ஒழித்துப் பிறவித் துன்பத்தை நீக்கி இறைவனுடைய திருவடியில் சரண் புக வேண்டும். இதுவே சரணாகதித் தத்துவமாகும் என்பது சமயக் கருத்து. இதனை வள்ளுவம் தெளிவுபடப் பேசியுள்ளதை இங்கு அறியலாம்.

பிறந்த பிறப்பறுக்கும் எங்கள்

'கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்கவல்லானே'

'அல்லற் பிணி அறுப்பானே'

'எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு'

'பித்த உலகில் பிறப்போடிறப் பென்னும்
சித்த மிகாரக் கலக்கம் தெளிவித்த வித்தகத்தேவர்"

எனவரும் செய்யுட்கள்,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில

என்னும் குறட்பாக்களின் கருத்திற்கேற்ப அமைந்துள்ளதைக் காணலாம். பிறப்பறுப்போர்க்கே இறைவன் திருவடிகிட்டும். இறைவன் திருவடி கிட்ட உயிர்களின் பிறவியை நீக்கி அருள்பவன் இறைவனே என்னும் கருத்தினை இங்கு அறியலாம்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு

இங்குப் பிறப்பென்னும் பேதைமை நீங்க என்பதனால் பிறப்பறுத்த நிலையே வீடுபேறு அடைதற்குரியநிலை என்பதனை நன்கறியலாம்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர்

என்னும் குறட்பாக்கள் மேலே உள்ள கருத்துகளையே கூறும்.

யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்

என்னும் குறளால் 'வானுலகம்' ஆகிய தேவர் உலகம் என்னும் வீட்டுலகம் எய்த, யான் - எனது என்னும் அகப்பற்று, புறப்பற்று ஆகிய பற்றுகளை நீக்க வேண்டும் என்பதனை அறியலாம்.

வள்ளுவப் பெருந்தகை அன்பின் மகத்துவத்தைக் கூறும் பொழுது,

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று

அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு

என விளக்கியுள்ளார். சைவ சமயம் அன்பை முதன்மை படுத்தியே பேசும். அது இறைவன் திருவருளை அவனிடத்தில் நாம் செய்யும் அன்பாலேயே பெறமுடியும் எனக் கூறியுள்ளது. அன்பின் வழித்தோன்றும் மெய்ப்பாடுகளைப் பற்றித் திருவாசகம் கூறும்போது,

ஆடு கின்றிலைகூத்து; உடையான் கழற்கு
அன்பிலை; என்புருகிப்
பாடுகின்றிலை; பதைப்பதும் செய்கிலை;
................ நெஞ்சே
தேடு கின்றிலை;

என்று சுட்டிச் செல்லும்.

மெய்கலந்த அன்பர் அன்
பெனக்குமாக வேண்டுமே,

வேண்டும்நின் கழற்கண் அன்பு

என மணிவாசகர் இறைவனிடம் வேண்டி நிற்பதைக் காணலாம்.

'பாசம் பரஞ்சோதிக் கென்பாய்'
தில்லைச் சிற்றம் பலத்தன்
ஈசனார்க் கன்பர் யாம் ஆரேலோரெம் பாவாய்

என அன்பின் நிலையைப் பேசும் திருவெம்பாவை.

வள்ளலார் இறைவனிடம் வேண்டும்பொழுது உலக உயிர்கள் அனைத்திடத்தும் அன்பு செய்தல் வேண்டும் என்பார். இதனை,

அப்பா நான் வேண்டுதல் கேட்டறிதல் வேண்டும்
ஆருயிர்க் கெல்லாம் அன்பு செய்தல் வேண்டும்

என்பதனால் அறியலாம். திருமந்திரம் 'அன்பே சிவம்' எனக் கூறும். சைவக் குரவர் 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே'

என்பார். அன்பு செலுத்தினால் இறைவனை அடையலாம். தீவினைகளும் அஞ்சும் என்பதனை,

> மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற்கு இல்என்ப
> தன்னுயிர் அஞ்சும் வினை

என்பதனால் அறியலாம்.

> அவா இல்லார்க்(கு) இல்லாகும் துன்பம்; அஃதுண்டேல்
> தவாஅது மேன்மேல் வரும்

என்றும் குறட்பா கூறுகின்றது. இதனைப் "பிறவியால் வருவனகேடு பந்தம் நீங்காதவர்க் குய்ந்துபோக் கில்லென" என்று இரண்டாம் திருமுறை கூறும்.

> தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது

என்பார் வள்ளுவர்.

இறைவனடியைச் சேராதவர்க்கு இம்மையில் கவலையும் மறுமையில் பிறவி நீக்கமும் இல்லாது போய்விடும் இறைவனடியைச் சேர உணவைக் குறைத்தல், பட்டினியிருத்தல் காட்டில் இருத்தல், அறம் கேட்டல், தலயாத்திரை செய்தல் தேவையில்லை. இறைவன் திருவடியில் சிந்தை வைத்தால் பயன்விளையும். இதனை,

> ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
> எண்ணின் தவத்தால் வரும்

> வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
> ஈண்டு முயலப் படும்

எனக் கூறியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை.

இக்கருத்தை அடியொற்றி,

> மற்றுஒற்றவம் செய்து வருந்தில் என்
> பொற்றை யுற்றெடுத் தான்உடல் புக்கிறக்
> குற்ற நற்குரையார் கழற் சேவடி
> பற்றிலாத வர்க்குப் பயன் இல்லையே

எனத் திருமுறை கூறியுள்ளதால் அறியலாம்.

உயிர்களின் பிறப்பை நீக்குவது இறைவன் திருவடி என என்னும்போது திருவாசகமும் உயிர்கட்குப் பிறவியை அழிப்பவன் இறைவனே என்கிறது.

'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள்'

'மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி'

'எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன்'

'மெய்யே உன் பொன்னடிகள்'

என வருவதால் அறியலாம்.

திருவள்ளுவர் வீடுபேற்றை 'மற்றீண்டு வாரா நெறி' என்றும் 'பேரா இயற்கை' என்றும் குறிப்பிட்டுள்ளதை,

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி

ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்

என்னும் குறட்பாக்கள் வாயிலாக அறியலாம். திருவாசகம் "மீண்டு வாரா வழி அருள் புரிபவன்" இறைவன் என்னும். "பேரா உலகம்" என்பதனைத் திருச்சதகம்,

பேரா உலகம் புக்கார் அடியார்
புறமே போந் தேன் யான்

என்றும் குறிப்பிடும். திருவெம்பாவை 'வாரா வழியருளி வந்தென் உளம் புகுந்த' என்று குறிப்பிட்டுள்ளது. சைவ சமயம் வாரா உலக நெறி என்று வீடுபேற்றைக் குறிப்பிட்டுள்ளது.

திருவள்ளுவர் நாம் வாழும் மண்ணுலகமே யன்றி மேல் உலகமும் உளது என்றும் அதில் வாழ்வோர் 'வானோர்' என்றும் 'விண்ணோர்' என்றும் தேவர், கடவுளர் என்றும் வழங்குகின்றார். இதனைப் 'புத்தேள் உலகத்தும்' 'புத்தேள் உலகு' 'புத்தேளிர்வாழும் உலகு', 'புத்தேள் நாடுண்டோ' என்றும் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். திருவாசகம்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்

என எழு பிறப்பும் பிறந்து இளைத்ததைக் கூறும். 'புத்தேளிர் கோமான்' எனத் திருச்சதகம் கூறும். வீட்டுலகத்திற்கு மேல் செல்லுதலைப் 'பரகதி' எனத் திருவாசகம் குறிப்பிடும். இதனைப் 'பரகதி பாண்டியற்கருளினை' என்பதால் அறியலாம்.

உலகங்கள் பல தோன்றி அழிந்ததைச் சமயங்கள் குறிப்பிட்டுள்ளன. திருவள்ளுவர்,

ஊழிபெயரினும் தாம்பெயரார், சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்

இங்கு ஊழி அழிவைக் கூறியுள்ளார். இறைவனை, ஊழி முதல்வன் எனப் போற்றித் திருவகவல் கூறியுள்ளது. 'ஊழி முதல்வனாய் நின்ற, ஒருவனை' என்று திருவெம்பாவை கூறும். திருத்தோணோக்கம் 'ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந்தென் பிறவித், தாழைப் பிறத்தவாதோணோக்க மாடாமோ' எனக் குறிப்பிட்டுள்ளதால் அறியலாம்.

இவ்வாறு சைவ சமயக் கருத்துகளை உள்ளடக்கியே திருக்குறள் உள்ளதைத் தெளிவாக இக்கட்டுரை நிறுவுவதை அறியலாம்.

## ஆய்வு முடிவுகள்

- ஐம்பொறிகளை அடக்குதல் வேண்டும். ஐம்பொறிகளில் உண்டாகும் ஆசையை அறுப்பவன் இறைவனே. இருளினை அகல இறைவன் புகழ்பாட வேண்டும்.
- பிறவிக்குக் காரணம் துன்பம். எனவே பிறவியை அகற்ற வேண்டும். அதற்கு இறைவனிடம் சரண்புக வேண்டும். இதுவே சரணாகதித் தத்துவம் எனலாம்.
- துறவே இவ்வுலகில் நிலையிலாப் பேரின்பம் நல்கும்.
- பிறப்பறுத்த நிலையே வீடுபேறு. இதற்கு அக, புறப் பற்றுகளை விட்டொழிக்க வேண்டும்.
- உலக உயிர்களிடத்துக் காட்டும் அன்பே இறைவனுக்குப் போய்ச் சேருகிறது. இதனையே அருளாளர்கள் பேசியுள்ளனர்.
- பிறவிப் பந்தத்தை நீக்க வேண்டும். இதற்கு இறைவனிடம் சிந்தை வைத்துத் தவம் செய்தல் வேண்டும்.
- வீடுபேற்றை மீண்டும் 'வாரா நெறி', 'பேரா இயற்கை', 'வாரா வழி', என வள்ளுவரும் பிற அருளாளர்களும் குறிப்பிட்டுள்ளனர்.
- திருவள்ளுவர் "ஏழ் பிறப்பு", மேல் உலகம் பற்றிக் கூறியுள்ளார். சைவ சமயக் கருத்துகள் வள்ளுவர் வெண்பாக்களில் நிரம்ப உள்ளன.

# இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை மதநல்லிணக்கம்

**சூலம் சுப்பராயன்**

இன்றைக்கு இந்தியாவில் காஷ்மீரம், இலங்கையில் ஈழம், அமெரிக்கா, ஈராக், இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் நடக்கும் பயங்கர வன்முறைச் சம்பவங்கள் மதக்கலவரத்தின் உச்சக் கட்டங்கள் ஆகும். எனவே 'இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை மதநல்லிணக்கம்' ஆகும்.

மனிதர்களின் வாழ்வுக்காக உருவாகிய மதங்கள் ஏன்? இத்தகைய போர்க் குணங்களைப் பெற்றன என்று மதங்களின் மையக் கருவை ஆராய்ந்த போது, அதன் மூலக்கரு கடவுள்தான் என்று தெரிந்தது. கடவுள் இருக்கிறார் என ஒரு வாதமும், இல்லவே இல்லை என ஒரு வாதமும் இன்றும் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கிறது.



நூல் இயற்றும்போது கடவுள் வாழ்த்தை முதலில் தொடங்கிவிட்டுப் பின்னர்தான் நூற்பொருளைப் பற்றிக் கூற வேண்டும் என்ற மரபோ விதிமுறையோ

தொல்காப்பியத்தில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. தொல்காப்பிய இலக்கணப் பெருநூலின் தொடக்கத்திலே கூடக் கடவுள் வாழ்த்துக் காணப்படவில்லை. சங்ககால நூல்கள் எவையும், கடவுள் வாழ்த்தொடு தொடங்கப்பட்டதாய்க் குறிப்புகள் எவையும் உறுதியாக இல்லை. வள்ளுவர் இயற்றிய குறட் பாக்களைத் திருக்குறள் என்ற நூல்வடிவில் பிற்காலத்தில் தொகுத்தவர் தான் கடவுள் வாழ்த்து எழுதினார் என்று எண்ணுவதில் தவறில்லை.

ஆனால் வள்ளுவர் குறள் எழுதிய காலத்தில் கடவுள் நம்பிக்கையுள்ள மக்களும், பல மதத்தினர்களும், தமிழ் நிலத்தில் வாழ்ந்தார்கள் என்பதையும் மதத்தினர்களிடையே குழப்பங்களும், கலவரங்களும் இருந்தன என்பதையும் குறள் வாயிலாய் உணர்ந்துகொள்ள முடிகிறது.

அகமும், புறமும் என்று இருந்த சங்க காலத்தின் கொள்கைகள் இரண்டும் இல்லாமல், ஆரிய வழியிலான அறம், பொருள், இன்பம், வீடு எனும் கடவுள் கொள்கையுடன் கூடிய சமயக் கொள்கைகள் நான்கும் இல்லாமல், உலகியலுக்கு உடன்பாடில்லாத வீடு பேற்றினை மட்டும் தவிர்த்து அறம், பொருள், இன்பம் எனும் மூன்று கொள்கைகளை மட்டும் வள்ளுவர் வகுத்துக் கூறியுள்ளார். ஆரியர்கள் வருவதற்கு முன்பு இந்தியாவில் கடவுள் கொள்கைகள் இல்லவே இல்லை. ஆரியர்கள் இந்தியாவிற்குக் குடியேறியதற்குப் பிறகுதான் மதங்களும், கடவுள் கொள்கைகளும் தோன்றின என்பது தெளிவாகிறது.

ஆரம்பத்தில் ஆரியர்களின் உணவு ஆடு, மாடு, கோழி போன்றவை. அவற்றை வளர்ப்பதற்காக ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தனர். ஆரியர்கள் இந்தியாவிற்குள் குடியேறுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திராவிட நாகரிகம் சிறந்து விளங்கியுள்ளது. திராவிடர்கள் சூரியனை வணங்கி வழிபட்டுள்ளார்கள். இவர்கள் சூரியனை வணங்கக் காரணம் வெப்பமிகு கோள்களில் ஒன்றான சூரியனிலிருந்து சிதறிய ஒரு துண்டுதான் பூமி என்பதால் தான். எவ்வளவோ கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு நெருப்புப் பந்தாக இருந்த இந்தப் புவி குளிர்ச்சியடைந்து நீர்வளம், நிலவளம், மலைவளம், மரம், செடி, கொடிவளம் என்றெல்லாம் வளங்களைப் பெற்றுப் புழு, பூச்சி, கிருமிகள் போன்ற உயிரினங்கள் தோன்றக்கூடிய பக்குவத்தையும் அடைந்தது. உயிரினங்களிடையே ஏற்பட்ட உடலுறவில் விலங்கினம், பறவையினம், மனிதவினம் முதலிய இனங்கள் தோன்றின. எனவே

உலகமும், உயிரினங்களும் சூரியனிலிருந்து தோன்றின என்ற உலகியல் தத்துவத்தின் அடிப்படையில் தான் திராவிடர்கள் சூரியனை வணங்கியுள்ளனர்.

அறிவுப்பூர்வமான இவ்வுண்மை உணர்ந்தும் ஆரியர்கள் சூரியனை வணங்கவில்லை. அவர்களுக்குள் மிகுந்து இருந்த ஆதிக்க மனப்பான்மையே இதற்குக் காரணமாகும். ஆரியர்கள் சிவனைக் கடவுளாக அறிமுகப்படுத்தினர். சிவன்தான், சூரியனையும், இந்த உலகத்தையும் இயக்குகிறார் என்றும், அதற்குச் சைவ மதம் என்றும் கூறினர். ஆரியருள் ஒருபிரிவினர் சூரியனையும், உலகையும் இயக்குவது சிவனில்லை. உலகைக் காப்பவர் திருமால்தான் என்று வைணவர்களாய்க் கூறினர். இதற்கும் அடிப்படை ஆதாரம் இல்லாததால், இல்லை இல்லை பிரம்மா தான் உலகைப் படைத்தார் என்றும் கூறலாயினர்.

மேலும் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் மூலமாகத் தங்கள் மதத்தைப் பரப்பினார்கள். திராவிடர்களும் அவற்றை நம்பினர். இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளைத் தெருக் கூத்து, நாடகங்களாகத் தயாரித்தும் நடித்தும் திராவிடர்கள் புகழ் பெற விரும்பினார்கள். இதற்கிடையில், திராவிடர்கள் மத்தியில் ஆரியத்தின் வருணாசிரமக் கொள்கைகள் வரத் தொடங்கின. சாதிப்பிரிவுகள், சாஸ்திரம் சம்பிரதாயங்கள் உருவாகின. பூர்வீகக் குடிகளான திராவிடர்கள் நாலாந்தர மாக்கப்பட்டு தீண்டத்தகாதவர்களாகத் தள்ளப்பட்டனர். இத்தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்துச் சமணமதம், புத்தமதம் போன்ற பல மதங்கள் தோன்றின. இவ்வாறு ஒன்றுக்கும் மேற்பட்ட பல மதங்கள் தோன்றினாலும், மக்களில் சமத்துவமும், மதங்களில் சமதர்மமும் தோன்ற வில்லை. மாறாக மதக்கலவரமும், மதச் சண்டைகளுமே தோன்றின. இதற்குக் காரணம், முரண்பாடான மதக் கொள்கைகளே.

மதங்களிலுள்ள முரண்பாடான கொள்கைகளை நீக்கிவிடவும், மதச்சண்டைகள், மதக்கலவரங்களைப் போக்கிடவும் எல்லா மதமும் ஒரு மதம்தான், எல்லா கடவுளும் ஒரே கடவுள்தான் என்ற உயரிய உலகியல் தத்துவத்தை வள்ளுவர் தனது முதல் அதிகாரத்துக் குறள்களில் தெளிவுப்படுத்தியுள்ளார். அதாவது

> அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்
> முதற்றே உலகு

இதில் ஆதி என்னும் சொல் காலத்தைக் குறிக்கும். ஆதி என்பதற்கு முதற்காலம் என்று பொருள். முதற்காலம் எது என்று

வரலாற்றில் பார்க்கும்பொழுது எழுத்துகள் தோன்றாத கற்காலம் என்ற ஒன்று உள்ளது. இது எழுத்துகள் தோன்றிய காலத்தின் முதற்காலத்தைக் குறிப்பிடுகிறது. பகவன் என்பது பகலவனைக் குறிக்கும், பகலவன் என்றால் சூரியன். சூரியனுக்குப் பகலவன் என்ற பெயர்வரக் காரணம், எப்பொழுதும் எரிந்துகொண்டு பகலாகவே இருப்பதால் சூரியனுக்குப் பகலவன் என்று பெயரானது. சூரியனையே வள்ளுவர் பகவன் என்று குறிப்பிட்டுள்ளார்.

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்**

வால் என்றால் நட்சத்திரம், வானத்தில் உள்ள நட்சத்திரங்களில் சூரியனும் அடக்கம். சூரியன் தனது ஆதிக்கத்தின் கீழே எட்டுக் கிரகங்களையும் இயக்குகிறது. அதில் இவ்வுலகமும் அடங்கும். இத்தகைய இயக்கத்தைத் துல்லியமாக இயக்குவதற்கு அறிவு சூரியனிடம் மட்டுமே இருப்பதால் சூரியனையே வள்ளுவர் வாலறிவன் என்றார்.

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்**

உலகில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பூக்கள் பூக்கின்றன. அவற்றுள் சில காலையில் கருகுவது இயற்கை. இதில், தாமரைப் பூ மட்டும் காலையில் சூரிய ஒளி தன் மீது பட்டவுடன் மலர்ந்துவிடும், மாலையில் சூரிய ஒளி மறைந்தவுடன் தனது இதழ்களை மூடிக்கொள்ளும் தன்மையை உடையது. இது தாமரைப் பூவுக்குரிய தனிச் சிறப்பாகும். இதுவே மலர் மிசை ஏகினான் என்பதன் பொருளாகும். கதிரவனைக் கண்ட கமலம் போல என்றும் கூறலாம். இதிலிருந்து சூரியனின் இயக்கத்தை நாம் அறியலாம்.

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல**

சூரியனின் உதயத்திற்குப் பிறகு பகல் என்றும், மறைவிற்குப் பிறகு இரவு என்றும், இதை ஒரு நாள் என்றும், ஒரு நாளைக்கு 24 மணிநேரம் என்றும் கணக்கிட்டுள்ளோம். இவற்றில் கூடவோ குறையவோ இல்லாத அளவுக்கு உலகம் இயங்குகிறது. இதில் ஓர் இரவு அதிக நேரம் எடுத்துக் கொண்டது. பூமி சரியாய் சுற்றவில்லை. பூமி எங்கே சுற்றாமல் நின்றுவிட்டது. அதனால்தான் இரவுக்குத் தாமதம் ஏற்பட்டு விட்டது என்றோ, அல்லது, அதே இரவுநேரம், குறைந்த

நேரத்தில் புலர்ந்துவிட்டது என்றும் பூமி அளவுக்கு அதிகமாகச் சுழற்றிவிட்டது என்றோ கூற முடியாது. அதே போன்று பகலுக்கும் நேரத்தைக் கூட்டவும், குறைக்கவும் முடியாத அளவுக்கு இயக்கம் நடைபெறுகிறது. இதில் வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடும், சாதி, மதம், இனம், மொழி என்ற வேறுபாடும் சூரியன் பார்க்கவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

உலகுக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை இரவு வருகிறது. அதாவது நம் நாட்டில் இரவு நேரம் இருக்கும்பொழுது, அமெரிக்கா போன்ற மேலை நாடுகளுக்குப் பகலாக இருக்கும், ஒரே நாளில், அதாவது 24 மணி நேரத்தில், இரண்டு இரவும், இரண்டு பகலும் உலகுக்கு மட்டுமே வருகிறது. இத்தகைய இரவுபகல் ஆகிய இரண்டு வேலைகளும் சூரியனுக்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

ஆகாயம், பூமி, நீர், நெருப்பு, காற்று ஆகிய ஐம் பொறிகள் சூரியனிலிருந்து தோன்றியவை. சூரியனாலேயே இயங்குகின்றன என்பதாகும்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

உலகிலுள்ள கடல் நீர் உட்பட எல்லாத் தண்ணீரையும் ஒன்று சேர்த்துச் சூரியன் மீது கொட்டினாலும், சூரியனை அணைக்கமுடியாது. சூரியனின் அருகில் நெருங்கவும் முடியாது. சூரியன் மட்டுமே தனக்கு நிகரில்லாத பொருளாக உள்ளது. சூரியனுக்கு நிகராக எதையும் உலகில் உவமை கூட கூறமுடியாது.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது

அந்தரம் - அணன் - அந்தணன். அந்தரம் என்பது ஆகாயம். அணன் என்பது நெருப்பு. அந்தணன் என்பது அந்தரத்தில் நெருப்பாக எரிந்து கொண்டு இருக்கும் சூரியன் ஆகும்.

கோள்இல் பொறிஇல் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

சூரியன் இல்லை என்றால் எட்டுக் கோள்களும், ஐம்பொறிகளும் இயங்கா. உலகம் உட்பட எட்டுக் கோள்களும் சூரியனையே சுற்றிவருகின்றன என்பதும், ஆகாயம், பூமி, நீர், நெருப்பு, காற்று ஆகிய ஐம்பொறிகளும் சூரியனாலேயே செயல்படுகின்றன என்பது அறிவியல் உண்மையாகும். ஆதிபகவானாகிய சூரியன் தியாகம், அறிவு, நேர்மை, திறமை, ஒழுக்கம், உண்மை, வலிமை, தருமம் ஆகிய உயர்ந்த எட்டுக் குணங்களை உடையது ஆகும்.

வள்ளுவர் இறைவன் என்று சூரியனையே குறிப்பிடுகின்றார். அதிலும், திராவிடர்கள் சூரியனை வணங்கினார்கள் என்பதிலிருந்து, திராவிடர்கள் தான் உலகில் அறிவில் சிறந்தவர்களாகவும், உயர்ந்தவர்களாகவும் திகழ்ந்தார்கள் என்பது திருக்குறள் வாயிலாக உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆரியர்கள் ஆரிய மதங்களை இந்தியாவில் புகுத்தியும், பரப்பியும் திராவிடர்களின் புகழையும், சிறப்பையும் அழித்துள்ளனர் என்பதும் தெளிவாகின்றது.

எங்கள் மதம் தான் உயர்ந்த மதம், எங்கள் கடவுள் தான் உயர்ந்த கடவுள். எனவே உலகிலுள்ள எல்லோரும் எங்கள் மதத்தையும் எங்கள் கடவுளையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறுகின்றனர். இதனால் மனிதரை மனிதர் அழித்துக் கொள்கின்றனர். அழிவுக்குக் காரணமான உலகியல் கொள்கைகளுக்கு ஒவ்வாத மதங்களின் உருவ வழிபாடு வீடுபேறு, சாதி, மொழி, நாடு ஆகிய வேறுபாடுகளைப் போக்க வேண்டும் எனக் கருதிய வள்ளுவர், சூரியனைக் கடவுளாகக் கூறியது மட்டும் இல்லாமல், சூரியனின் பாதங்களை மட்டுமே வணங்க வேண்டும் என்கிறார். அதாவது மாணடி, இலானடி, தாள், இறைவனடி என்று இறைவன் திருவடிகளை மட்டுமே கூறியுள்ளார். காரணம், நாம், சூரியனுக்கு மேலே போகும்போது இரவு வந்து விடுகிறது. இதனால் சூரியனின் தலையையோ, முகத்தையோ, நம்மால் காணமுடியாது என்பதால் வள்ளுவர், சூரியனுடைய திருவடிகளை மட்டுமே வணங்க வேண்டும், வணங்க முடியும் என்பது உலகியல் உண்மையை உணர்த்துவதாகும்.

உலகிலுள்ள அனைத்து மதத்தினரும் தங்களது மதங்களில் உள்ள மதக்கொள்கைகள் எல்லாம் வள்ளுவரின் கொள்கைகளை ஒத்திருப்பது கண்டு, அனைத்து மதத்தினரும் வள்ளுவர் எங்கள் மதக் கொள்கையைத்தான் குறளில் குறிப்பிட்டுள்ளார். எனவே வள்ளுவர் எங்கள் மதத்தைச் சார்ந்தவர்தான் என்றும் சில மதத்தினரும், இல்லையில்லை, வள்ளுவர் எங்கள் கடவுளின் கொள்கையைத் தான் விவரமாகக் கூறியுள்ளார், அதனால்

வள்ளுவர் எங்கள் மதத்தைத்தான் சேர்ந்தவர் என்று சில மதத்தினரும் போட்டிப் போட்டுக் கொண்டு வள்ளுவரைச் சொந்தம் கொண்டாடுகிறார்கள். எனவே உலக மதநல்லிணக்கத்திற்குத் திருக்குறள் ஏற்ற நூலாகத் திகழ்கிறது என்பதற்கு இதுவே நற்சான்று. போர்க்களமான இக்கால உலகிற்கு மதநல்லிணக்கமே சிறந்ததாகும். அதிலும் திருக்குறளின் மதநல்லிணக்கமே சாலச் சிறந்ததாகும்.

**உலகின் கடவுள் சூரியன்**
**உலகின் குரு திருவள்ளுவர்**
**உலகின் மதநல்லிணக்க நூல் திருக்குறள்**

இதுவே 'இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை'யாகும்.

# இக்கால உலகின் மத நல்லிணக்கத்திற்குத் திருக்குறள் தேவை

**இ.எம். ராமச்சந்திரன்**

திருக்குறள் தனிமனித வாழ்வு, சமுதாய வாழ்வு, நாட்டு வாழ்வு, உலக வாழ்வு என்று அனைத்தையும், அணைத்துத் தழுவிய ஒரு வாழ்வியல் நூல். இது வெறும் கற்பனையால் உருவாக்கப்பட்டது அன்று. அறமென்னும் பாவில் உலகியல் என்னும் ஊடு நூலிழைத்து அது அழகிய வாழ்க்கை என்னும் ஆடையாக அமைந்துள்ளது. ஆன்மீகமும், உலகியலும் கலந்து முக்காலத் திற்கும் உரியதாக உள்ளது. நடைமுறைக்கு ஒத்த கருத்துக் கருவூலத்தை அரசியலாகவும், மதமாகவும், பொருளியலாகவும், வாழ்க்கைச் சட்டங்களாகவும் தந்துள்ளது. நீதிநெறி முறைகளோடு மக்களின் உரிமைகட்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. அதுவே அறம். அதில் கூறப்படும் எல்லாக் கருத்துகளும் என்றும் வாழும். என்றும் நிலைத்திருக்கும் என்று எண்ணி உருவாக்கப் பட்ட நூலே திருக்குறள்.



வள்ளுவம் ஏன் பிறந்தது? என்ற வினாவை நாம் கேட்போமேயானால் அது மண் செழிக்க மழை பொழிவது போல்

மானிடம் செழிக்க, மனித உள்ளங்கள் செழிக்க, இந்த உலகம் செழிக்க அதைக் கண்டு உயர் கடவுள் சிரித்து மகிழ வள்ளுவம் பிறந்தது என்று கூறலாம்.

மனித இனம் நடமாடும் பூஞ்சோலை. பூஞ்சோலையில் மலர்ந்து குலுங்கும் மலர்கள் எல்லாம் நல்ல மணம் பரப்புவது போல, மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வநிலை அடைய வேண்டும் எனக் கருதித் திருக்குறள் என்ற மறையைத் தந்தவர் திருவள்ளுவர். திருவள்ளுவருக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. ஆனால் கடவுளே எல்லாம் என நினைத்து நூல் எழுதவில்லை. மனித வாழ்வின் அனைத்துத் துறைகளையும் வளப்படுத்த விரும்பி, அதற்காகக் கடந்தகால வரலாற்று நிகழ்வுகளை நிகழ்கால நிகழ்வுகளோடு இணைத்து, எதிர்காலத்தைத் தன்னுடைய தூய சிந்தையால், தீர்க்க தரிசனத்தால் கண்டு, எக்காலத்திற்கும் பொருந்தும்படியாக நீதிநெறியோடு சார்ந்த அறத்தின் அடிப்படையில் எவ்விதச் சாதி, சமய, சமுதாயச் சார்புமின்றி எழுதியுள்ளார்.

வள்ளுவரின் கொள்கை என்றாலும், வள்ளுவரின் மதம் என்றாலும் ஒன்று எனலாம். அப்படியாயின் வள்ளுவரை சைவர் எனச் சாதிப்பவர்களும் உளர். வைணவர் என்று வாதிடுவோரும் உளர். இல்லை, இல்லை அவர் சமண சமயத்தவரே என்று இறுமாப்போடு எடுத்தியம்புபவரும் உளர். பௌத்தக் கொள்கை மேலோங்கி இருக்கின்றது என மார்தட்டுவோரும் உளர். கிறித்துவுக்கும் வள்ளுவருக்கும் 31 ஆண்டுகளே இடைவெளி; அதனால் கிறித்துவ மதத்தவரே என்பாரும் உளர். திருக்குறளுக்கும் திருக்குரானுக்கும் உள்ள வித்தியாசம் 'ன்' என்ற எழுத்தே எனக் கூறி வள்ளுவர் ஒரு இசுலாமியர் என்பாரும் உளர். அவருடைய குறட்பாக்களில் பகுத்தறிவுக் கொள்கைகள் ஏராளம் உள்ளன. எனவே அவர் ஒரு பகுத்தறிவுவாதி என்பாரும் உளர்.

வள்ளுவர் காலத்தில் மகாவீரரின் சமண சமயமும், புத்தரின் பௌத்தமும், வேத மார்க்கங்களாகிய சைவம், வைணவம், வேதாந்தமும் இந்திய மண்ணில் நிலவிய சமயங்களாம். அவருடைய குறட்பாக்களில் மேற்கண்ட சமயக் கருத்துகள் எடுத்தாளப்படுவது மட்டுமன்றித் தேவையற்ற வற்றை நீக்கித் தன்னுடைய அறிவார்ந்த சிந்தனைகளால் தீர்க்க தரிசனமாகத் தோன்றிய கருத்துகளையும் சேர்த்துக் கொண்டுள்ளார். உலக சமயங்களாகிய கிறித்துவம், இஸ்லாம் இவற்றின் கருத்துகளும் அவரது குறட்பாக்களில் ஆங்காங்கே அமைந்துள்ளமை பெரிதும் வியப்பிற்குரியதாகும்.

அதனால் தான் எல்லாச் சமயத்தாரும் வள்ளுவரை தத்தம் சமயத்தவர் என வாதிடுகின்றனர். வள்ளுவரின் காலத்திற்குப் பின்னர் வாழ்ந்தவர்களின் கருத்துகளை வைத்து ஆய்ந்து பார்த்தல் வேண்டும். மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் புறச் சமயவாதிகளின் உரையையெல்லாம் பழித்தும், வள்ளுவர் உரையை மட்டுமே பொருளுரை எனப் புகழ்ந்தும், "பொய்யிற் புலவன் பொருளுரை தேறாய்" என்கின்றார். சமணக் காப்பியம் நீலகேசியோ, ''தேவன் உரைப்பத் தெளிந்தேன்'' என்று வள்ளுவரைப் பாராட்டிக் கூறும். சைவ சித்தாந்த செம்மல் வச்சிரவேல் முதலியார் அவர்கள்

வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழால் உரை செய்தல்

என்று கூறுவது வள்ளுவத்தில் மதச் சார்பின்மையை விளக்கும்.

அப்படியானால் திருவள்ளுவரின் சமயம்தான் எது? என்ற கேள்வி எல்லாருக்கும் எழுகின்றது. எல்லாச் சமயங்களும் காட்டுகின்ற இறைவழிபாட்டைத்தான் வள்ளுவரும் பேசுகின்றார். இன்பங்கள் எல்லாவற்றிற்கும் மேலான இன்பங்களை நல்கி, அதன்வழிப் பேரின்பத்தை நல்கும் ஆற்றல் உடையது இறைவழிபாடு கவலையைப் போக்கிக் களிப்படையச் செய்வதே இறைவழிபாடு. துன்பத்தை மாற்றி இன்பத்தை வழங்குவது இறைவழிபாடு எனலாம். நாவுக்கரசர் கூறுவது போன்று,

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யல்லோம்
ஏமாப்போம் பிணிஅறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை

என மக்கள் எப்போதும் இன்பத்தோடு இருக்க வழிகாட்டுவதே திருக்குறள். அதற்கு எங்கும் எதிலும் அன்பைச் செலுத்துகின்ற மனோபக்குவம் வேண்டும். அறவழியில் நடக்க வேண்டும். இவற்றைக் கடைப்பிடித்து இலட்சியத்துடன் வாழ்ந்து ஆன்மாவை உருக்கிக் கசியவைத்து நன்னெறியில் நடக்க வைக்க வேண்டும்.

இன்றைய சமுதாயத்தில் நாம் காண்பது சமயச் சண்டைகள், பூசல்கள். இவற்றை கற்றறிந்தவர்களும் நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டு வருகின்றனர். உலகமெங்கும் ஒன்றுபட வேண்டும் என்ற உணர்வை அன்றே வள்ளுவர் கருதினார். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமூலர் கருத்தும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுப்

புலவனின் பரந்த உள்ளமும் வள்ளுவரின் வாய்மொழியால் இன்றும் நின்று நிலவுகின்றன.

வள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடினாரா? என்பதில் பல கருத்துகள் ஆராய்ச்சியாளர்களிடம் நிலவுகின்றன. ஆயினும் அவர் கடவுள் வாழ்த்துடன் நூலைத் தொடங்கி யுள்ளாராயினும் தொல்காப்பியம் போன்று நான்கு நிலக் கடவுளரைப் பாடவில்லை. கடவுள் வாழ்த்தைப் பொருட் குறிப்பாலே, குணக் குறிப்பாலே, பாலில் படுநெய்போல் இந்த உலகில் வாழும் உயிர்களோடு இறைவன் கலந்திருப்பதாகக் காண்கின்றார். வேறுபாடற்ற ஒருமித்த கடவுள் கொள்கை இந்த உலகில் நிலவ வேண்டுமென்று வலியுறுத்துகின்றார். நினைத்தலையும், சிந்தித்தலையுமே சிறந்த வழிபாடு எனக் காட்டுகின்றார்.

இந்தச் சமுதாயத்தில் சமயங்களால் ஏற்படும் பிரச்சனைகள் எவை? எவை? என ஆய்ந்து அவற்றை அகற்ற வேண்டுமென்று கருதுகின்றார். கடவுள் பெயரால் பலியிடப் படுவதை வெறுக்கின்றார். எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் ஒத்த கருத்தை, கடவுள் கொள்கையாகக் காட்டுகின்றார். அதற்கு முன்னர் ஏன்? இன்றுவரை யாராலும் கூறமுடியாத கருத்தை வள்ளுவர் கூறுகின்றார். கடவுள் பெயரால் நடைபெறும் தீமைகளைச் சாடுகின்றார். கடமையைச் செய், பலன் தானே கிடைக்கும் என்ற நம்பிக்கையை உலக மக்களுக்கு ஊட்டுகின்றார்.

பிற்கால மேலைநாட்டு அறிஞர்கள் கருத்து ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வள்ளுவர் கருத்தை உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

கடமையே மிகச் சிறந்த நோக்கம். ஏனெனில் அது கடவுட் கருத்தைத் தழுவியதாக இருக்கின்றது என்று 'லக்கர் டயர்' கூறுகிறார். கடமையை விருப்பத்தோடு செய்பவர் களுக்குக் கடவுள் எப்பொழுதும் உதவியாக இருக்கின்றார் என்று 'கெய்லர்' கூறுகிறார்.

கடமையைச் செய்யாமல் தட்டிக்கழித்தல் அறிவையும் மனத்தையும் பலவீனப்படுத்தித் தூய்மையான தவ வாழ்க்கையைப் புதைத்து விடுகிறது என்று ட்ரயான் எட்வார்ட்ஸ் என்பவர் கூறுகிறார்.

உயிர்கள் தம்முடைய கடமைகளை உடனடியாகச் செய்வதாக வடிவெடுத்துக் கொள்வது கடவுளின் இதய சந்நிதிக்குச் செய்வது என்று பேகன் கூறுகின்றார்.

ஆகவே வள்ளுவர் காட்டும் கடவுள் 'வாலறிவனே தவிர ஆதிக்க சக்திகளின் தலைவனல்லன். அவன் வழி நடத்துபவனே தவிர ஆட்டிப் படைப்பவனுமல்லன். வள்ளுவர் காட்டும் கடவுள் எல்லா மதத்திற்கும் பொருத்தமான தூய்மையான அறிவே ஆகும். எண் குணங்களின் உருவமேயாகும். அஃது ஒரு பண்பும் பயனும் ஆகும். அந்த பண்பையும், பயனையும் திரும்பத் திரும்ப உயிர்கள் நினைத்தலின் மூலமே பெற முடியும். அத்தகைய நெறியைத்தான் மத நல்லிணக்க வழிபாட்டு நெறியாக வள்ளுவர் காண்கின்றார். மனிதனுக்குள்ளேயே பேராற்றல் அடங்கிக் கிடக்கின்றது. "தெய்வம் நீ என்று உரை" என்றும், "கைவருந்தி உழைப்பவர் தெய்வம்" என்றும் பாரதியார் பாடுவார். "சமயக் கணக்கர் மதிவழிக் கூறாது, பொருளிது வென்ற வள்ளுவன்" என்று கல்லாடர் வள்ளுவரைச் சிறப்பித்துக் கூறுவார்.

எனவே திருக்குறள் எல்லாச் சமயங்களும் ஏற்றுப் போற்றக் கூடிய பொதுமறையாக அமைந்து விளங்குகின்றது. கடவுளை நம்பாத உலகாயதவாதிகள் கூட, திருக்குறளை நம்பி ஏற்றுக் கொள்கின்றார்கள். எந்த ஒன்று எல்லாரும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்கின்றதோ, அதுவே உயர்ந்த சமய நெறியின் பொது இயல்பாகும் என்பது திருக்குறள் காட்டும் சமயநெறி வேறுபாடுகளையும், காழ்ப்புணர்வுகளையும் நீக்கி நிறைவான உயர்ந்த உலகச் சமயங்கள் எல்லாம் ஏற்றுக் கொள்கின்ற சமயமாக அமைந்துள்ளது. தத்துவ சீலங்களால் உயர்ந்தோங்கி நிற்கின்றது. அது தனிமனிதனை அறிவூட்டி, உணர்வூட்டி, ஆள்வினை காட்டி அன்பில் தோய்ந்து, அறநெறியில் நின்று, ஒழுக்க நெறியில் செலுத்தி, அருள்நெறியில் நிற்கச் செய்து, இறுதியாக இறைநெறியில் கொண்டு செல்கின்றது. குறள் நெறி தனி மனிதனோடு உறவு கொண்டு வளர்ந்து சமுதாயமாக மலர்ந்து உலகளாவிப் பரவிட வேண்டும். அங்ஙனம் உலகளாவிப் பரவுமேயானால் உலகம் செழிக்கும். எங்கும் சமத்துவமும், சகோதரத்துவமும் மலரும்; அதன் மூலம்தான் பலரை வாழ்வித்து நாமும் வாழலாம்.

இன்றைய உலகிற்குத் தேவை இத்தகைய ஒருமைப் பாட்டுடன் கூடிய உயர்ந்த மத நல்லிணக்கமே.

இன்று உலகில் காண்பதென்ன? மதச் சண்டைகள்! அன்புக்கு ஏங்கும் மக்கள் எங்கே? இன்பம் எங்கே இன்பம்? என்று தத்தளிக்கும் மக்கள். மானுடம் தன்னுடைய மதியை இழந்து நிற்கின்றது. மக்களுக்குள் சண்டை! அறம் செத்து விட்டதோ? என்று எண்ணத் தோன்றுகிறது. நீதி விலை

பேசப்படுகின்றது. பொருள் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்ற உணர்வுகள் எல்லோரிடமும் வளர்ந்துள்ளன. உழைப்பு என்றால் என்ன? என்ற கேள்வி எழுகின்ற காலமாகிவிட்டது. எப்படியும் பொருள் சேர்க்க வேண்டும் என்ற குறுகிய உள்ளம் வளர்ந்துவிட்டது. இதையெல்லாம் தூக்கி எறிந்து இன்பவாழ்வு வாழ, உழைத்துப் பொருள் ஈட்ட, அறநெறியில் வாழ, இன்றைக்குத் தேவை திருக்குறள்.

உலகத்தில் தனிமனிதனுக்காயினும் சரி, சமுதாயத்திற்காயினும் சரி, வளம் பல பெற்று நலமோடு வாழ, பகையிலிருந்து விலகிப் பண்புடன் கூடி வாழ வள்ளுவம் காட்டுவது மத நல்லிணக்கமே ஆகும். அன்புநெறி, ஒழுக்க நெறியாக, அற நெறியாக, அருள்நெறியாக, அறிவுடன் சிந்தித்துச் செயல்பட்டு ஒருமைப்பாட்டுடன் உலகமே ஒரு குடும்பமாக வாழ வழிகாட்டும் திருக்குறள், இன்றைய உலகின் மதநல்லிணக்கத்திற்குத் தேவை.

※ ※ ※

# மத நல்லிணக்கம்

**க.ச. பெரியநாயகம்**

உலகில் தோன்றிய சமயங்கள் எல்லாம் இணக்கமாக வாழ்ந்தால் உலக நலனை எளிதில் பெறலாம். சமயங்கள் தோன்றக் காரணம் மனிதன் மனிதனாக வாழவே. வனத்திலே ஆடையின்றித் திரிந்த மனிதன் மரவுரி தரித்துச் சற்று உயர்ந்தான். பின்னர்ப் பருத்தி, பட்டாடைகளை உடுத்தக் கற்றுக் கொண்டான். மரவுரி தரித்த காலத்திலேயே சமய உணர்வு தொடங்கிவிட்டது. நமக்கும் மேல் ஒருவன் உண்டென்பதும் அவனைப் பணிந்து வாழ்வதே நலம் என்றும் உணர்ந்த கூட்டமே சமயிகள் என்று அழைக்கப் பட்டனர்.

சமயங்கள் ஆறு என்றும் அச்சமயங் களுக்குத் தலைவன் ஒருவன் உண்டு என்றும் பெரியோர் கூறிச் சென்றனர். பழைய காலத்துச் சமயங்களைத் தவிர சமண, புத்த மதங்களும் ஓங்கி வளர்ந்தன. தற்காலத்தில் இதன் இடங்களைக் கிறித்துவ, இசுலாமியச் சமயங்கள் பிடித்துக் கொண்டன. எவர் எச்சமயத்தைப் பின்பற்றினாலும் அன்பு,



ஈகை, உண்மை, ஆண்மை, அறிவு, ஆற்றல் உடையவராக இருக்க வேண்டும். கொல்லாமை கைக்கொள்ளும் சமயங்களை உலகில் பெரிய சமயங்களாகக் கொள்ளலாம். "சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளை வெளிக்காட்டும் இந்தக் கருத்தை விட்டுப் பொய்வந்துழலும் சமயநெறி புகுத வேண்டாம் முத்திதரும் தெய்வ சபையைக் காணவாரும் செகத்தீரே" என்று தாயுமான அடிகள் கூறிச் சென்றார்.

சிவவாக்கியர் என்ற புலவர் ஒரு கிராமத்தில் சொற்பொழிவு செய்கையில் வீணன் ஒருவன் "கடவுள் இல்லவே இல்லை" என்று கூக்குரல் இட்டான். அதற்குச் சிவவாக்கியர் "இறைவர் ஒருவரும் அல்ல பெண்ணும் ஆணும் சேர்ந்த ஒரு அமைப்பே இறைவனாகும்" என்று பதில் அளித்தார். இறைவன் உண்டென்று கூறுவோரைப் பட்டியல் இட்டால் அறுபத்து மூன்று நாயன்மார்கள், பன்னிரு ஆழ்வார்கள், பன்னிரு அப்போஸ்தலர்கள், முகம்மது நபியின் சீடர்கள் முதலியோர் முன்னிற்கின்றனர்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் வேதவியாசர், வான்மீக பகவன், கவிகாளிதாசர், கவி கம்பர், சேக்கிழார் முதலியோர் ஆன்மீக நெறிக்குத் தலைமை தாங்கிச் சென்றதை இலக்கியங்கள் அறிவிக்கின்றன. ஆனால் இவர்கள் வாழ்ந்த காலத்தில் நாட்டில் மழைச் செழிப்பும், நல்லாட்சியும் நடைபெற்றதை நூல்கள் அறிவிக்கின்றன. பக்தி நெறிக்கு அடிப்படை நல்லொழுக்கமும் வறுமையின்மையும் ஆகும். அதனால்தான் திருவள்ளுவப் பெருந்தகை, வான் சிறப்பு, ஒழுக்கம் உடைமை என்ற இரு அதிகாரங்களையும் தன்னுடைய நூலில் இணைத்தார். வான் பொழியவில்லை யென்றால் விளைவு இல்லை. விளைவு இல்லாவிட்டால் மனிதன் பட்டினிதான். "பசி வந்திடப் பத்தும் பறந்து விடும்" என்பது ஒளவையாரின் வாக்கு.

ஆகவே சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்று கூறப்படும் ஆறு சமயங்களும் ஒற்றுமையுற்றால் தான் மானிடப் பூசல் நீங்கும். மேலும் மக்கள் வாழ்விற்குப் பிணக்கை விட இணக்கமே சிறந்தது. "நல்லிணக்கம் அல்லது புல்லிணக்கம்'' என்பது மூதுரை. உலகில் எந்த நடவடிக்கையும் ஒழுக்கம் இல்லாவிட்டால் உயர்வாகாது.

இவ்வொழுக்கத்தை முதன்மையாகக் கூறுபவர் நமது திருவள்ளுவரேயாவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நல்லொழுக்கம் கூறினார் என்றால் அவரை ஏன் நாம் தெய்வப்புலவர் என்று கூறக் கூடாது. தெய்வமாக்கவி என்றே திருவள்ளுவரைக் கபிலர் முதல் பேரறிஞர்கள் வரை புகழ்ந்து

கூறியிருப்பதைக் காணலாம். மேலும் தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமான் திருக்குறள் நூலைக் கற்றே சோழ மன்னனின் வினாக் களுக்குச் சரியான விடையைக் கூறி முதல் அமைச்சர் பதவியைப் பெற்றதாக வரலாறு கூறி நிற்கின்றது. மணிமேகலையும், திருக்கைலாய ஞான உலாவும் திருக்குறளை அடிபிறழாமல் அப்படியே கூறியிருப்பதை அறிஞர் யாவரும் காணலாம். இதனைப் பாராட்டாத அறிஞர்கள் தமிழ்நாட்டில் இல்லை.

மேலும் திருவள்ளுவர் தனது நூலின் முதல் அதிகாரத்தில் பத்துப் பாடல்களிலும் இறைக் கருத்தை மிக ஆழமாகவும், மிகத் தெளிவாகவும் கூறியிருப்பதைக் காணலாம். இறைவனைப் போற்றி வாழ்பவர்கள் நீடித்த ஆயுள், இன்பம், புகழ்பெற்று வாழ்வர் என்றும் கூறுகிறார். பிறவிப் பிணியை நீக்கும் அதிகாரம் இறைவர் ஒருவரைத் தவிர வேறு யாருக்கும் இல்லையென்பது வள்ளுவத்தின் முடிவு.

திருக்குறள் கற்றே புலவர் பட்டம் பெற்றோர் உலகில் பலர் உளர். இறைவரை நாம் நிகரில் தலைவன் என்று அழைப்பதுபோல் திருவள்ளுவரை நிகரில் புலவர் என்று கூறலாம். மேலும் கடைச் சங்கப்புலவர்கள் நாற்பத்து ஒன்பது பேர்களும் திருவள்ளுவரைத் திருவள்ளுவ மாலையில் போற்றியிருப்பதால் திருவள்ளுவரும் சங்க காலப் புலவரேயாவர். மதுரைத் தமிழ் நாகனார் என்ற புலவர் உலகத்திற்குத் துணையாக இருப்பது நால்வகைப் படைகளிலும் திருக்குறளே பெரிய துணை' என்று கூறிச் சென்றார். "வள்ளுவன் குறள் வையகம் எல்லாம் வாரியிறையடா தமிழா" என்றும் புலவர் ஒருவர் கூறிச் சென்றதை நாம் நினைவில் கொள்ளலாம். "பால் எல்லாம் நல்லாவின் பாலோமோ நூல் எல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ?"

தற்கால உலகில் கல்வித்திட்டத்தில் எல்லா நாடுகளுமே திருக்குறளைச் சேர்த்தே ஆகவேண்டிய நிலையில் இருக்கின்றன. நல்லொழுக்கத்தைத் திருவள்ளுவர் தனது நூலில் போதித்திருப்பதை அறிஞர் யாவரும் புகழ்ந்து பாராட்டி வருகின்றனர்.

மேலும் டாக்டர் போப்பையர் அவர்கள் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருப்பதையும் அறிஞர்கள் காணலாம். நம்மில் பலரே முழுநூலையும் கற்றிராதபோது டாக்டர் போப்பையர் முழுநூலையும் மொழிபெயர்த்த செயல் அருஞ்செயலேயாகும். "செயற்கரிய செய்வர் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலாதார்" என்பது மறை. மறை என்ற சொல்

பொருள் மறைவாக இயற்றப்படும் ஒரு கவியைக் குறிக்கும். திருமூலர், சிவவாக்கியர் போன்றோர் இதற்கு ஓர் உதாரணம் ஆவர்.

திருக்குறட்பாக்கள் யாவும் செம்மொழியாக இருப்பதால் தமிழ்மொழி இரண்டாயிரம் ஆண்டுகள் முற்பட்டே மக்களால் பெரிதும் பேசப்பட்ட விவரம் நமக்குக் கிடைக்கின்றது. திருக்குறள் மக்கள் வழிபாட்டு நூலாகவே பல காலங்கள் வழங்கி வந்ததை நாம் அறிந்து மகிழலாம். மேலும் தமிழ்மொழிப் பயிற்சிக்குத் திருக்குறள் இன்றியமையாத நூலாகத் திகழ்கிறது.

இதைத்தான் திருஞானசம்பந்தர் தனது தேவார நூலில் "கல்லான் நெஞ்சில், நில்லான் ஈசன், புல்லாரோடு அல்லோ நாமே" என்று பாடி மகிழ்கிறார். இறைவரைச் சேந்தனார் என்ற புலவர் "கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி" என்று புகழ்கிறார். "கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்கு உற்ற துணை" என்று குமரகுருபர அடிகள் கூறுகிறார்.

ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தோடு பகர்ந்ததற்பின் - போயொருத்தர்
வாய்கேட்க நூலும் உளவோ மன்னுதமிழ்ப்
புலவராய் கேட்கவீற்றிருக்கலாமே

என்பது திருவள்ளுவ மாலையாகும்.

இத்திருக்குறள் மதநல்லிணக்கத்தையே எடுத்து மொழிகின்றது என்பதை நாம் நன்கறியலாம்

※ ※ ※

# மத நல்லிணக்கத்தில் திருக்குறளின் பங்கு

ச. அனிதா

உலக இலக்கியங்கள் ஏராளம். கதை சொல்பவை, கருத்துரைப்பவை, பாக்கள் உள்ளவை, பராபரமே பொருளென்று கொண்டவை, இன்னும் பல. இவை அனைத்துமே சிற்சில காலக் கட்டங்களில் சிறப்பெய்தி இருந்தாலும், காலச்சக்கரத்தின் மிகுதியான வேகத்திற்கு ஈடுகொடுக்க இயலாமல், சுவடின்றி அழிந்து போனவை சில. இன்னும் சில படைப்புகளோ, அழகுப் பதுமைகளாக மட்டும், தமிழ் அன்னையை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் சமூக மாற்றங்களில் சிறைப்பட்டு விடாமலும், காலங்கடந்து காலாவதியாகிப் போகாமலும் இருக்கும் ஒரே வாடாமலர், திருவள்ளுவர் அருளிய திருக்குறளே.



ஆறறிவு கொண்ட மனிதனுக்கு, நற்பண்பு என்னும் ஏழாம் அறிவையும் புகட்டி, என்றென்றும் வளம்மிக்க, வல்லமை பொருந்திய சமூகமாய்

மாற்றவே எழுசீர்க் குறளை வள்ளுவருள்ளம் இயற்றியிருக்கும் என்றே தோன்றுகிறது.

செந்தமிழில் தேன் குழைத்தது போல மிளிரும் ஒவ்வொரு இரண்டடியும் தேவாரம் போல், திருவாசகம் போல், பைபிள் போல், திருக்குரான் போல் / அமுதசுரபிகள் உள்ள இந்த மதுரம் தோன்றிய மண் தமிழகமாயினும், தமிழ், தமிழ்நாடு என்ற சொற்களே வாராது முதற்குறளிலேயே உலகு என்ற ஈற்றடியோடு, அகில தத்துவ நோக்கத்தால் அமைக்கப்பட்டிருப்பதே இது பொதுமுறை என்பதற்கு ஒரு சிறந்த சான்று.

இந்தப் பொதுமறை, மத நல்லிணக்கம் எய்த என்னென்ன சொல்கிறது? இதோ கருத்துகள்: மத நல்லிணக்கம் கொணர முதல் தேவை, மனத்தினால் கூட எவர்பொருட்டும் யார்க்கும் இன்னா நினையாமை; இதைத்தான் வள்ளுவப் பெருமான்,

> **எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
> **மாணா செய்யாமை தலை**

என்றியம்பினார்.

அறத்துப்பாலில் உள்ள பல அதிகாரங்களில், மதநல்லிணக்கம் எய்த மகத்தான சிந்தனைகள் காணக் கிடக்கின்றன.

எல்லாரிடத்தும் அன்பு செய்தல் ஒன்றே, நல்லிணக்கம் உருவாக நயன்மிக்க வழி என்பதை,

> **அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
> **நண்புஎன்னும் நாடாச் சிறப்பு** *(குறள் 74)*

என்று புலப்படுத்துகிறார். அஃதாவது, அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அதுவே எல்லோரிடமும் நட்பு. என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.

> **அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
> **என்பும் உரியர் பிறர்க்கு** *(குறள் 72)*

அன்பில்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர். ஆனால் தூய்மையான அன்புடையவரோ தம் உடலையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர் என்று எளிமையாக எடுத்தியம்புகிறார்.

பின், அன்பு மட்டும் போதுமா?

இல்லை, பொறுமை வேண்டும். எவ்விதத் துன்பம் யாரால் வரினும் பொறுமை காத்தல் முழுமையாய் வேண்டும். உலகத்து நாடுகள் நாகரிக வளர்ச்சியின் சிகரங்களை இன்று எட்டிவிட்டன. ஆயினும், மனிதநேயம், மறந்து ஒரு சிறு பூசல் தோன்றினும் கூட, ஆயுத ஆதிக்கமும், அறிவியற் புரட்சிகளும் இணைந்து, போர் எனும் பேரழிவைத்தான் நாம் காண்கிறோம்.

இதனை உணர்த்தவே, நல்லிணக்கம் நாட்டவே,

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை** *(குறள் 151)*

என்று வள்ளுவர் வடித்துள்ளார். மேலும் செருக்கினால் தீங்கானவற்றைச் செய்தவரைத் தாம் தம்முடைய பொறுமைப் பண்பினால் பொறுத்து வென்றுவிட வேண்டும் என்பதை,

**மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியான் வென்று விடல்** *(குறள் 158)*

என்றார் பொய்யாமொழிப் புலவர். பொதுவாகவே, மதங்கள் என்று சொல்லப்படும் ஒவ்வொரு வழிமுறையுமே, மனிதன், இறைதனை அடைந்து உய்வுற வேண்டி வகுக்கப்பட்ட அறங்களாகும். ஒவ்வொரு மதமும், எல்லையில்லாப் பரம் பொருளை அடைய, நம்மை இட்டுச் செல்லும் வெவ்வேறு பாதைகளேயன்றிச் சாக்காடு விளைவிக்கும் சாபக்கேடுகள் அல்ல.

பின் ஏன் இந்தக் கிரிருள்? கருத்தொருமித்துக் கண் திறந்து, வள்ளுவனின் இந்த வாய்ச்சொல்லை நாம் ஆராய்வோமே யானால்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு** *(குறள் 423)*

நாம், எம்மதம் எது சொல்லினும், அவை அனைத்திலும், உள்ள மெய்யாகிய இறையுணர்தலையே தலையாகக் கொள்ள வேண்டும் என்பது தெற்றென விளங்கும்.

இன்று உலகறிந்த உண்மையாக, வளைகுடா நாடுகளிலும், மேற்கத்திய நாடுகள் பலவற்றிலும் போர் எச்சரிக்கைகள் ஒலித்த வண்ணம் உள்ளன. காரணம், நட்பென்னும் பண்பு மரித்துப் போனது தான். அப்படியே

சமரசங்கள் செய்தாலும் அவை பேச்சளவிற்கே! நேசக்கரம் நீட்ட யாரும் தயாரில்லை. இதை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே உணர்ந்துவிட்ட தெய்வப்புலவோன்,

**முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு**

என்று ஏட்டில் வைத்தார். இக்குறளானது பொருட்பாலின் நட்பியலில், 786ஆவது குறளாக அமைந்துள்ளது. குறளின் எண்ணை இன்னுமொரு முறை கூர்ந்து நோக்குங்கால், சிந்தனைச்சுடர் ஒன்று தெரிகிறது. இவ்வெண் 786. இஸ்லாமியரின் புனித எண். தீர்க்கதரிசி வள்ளுவர், அன்றே, இந்த எண்ணில் இக்குறள் வருமாறு அமைந்திருப்பது, வியக்கத்தக்கது. இன்னாளில் போர் மேகங்கள் சூழ்ந்து காணப்படும் பல வளைகுடா நாடுகளுக்கு இந்த ஒற்றைக் குறளே உற்ற மருந்தாய் விளங்கவல்லது என்பது திண்ணம்.

தீங்கு செய்யாமை - அனைத்து மதமும் உணர்த்தும், உன்னத அறம், அப்படியாரேனும் தீமை செய்திடினும் கூட, அதை மன்னித்து, மறந்து அவர்கள் நல்வழி செல்ல, எடுத்தியம்புதலே நம் கடமையாகக் கொள்ளவேண்டும்.

இதைத் தான் இயேசுபிரான்,

**உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு**
**உன்மறு கன்னத்தைக் காட்டு**

என்று உபதேசித்தார். இக்கருத்தினையே வள்ளுவருள்ளம்,

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்** *(குறள் 314)*

என்று படம்பிடித்துக் காட்டிற்று. இக்குறளுள்ளும், விடல் என்னும் ஈற்றுச் சொல் சிறப்பு வாய்ந்தது. ஆது, இன்னா செய்தோன் நாணுமளவில் நல்லனவற்றைச் செய்ததோடல் லாமல், அவன் செய்த தீமையை முழுமையாக மறந்து விடுத்து விட வேண்டும் என்பதாம். மேலும், “இன்னா செய்தார்க்கு இனியவே செய்யாக்கால் என்னபயத்ததோ சால்பு” என்றும் வள்ளுவம் வினா எழுப்புகிறது.

தீயவனையும் திருத்தும் தெய்வமொழியாக, பகைவனையும் பக்குவப்படுத்தும் பரமனின் வாய்ச்சொல்லாக இன்னுமொரு குறள் இதோ.

**ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை** *(குறள் 985)*

ஆற்றலுடையவரின் ஆற்றலாவது பணிவுடன் நடத்தலாகும், அது சான்றோர் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றுகின்ற கருவியாம் என்பதே இவ்விரண்டடியின் சாரமாகும்.

அன்போடு பொறுமை மதங்கள் இடையே அருள் வளர்க்கும், அருள் மலர்ந்தால் அகிலம் தழைக்கும். மதத்தின் பேரால் புனிதப்போர் என்று களியாட்டம் போடும் சில வல்லரசு நாடுகளிடம் பொருளிருப்பினும் அது இழிந்த பொருளே. உண்மையில் உயர்ந்த பொருளான அருளுள்ளோரே, வல்லோர் என்பதை,

**அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள** *(குறள் 241)*

என்று அழகாகச் செப்பியுள்ளார் பெருமான்.

ஆதிக்க வெறியும் அடக்குமுறையும் மனிதனை மரம் போலும் மக்கட் பண்பில்லாதவராக்கும். இதனால் தான் பொய்யாமொழியார்.

**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம், அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்** *(குறள் 999)*

என்றும் உரைத்துள்ளார்.

மனிதராய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் ஒருவரை யொருவர் நேசித்து வாழ்தல் வேண்டும். இத்தகைய பண்பானது தனிமனித வாழ்விலும், சமுதாய வாழ்விலும் இனிய நல்லிணக்கத்தை உருவாக்கும்.

இவ்வாறில்லாமல், பண்பு பாராட்டாமல், பகை வளர்ந்து, தீயவையே செய்தால், என்ன நேரும் என்பதனை,

**கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்**
**முடிந்தாலும் பீழை தரும்** *(குறள் 658)*

என்று இயற்றியுள்ளார். அஃதாவது, ஆகாதவை என்று விலக்கப்பட்ட செயல்களை விலக்கிவிடாமல் மேற்கொண்டு செய்தவர்க்கும், அச்செயல்கள் நிறைவேறினாலும் துன்பமே கொடுக்குமாம். ஆகையால், பிறர் துயரைத் தன் துயராய்

எண்ணிப் போக்க முயல வேண்டும், இல்லையென்றால் அறிவின் பயன்தான் என்ன? என்ற வினாவினை வள்ளுவர்

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை (குறள் 315)

என்றும் நயம்பட நினைவுபடுத்துகிறார். எனவே, மதநல்லிணக்கம் உருவாக முறையே

- அன்பு வேண்டும்
- எல்லையில்லாப் பொறுமை வேண்டும்
- அருள் வேண்டும்
- எல்லா உயிரும் சமம் என்று எண்ணல் வேண்டும்
- சினம் தவிர்த்தல் வேண்டும்
- இனியவை செய்தல் வேண்டும்
- ஒருபோதும் கனியிருப்பக் காய் கவராதிருத்தல் வேண்டும்

சினத்தைத் தவிர், சீர்தூக்கிப் பார், அருள் வளர், அன்பு போற்று, இவையே நீயும் உன் சமூகமும் கடைத்தேற வழி என்று கூறும் வள்ளுவர்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (குறள் 50)

என்பார். இவையனைத்திற்கும் மேலாய், சாதி சமயம் விடுத்துத் தனித்தனி மனிதரின் வஞ்சனை போக்கி, அகத்தூய்மை வளர்த்தாலே நல்லிணக்கம் நிலைக்கும் என்பதனை,

மனத்துக்கண் மாசிலன் ஆதல்அனைத்து அறன்
ஆகுல நீர பிற (குறள் 34)

என்றும், நல்வாழ்வெய்த மனிதகுல மாண்புயர

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு (குறள் 953)

என்பார் வள்ளுவப் பெருமான். அதாவது, நகைமுகம் காட்டு, ஈகை நல்லது, இன்சொல் இனியது, இகழாமை உயர்ந்தது என்று நல்லிணக்கத் தோடியியைந்த, இனிய வாழ்வெய்த வள்ளுவர் இனிய வழியினைச் சுட்டுகிறார்.

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் இடம் கொடாமல் அவற்றைக் கடிந் தொழுகுவதே அறம் என்பதை

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (குறள் 35)

என்ற வெண்பா மூலம் செவ்வனே நிலைநிறுத்துகிறார்.

மதநல்லிணக்கம் நமக்குள் வளர, மனிதநேயம் மலர்ந்து மணம் பரப்ப எல்லாரும் ஒரு தாய் மக்களாய் இன்புற்றிருக்க, உலகமே அமைதியின் தாலாட்டில் துயிலுறங்க, இதுகாறும் திருக்குறளிலுள்ள பல குறள்கள் சுட்டப்பட்டுள்ளன.

இந்தக் குறள் களஞ்சியம், குன்றின் மேலிட்ட தீபம். இருள் அகற்றி, ஒளி பரப்பி, உலகம் உய்ய வழிகளை ஒலிக்கும் வெண்சங்கு.

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" விரவிக்கிடக்கும் சாதி சமயப் பிணக்குகளை வேரறுத்து வேற்றுமைகளைத் தீயிலிட்டு மனித வாழ்வின் மகத்துவத்தை உணரவும், மண்ணுலக சொர்க்கம் எய்தவும் மகா மந்திரமாய் ஒரு மந்திர எந்திரமாய்த் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## துணை நூல்

டாக்டர் மு. வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, முதற்பதிப்பு, மே 1959.

# மனிதமும் மதமும்

க.ஜீ. உஷா நந்தினி

தமிழ் இலக்கியப் பெட்டகத்துள் நீதி நூல்களுக்கென்று ஒரு தனியிடம் உண்டு. தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், சமயச் சார்பற்ற தன்மையையும், மனித நலக் கோட்பாட்டு நெறிகளையும் தொன்றுதொட்டுத் தமிழ் நீதி நூல்கள் உலகிற்கு உணர்த்தி வருகின்றன. மேலைநாட்டு அறிஞர்களின் கருத்தினை முதன்முதல் கவர்ந்த தமிழ் இலக்கிய நூல் திருக்குறள். நீதிநூல்கள் அனைத்திலும் படிப்போரை இன்புறுத்தும் இயல்பைக் காட்டிலும் அறிவுறுத்தும் இயல்பே மேலோங்கி நிற்கின்றது. ஆனாலும் விழுமிய கருத்துகளும், சொல்நயமும், பொருட்பொலிவும் எடுத்துரைக்கும் நிலையும் இவ்வகை நூல்களைத் தன்னிகரற்றுத் திகழச் செய்கின்றன.



நாலடி நான்மணி நானாற்பதைந் திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மூலம்
இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு

என்ற வெண்பாவினால் திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று என அறியலாம்.

எல்லாப் பொருளும் இதன் பாலுள - இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்
(மதுரைத் தமிழ்நாகனார்)

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள் (ஔவையார்)

என்று திருவள்ளுவமாலையில் பாராட்டப்பெற்ற இந்நூலின் மேன்மையை உய்த்துணர்ந்த முண்டாசுக் கவிஞர் பாரதி,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று வள்ளுவரைப் போற்றி மகிழ்ந்தது "உண்மை வெறும் புகழ்ச்சியில்லை".

## மதம் சாரா மாண்புடையோன்

திருவள்ளுவர் இறைவனை ஆதி பகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன் எனப் பல்வகைப் பெயர்களால் பொதுவாய்க் குறிப்பிட்டிருந்தாரே தவிர, தனியாக எந்த ஒரு மதத்தின் இறைவன் பெயரையோ வடிவையோ கோடிட்டுக் காட்ட வில்லை.

நதிகள் பலவாயினும் அது கலக்குமிடம் கடலே என்ற விவேகானந்தரின் கருத்துக்கேற்ப அமைந்த

கடலை நாடி ஓடிவரும் பல நதிகள் போல
கடவுள் நாடி ஓடிவரும் பல மதங்கள்
இதய உண்மை காண எந்த மதமானால் என்ன?
இறைவன் நாடிச்செல்ல எந்த வழியானால் என்ன?

என்ற பாடலின் தத்துவத்தை இலக்காக்கி மதங்களினால் மதம் பிடிக்காமல் மனிதன் எவ்வாறு இருக்க வேண்டும் என்று விளம்பிய தீர்க்கதரிசி வள்ளுவர்.

## இந்துமதம்

இந்து மதத்தின் உட்கருத்தின்படி

எல்லா உயிர்களிலும் நானேயிருக்கிறேன்

என்றார் கண்ணபெருமான்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்

என்றார் வள்ளலார். இறைவன் ஒவ்வோர் உயிரிலும் இருப்பதினால் தான் வள்ளுவரும்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை *(குறள் 322)*

என்றும்

சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை *(குறள் 230)*

இறப்பை விடத் துன்பம் வேறொன்றுமில்லை. ஆனால் ஏழைகளுக்குக் கொடுக்க முடியாத நிலை வரும்போது இறப்பதுகூட இனிமையானதே என்றும் கூறுகிறார்.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது *(குறள் 8)*

என்ற குறளின்படி சிலர் வள்ளுவரே அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு என்பதால் இவர் இந்துமதத்தினை ஆதரிப்பவரோ? என்று ஐயப்படலாம். அந்தணன் என்பவன் யார்?

அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டுஒழுக லான் *(குறள் 30)*

என்று பின்வரும் குறளில் விளக்கமளித்ததால் அருள் செலுத்துபவரைத் தான் அந்தணன் என்று வள்ளுவர் சுட்டுகிறார் எனப் புரிந்து கொள்ளலாம்.

கிறித்துவ மதம்

"ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு"

என்றார் இயேசு.

''எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும். எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்''

என்றார் யோவான்.

கிறித்து இறக்கும் தறுவாயில் கூட தனக்குத் தீங்கிழைத்த பாவிகளை மன்னித்து அவர்கள் பொருட்டு இறைவனிடம் "பிதாவே! இவர்கள் தாம் செய்வது இன்னதென அறிகிலார். இவர்கள் பிழையை மன்னியுங்கள்'' என்று கனிவாய்

மலர்ந்தருளினார் என்கிறது புனித பைபிள். இதனையே வள்ளுவரும்

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை (குறள் 151)

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (குறள் 314)

என்று கூறியுள்ளார்.

## இசுலாமிய மதம்

ஒருவன் தன் வருமானத்தில் விளம்பரமின்றி 40 விழுக்காட்டில் 2 1/2 ரூபாய் ஏழை எளியவர்க்கு வழங்கிட வேண்டுமென்பது அவனின் கட்டாய கடமை என்று குரானில் வலியுறுத்தப்படுகிறது. வள்ளுவரும் அறநெறியால் கிடைக்கும் இன்பமே உண்மையான இன்பம், மற்றவை இன்பங்கள் போலத் தோன்றினாலும் பின்னர்த் துன்பத்திலேயே முடியும் என்கிறார்.

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல (குறள் 39)

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல் என்ற வள்ளுவரின் குறள் இங்கும் கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்றல்லவா?

## புத்த மதம்

புத்தர் கூறுவது என்ன? ஆசையே துன்பத்திற்குக் காரணம்; ஆசையைத் துறந்தால் துன்பத்தைத் துறக்கலாம்; பிற உயர்களைக் கொல்லாமை; என்பன புத்தரின் முக்கியமான அறிவுரைகளாகும்.

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து (குறள் 361)

அனைத்து உயிர்களுக்கும் எக்காலத்திலும் நீங்காமல் வருகின்ற பிறவி என்னும் துன்பத்திற்கு ஆசை என்பதே விதை என்கிறார் வள்ளுவர். மேலும்

அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும் (குறள் 368)

என்ற குறள் ஆசை இருந்தால் துன்பங்கள் தொடர்ந்து மேன்மேலும் வந்து கொண்டிருக்கும் என்பதைத் தானே வலியுறுத்துகிறது.

மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்
வாளால் அரிந்து கறி சமைத்தால்
தந்தையும் உண்டு களிப்பதுண்டோ - இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா!
.................... கொன்று பழிதேடி வேண்டாமையா - இனிக்
கொல்லா விரதம் மேற்கொள்ளுமையா!

என்று புலால் உண்ணுதலைத் தேசிகவிநாயகம் பிள்ளை சாடுகிறார். வள்ளுவரும்

தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் *(குறள் 251)*

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் *(குறள் 260)*

என்று புத்தரின் கருத்தினைப் புகல்கிறார்.

**ஜைனம்**

இதே கொல்லாமை தான் ஜைனர்களின் அடிப்படைக் கருத்தும் கூட. ஜைனர்களின் தீவிரக் கொள்கை உயிரைக் கொலை செய்யதிருத்தலேயாகும். சிறு எறும்புக்குக் கூட துன்பம் கொடுக்காத தன்மை அவர்களின் உயிர்நாடி. நம் வள்ளுவரும் இதைத்தான் கூறுகிறார்.

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி *(குறள் 324*

பிற உயிர்களைக் கொல்லாது வாழ்பவனுடைய வாழ்க்கையே மிகச் சிறந்த அறமாகும்.

இவ்வாறு வள்ளுவர் இந்து, கிறிஸ்து, முஸ்லீம், புத்த, ஜைன மதத்தவரின் பொதுவான கருத்துகளை விளக்கியுள்ளார். திருக்குறள் தனிப்பட்ட மனிதனுக்கோ, மதத்திற்கோ, நாட்டிற்கோ அல்லாமல் நாடு, இனம், மொழி, சமயம் எல்லாவற்றையும் கடந்து மக்களாய்ப் பிறந்த அனைவருக்கும் எக்காலத்திற்கும் இயைந்த கருத்துகளைக் கூறுகிறது.

மதம் மக்களை நல்வழிப்படுத்துவதற்கே அன்றி அவனைக் காட்டுமிராண்டித்தனமாகவோ, கண்மூடித்தன மாகவோ நடந்துகொள்ளத் தூண்டுவதற்கன்று.

மக்கள் நலத்திற்கு மதமா? - அன்றி
மதத்தின் நலத்துக்கு மக்களா சொல்வீர்

என்றார் பாரதிதாசன்.

**எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர்**

என்ற பாரதியார்,

**சாதிகள் இல்லையடி பாப்பா**
**.........................................................**
**.........................................................**
**நீதிஉயர்ந்த மதிகல்வி அன்பு**
**நிறைய உடையவர்கள் மேலோர்**

என்றும் கூறுவது சாதிக்கு மட்டுமா? எம்மதத்தின் அடிப்படை உணர்வுக்கும் இது பொருந்தும். அன்பென்ற அடிப்படை உணர்வினைப் புரிந்துகொண்டால் மதபேதங்கள் மறையுமன்றோ? அப்படிப்பட்டவரே மேலோர்.

மதங்கள் அனைத்தும் மக்களை நல்வழிப்படுத்தி ஒழுக்கமுடன் வாழ வைப்பதற்கே. எந்த மதத்தினர் கூறுகிறார்கள் என்று பாராமல் கூறும் கருத்துகள் என்னவென்று மனத்திற்கொண்டு அனைவரிடமும் அன்பு பூண்டு ஒழுகவேண்டும். மதங்களின் பெயரினால் மக்கள் மாக்களாக மாறுவதை வள்ளுவப் பெருந்தகையார் விரும்பாததினால் தான்

**அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு** *(குறள் 73)*

என்று வாழ்க்கையின் பயனையும்,

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு** *(குறள் 80)*

என்று அன்பில்லாதவர்களுடைய உடம்பானது எலும்பினால் போர்த்தப்பட்ட வெறும் உடம்பாம் என அன்பின் சிறப்பையும் கூறுகின்றார். அன்பின் வழியே உயிர்நிலை என்ற உயர்ந்த தத்துவத்தையும் விளக்கி மனிதம் மேம்பட வழிவகுக்கிறார் வள்ளுவர்.

## முடிவுரை

**எவர் உடம்பினும் - சிவப்பே**
**இரத்த நிறமப்பா**
**எவர்விழி நீர்க்கும் - உவர்ப்பே**
**இயற்கைக் குணமப்பா** *(ஆசியஜோதி)*

உடம்பில் ஓடும் குருதியிலும் வடியும் கண்ணீரிலும் தேடினாலும் சாதி தெரியாது. எல்லாருடைய குருதியின் நிறம்

சிவப்பாகவும், கண்ணீர் உவர்ப்பாகவும் இருப்பது தானே இயற்கை. துன்பம் வரும்போதும் மனம் வருந்தும்போதும் ஒரு தாய் வயிற்று மக்கள்போல் மனிதர்கள் உதவவேண்டும். ஆனால் இன்று சிலர் இதனை மறந்து மதவேறுபாடு காரணமாக இரத்தம் சிந்துவது வேதனைக்குரியது. நெற்றியில் திருநீற்றுடனோ, முப்புரிநூலுடனோ சிலுவையுடனோ வேறு எந்த மதக் குறியீடுகளுடனோ எவரும் பிறந்திலர்.

> **பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா**
> **செய்தொழில் வேற்றுமை யான்** *(குறள் 972)*

என்னும் குறளுக்கேற்பப் பிறப்பினால் எவர்க்கும் பெருமை இல்லை. அவர்கள் சிறப்புற வேண்டுமெனில் நல்ல செயல்களில் ஈடுபடவேண்டும். நன்மை செய்பவரே உயர்ந்த குலத்தினர். தீமை செய்பவரே என்றும் தாழ்ந்த குலத்தினராவார் என்று முக்காலமும் உணர்ந்த வள்ளுவர் விளக்குகிறார்.

குறிப்பிட்ட மதத்தினைச் சாராமல் அனைத்து மதங்களின் அடிப்படைத் தத்துவங்களை அறமாகக் கற்பித்து அவற்றின் வழியே சென்று மனிதன்

> **வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவான் வானுறையும்**
> **தெய்வத்துள் வைக்கப் படும்** *(குறள் 50)*

என்ற குறளுக்கிணங்க இறைவனாய் ஒளிவிட வேண்டுமென விரும்புகிறது வள்ளுவம். மதங்கள் மனத்தை நெறிப் படுத்தவே! மனிதத்தை மதங்கள் மேன்மைப்படுத்துகின்றன. அதற்கு வள்ளுவம் அறநூலாய் மதவேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் வழிகாட்டுகிறது. இவ்வழியே சென்றால் இன்றைய மதவேறுபாட்டுச் சிக்கல்களால் மனிதன் அழிந்து படுவதை உறுதியாகத் தடுத்து உயர்ந்த நிலையை எய்ய முடியும் என்பதில் ஐயமுண்டோ!

## துணை நூல்கள்


1. டாக்டர் மு. வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, கழக வெளியீடு, 2003.
2. யோவான் எழுதிய சுவிசேஷம், 2002, ப. 62.
3. தேசிகவிநாயகம் பிள்ளை, ஆசியஜோதி.


※ ※ ※

# இல்லறம்

# இல்லறம்

**க. ஆதிரை**

இன்று இல்லறத்தில் மிகப்பெரிய சிக்கலாக இருப்பது மணமுறிவு. குறிஞ்சிப்பூப்போல் எப்பொழுதோ ஒருமுறை மணமுறிவு நிகழ்ந்த தமிழகத்தில், இன்று மணமுறிவு நீதிமன்றங்களின் ஓர் அங்கமாகிவிட்டது. இந்த மணமுறிவைத் தவிர்க்கக் குடும்பநல ஆலோசகர்கள் இன்று பல்கிப் பெருகியுள்ளனர். நம் திருவள்ளுவர் இவர்களிடையே இமயம் போல இலங்குகிறார். அவரது இல்லற இயலிலும் பிற பகுதிகளிலும் இறுதிவரை இல்லறம் உறுதியுடன் நிற்பதற்குப் பல்வேறு நெறிமுறைகளைப் பகர்ந்திருக்கிறார். அவர் கூறும் நெறிமுறைகள் எளிதானவை; இயல்பானவை; இதயம் சார்ந்தவை.



## மணமுறிவுக்குக் காரணங்கள்

✺ தன்னலமற்ற அன்பின்மை ✺ பொருள் பற்றாக்குறை ✺ கூட்டுக்குடும்பம் மறைதலும் விருந்தினர்கள் குறைதலும் ✺ கனியிருப்பக் காய் கவர்தல் ✺ நாவினால் சுட்டவடு ✺ பொறுமையின்மை.

## தன்னலமற்ற அன்பின்மை

இல்லறத்தின் எல்லா உடைமைகளுக்கும் அடிப்படையாய்த் திகழ்வது இல்லற இயலின் எட்டவதான அன்புடைமையே ஆகும். விட்டுக்கொடுத்தல் இல்லாத தாலேயே இல்லறத்தின் வேர் வெட்டப்படுகிறது. இன்று, பெரும்பாலும் அன்பு என்பது தனதாக்கிக் கொள்ளும் அன்பாகவும், கணக்குப் பார்க்கும் அன்பாகவும் காணப்படுகிறது. கணவன் மனைவி இருவரிடத்திலும் இப்போக்கே காணப்படுவதால் மண மாலைகள் வாடி உதிர்கின்றன. அன்பிற்கு வள்ளுவர் கூறும் புது விளக்கத்தை வரும் குறள் வகுத்துரைக்கின்றது.

> அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு

தன்னையே பிறர்க்குத் தரும் இந்த அன்பே அன்பின் உச்சக்கட்டமாகும். தன் உடைமைகளைத் தருவது அன்பின் அடிவாரம். தன்னையே தருவதுதான் அன்பின் கொடுமுடியாம். இன்றோ, யாரும் தன்னைத் தருவதில்லை; அத்துடன் மட்டுமன்றித் தன் துணையைத் தன் ஏவலராக மாற்ற நினைக்கும் தன்னலமே தலைதூக்கி வருகிறது.

இன்னொரு குறளும் இதயங்கள் இணைவதற்கு மிக இன்றியமையாத குறளாகும்.

> அன்புஈனும் ஆர்வம் உடைமை அஃதீனும்
> நண்பென்னும் நாடாச் சிறப்பு

திருமணமான புதிதில் ஒருவர்மீது ஒருவர் கொண்டுள்ள ஆர்வம் முழுமையாய் இருக்கும். ஆனால் நாளடைவில் அந்த ஈர்ப்புக் குறையத் தொடங்கிவிடுகிறது. அதனாலேயே போராட்டங்கள் வலுக்கத் தொடங்கியுள்ளன. ஆர்வம், ஆசை உள்ளவரை நட்பாய் இருந்தவர் அஃது அற்றுப் போனபின் பகைவராய் மாறுகின்றனர். உள்ளன்பு இல்லாத காரணத்தால் உட்பகை ஆங்கே உலாவரத் தொடங்குகின்றது. ஆக, நட்பினை ஆர்வந்தான் நல்குகின்றது. அந்த ஆர்வத்தையோ, அன்புதான் அடைகாத்துத் தருகிறது. எனவே இல்லறத்தின் உயிர்நிலை அன்பின் வழியது என்ற பொய்யாமொழியை இல்லறத்தார் இதயத்தாற் கொண்டு ஒழுகினால் மணமுறிவுகள் மறைந்து போகும்.

## பொருள் பற்றாக்குறை

வறுமை தலையெடுத்தால் அத்துணைத் துன்பங்களும் தலையெடுக்கும். வள்ளுவர் வாக்கின்படி வறுமை என்பது

வருவாயின் அளவைப் பொறுத்தது அன்று. வீட்டின் செலவைப் பொறுத்ததே. கணவனின் வருவாய்க்குத் தக்க செலவு செய்து வளம் ஈட்டுபவளே சிறந்த வாழ்க்கைத் துணை ஆவாள். வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தின் முதற்குறளில், இக்கருத்தை வள்ளுவர் முத்திரையிடுகின்றார்.

> **மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்**
> **வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

ஆம்; பணப்போராட்டமே பல மனப்போராட்டங்களுக்கு ஆணி வேர். எனவேதான் வாழ்க்கைத் துணைநல அதிகாரத்தில் வறுமையைப் போக்கும் வழிவகைகளை வள்ளுவர் வகுத்துரைத்தார் போலும்.

## கூட்டுக்குடும்பங்கள் மறைதல் – விருந்தினர்கள் குறைதல்

இல்லறவியலில் இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தைத் தொடங்குகின்ற வள்ளுவர் இல்வாழ்வான் என்பான் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் என்பவற்றைப் பேணிக்காத்தல் வேண்டுமென்பதையும், விருந்தோம்பல் என்கின்ற ஒரு தனி அதிகாரத்தை வகுத்து

> **இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
> **வேளாண்மை செய்தற் பொருட்டு**

என்று இல்லறத்தின் இயல்பையும் விளக்குகின்றார். இவ்வாறு பெற்றோராலும் சுற்றத்தாராலும் விருந்தினராலும் வீடு நிரம்பி வழியும் பொழுது - கணவன் மனைவி - இருவர்க்கும் இடையே எழும் பிணக்குகளை அவர்கள் கண்டுகொள்வதற்கு நேரம் கிடைக்காது. மேலும் விருந்தினர் முன்பு தங்களது உராய்வுகளை மறைத்துக்கொள்ள வேண்டிய மான உணர்ச்சியால் ஊடல்களும் பிணக்குகளும் சேர்ந்து குவியாமல் அரும்பிலேயே உதிர்ந்து விடுகின்றன. ஆனால் இன்றோ அடுக்குமாடி வீட்டில் முதியவரும் உறவினரும் செல்விருந்தும் வருவிருந்தும் இல்லாமையால் கடுகளவு முரண்பாடுகள் மலையளவு வளர்ந்து மணமுறிவு நிகழ்கிறது.

## கனியிருப்பக் காய் கவர்தல்

இனியவை கூறலை இல்லற இயலில் இடம்பெறச் செய்த வள்ளுவரின் பேரறிவு வியத்தற்குரியது. இருவர்க்கும் இடையே எழும் சிறு கருத்து வேறுபாடுகள் இனியவை கூறல் இல்லாமையாலும் வாக்குவாதங்களில் பயன்படுத்தப்படும் நாக்கின் சவுக்கடியாலும் காட்டுத் தீ போல் மணமுறிவு வீட்டைச்

சாம்பலாக்கி விடுகிறது; வாழ்வினை ஆக்குவதும் போக்குவதும் நாக்கின் சொற்கள் என்பதை வலியுறுத்த உடன்பாட்டு முறையால் இனியவை கூறலை எழுதிய திருவள்ளுவர் எதிர்மறை முறையிலே 'பயனில சொல்லாமை' என்ற அதிகாரத்தையும் இல்லறவியலில் பயன் படுத்தியுள்ளார்.

## நாவினால் சுட்ட வடு

இந்த உயிரோட்டம் உள்ள அடி, அடக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் இடம்பெற்றிருக்கிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தும் இருவரிடத்திலும் அடக்கம் பெற்றிருந்தால் மணமுறிவு அடக்கம் செய்யப்பட்டு விடும். "நிலையில் திரியாது" அடங்கியிருக்கும் இல்லம், இமய மலையை விட உயர்ந்தோங்கி ஏற்றம் பெறும். இல்லறத்தில் இருபெரும் ஆணிவேராக அன்பினையும் அடக்க முடைமையையும் வள்ளுவர் போற்றுகிறார். அடக்கம் இருந்தால் தான் எல்லாவற்றையும் அனுபவித்துவிட வேண்டும் என்ற பேராசை எழாது. பேராசையால் ஏற்படும் மனமோதல்கள் மறையும்.

அடக்கமின்றித் 'தான்' என்ற எண்ணம் தலைதூக்கும் பொழுது ஆணவச் சொற்களின் ஆரவாரம் ஒலிக்கின்றது. அவை, நாவினால் சுட்ட வடுவாக மாறி வாழ்வையே நாசப்படுத்தி விடுகின்றன. கணவனையோ மனைவியையோ மிகவும் காயப்படுத்துவது மற்ற எல்லா உதடுகளையும் விடத் தன் துணையின் உதடுகளே. இன்று பெரும்பாலான மணமுறிவுக்குக் காரணமாய்க் கூறப்படுபவை 1. ஒருவர் மற்றவரை மதிப்பதில்லை, 2. தூக்கி எறிந்து பேசுகிறார்கள், 3. தங்களைக் கவனிப்பதில்லை என்பவையே ஆகும். இந்த மூன்று குறைகளும் முகிழ்ப்பதற்குக் காரணம் அடக்கமின்மை அல்லவா?

## பொறுமையின்மை

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்

மனையியல் என்பது இருவரின் மனஇயலே. மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி. கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். மனமும் மனம் சார்ந்த இடமும்தான் அன்பின் ஐந்திணையான இல்லறம். இதனை உய்த்துணர்ந்த வள்ளுவர் எழுதிய வாழ்வியலைப் பின்பற்றினால் மணமுறிவுகள் மறைந்து விடும் அல்லவா?

❋ ❋ ❋

# வள்ளுவர் காட்டும் இல்லறப் பண்பாடு

**நா.து. சிவகாமசுந்தரி**

இலக்கியம் என்பது வாழ்வின் விளக்கம் என்றும், காலத்தின் கண்ணாடி என்றும் கூறப்படுவதுண்டு. வழுக்கும் பாதைக்கு ஊன்றுகோல் பயன்படுவது போன்று வாழ்க்கைப் பாதைக்கு ஒழுக்கம் உடையவர்களின் வாய்ச்சொற்கள் பயன் படுகின்றன. அச்சொற்கள் அனைத்தும் வருங்கால சந்ததியினரைப் படிப்பாளிகளாக ஆக்கும் நோக்கத்தைவிடப் பண்பாளிகளாக ஆக்குவதையே குறிக்கோளாய்க் கொண்டு இயற்றப்பட்டன. இங்கு, பண்பு எனப் படுவது 'Character' எனப்படுவதல்ல. நெய்தற்கலி பாடிய நல்லந்துவனார்,

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்'

என்று குறிப்பிடுகின்றார். இங்குப் 'பாடு' என்பது துன்பம் என்ற பொருளில் பயன் படுத்தப்படுகின்றது. இதே கருத்தினையே குறளும்,



அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை

என்று இயம்புகிறது. இப்பண்புகளை நினைவுகூர்வதுகூட இல்லங்களின் சிதைவுகளைச் சீரமைக்கும் முன்னேற்பாடே ஆகும்.

## அன்பே இல்லறத்தின் பண்பு

இன்று பலருள்ளும் உள்ள மிகப்பெரும் பிரச்சினை, வாழ்வியல் முறைகளையும், அதன் அடிப்படைக் கருத்துகளையும் புரிந்து கொள்ளாமையே ஆகும். இன்றைய கல்விமுறை பணமீட்டும் வழிவகைகளை மட்டுமே கற்பிக்கின்ற காரணத்தால் குடும்பங்களில் உறவுச்சிக்கல் ஏற்பட்டு, வீட்டினுள்ளும் பல தீவுகள் காணப்படுகின்றன. ஆனால், அக்காலத்தில் போக்குவரத்து வசதிகள் இல்லாத பொழுதும், பரந்து விரிந்துபட்ட நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து காணப்பட்டன. இவை அனைத்திற்கும் அடிப்படை அன்பு. அன்பின் தோற்றுவாய் இல்லறமாக மட்டுமே இருக்கமுடியும் என்று முடிந்த முடிவாகவே வள்ளுவர் கூறுகிறார். அதன் காரணமாகவே இல்லறவியலை முன்பும், அதன் பின் துறவு இயலையும் வைத்தார். இல்வாழ்க்கையே ஒருவனுக்கு உலகத்தை நேசிக்கக் கற்றுத் தருகிறது. இங்கு இல்வாழ்விற்கு அன்பானது அடிப்படையான பண்பாக அமைந்தால் அவ்வில்லத்தார் செய்யும் அறச்செயல்களே பயனாக விளையும் என்கிறார். இதையே அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்று கூறுகிறார். ஒருவன் ஈட்டும் பொருளானது அறத்திற்கும், அதோடு சார்ந்த இன்பத்திற்கும் மட்டுமே பயன்பட வேண்டும். அவ்வாறு அறம் செய்வதற்குரிய இருவகை நிலையுள் இல்லறமே முதனிலை பெறுகின்றது. இல்லாட்குங் கணவர்க்கும் நெஞ்சொன்றாகவழி இல்லறம் கடைபோகாமையின் அன்புடைமை பண்பாயிற்று. ஆனால், தற்காலத்தில் குடும்பத்தலைவன், குடும்பத்தைக் கவனியாது பணத்தின் பின் செல்வதால், கணவனால் பெறக்கூடிய அன்பு கிடைக்காமல் இல்லாள் தன்னுள் ஒரு வெறுமை குடி கொள்வதாக உணரும்பொழுது பிரச்சனைகள் கால்கோள்கின்றன.

காட்டில் வாழும் கலைமானும், பிணைமானும் தங்களுக்குக் கிடைத்த சிறிதளவு நீரையும் ஒன்று மற்றொன்றிற்காக விட்டுக் கொடுக்கும் காட்சியை ஐந்திணை ஐம்பது நம்முள் காட்சிப்படுத்துகிறது. இதேபோன்ற அன்புப் பிணைப்பை,

> **இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்**
> **கண்நிறை நீர்கொண் டனள்**

என்று குறளும் விளக்குகின்றது. இவ்விதம் மனம் ஒருமித்த மனைவியுடன் இணைந்து பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார் ஆகியோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை இனிதே நிறைவேற்றும் கணவன், துறவிகளை விடப் பெருமைக்குரியவனாகவும், அவனது இல்லமே வானுலக இன்பம் தரும் பேறு பெற்றவனாகவும் விளங்க, இல்லறத்தை நல்லறமாக்கிய சிறப்பையும் பெறுகின்றான் என்கிறார்.

## இல்லறத்தில் இல்லாளின் பங்கு

இல் + ஆள் என்பது இல்லத்தை ஆளக்கூடியவள் என்ற பொருள் பொதிந்த சொல். இது புரியாமல் இல்லை ஆட்டுவிக்கக் கூடியவளாய் இல்லிற்குப் புகழைச் சேர்க்கும் நற்குணமும், நற் செய்கையும் இல்லாதிருப்பின் அவளால் கணவனுக்குப் பெருமிதம் ஏதும் ஏற்படாது என்பதை 'இகழ்வார் முன் ஏறுபோல் பீடுநடை' என்ற வரியால் உணர்த்துகிறார்.

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்ற மனப்போக்கு மாறிப் பெண்கள் தாமும் பணிக்குச் செல்வதால் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறுவதுடன், இல்லத்தின் இன்பத்திற்குக் காரணமாக விளங்கும் இணையில்லாச் செல்வங்களான குழந்தைகளைப் பராமரிப்பதும் தவிர்க்கப்படுகின்றது. பெண் கல்வியும், பெண்ணுரிமையும் அவள் வழி வரும் மக்கள் ஆன்றவிந்தடங்கிய சான்றோராக, பரந்த எண்ணத்துடனும் இருப்பதற்காக மேற் கொள்ளும் முயற்சியேயாகும். இதைத் தவிர்த்து தன் அன்பையும், கடமையையும் இல்லாள் தவறிவிடுவதால் ஏற்படும் பிரச்சினைகள் பலப்பல.

இல்லறத்தில் பிள்ளை வளர்ப்பு, விருந்தோம்பல் ஆகியனவும் முக்கியக் கடமைகளாகும். குழந்தைகளை நீதிக் கதைகளைக் கூறி வாழ்க்கைப் பாதையைத் தெளிவுபடுத்தும் நிலைமாறி, தொலைக்காட்சிப் பெட்டியின் முன்பே பொழுதைப் போக்கி, வாழ்வின் இரகசியங்களைப் புரிந்து கொள்ளாமல் வாழ்நாளை வீணாக்கிக் கொள்கின்றனர். இவ்விதம் பொறுப் பற்ற இல்லாளின் வளர்ப்பில் வரும் குழந்தைகளே பின்னாளில் பெற்றோரைக் காக்க மறந்து முதியோர் இல்லங்களில் சேர்ப்பிக்கின்றனர். இக்குறைகளை நீக்கி, சிறந்த இல்லத் தலைவிகளாக மாற, திருக்குறள் வழிகாட்டி உய்வு பெறச் செய்கிறது.

## மங்கலம் தரும் மக்கட்பேறு

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு

என்பதில் குழந்தைகளால் இல்லத்திற்கு ஏற்படும் சிறப்பு பற்றிக் குறிப்பிடும் ஆசிரியர், அவர்களின் மழலைமொழி குழலினும், யாழினும் இனிய மக்கட்செல்வத்தை, தாயும், தந்தையும் முறை பிறழாது வளர்க்க வேண்டும். தாயும் தந்தையும் குழந்தையை அரவணைக்கத் தவறிவிடின், குழந்தை தன்னுள் பாதுகாப்பற்ற தன்மையை உணரும் நிலை ஏற்படும். அதன் காரணமாகவே வள்ளுவர்.

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

என்று குறிப்பிடுகின்றார்.

ஆனால், இன்றைய வாழ்க்கை முறையில் பெற்றோரும், குழந்தைகளும் சந்தித்துக் கொள்வது அருகி வருகிறது. இந்நிலை மாற வேண்டும். குழந்தைகளுக்காக ஓய்வில்லாமல் சம்பாதிக்கும் பெற்றோர், அக்குழந்தையின் மனம் அறிந்து நடந்து கொள்வதும் அவர்களின் தலையாய கடமையாகும். வள்ளுவர் கூறிய,

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்

என்பது அவனைத் தன்னைவிட அறிவுடையோனாக்கும் முயற்சியே தவிர, தன்னைவிடப் பொருள் மேம்பாடு அடையச் செய்யும் நிலை அன்று. இக்குறிப்பிட்ட தவறுகள் திருத்தப் பட்டால்தான் நல்ல சமுதாயம் உருவாக வழிகோல முடியும்.

நம்முடைய குறைகளை நீக்கிப் பிள்ளை வளர்ப்பில் ஈடுபட்டால் மட்டுமே, ஒரு தாய் தன் மகனை ஈன்ற பொழுதினும் பெரிதும் உவந்து அவனைச் சான்றோன் எனக் கேட்க முடியும். அதேபோன்று தந்தையும் பிறரால் இம்மகனைப் பெற இவன் செய்த தவம் தான் யாதோ? என்ற பெருமிதத்தையும் எதிர்கொள்ள முடியும்.

### இல்லறத்தின் விருந்தோம்பல்

விருந்து என்பதற்குப் புதியது என்று பொருள். புதிதாக வீட்டிற்கு வருவோர்க்கு உணவு படைத்தல், கணவனும், மனைவியும் தம்முள் அன்புடைமையின்றி இனிது நிகழாது. பிணக்கின் சமயம் விருந்துவரின், தலைவன் அவளை,

**இருந்து முகந்திருத்தி ஈரோடு பேண் வாங்கி**
**விருந்து வந்ததென்று விளம்ப**

*அவள் வெளி பிடித்தவள் போல் நடந்து கொண்டாள் என்று பழம்பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.*

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து**

*என்ற குறள் வழி விருந்தினர் அனிச்ச மலரை விட மென்மையானவர்கள் என்று உணர்த்துவதின் மூலம், விருந்தினருடன் இன்முகத்துடன் இருந்து அவர்களை ஓம்புதல் வேண்டும் என்கிறார் வள்ளுவர்.*

*வேடன் பிடியில் அகப்பட்ட பெண்புறா ஒன்று தன் ஆண் புறாவிடம் அவனுக்கு விருந்தோம்பச் சொல்லியது. அதற்காகத் தன் உயிரையே மாய்த்து ஆண்புறா வேடனுக்கு உணவானதைக் கம்பராமாயண யுத்தகாண்டம் விளம்பக் காணலாம். ஆறறிவில் குறைபாடுடைய பறவை இனமே விருந்தோம்பும் இல்லறக் கடமையை நழுவாது செய்யும் பொழுது, நம் கடமை உணர்வை நாம் தான் தீர்மானம் செய்ய வேண்டும்.*

*தற்காலத்தில் விருந்தினரை உபசரித்து, அவர்களுடன் அளவளாவுதல் தவிர்க்கப்படுவதால் இல்லறக் கடமையைத் தவறிய குற்றத்தோடு, நம் வருங்கால சந்ததியினரைக் கடமையுள்ளவர்களாக மாற்றுவதிலும் தவறு செய்து விடுகிறோம். விருந்தினர் வந்தாலும் குழந்தைகளை அவர்களுடன் நெருங்கவிடாது, படிப்பதற்கோ, விளையாடு வதற்கோ, செல்லும்படி ஆணையிடுகிறோம். இவ்விதம் நடந்து கொள்ளாமல் அவர்களையும் மறற்வர்களுடன் எளிதில் பழக உதவுதல் வேண்டும். ஒருவன்,*

**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு**

*என்பதனை நினைவில் கொள்வதும் அவசியமாகும்.*

*நல்ல சமுதாயத்திற்கு அடிப்படை சிறந்த குடும்பங்களே. அக்குடும்பங்களின் அமைப்பானது, பண்பாட்டுச் சிதைவுகள், கருத்து வேற்றுமைகள், நாகரிகத்தின் அபரிமிதமான வளர்ச்சி போன்றவற்றால் சிதைவுற்றுள்ளன. இந்நிலை மாற, திருக்குறள் வழிகாட்டியாக இருந்து உய்வுபெறச் செய்யும் என்பதாலேயே இக்காலத்திற்கு மட்டுமல்லாமல் எக்காலத்திற்கும் இந்நூல் தேவையாகின்றது.*

## துணை நூல்கள்

1. வ. சுப. மாணிக்கம், **வள்ளுவம்**, மாருதி பிரஸ் பீட்டர்ஸ் ரோடு, சென்னை - 14, எட்டாம் பதிப்பு 1982.

2. ச. சீனிவாசன் (பதிப்பாசிரியர்), **திருக்குறள் பரிமேலழகர் உரை**, முதற்பதிப்பு 1997.

3. மணிமேகலைப் பிரசுர ஆசிரியக் குழு, **திருக்குறளுக்கு எளிமை உரை**, மூன்றாம் பதிப்பு 1999.

4. பைந்தமிழ்ப் புலவர் அ.கி. பரந்தாமனார், **இல்வாழ்க்கை** (திருக்குறள் கனிகள்), இரண்டாம் பதிப்பு, 1982.

5. த. அகரமுதல்வன், **பாட்டிலே பண்பு**, பார்வதி பதிப்பகம், முதற்பதிப்பு 1991.

※ ※ ※

# இல்லறம் - வாழ்வியல் வெற்றிக்கு வள்ளுவம்

வ. வேம்பையன்
அ. கோவலன்

நூல்கள் இருவகை. அந்தந்தக் காலத்திற்கு ஏற்றவை; எக் காலத்திற்கும் ஏற்றவை (Book for the hour; Book for ever). நூல்களைக் கற்பதும் இரு வகை. நூல் எழுதிய காலத்திற்குச் சென்று கற்பது; வாழும் காலத்திற்கு வந்து கற்பது. திருக்குறள் இரண்டாம் வகையைச் சார்ந்தது. அதனால்தான் 2000 ஆண்டு களுக்கு மேலாக வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூலாய் வையகத்தில் வாழ்ந்து கொண்டி ருக்கிறது.

## அமைப்பு முறை

திருக்குறள் நூலின் அமைப்பு முறையே நேற்றைய வாழ்வுக்கும் இன்றைய வாழ்வுக்கும் எதிர்கால வாழ்வுக்கும் வழிகாட்டும் நூல் என்பதை எடுத்துக் கூறுகிறது. பால்: அறம், பொருள், இன்பம். இயல் - அதிகாரம்: 1. அரசியல் 25, 2. இல்லறவியல் 20; 3. கற்பியல் 18; 4. நட்பியல் 17; 5. குடியியல் 13; 6. துறவறவியல் 13; 7. அமைச்சியல் 10; 8. களவியல் 7; .



பாயிரம் 4; 10. அரணியல் 2; 11. படையியல் 2; 12. பொருளியல் 1; 13. ஊழியல் 1 ஆக பால் 3; இயல் 13; அதிகாரம் 133; குறள் 1330.

இன்பத்துப்பால் 25 அதிகாரம்; அறத்துப்பால் 38 அதிகாரம்; பொருட்பால் 70 அதிகாரம்; பொருளை அறவழியில் மிகுதியாக ஈட்ட வேண்டும். அங்ஙனம் ஈட்டியவருக்கு அறமும் இன்பமும் எளிதில் வந்து சேரும். எளிதில் வந்தாலும் இன்பத்தைக் குறைவாகத்தான் துய்க்க வேண்டும். அறத்தை அடுத்த நிலையில் வைத்துப் போற்றிப் பேண வேண்டும் என்பது அதிகார எண்ணிக்கை முறையின் புதை பொருளாகும்.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டு சொன்னால் எளிதில் தெளிவு ஏற்படும். அறம் - வெற்றிலை; பொருள் - பாக்கு; இன்பம் - சுண்ணாம்பு என்று கொள்வோம். வெற்றிலை - பாக்கு - சுண்ணாம்பு அளவாக இருந்தால் வாய் சிவக்கும்; மணக்கும். அளவு மீறினால் வாய் வெந்து போகும். அதுபோல் வாழ்க்கையில் இன்பம் குறைவாகவும் அடுத்த நிலையில் அறமும் மிகுதி நிலையில் பொருளும் வைத்துப் போற்றப்பட்டால் வாழ்வு சிறக்கும்; புகழ் மணக்கும். இன்றேல் வறுமை வாட்டும்; நோய் தாக்கும்; வாழ்க்கை துன்பமயமாகிவிடும்.

மாந்தர் வாழ்க்கையில் முதல் ஆதாரம் அறம்; இரண்டாம் ஆதாரம் பொருள்; மூன்றாம் ஆதாரம் இன்பம். இந்த மூன்றுமே வாழ்வியலின் மூல ஆதாரங்கள் ஆகும். தனி வாழ்க்கை, இல்வாழ்க்கை இரண்டையும் எடுத்துக் கூறுகிறது, அறத்துப் பால். அரசியல், பொருளியல், சமுதாயவியல், நாட்டியல், பொதுவியல் பற்றி விளக்குகிறது பொருட்பால்; காதலர் ஒருவர்க்காக ஒருவர் தியாகம் செய்து வாழும் வாழ்க்கையை வரையறுக்கிறது இன்பத்துப்பால்.

குடும்ப முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றம். நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். நல்ல வாழ்க்கை துணை அமைந்தால் அறிவறிந்த நன்மக்கள் பெறும்பேறு கிடைக்கும்.

இல்லவாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கள் பேறு போன்ற அதிகாரங்கள் குடும்ப வாழ்வுக்கு வழிகாட்டுவன.

தெரிந்து செயல்வகை, வலி அறிதல், காலம் அறிதல், இடன் அறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், சுற்றம் தழால், பொச்சாவாமை, செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை, கண்ணோட்டம், ஊக்கம் உடைமை,

மடிஇன்மை, ஆள்வினை உடைமை, இடுக்கண் அழியாமை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை, மன்னரைச் சேர்ந்து ஒழுகல், குறிப்பறிதல்; பொருள் செயல்வகை, நட்பு, நட்பு ஆராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு, பேதமை, புல்லறி வாண்மை, இகல் போன்ற அதிகாரங்கள் பணி புரிதலுக்கு வழி காட்டிகளாக அமைந்துள்ளன.

## சமயச்சார்பின்மை

கடவுள் சொல்ல மனிதன் எழுதியது கீதை; மனிதன் சொல்ல, கடவுள் எழுதியது திருவாசகம்; மனிதன் மனிதனுக்காக எந்தச் சமயச் சார்பும் இல்லாமல் எழுதியது திருக்குறள். அதனால் தான் திருக்குறளுக்குத் திருவள்ளுவர் என்று வழங்கும் வழக்கம் காணப்படுகின்றது. கடவுள், தமிழ், தமிழர் என்னும் சொற்களோ சமயம் சார்ந்த சொற்களோ திருக்குறளில் இல்லை.

எல்லா மாந்தருக்கும் நாட்டிற்கும் எக்காலத்திற்கும் பொருந்தும் பொதுமைக் கருத்துக்கு ஒரு சான்று வருமாறு:

தனிமனித வாழ்க்கைக்கும் குடும்ப வாழ்க்கைக்கும் பொது வாழ்க்கைக்கும் எச்செயலுக்கும் தொழிலுக்கும் தேவை ஐந்து : 1) பொருள் முதலீடு (Capital), 2) கருவி (Machines & Tools), 3) காலத் திட்டம் (Time Management), 4) வினை-தொழில் நுட்பம் (Technology), 5) இடப்பொருத்தம் (Location). இவ்வளவும் எந்தக் குறளில் என்கிறீர்களா? இதோ!

> **பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்**
> **இருள்தீர எண்ணிச் செயல்** *(குறள் 675)*

சமயச் சார்பின்மைக்குச் சரியான சான்றுநூல் திருக்குறளே வள்ளுவமே ஆகும்.

## வாழ்வியல் வெற்றிக்கு வழிகாட்டி

ஒவ்வொரு குறளையும் நம் வாழ்க்கையுடன் பொருத்திப் பார்த்து நம்மை நாமே சரிசெய்து கொள்ள உதவுகிற ஒப்பற்ற நூல் திருக்குறள். திருக்குறளைப் போற்றிக் கற்கக் கற்கத் திருவள்ளுவர் என்னும் தமிழ்ச் சான்றோர் முன் வந்து வழிகாட்டக் காண்கின்றோம்.

பட்டினி இருந்தாவது படித்தல் வேண்டும் என்னும் உணர்வை ஊட்டுவது வள்ளுவம்; இளமைப் பருவத்தில் பாலியல் உறவு கொண்டு பாழ்பட்டுப் போகாமல் ஒழுக்கம் ஓம்பக் காரணமாக அமைந்தது வள்ளுவம்; முன்கோபத்தை

முற்றிலும் அகற்றுவது வள்ளுவம்; நல்வாழ்வுக்கு அடித்தளம் அமைத்துத் தருவது வள்ளுவம்; சமயச் சார்பின்மை கொள்கைக்குச் சரியான சான்றாக இருப்பது வள்ளுவம்; வாழ்வியல் வெற்றிக்கு வழிகாட்டி வருவது வள்ளுவம்.

வள்ளுவம் என்பது பொருள் ஈட்டி அறம் செய்து இன்பம் துய்ப்பது ஆகும். அதற்குச் சிறந்த வழிகாட்டி நூல் திருக்குறள், வழிகாட்டி திருவள்ளுவர்.

**குறள்வழி ஒன்று சேர்வோம் - உலகில்**
**குமுகாயத் தொண்டு செய்வோம்**
**தமிழால் ஒன்று படுவோம்;**
**குறளால் வென்று காட்டுவோம்**
**வாருங்கள் தமிழர்களே!**

## துணை நூல்கள்


1. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், வள்ளுவரும் குறளும், பாரிநிலையம், சென்னை, 1953.
2. முனைவர் மு. வரதராசன், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், தாயக வேளியீடு, பாரிநிலையம், சென்னை 108, ஏழாம் பதிப்பு, 1967.
3. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை, நேசமணிப் பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு, திசம்பர் 1969.
4. கவிஞர் க. குணசேகரன், மன்மதக் குறள்கள், இராமாதேவி பதிப்பகம், நங்கநல்லூர், சென்னை - 61, அக்டோபர் 1999.
5. அழகப்பா ராம்மோகன், தமிழ்மறை திருக்குறள், உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை, சிகாகோ, அமெரிக்கா, சனவரி 2000.
6. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், குடும்ப விளக்கு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை 108, ஆகஸ்ட் 1998.

# வள்ளுவர் காட்டும் இல்லற மாண்பு

வே. இராஜா

### இல்லறத்தில் தலைமை

வள்ளுவர் பெண்கட்கு மதிப்பளித்தார். மகளிர் பிறரால் கட்டுப்படுத்தப்படுதலின்றி உரிமையுடன் வாழ வேண்டுமென விரும்பினார். ஆயினும் இல்லத்தில் தலைமை ஆடவனுக்கே உரியது என அவர் எண்ணினார் என்பது பெண்வழிச் சேறல் என்னும் அதிகாரத்தினின்றும் புலனாகும்.

### மனையும், மனைவியும்

தகுதி வாய்ந்த இல்லத் தலைவியை யுடைய இல்லமே நல்லில்லமாக அமைதல் கூடும் என வள்ளுவர் கருதினார். ஒருவனின் மனைவியிடத்து மனைகேற்ற மாட்சி, இல்லறத்தை நன்கு நடத்தும் இயல்பு இல்லாவிடின் அவன் வாழ்க்கை செல்வம் முதலிய பிற பல நலன்களைப் பெற்றிருப்பினும் பயனற்றது. மனைவி சிறந்தவளாக இருந்தால் இல்லத்தில் ஒன்றும் இல்லாவிடினும் யாதும் உள்ளது



போலாகுமென்றும் அவள் சிறந்தவளாக வாய்க்காவிடில் பிற வளங்களனைத்தும் இருப்பினும் யாதுமில்லாதது போலாம் என்றும் கூறுகிறார்.

மனையாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல் *(குறள். 52)*

இல்லவள் நல்லவளானால் எல்லா நலன்களும் அவ்வில்லம் பெறும், இல்லையேல் உள்ளது ஏன்? என்று வள்ளுவர் வினாத் தொடுக்கின்றார்.

## கற்பின் ஆற்றல்

வள்ளுவர் கருத்துப்படி இல்லத்தலைவியிடம் சிறப்பாக வேண்டப்படும் பண்புநலரம் கற்பே. கற்பெனும் திண்மை யுண்டாகப் பெறின் பெண்ணிற் சிறந்தது பிறிதில்லை என்கிறார். திண்மை மனவுறுதியாகும். கற்பு அவளுக்குக் கணவன் நலத்தையும் குடும்ப நலத்தையும் பேணுவதில் உறுதி நல்குகிறது. கற்புடைய பெண்ணின் சிறப்பைக் கூறங்கால் வள்ளுவர்,

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின் *(குறள். 54)*

என்கிறார். மேலும் சிறந்த பெண் பிற தெய்வத்தைத் தொழாளாய்த் தன் கணவனையே வணங்கியெழுவாள் என அவர் கருதினர். அன்பின் மிகுதியாய் எப்பொழுதும் தன் கணவன் நினைவாகவேயிருக்கும் பெண் துயிலெழும் போதும் அவன் நினைவாகவே எழுவாள் என்று கூறுகின்றார்.

## மக்கட்பேறு

இல்வாழ்க்கையில் பெறும் பேறுகள் பல. அவை அனைத்துள்ளும் சிறந்தது. அறிவறிந்த மக்களைப் பெறுதல் நன்மக்களாலேயே ஊரும் உலகமும் சிறக்கின்றன. வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்வுத் துணையால் மக்கட்பேறு மாண்புறுகின்றன. வெறும் இன்பத்திற்காக மட்டுமே மழைவாழ்க்கை அமையவில்லை. அறிவறிந்த மக்கள் பழிப்பிறங்காப் பண்புடை மக்கள், சான்றோன் என்றெல்லாம் வான்மறை விதந்து கூறுவது வாழ்வின் இலக்கைக் காட்டும். "வெறும் மக்களால்" மனையறம் சிறக்காது. ஓர் இல்லத் தலைவியின் நல்ல இல்லறத்திற்கேற்ற பண்புகளே அவ்வில்லத்திற்கு மங்கலமாகும். ஆனால் அவ்வில்லற மாண்பிற்கும் அணிகலமாவது நன்மக்கட்பேறே என்கிறார்.

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு *(குறள். 60)*

என்ற குறள் மூலம் குழந்தை பிறந்தபோது அது குறித்து மகிழ்ந்ததை விட அவன் பெரியவனாகிச் சான்றோன் என்ற பெயர் பெறும் போது தாய் அதிக மகிழ்ச்சியடைகிறாள். நற்பண்புகள் நிறைந்த சான்றோன் என்று பிறர் பாராட்டும் போது பெற்றோரின் உள்ளம் குளிர்கின்றது. மகனுடைய திறமையையும், அறிவையும், செயலையும் கண்டு வியந்தவர்கள் "இவனைப் பெற என்ன நோன்பு நோற்றார்களோ?" என்று கூறும் சொற்களிலேயே மைந்தனின் கடமை பொலிவும் நிறைவும் பெறுகின்றது.

> மகன்தந்தைக்கு ஆற்றும்உதவி இவன் தந்தை
> என்நோற்றான் கொல்எனும் சொல் *(குறள். 70)*

என்னும் வான்மறையின் படி, பெற்றோர் உள்ளம் மகிழ நல்லவராகவும் சான்றோராகவும் வாழ்வது மக்களின் கடமையாகும்.

## குடும்ப முன்னேற்றம்

தன் குடும்பத்தை உயரச் செய்வதற்காகக் கடும் உழைப்பே மேற்கொள்ளும் ஒருவன் அப்பணியில் நான் கைசோரேன் அல்லது அதை ஒருபோதும் விட்டொழியேன் எனக் கூறுவதே அவனுக்குப் பெருமையாகும். தன் குடும்பத்தில் பிறர் இன்புற்றிருக்க நான் மட்டும் துன்புற்று உழைத்தல் வேண்டுமா? என்று எண்ணுபவன் தன் குடும்பத்தை உயரச் செய்யான். இதை வள்ளுவர்,

> இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
> குற்றம் மறைப்பான் உடம்பு *(குறள். 1029)*

என்கிறார். தன் குடும்பத்தில் பிறருக்குத் துன்பம் வராமல் காக்க அல்லது பிறர் செய்யும் குற்றத்தை மறைக்க முன் வரும் ஒருவன் எவ்வளவு துன்பமாயினும் தாங்க இசைவான். அவன் உடம்பு இடும்பைக்கே கொள்கலமாயினும் அவன் தளரான் என்கிறார்.

## அன்பும் அறனும்

அன்புடன் வாழ்வதே பண்பு; அறத்துடன் வாழ்வதே பயன். இல்வாழ்க்கையில் அன்பையும், அறத்தையும் இரு கண்களாகக் கொண்டு ஒழுகுவது தான் வாழ்வு நெறி என்பது வள்ளுவரின் தெளிந்த கருத்து. இல்வாழ்வைப் பின்னிப் பிணைத்துச் செல்வது அன்பறவேயாகும்.

> அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது *(குறள். 45)*

என்பது வான்மறை. இல்வாழ்க்கையின் பயனால் துணைவியின் மேல் படர்ந்த அன்பு பிற உயிர்கள் மேலும் படர்ந்து அன்பறமாய் மாறுமானால் வாழ்வின் நோக்கம் வெற்றி பெறும். துணைவியை நேசித்து மனையிலிருந்து வாழ்ந்தால் மட்டும் இல்வாழ்வு சிறந்து விடாது தானும் வாழ்வாங்கு வாழ்ந்து வையத்தையும் வாழ வைக்கும் அறமே இல்வாழ்வு; நல்வாழ்வு, அவன் வேறு நெறியில் சென்று பெறத்தக்கது யாதுமில்லை.

## மங்கலமும், நன்கலமும்

கணவனைப் போற்றிக் கடமையைச் செய்தால் பெண்டிர் பெருஞ்சிறப்புப் பெறுவர். நல்ல நெறியுடன் புகழமைந்த துணைவி உடையோர்க்கே ஏறு போல் பீடு நடை அமையும் என்று கூறிய வள்ளுவர், இறுதியில் மனைவியின் நற்பண்பே மங்கலம் என்றும், மக்கட்பேறே அணிகலன் என்றும் கூறுவர்.

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை (குறள். 59)

## பகுத்துண்ணும் பண்பு

பழியஞ்சிச் சேர்த்த பொருளைப் பகுத்து உண்ணும் போது தான் பண்பாடு வளம்பெறுகின்றது. உண்பித்து, உண்டு வாழ்வதே வாழ்வின் பயன். வாழ்வியற் கடமைகளில் சிறப்பானதும், போற்றத்தக்கதும், "பகுத்துண்ணும் பண்பாடே" ஆகும்.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல் (குறள். 44)

இல்வாழ்வோர் பல அறங்களையும் செய்தற்கு உரியவர். அதற்குப் பொருள் வேண்டும். பொருளீட்டுதலும் இல்வாழ்வோர் கடனே. பொருளீட்டும் வழியும் அறத்தொடு பொருந்தியதாக இருக்க வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து. இல்வாழ்வான் ஒவ்வொருவனும் தான் நன்னெறியில் நிற்பதொடு நிறைவடைய வேண்டியவன் அல்லன். பிறரையும் அறத்தாற்றில் ஒழுகும்படி தூண்டவும், உதவவும் உரியவன் ஆவான். அவ்வாறு செய்பவன் நோற்பாரின் நோன்மை யுடையவன் அதாவது தவம் செய்வரை விடச் சிறந்தவன் ஆவான் என்கிறார் வள்ளுவர்.

இல்லத்தில் அன்பும் அறமும் நிலவுதல் வேண்டும். கணவனுக்கும் மனைவிக்குமிடையேயும் பெற்றோர்க்கும், புதல்வர்களுக்குமிடையேயும் ஆழ்ந்த அன்பு நிலவும் இல்லமே சிறந்த இல்லமாகும் என்று உணர்த்துவது புலனாகிறது.

## துணை நூல்கள்

1. ஆனந்தன், வளரும் வள்ளுவம், ஆய்வுக்கோவை, கதிரவன் பதிப்பகம், சேலம், 1992.

2. சரளா இராஜகோபாலன், வள்ளுவர் வழிச் சிந்தனைகள், அன்புப் பதிப்பகம், சென்னை, 1998.

3. வரதராஜன், மு., வள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பாரி நிலையம், சென்னை, 1998.

* * *

# திருவள்ளுவர் உணர்த்தும் இல்லறம்

தா.க. அனுராதா

உலகம் விளக்கமுற உதிக்கின்ற ஞாயிறு போல் உள்ளங்களில் விளக்கேற்றியவர் வள்ளுவர். வாசுகி என்னும் கற்புக்கரசியை மணந்து இல்லறமெனும் நல்லறத்தை உலகிற்கு உணர்த்திய உத்தமர்.

ஆணும், பெண்ணும் லயமும் சுருதியும் போல், சுடரும் கதிரும் போல், மலரும் மணமும் போல் இருவர் வாழ்வும் ஒன்றுபட்டு, ஒருவரை ஒருவர் நன்கறிந்து, நயம்பட அன்பாய் வாழ்வு நடத்துவதுதான் இல்லறம். காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டு வாழ்வதுதான் இல்வாழ்க்கை.

## இல்வாழ்க்கைப் பண்பும் பயனும்

இல்வாழ்க்கையின் ஆணிவேரான பண்பு அன்பு; அதன் பயன் அறம். அற வழியில் இல்லறம் நடத்துபவரே உலகில் வாழ முயலும் அனைவரிலும் தலை மகனாவார்.



**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது** *(குறள் 45)*

என்கிறார் வள்ளுவர்.

அன்பே தெய்வம் என்பர். மரஞ்செடி கொடிகளுக்கு ஆதவன் போல், மனித இதயத்துக்கு அன்பு மிக அவசியம். அறம் செய்தால் அன்பு உண்டாகும். அன்பு உண்டானால் அருள் பெருகும். இல்வாழ்க்கை நடத்தும் ஆணும், பெண்ணும் அன்புடன் வாழ்வதுடன் மற்றுமுள்ளார் அனைவரிடத்தும் அன்பு செலுத்த வேண்டும்.

அத்துடன் அறம்பட வாழ வேண்டும். அறமென்பது வாழ்க்கை நெறி. அறமின்றித் தீய நிலையில் இருப்பின் அது இல்லறமாகாது. இல்லறம், பிறர் பழி சொல்லக் கூடிய அளவிற்கு அமையலாகாது. அவ்விதம் அமையாதிருக்குமாயின், அது நல்ல புகழுக்குரிய பெரும் நிலையாகும்.

> **அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
> **பிறன்பழிப்பது இல்லாயின் நன்று** *(குறள் 49)*

என்பதே வள்ளுவர் கூறும் வாழ்க்கை நெறி.

**கணவன் மனைவி**

மணம் புரிந்துகொண்டு குடும்பமாக வாழ்வதே இல்லறம். இந்த இல்லறம் இனிது நடைபெற வேண்டுமானால் கணவனுக்கும் மனைவிக்கும் ஒற்றுமையிருக்க வேண்டும். உள்ளத்திலே, நடத்தையிலே, பண்பிலே அவர்கள் ஒன்றுபட்டு இருக்கவேண்டும். ஒன்றுபட்ட தம்பதிகளின் வாழ்வில் தான் இன்பம் தழைக்கும்.

மனிதனைத் தெய்வமாக்கும் இரசவாதம் மனையறம் எனில் அதற்குக் கைகோத்து அழைத்துச் செல்லும் ஆற்றலாய்த் திகழ்பவள் 'வாழ்க்கைத் துணை' என்று வள்ளுவர் போற்றும் மனைவியே ஆவாள். அவள் மனைத்தக்க மாண்பும், கணவன் வளத்துக்கு ஏற்ற வாழ்வும் பெற்றவளாய் இருப்பாள். கற்பென்னும் திண்மையால்,

> **பெண்ணின் பெருந்தக்க யாவுள?** *(குறள் 54)*

என்று பெருவியப்பை அளிப்பாள்; தெய்வம் தொழாது கணவனைத் தொழுது மழைபோல் பயன் தருவாள் என்று இல்லத்தரசியை ஏற்றிப் போற்றுவார் வள்ளுவர்.

**மக்கட்செல்வம்**

மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர். நல்ல மக்களைப் பெறுதலே அதற்கு நல்ல அணிகலம் என்றும் கூறுவர். அன்பும் அறமும் இணைந்து செயல்படும்

இல்லறப் பூங்காவில் மலரும் மலர்களே குழந்தைகளாவர். அக்கருத்தினையே வலியுறுத்திக் கூறியுள்ளார் வள்ளுவர்.

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு** *(குறள் 60)*

இல்லறத்திற்கு எவ்வாறு மனைவியின் நற்பண்பு மங்கலமாக அமைகிறதோ, அதைப் போலவே, நன்மக்களைப் பெறுதலும் இல்லறத்திற்கு அணிகலன்களாக அமையும் என்பதாம்.

**பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற** *(குறள் 61)*

இல்லற வாழ்வில் பெறத்தகுந்த பேறுகளில் அறிவுடைய நன்மக்களைத் தவிர மற்றப் பேறுகளை யாவும் (வள்ளுவரே) அறிந்ததில்லை என்பதிலிருந்து மக்கட்பேற்றில் ஏன், மக்கட் பெருக்கத்திலும் வள்ளுவர் காட்டியுள்ள உண்மையான, உறுதியான கருத்து இன்றைய உலகிற்குப் பொருத்தமானதாகும்.

ஆணையும், பெண்ணையும் இணைத்த அன்பு, குழந்தைகளிடமே முதலில் பாய்ந்து பெருகுகிறது. வள்ளுவர்க்குக் குழந்தைகள் என்றால் கொள்ளை ஆசை. குழந்தைகளின் மழலைப் பேச்சுக்கு யாழ் ஒலியும் நிகராக மாட்டாவென்று மழலை இன்பத்தை வானளாவப் புகழ்கிறார். குழந்தையைத் தொட்டணைக்கும்போதும், மழலை மொழியைக் கேட்கும் போதும் மனத்துக்கும், உடலுக்கும் இன்பம் விளையும் என்கிறார் வள்ளுவர்.

அவையத்து முந்தியிருப்பச் செய்வது தந்தையின் கடன். ஈன்ற பொழுதிற் பெரிதுவப்பாள் தன் மகனைச் சான்றோன் எனப் பிறர் சொல்லக் கேட்கும் தாய். மகன் தந்தைக்கு இவனைப் பெறுதற்கு என்ன தவம் செய்தனரோ என்ற சொல்லைப் பெற்றிருத்தல் வேண்டும் என மக்களால் பெறும் இன்பத்தையும் பெறவேண்டிய இன்பத்தையும் இல்லற வியலில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

### விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்பது தமிழரின் தலையாய பண்பாகும். குடும்ப இன்பத்தில் விருந்தளித்து மகிழ்வது ஒரு சுவையான அனுபவம். ஒரு மனிதனின் இதயத்தைச் சென்றடைய வேண்டுமானால் அவனுடைய வயிற்றின் வழியாகத்தான் அடைய முடியும் என்று சொல்வார்கள். அவனுக்கு உணவளித்து

உபசரிக்கும்போது அவன் மனநிறைவு அடைகிறான். விருந்து சாப்பிட்டவனுக்கும் மனநிறைவு, விருந்து அளித்தவனுக்கும் மனநிறைவு.

வள்ளுவர் உன்னதமான நெறிகளை உணர்த்தியவர். பசி தீர்த்தல் மிகச் சிறந்த அறம் என்று உபதேசித்தவர். இல்வாழ்வான் துறந்தார்க்கும், துவ்வார்க்கும், இறந்தார்க்கும் துணையாக இருத்தலோடு, தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐவகையினரையும் ஓம்புகின்றவனாதல் வேண்டும். அவற்றுள் விருந்து ஓம்பும் பண்பே குடும்பத்தின் குறிக்கோளாகும் என்ற செய்தியை,

**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு** *(குறள் 81)*

என்ற குறளின் மூலம் எடுத்துக்காட்டுகிறார். கண்ணகி, சீதை ஆகிய இருவரும் தம் தம் கணவரைப் பிரிந்து வாழ நேரிட்ட பொழுது, அவ்விருவரும் இழந்த பேறாக, விருந்து ஓம்ப இயலாநிலைமையையே முதன்மைப்படுத்தி வருந்தியுள்ளனர். விருந்து புரந்தராமல், உண்ணும் உணவு சாவாமை தரும் சிறப்பினையுடைய மருந்தெனினும் அது வேண்டுதற்குரிய தல்ல என்பது வள்ளுவத்தின் செய்தி. வருவிருந்து ஓம்பி, செல்விருந்து பார்த்திருக்கும் குடும்பம் வானத்தினர்க்கு நல்விருந்தினராவர் என்று திருக்குறள் வீடுபேற்றை உறுதிப் படுத்துகின்றது.

அனிச்சப் பூவினும் மென்மையானவர் விருந்தினர். ஆதலால் இனிய சொற்களால் கேட்பவர்க்கு இன்பம் தருவதாய், உள்ளத்தில் சிறுமை சிறிதும் இல்லாவராய்ப் பயன்தரும் சொற்களையே பேசவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

## செய்ந்நன்றியறிதல்

ஒருவர் செய்த நன்றிக்காக அவரை வணங்குவதோ, அவரை நினைத்துக் கொண்டிருப்பதோ மட்டும் செய்நன்றி அறிதல் ஆகாது. பிறர் நமக்குச் செய்த நன்மையைப் போல் நாமும் பிறர்க்கு நன்மை செய்ய வேண்டும். இந்த எண்ணம் - உணர்ச்சி பிறக்க வேண்டும். இதுதான் செய்ந்நன்றி மறவாமையின் பலனாகும்.

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று** *(குறள் 108)*

ஒருவர் செய்த நன்றியை மறந்துவிடுவது நன்மையாகாது; ஒருவர் செய்த தீமையை அவர் செய்த அன்றே மறந்துவிடுவது தான் நல்லது.

பிறர் செய்த நன்மையை மறந்துவிட்டுப் பிறர் செய்த தீமையை மட்டும் மனத்தில் வைத்திருப்பதனால் தீமைதான் விளையும். நமக்குத் தீமை செய்தோர்க்கு நாமும் தீமை செய்வதற்கான காலத்தை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருப்போம். சமயம் கிடைத்தபோது பழிக்குப்பழி வாங்கத்தான் தோன்றும். இதனால் பகைமைதான் வளரும். எதிரிகள் பக்கம் பலர்; நமது பக்கம் பலர்; இவ்வாறு பிளவுபட்டு நிற்போம். இத்தகைய பிளவுக்கு மக்கள் ஆளாவர்களானால் சமுதாயத்தில் ஒற்றுமை நிலைத்திருக்க முடியாது. ஆகையால்தான் செய்ந்நன்றியை வலியுறுத்தி, வாழ்வியலில் இந்நெறி போற்றுவோர் பல்கிப் பெருக வேண்டும் என்பதே வள்ளுவரின் விருப்பம்.

## ஒழுக்கத்தின் மேன்மை

ஒழுக்கந்தான் ஒருவனுக்கு உயிர்; அதுதான் குடிப்பிறப்பு; அதுதான் உயர்வளிப்பது; அதுதான் நன்மைக்கெல்லாம் அடிப்படை. தற்பெருமை எங்கு முடிவடைகிறதோ அங்குதான் ஒழுக்கம் ஆரம்பமாகிறது. "நெஞ்சில் அறமிருந்தால், நடத்தையில் அடக்கமிருக்கும். நடத்தையில் அடக்கம் இருந்தால் தேசத்தில் ஒழுக்கமிருக்கும்" என்கிறார் மகாத்மாகாந்தி. ஆனால் இன்று தேசத்தின் நிலை என்ன? சுதந்திரம் என்றால் பிறரைச் சுரண்டச் சுதந்திரம் என்றும், பண்பாடு என்றால் பகுத்தறிவாலான பித்தலாட்டம் என்றும் நடைமுறையாகிவிட்டது. நமது நற்பண்பும், சீலமும் சீர்குலைந்துவிட்டன. மது, மாது, சூது, கொள்ளை, கொலை ஆகிய பஞ்சமாபாதகங்கள் மலிந்துள்ளன. மதுவாலும் போதைப் பொருள்களாலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஒழுக்கம் மிகவும் சீர் குலைந்துள்ளது.

மக்கள் மிகவும் சிறப்பை அடைவது ஒழுக்கத்தால்தான். தனிப்பெரும் சீருடையது ஒழுக்கம். உடல்நிலை பெற உயிரைப் பேணுதல் போல், உயிர்நிலை பெற ஒழுக்கத்தைப் பேணுதல் வேண்டும். உயர்ந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழுங்கால் விழுப்பந் தரும். ஒழுக்கமே எல்லோர்க்கும் மேன்மையைத் தரும். அதனால் ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாய்ப் போற்றப்படும்.

**ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்** *(குறள் 131)*

என்கிறார் வள்ளுவர்.

ஏட்டில் எழுதப்பெற்றனவெல்லாம் ஒழுக்கமல்ல. உலகத்தோடு ஒத்ததே ஒழுக்கம். ஒழுக்கத் தவறு

மெய்யுணர்ச்சியால் விளைவது. கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐவகை இன்பங்களையும் தன் மனைவியிடம் பெறுதல் ஒழுக்கம்; பிறனில்லாளை விரும்பியடைதல் ஒழுக்கக்கேடு. பிறர் மனைவியை விரும்புவார் அறம் பொருள் இவற்றையிழப்பர். அவர்களே பேதையர். அவர்கள் இறந்தவர்களே. அவர்களே பழிகாரர்கள், பாவிகள். பிறர் மனைவியை ஏறெடுத்தும் பார்க்காதவர்களே வீரர்கள்; ஒழுக்கமுடையர்; தருமவான்கள். அவர்கள் உலகில் எல்லா நல்ல காரியங்களுக்கும் தலைமை தாங்க உரியவர்கள். தன் கணவரைத் தவிர வேறு ஆடவனை விரும்பாத பெண்ணே கற்புள்ளவள்; அதுபோலத் தன் மனைவியைத் தவிர வேறு பெண்ணை விரும்பாத ஆண் மகனே ஒழுக்கம் உள்ளவன்; கற்புள்ளவன் என ஒழுக்கத்தின் மேன்மையை வலியுறுத்துகிறார்.

## பொறுமையின் பெருமையும் பொறாமையின் பகையும்

"பொறுமை எனும் நகையணிந்து பெருமை கொள்ள வேண்டும் பெண்கள்" என்ற பாடலை இசைப் பேரரசி கே.பி. சுந்தராம்பாளின் குரலில் கேட்கும்போது, 40 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தனி இன்பம் இருந்தது. பொறுமையானது குறை செய்பவர்களை மன்னித்து விடுவது மட்டுமன்று; மறந்தேவிடுவது தான். பொறுமை சால்புடைமையைத் தரும். அழியாப் புகழைத் தருவதும் அது. துறவியைக் காட்டிலும் பெருமையைத் தருவதும் அதுவே.

பொறுமைக்கு மறுதலை பொறாமை. பொறாமை என்பது ஒரு பொல்லாத வியாதியாகும். அதனை மாற்றுவது எந்த மருத்துவராலும் முடியாததாகும். பொறாமை யுடையவனைப் புண்ணியம் பொருந்தாது; செல்வம் சேராது; சுற்றமுங்கெடும். குலம் அழியும், குற்றமிகும். ஆதலால் பொறாமையை நீக்கிடுக என வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

## கொடைப்பண்பு

ஒப்புரவும் ஈகையும் கொடைக்கடன்கள் எனலாம். பொதுக் கொடை ஒப்புரவு; தனிக்கொடை ஈகை. ஏழைகட்குச் செய்யப்படும் உதவி ஈகை எனப்படும். குறிப்பறிந்து ஈதலே கொடை. வாங்கியவன் மகிழும்வரையில் ஏழையின் பசியைப் போக்குதலே சேமநிதியைச் சேமித்து வைக்குமிடம்.

தான் பெற்ற உணவைப் பலரோடும் பகுத்து உண்ணும் பழக்கம் உடையவனைப் பசி என்று கூறப்படும் தீய நோய் அணுகுவதில்லை. கா கா எனக் கரைந்து அவர்கள் உண்பதால்,

வா வா என அவர்கள் வரவைக் கூட்டுவதால் அவர்களுக்குப் பஞ்சம் வருவதில்லை.

சாவு என்னும் துன்பத்தைவிட வறியவர்க்கு எதுவும் வழங்க இயலாது என்கின்ற மனத்துன்பம் பெரியதாகும். சாதலைக் காட்டிலும் துன்பமானது யாதுமே இல்லை. ஆதலால் வறியவர்க்கு ஒரு பொருள் கொடுக்க முடியாத நிலை வந்தபோது அச்சாதலும் இனியதே ஆகும்.

**சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை** *(குறள் 230)*

என்ற குறளுக்கமைய, கொடுக்கும் பேராற்றல் வேண்டும் என்பதை உணர்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

## புகழின் பெருமை

கொடையால் விளைவது புகழ். உலகத்தில் அழியாதது புகழ் ஒன்றே. புகழில்லா உடலைச் சுமந்த நிலங்கூட வளங்குன்றும். புகழ் வளர வளர அதனால் வரும் புகழுடம்பு நிற்கும்; புகழுடையார் இறந்தாலும் புகழ் இறவா நிற்கும். தம் வாழ்நாளில் புகழை நிலைநாட்டாதவர்களின் வாழ்க்கை, என்றும் பிறரால் பழிப்புக்கு உரியதாகவே அமையும். அறிவு, அதிகாரம், முதலிய ஆற்றல்களால் ஆட்டிப் படைப்பவர் களின் புகழை விட, கொடுப்பதால் பெறும் புகழ், வியந்து பாராட்டப்படும் ஒன்றாக அமைகின்றது. ஆதலால் வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றுமில்லை என்பதை,

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு** *(குறள் 231)*

என்ற குறளின் மூலம் வலியுறுத்துகிறார்.

மேலும் இல்லறத்தின் இன்றியமையாப் பண்புகளாக, அன்பால் விளையும் நற்பண்பு, நடுவுநிலை தவறாமை, நாவடக்கத்தின் நன்மை, புறங்கூறுதலால் ஏற்படும் பாவம், பயனற்ற பேச்சினால் ஏற்படும் தீமை, தீவினையினால் ஏற்படும் துன்பம் ஆகியவற்றைப் பற்றியும் மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார். மனிதகுல சமுதாய வாழ்வும் சிறப்புற்று இல்லற வாழ்வு மாண்பு பெற வள்ளுவர் வழி வாழுதல் வேண்டும்.

திருவள்ளுவர் கூறியுள்ள இல்லறத்திற்கான கருத்துக்களை நுண்ணிதின் உணர்ந்து தெளிந்து ஏற்று வாழ்பவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவராவர். அவர்தாம் வானுறையும் தெய்வத்துள்

வைத்து வணங்கும் பெருமைக் குரியவராவர். வள்ளுவர் கூறியிருக்கும் இல்லற உண்மைகள் எவ்வினத்தினராலும் எந்நாட்டினராலும், எம்மொழியின ராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க உண்மைகள். இவை போன்ற உலகம் போற்றும் உண்மைகள் திருக்குறளிலே நிறைந்திருக்கின்றன.

இல்லற இன்பத்திற்கு வள்ளுவர் காட்டும் வழியைவிட சிறந்தவழி இருக்க நியாயம் இல்லை.

## துணை நூல்கள்


1. சாமி சிதம்பரனார், வள்ளுவர் வகுத்த தமிழகம், மணிவாசகர் பதிப்பகம், 2001, பக். 74-89.
2. இரா. மோகன், சிற்பியின் கட்டுரைகள், மணிவாசகர் பதிப்பகம், 1996, பக். 448, 449.
3. பொன் பரமகுரு, வள்ளுவன் வழங்கிய வாழ்க்கை நெறி, திருவரசு புத்தக நிலையம், 2000, பக். 18-79.
4. முத்துராமன், திருக்குறள் அரசியல் தெளிவுரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1996, ப. 28.
5. ப.ச. ஏசுநாதன், திருக்குறளில் குடும்பம், சுதா பதிப்பகம், 1999, பக். 10, 11.
6. பா. வளவன் அரசு, வழிகாட்டும் வள்ளுவம், கதிரவன் பதிப்பகம், பக். 11, 12.
7. பி.சி. கணேசன், வள்ளுவர் உணர்த்தும் இல்லற தர்மம், தாமரைப் பதிப்பகம், 1991, ப. 82.
8. பேரறிஞர் கட்டுரைகள், வள்ளுவர் வாய்மொழி, தமிழ் மணம், 1965, பக். 96-99.
9. அ.பொ. செல்லையா, கேட்கட்டும் குறளின் குரல், தாய்நாடு பதிப்பகம், 2002, பக். 128-187.


❋ ❋ ❋

# வள்ளுவத்தில் இல்லறம்

கே.எஸ். இராமநாதன்

உலகமே வியந்து பாராட்டும் தமிழ் மறையின் சிறப்பியல்புகளை இன்றைய சூழ்நிலைக்கு ஆராய முற்படுவது, முழு நிலா நாள் அன்று இரவு, முழு நிலாவின் வனப்பினை ஆய்தற்கு ஒப்பாகும்.

## தமிழ்மறை

"கடுகைத் துளைத்து", "அணுவைத் துளைத்து" என்றெல்லாம் இரண்டே அடிகளில் வாழ்க்கை நெறிமுறைகளைத் தொகுத்துக் கொடுத்த திருக்குறளைக் கரும்பு சுவைப்பது போல் சுவைத்து மகிழ்ந்தனர் பழந்தமிழர். கொற்கைத் துறை முகத்தில் முத்துகளை அள்ள அள்ள மகிழ்ச்சிக்குக் குறைவுண்டோ? 1330 குறட் பாக்களும் 1330 முத்துகளே. இவற்றை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என 4 சரங்களாகக் கோர்த்து சேர்த்து புடம் போட்ட தங்கச் சங்கிலியே எங்கள் குறள். இதை மனதில் கொண்டே "யாமறிந்த புலவரிலே, கம்பரைப் போல், வள்ளுவரைப் போல், இளங்கோவைப் போல், புவிதனிலே,



யாங்கணுமே கண்டதில்லை" என்றும், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றும் கூறி வள்ளுவர் புகழ் வானோங்கி நிற்கிறது. குமரிமுனையில் 133 அடி உயரமாக உலகிற்கே சாதி சமய இனமொழி வேறுபாட்டைக் களைந்து நிற்கும் ஒரே தலைவராய்ப் பறை சாற்றுகிறார் தெய்வப்புலவர்.

## இன்றைய சூழல்

வள்ளுவர் கண்ட சமுதாயத்தையும் இன்றைய சூழலையும் ஒப்பிடவே மனம் கூசும் அவல நிலையே இன்றைய நிலை.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்** *(குறள்: 13)*

என்ற வள்ளுவர் வாய்மொழி எங்கோ ஒளிந்துகொண்டு விட்டது. பள்ளிச்சிறார்கள் முதல் அறிஞர்கள், அரசு அலுவலர்கள் உயர் அதிகாரிகள் வரை தத்தம் பொது வாழ்விலும் தனிவாழ்விலும் ஒழுக்கத்தைத் தெரிந்தே புறக்கணிக்கின்றனர்.

**புறந்தூய்மை நீரான்அமையும் அகத்தூய்மை**
**வாய்மையால் காணப் படும்** *(குறள்: 298)*

என்கிறது வள்ளுவம். "வாய்மையே வெல்லும்" என்னும் பழமொழி, பழைய மொழியாகிவிட்டது. மனத்தூய்மையை அறவே குலைக்கும் திரைப்படங்கள், வன்முறை, கொலை, கொள்ளை, கற்பழிப்புக் காட்சிகளையே முறைப்படுத்தும் தொலைக்காட்சித் தொடர்கள் மக்களைத் துயர்க்குழியில் ஆழ்த்துகின்றன. ஆபாச வார இதழ்களும், செய்தித் தாள்களும் இவற்றிக்குத் துணைபுரிகின்றன. அரசியல் நாகரீகம் பற்றி எழுதவே கூசுகிறது. வள்ளுவர் கண்ட அரசு, மக்களுக்காக மக்களால், மக்களிடையே கண்ட அரசு.

சுருங்கக்கூறின், நாடு தூய்மை பெற இனி எத்தனை காந்தியடிகள் பிறந்தாலும், சென்ற காலங்கள் இனி வருமோ?

## வள்ளுவத்தில் இல்லறம்

அறம், பொருள், இன்பம் என்ற 3 தலைப்புகளில் வள்ளுவர் காட்டிய நெறிகளில், மொத்தம் 133 அதிகாரங் களிலும், 20 அதிகாரங்களில் கூறப்பட்ட இல்லற அறமே மிக மாண்புடையதாய்க் காணப்படுகிறது. அதை ஈண்டு நோக்குவோம்.

வள்ளுவரின் இல்வாழ்க்கைத் துணைவியார் வாசுகி அம்மையார். வள்ளுவரின் இல்வாழ்க்கையில் இருந்து இரு நிகழ்ச்சிகளை அறிஞர்கள் உதாரணம் காட்டுவர். ஒரு சமயம் வாசுகி அம்மையாரை வள்ளுவர் அழைத்துச் சிறு இரும்புக் கோளங்களைக் கொடுத்துச் சோறாகச் சமைத்து வரச் சொன்னாராம். அம்மையார் தன் கணவனே தன் கற்பை சோதிப்பது கண்டு வருந்தி இறைவனை வேண்டி, இரும்புக் கோளங்களை உலையில் இட, அவை சோறாய்க் கொதித்தன என்பர்.

மற்றொரு நிகழ்ச்சி, கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்தார் அம்மையார். அதுபோது கணவர் அழைக்கவே, கயிற்றை நீர்க்குடத்துடன் விட்டு விரைந்து ஓடினார். திரும்பி வந்து பார்த்தபோது நீர்க்குடம், கீழே இறங்காமல், அம்மையார் விட்டுச் சென்ற இடத்திலேயே நின்றிருந்ததாம். என்னே கற்பின் உயர்வு!

இருபது அதிகாரங்களில், இருநூறு பாக்களில் இல்லற வாழ்க்கையின் உயர்வை வள்ளுவர் படம்பிடித்துச் சித்திரிக்கிறார். இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல் எனத் தொடங்கித் தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் என ஒவ்வொன்றிலும் தனிமனிதன் இல்லற வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கம், அடக்கம், பிறன்மனை நோக்காப் போராண்மை, விருந்தோம்பல் என வள்ளுவர் அடுக்கிய அதிகாரங்கள், குறட்பாக்களின் பெருமைகள் சொல்லில் அடங்கா.

தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி இருப்பச் செயல் (குறள். 67)

என்ற குறளில் தந்தையின் கடமையையும், அடுத்தே

மகன்தந்தைக் காற்றும்உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல் (குறள். 70)

என்ற குறளில் தந்தை - மகன் கடமையையும் உலகில் எந்தமொழி, எந்த இலக்கியம் வழங்கியுள்ள?

தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (குறள். 236)

எனச் சிறப்பாக முடிக்கிறார்.

## தற்கால இல்லறம்

மேலை நாட்டு நாகரிகம் தமிழர் பண்பாட்டை வேகமாக மூடி வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, நிறை, பேதமை என ஆறு அணிகலன்களையே அணிந்த தமிழ்ப் பெண்கள் இன்று அழகிப் போட்டிகளின் அணிவகுப்பில் பங்கேற்பது தலைகுனிய வேண்டிய ஒன்று. மணம் முடிந்தபின்பே கணவனுடன் கூடி இல்லறம் நடத்துதல் என்பது கனவாகி விடுமோ? விவாகரத்து, மகளிர்க்கு இழைக்கப்படும் கொடுமைகள் விதவைத் திருமணங்கள் மலிந்து வருகின்றன.

பெண் கற்பு இவ்வாறு இருக்க ஆண் கற்பும் இழி நிலைக்கே தள்ளப்பட்டுள்ளது. ஒருவனுக்கு ஒருத்தியே என்ற நெறி மாறி வருகிறது. இந்நிலை தொடருமே ஆகில், அமெரிக்காவிற்கும், தமிழ்நாட்டிற்கும் என்ன வேறுபாடு என்ற ஐயமே எழும்.

## இறுதியாக

பாட்டுக்கொரு புலவன் பாரதி கண்ட புதுமைப் பெண் இன்றைய தமிழ்மகள் இல்லை. பாரதியோ, பாரதிதாசனோ, புதுமைக் கவிஞர்கள் தாம். இவர்கள் தமிழ்ப் பெண்டிரை அழகிப் போட்டிகளில் மேடை ஏறச் சொல்லவில்லையே.

மேலை நாடுகளில் இருந்து விஞ்ஞான வளர்ச்சி, நாகரீகம் தொழில், பொருளாதார முன்னேற்றத்துடன் நாம் நிறுத்திக் கொள்ளலாம். தமிழர் பண்பாட்டின் முத்திரை மங்கவே விடக் கூடாது. தமிழ்நாட்டில் அருந்ததிகள், வாசுகி அம்மையார்கள், கண்ணகிகள் பெருகித் தமிழ்ப் பெண்டிர் சிறப்பு உலகம் எங்கும் தெரியட்டுமே.

### துணை நூல்கள்

திருக்குறள், மூலம்.

திருக்குறள் உரை, முனைவர் மு. வ.

❋ ❋ ❋

# நல்லாண்மை என்பது இல்லாண்மையே

இலலிதா சுந்தரம்

'இல்லறமல்லது நல்லறமன்று' என்று ஔவையார் கூறுகின்றார். "அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்று அவர் கூறிய கூற்றிற்கிணங்க இவ்வரிய பிறவி பெற்ற மனிதப் பிறவியில் திருவள்ளுவரின் இல்லறம் என்ற நல்லறம் பற்றிக் கூறும் கருத்துகளைத் தித்திக்கும் சொல்லெடுத்துத் தீந்தமிழின் முத்தெடுத்துத் திருக்குறளின் வித்தெடுத்துப் பார்க்கலாம்.

## நல்ல குடும்பம்

"நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்" என்று பாரதிதாசனார் கூறுகின்றார். மனித சமுதாயத்தின் அடிப்படை அலகாகக் குடும்பம் திகழ்கின்றது. குடும்பம் என்பது முதலில் கணவன், மனைவி இணையும் ஒரு அன்புப் பிணைப்பு; பாசவலை எனத் திகழும் இல்லறமாகும். குடும்பத்தில் கணவன் மனைவி, குழந்தைகள் பெற்றோர், சகோதர, சகோதரிகள், நாத்தனார், மைத்துனர் எனப் பலரும் இருப்பர்.



## வாழ்க்கை

வாழ்க்கை என்ற போர்க்களத்தில் சோதனைகளை வென்று, அரிய சாதனைகளைப் படைத்து வாழ்ந்து வெற்றி காண வேண்டும். இல்லறம் என்ற படகினை, வாழ்க்கையெனும் கடலில் செலுத்தி நீந்திக் கரையேறி நல்லறமாகத் திகழச் செய்ய வேண்டும்.

> எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
> யாதினும் அரிதரிது காண்

எனத் தாயுமானவர் பாடி உள்ளார்.

> வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி

என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

> நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
> இல்லாண்மை ஆக்கிக் கொளல் *(குறள் 1026)*

என்று திருக்குறளில் கூறியுள்ளது போல இல்லறத்தைச் சிறந்த முறையில் நடத்தும் (ஆளும்) இல்லாண்மையே நல்லாண்மை ஆகும்.

## இல்வாழ்க்கை

கணவன், மனைவி இருவரும் இணைந்து அறச் செயல்களைச் செய்து வாழ்வது பயனுடையதாகும் என்பதனை,

> அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது *(குறள் 45)*

என்று கூறி உள்ளார்.

> இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றின் நின்ற துணை *(குறள் 41)*

என்ற குறளில் தன் மனைவி, பெற்றோர், மக்கள் ஆகியோருக்குத் தகுந்த, சிறந்த துணையாக விளங்குபவனே குடும்பத் தலைவன் ஆவான் என்று கூறியுள்ளார். ஏன் இவ்வாறும் பொருள் கொள்ளலாமல்லவா? ஆள்வோர் மூத்த அறிவுடைய சான்றோர், பெரு மக்கள், நீதி வழங்குவோர் ஆகிய மூவருக்கும் குடும்பத் தலைவன் துணையாய் இருக்க வேண்டும் என்றும் கொள்ளலாம்.

> தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
> ஐம்புலத் தார்ஓம்பல் தலை *(குறள் 43)*

என்ற குறளில் முன்னோர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்து வகையினரையும் அறநெறி தவறாமல் காப்பாற்றும்

திறம் படைத்தவனாக விளங்குவதே குடும்பத் தலைவனின் கடமையாகும்.

**ஒற்றைக் குடும்பம் தனிலே - பொருள்**
**ஓங்க வளர்ப்பவன் தந்தை**

என்று பாவேந்தர் கூறுகின்றார். நல்ல முறையில் பொருள் ஈட்ட வேண்டும் என்று கூறுகின்றார்.

**அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று** *(குறள் 49)*

என்ற குறளில் தான் வாழும் குடும்ப வாழ்க்கை பிறரால் பழிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

## குடும்பத்தின் வேந்தன்

பாரதிதாசன் மனைவியை ஒரு குடும்ப விளக்கு என்று கூறினார். பெரியோர்கள் மணப்பெண்ணை மருமகளைக் கொண்டு வரும் பொழுது வீட்டிற்கு விளக்கேற்ற ஒரு பெண் வேண்டும் என்பார்கள்.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதுஎன்**
**இல்லவள் மாணாக் கடை** *(குறள் 53)*

என்ற குறள் மனைவி சிறந்த குணங்களை உடையவள் ஆக இருந்தால் குடும்பத்தில் இல்லாத செல்வங்கள், மகிழ்ச்சி என இல்லாதது எதுவுமில்லை என்று கூறுகின்றது.

குடும்ப விளக்கு என்ற நூலில் மனைவியின் பெருமை, பெண்ணின் பெருமை, சிறப்பு, கடமைகள், செயலாற்றும் விதம் பற்றித் தெள்ளத் தெளிவாய்க் கூறி உள்ளார்.

கணவனைப் பெற்ற மாமன், மாமி, தான் பெற்ற மக்கள், குடும்பத்தில் உள்ள மற்றோர், கணவன் புகழ் பாதுகாக்க வேண்டும் என்பதனைப் பாரதிதாசன் அழகாய்ப் படம்பிடித்துக் காட்டுகிறார். அப்பொழுதுதான் தற்கொண்டான் பேணலும், தகைசான்ற சொற்காத்தலும் முழுமை அடைகின்றது என்று திருக்குறளின் கருத்தைச் சுட்டிக்காட்டுகிறார்.

**தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்** *(குறள் 56)*

என்று திருக்குறள் கூறுகின்றது. தன்னையும் கற்பு நெறியில் காத்து, தன் கணவனையும் தகுந்த நேரத்தில் குருவாகவும், அமைச்சனாகவும் காப்பாற்றித் தகுதி நிறைந்த புகழையும் காத்துத் தருபவளே சிறந்த மனைவி ஆவாள். பேண்-என்பது பெண் என

ஆயிற்று. பேணுதலில் சிறந்தவள் பெண். ஆகையால் ஓர் ஆணின் வெற்றிக்குப் பின் ஒரு பெண் (அவளது மனைவி) துணையாய் இருப்பாள் என்கின்றனர்.

பெண்கட்கு கல்வி வேண்டும், குடித்தனம் பேணுதற்கே

என்ற பாவேந்தர் பாடலுக்கிணங்கப் பேணுதல் சிறக்க பெண்களுக்கு கல்வி தேவை.

வள்ளுவருக்கு வாசுகி போல, கோவலனுக்குக் கண்ணகி போல, கூன்பாண்டியனுக்கு மங்கையர்க்கரசியார் போல, பல பெண்மணிகளை உதாரணமாய்க் கொள்ளலாம்.

புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை (குறள் 59)

என்ற குறளில் தன் புகழை விரும்பிக் காப்பாற்றும் மனைவியை அடைந்தவன் வீரத்தில் சிறந்த சிங்கம் போல் நடை நடப்பான். தன் நலத்தை விரும்பிக் காப்பாற்றும் கணவனை அடைந்த மனைவி சிங்கம் போல் வீறு கொண்டு பெருமை அடைவாள் என்று கூறுகிறார்.

## பெற்றோர் கடமை

கணவன் மனைவி இருவரும் மனம் ஒன்றி வாழ்ந்த வாழ்க்கையின் பயனாக ஆசைக் கடலில் தோண்டிய முத்தாக மக்களைப் பெறுகின்றனர்.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே

எனப் புறநானூற்றுப் பாடல் கூறுவதற்கேற்ப அறிவு அறிந்த மக்கள் தமக்கும், சமுதாயத்திற்கும் வளம் சேர்க்க அளவான, நல்ல குழந்தைகளைப் பெற்று வளர்ப்பர்.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கள்பேறு அல்ல பிற (குறள் 61)

என்று குறள் கூறுகின்றது. ஒருவன் தான் பெறக்கூடிய செல்வங்களுள் சிறந்த செல்வம் நன்கு அறிய வேண்டியவைகளை அறிந்து கொள்ளும் ஆற்றலுள்ள குழந்தைகள் பெறல் ஆகும். பெற்ற மக்களைப் பேணிக் காத்துச் சிறக்க வளர்க்க வேண்டும்.

தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் (குறள் 67)

என்ற குறளில் படித்த சான்றோர்கள் நிறைந்த சபையில் தன் மகனை அல்லது மகளைக் கல்வி, கேள்விகளில் சிறந்தவர்களாக ஆக்குவதே முதற் கடமையாகும் என்று கூறியுள்ளார்.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது (குறள் 68)

என்ற குறளில் குழந்தைகள், தம்மைவிடச் சிறந்தவர்களாக விளங்குவது, செயலாற்றுவது, சேவை செய்வது முதலியவை அனைத்து உயிர்களுக்கும் இன்பம் தருவதாகும் என்று கூறுகின்றார்.

## பெற்றோர் அடையும் இன்பம்

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் (குறள் 64)

என்பதனின்று தம்முடைய சின்னஞ்சிறு குழந்தைகளின் பிஞ்சுக் கைகளால் பிசைந்த உணவு பெற்றோருக்கு அமுதத்தைவிட இனிமையைத் தரும் என உணரலாம்.

மக்கள்மெய் தீண்டல் உடற்குஇன்பம் மற்றுஅவர்
சொல்கேட்டல் இன்பம் செவிக்கு (குறள் 65)

என்ற குறளில் தம் குழந்தைகளின் உடலினைத் தொடும் பொழுது பெற்றோர்க்கு இன்பம் உண்டாகும். அவர்களின் மழலைச் சொல் கொஞ்சும் மொழி கேட்டால் செவிக்கு இன்பம் உண்டாகும்.

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர் (குறள் 66)

என்ற குறளில் தனது குழந்தைகளின் மழலைச் சொல் கேளாதவர் களே, யாழ் ஓசையும் குழலோசையும் இனிது என்பர் என்கிறார்.

## மக்கள் கடமை

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே அவன்
நல்லவன் ஆவதும், தீயவன் ஆவதும்
அன்னை வளர்ப்பினிலே

என்ற உடுமலை நாராயண கவியின் பாடலுக்கிணங்க அன்னை தன் குழந்தையைப் பேணி வளர்க்கிறாள். மூழ்கி முத்தெடுக்க வேண்டும்.

மகன் தந்தைக்குஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல் (குறள் 70)

என்ற குறள்வழி செயலாற்ற வேண்டும்.

உதாரணமாய்ச் சிரவணன் பிதிர் பக்தி நாடகத்தை எடுத்துக் கொள்ளலாம். சிரவணன் தன்தாய் தந்தைக்குச் செய்யும் பணிவிடைகளைப் பார்த்து நம் தேசப்பிதா காந்தி வியப்பெய்தினார்.

ஈன்றபொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (குறள் 69)

என்ற குறளில் தன் மக்களை, குழந்தையைப் பிறர் பாராட்டக் கேட்கும்பொழுது ஈரைந்து திங்கள் அங்கமெலாம் நொந்து, கருவறையாம் கர்ப்பக்கிரகத்தில் காத்து தன் குழந்தையைப் பெற்ற மகிழ்ச்சியைவிடப் பன்மடங்கு தாய் மகிழ்ச்சி அடைவாள் என்று கூறுகிறார்.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள் 60)

என்ற குறளில் நல்ல மனைவியைப் பெறுவதே மங்கலம். நல்ல மக்களைப் பெறுவது அதற்கு அணிகலன்களாகும். மகுடத்திற்கு மணி முடி சூட்டுவது போன்றதாகும் என்கிறார்.

## நிறைவான வாழ்க்கை

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள் 231)

என்ற குறள்வழி வறியவர்க்கு உதவ வேண்டும்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (குறள் 72)

என்ற குறள்வழி எல்லோரிடத்தும் அன்புடன் பழகவேண்டும். தம் உடலையும் பிறர்க்கு உரிமையாக்கி அன்புடன் வாழ வேண்டும் என்றார்.

## தெய்வமே உதவும்

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் (குறள் 1027)

என்ற குறளில் முயற்சியைக் கைவிடாமல் முயல்வோர்க்கு தெய்வம் தானே உதவி செய்யும் என்கிறார்.

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு *(குறள் 1025)*

என்ற குறள் பிறர் பழி கூறாமல், குற்றம் இல்லாமல், குடிப் பெருமை குன்றாமல், வாழ்பவரை உலகத்தார் தன் சுற்றமாக்கிக் கொள்வார்கள் என்று கூறுகின்றது. இது போன்ற நல்லாண்மை இல்லறத்தை நடத்த வேண்டும்.

*நல்லறமாகத் திகழுதல்*

கற்புடுத்து அன்புமுடித்து நாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்டு - மக்கள் பேறு
என்பதோர் ஆக்கமும் உண்டாயின் இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு *(பா. 81)*

என்ற நீதிநெறி விளக்கப் பாடலில் கற்புடைய மனைவி, நல்ல குணங்கள் அமையப் பெற்ற மனைவி, மக்களைப் பெற்ற ஒப்பற்ற செல்வம், அவளை மனைவியாய் அடைந்த கணவனுக்கு அந்த இல்லறமே சிறந்த நல்லறமாகும்.

நொறுங்குபெய்து ஆக்கிய கூழ்ஆர உண்டு
பிறங்குஇரு கோட்டோடு பன்றியும் வாழும்!
அறம்செய்து வாழ்வதே வாழ்க்கை! மற்றுஎல்லாம்
வெறும் பேழை தாழ்க்கொளீஇ யற்று *(பா. 168)*

என்ற அறநெறிச்சாரப் பாடலில் அறம் செய்து மக்கள் வாழவேண்டியது இல்வாழ்க்கை ஆகும். அவ்வாறு வாழாதவர் வாழ்க்கை யாதும் இல்லாத பெட்டியைப் பூட்டி வைப்பது போன்றதாகும் என்று கூறப்பட்டுள்ளது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் *(குறள் 50)*

என்ற குறளில் வாழ வேண்டிய முறைப்படி வாழ்ந்தால் அவனைத் தெய்வமாய் மதிப்பர் என்று கூறுகிறார் வள்ளுவர். இதிலிருந்து நாம் உணரும் உண்மை யாதெனின் மனிதரே தெய்வங்களைப் படைக்கின்றான் என்பதாகும். இதை வள்ளுவர் ஆணித்தரமாக உணர்த்துகின்றார்.

*நிறைவுரை*

வினை, உயிர், கட்டு, வீடு இன்ன விளக்கித்
தினைஅனைத்தும் தீமைஇன் றாகி - நினையுங்கால்

புல்லறத்தைத் தேய்த்து உலகினோடும் பொருந்துவதாம்
நல்லறத்தை நாட்டும் இடத்து (பா. 8)

என்ற அறநெறிச்சாரப்பாடலில் நல்லறத்தை நிலைநாட்ட விரும்பினால் அந்த நல்லறம், வினை, உயிர், பாசம், வீடுபேறு ஆகிய நான்கினையும் உணர்த்தி, சிறிதளவும் தீமை இல்லாததால் தீய செயல்களை அழித்து உயர்ந்தோர் ஒழுக்கத்தோடு பொருந்த வாழ்ந்து, இல்லறத்தை நல்லறமாக, நல்லாண்மையாக ஆக்குவதாகும் என்று கூறப்பட்டுள்ளது.

குறள் 1026இல் கூறியுள்ளது போல் தான் பிறந்த குடும்பத்தின் பொறுப்பு, சுமை, தானே ஏற்றுக் கொள்வது சிக்கல்களைத் தீர்ப்பது, இனிய வாழ்க்கை நடைபெறத் தொடர்ந்து முயற்சிப்பது, அறிவியல் பணிகளில் கருத்தைச் செலுத்தி இல்லாண்மையை நல்லாண்மை ஆக்க முடியும் என்பது கருத்து.

## துணை நூல்கள்


1. டாக்டர் சேயோன், திருக்குறள் அமுதமொழி, 2002, ப. 320
2. இலலிதா சுந்தரம், திருக்குறளில் கலைகள், 2001, ப. 160.
3. இலலிதா சுந்தரம், வள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறிகள், 2001, ப. 298
4. திருச்சி மாநாடு, கருத்தரங்கக் கட்டுரைகள், 2000
5. மெய்யப்பன், நீதிநெறிவிளக்கம், 1993, ப. 76
6. என்.இ. இராமலிங்கம், நல்லாண்மையும், இல்லாண்மையும், 1997, 95
7. அறநெறிச்சாரம், வாசன் பதிப்பகம், 1993, ப. 194.


※ ※ ※

# வள்ளுவ இல்லறம்

இரா. முருகன்

மனித சமூகம் சார்ந்த வாழ்வியல் நிகழ்வுகளே இலக்கிய ஆக்கங்களாகப் படைக்கப்படுகின்றன. இப்படைப்புகள் தனிமனிதனையோ சமூகத்தையோ பாடு பொருளாகக் கொண்டு இலங்குகின்றன. மனிதனின் வாழ்க்கையைப் பற்றிப் பேசுபவை ஒரு வகையாகவும், வாழ்வியல் நெறிகளை அல்லது விதிகளைப் பற்றிப் பேசுபவை மற்றொரு வகையாகவும் என இவ்விலக்கிய வகைகளை இரண்டாகப் பகுக்கலாம். வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றம், காலத்தின் தேவை போன்ற காரணங்களால் முதல் வகை இலக்கியங்கள் சமூகத்தில் நிலைகுன்றிப் போய் விடுகின்றன. வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றம் வாழ்வியல் கோட்பாடுகளில் ஏற்படுவதில்லை. எனவேதான் இரண்டாம் வகைப் படைப்புகள் காலம் கடந்து நிற்கின்றன.



தமிழிலக்கிய வரலாற்றிலேயே வாழ்வியலைப் பிழிந்து இலக்கியம் கண்ட பெருமை வள்ளுவரையே சாரும். இந்தி இலக்கியம், மலையாள இலக்கியம் என்று

மார்தட்டிக் கொள்ளும் மனிதர்களுக்கு மத்தியில் மொழி, இனம், நாடு என இவற்றைத் தாண்டி உலகம் முழுவதுமே போற்றக் கூடிய உலகப் பொதுமறையாய் விளங்குவது தமிழரின் திருக்குறளே எனில் மிகையாகா.

உறுதிப் பொருட்கள் நான்கனுள், முதல் மூன்றும் மண்ணுலக வாழ்வைப் பற்றியன. மண்ணுலக வாழ்வு என்பது உலகப் பந்தமாகிய 'குடும்பம்' பற்றியது. இதனை வள்ளுவர் 'இல்லறம்' எனும் சொல்லாடல் மூலம் புலப்படுத்திச் செல்கிறார். வள்ளுவம் சுட்டும் இல்லறவியல் குறித்த செய்திகளை இவண் நோக்கலாம்.

## குடும்பம்

தனிமனித நிலையிலிருந்து கூட்டு வாழ்வை ஏற்படுத்திக் கொண்ட அமைப்பு சமூகம். இச்சமூகத்திற்கும் தனி மனிதனுக்கும் இடையேயான உறவை விளக்குவதே சமூகவியல் (Sociology). மனித சமூகம் சார்ந்த முக்கிய நிகழ்வுகளைச் சமூகவியல் அறிஞர்கள், "சமூக நிறுவனங்கள்" எனக் குறிக்கின்றனர். இதில் திருமணம் முதன்மையானதாகக் கருதப் படுகிறது. இதுவே குடும்பம் எனும் அமைப்பிற்கு அடிப் படையாகிறது.

கணவன், மனைவி மற்றும் குழந்தைகள் சேர்ந்த ஓர் ஒழுங்கான கூட்டமைவே குடும்பம். இது சிறப்பாய்ச் செயல்பட வேண்டுமானால் ஒவ்வொருவரும் தத்தம் பணியைச் செம்மையாகச் செய்ய வேண்டும். வள்ளுவரின் காலம் கூட்டுக் குடும்பம் நிலைபெற்றிருந்த காலமாக இருக்க வேண்டும். எனவேதான் சமூகத்தின் சிறு அங்கமான குடும்பத்தை ஒட்டுமொத்தச் சமூகத்துடன் இணைத்துப் பேசுகிறார் (குறள்கள் 42, 23).

இல்லற வாழ்வில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழவேண்டும். அவ்வாழ்க்கையும்கூட அறவழியில் அமைய வேண்டும் என்பதில் மிகுந்த முனைப்புடன் இருந்துள்ளார். "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' எனும் தொடர் இதனை உறுதி செய்கின்றது. எனவே இல்வாழ்வின் பயனாக அன்பையும், அறத்தையும் குறிக்கின்றார். இல்வாழ்க்கையை அறவழியில் மட்டுமே கொண்டுசெலுத்தினால் அது மகிழ்வான வாழ்க்கையாக இல்லாமல் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் மட்டுமே செல்லும் கட்டாய வாழ்வாக முடிந்துவிடும். அல்லது இல்வாழ்வில் அறம்

தவறுதல் என்பது தன்னை மீறிய ஒன்றாகவும் நிகழ்ந்துவிடும். எனவே அன்பை முதன்மைப்படுத்தி அறத்தைப் பின்னுக்குத் தள்ளுகிறார் (குறள் 45). ஆக வள்ளுவரின் பார்வையில் குடும்ப வாழ்வு என்பது அறவழியை அடியொற்றியது என்றாலும் அதன் நோக்கம் இன்பத்தை முதன்மைப்படுத்தியதாய் இருக்க வேண்டும் என்பதேயாகும்.

## குடும்பத் தலைவனின் இயல்புகள்

ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படையாய் விளங்குபவர் குடும்பத் தலைவர். குடும்பத்தின் உயர்வும், தாழ்வும் அவரைச் சார்ந்தே அமையும். எவ்வித எதிர்பார்ப்பும், பொறுப்பும் இல்லாத இளைஞன் ஒருவன் திருமணமானதும் தனக்கென்று சில பொறுப்புகளை ஏற்கிறான். அதுவரை தனிமனிதனாக இருந்த அவன் மணமானதும், சமூக ஒழுங்கமைவுக்குக் காரணமாகிறான். அதுமுதல் தான் எனும் நிலையை விடுத்துப் பிறருக்காகச் செயல்பட ஆரம்பிக்கிறான். சுயநலம் மட்டுமே தேடும் குடும்பத் தலைவனை வள்ளுவர் படைக்கவில்லை. மாறாக இல்லறத்தானுக் குரிய தனித்த சில பண்புகளைச் சுட்டுவதன் மூலம் சமூக நலனில் (பொதுநலனில்) அக்கறையுள்ளவனாகவே குடும்பத் தலைவனைப் படைத்துக்காட்டுகிறார். இல்வாழ்க்கை என்ற நிறுவனம்தான் மனிதன் பிறருக்காக வாழவேண்டும் என்ற உணர்வை உண்டாக்குகிறது என்பதை இதன் வழி உணர்த்திவிடுகிறார்.

பெண்களைப் போலவே ஆண்களும் கற்புநெறி தவறாது, ஒருத்தியுடன் மட்டுமே வாழவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார். இதன் காரணம் பற்றியே "பிறனில் விழையாமை" எனும் அதிகாரத்தை யாத்துள்ளார். பிறனில் விழைதலாகிய அறமற்ற செயலைச் செய்வதனால் பகை, பாவம், அச்சம், பழி போன்றவற்றை ஏற்க வேண்டியிருக்கும் என்கிறார். பகை, பழி, பாவம் போன்றவை தவறு செய்வதனால் ஏற்படும் பின்விளைவுகள். ஆனால் அச்சம் (பயம்) என்பது தவறு செய்வதற்கு முன்னர்த் தோன்றவேண்டிய ஒரு மெய்ப்பாடு. இதனை, தவறு செய்தற்குப் பின்னர் ஏற்படும் உணர்வாகக் காட்டியிருப்பது சிந்திக்கற் பாலது. இங்கு வள்ளுவர் சுட்டிய அச்சம் என்பது முறையற்ற உறவினால் வரும் ஆட்கொல்லி நோய் (Aids) குறித்த அச்சமாகவே இருந்திருக்க வேண்டும்.

இவ்வகையான பழி, பாவம் ஏதுமில்லாத குடும்பத்தலைவன் துறந்தவர், தென்புலத்தார், தெய்வம்,

விருந்தினர், சுற்றத்தார் போன்றோர்களுக்குரிய கடமைகளைச் செய்து அன்பு, நடுவுநிலைமை, ஒழுக்கம், பொறுமை, ஈகை போன்ற நற்பண்புகளையும் பெற்றிருக்க வேண்டும் என்கிறார். குடும்பத்தின் ஒழுங்கமைப்புதான் நாட்டின் ஒழுங்கமைவுக்கு மூலமாக அமைகிறது. வள்ளுவர் குடும்பத்தை நாட்டின் முன் மாதிரியாகவே (Ideal) கண்ணுறுகிறார். எனவேதான் நெறிதவறாது அறவழியில் நடக்கும் மன்னனுக்கு இணையாக, வீட்டை ஆளும் குடும்பத் தலைவரைத் தெய்வமாகக் குறிக்கிறார். இல்லறத்தை முதன்மைப்படுத்தும் வள்ளுவரின் உயர் நோக்கத்தினை இதன் வழி உணரலாம்.

## இல்லாளின் பண்புகள்

இல்லத்தின் அறத்தை வழிநடத்திச் செல்பவள் இல்லாள். இவள் மனைவிக்குரிய நற்குணம் கொண்டவளாய் இருப்பதோடு கணவனின் வருவாயறிந்து வாழ்வு நடத்தி விருந்தோம்புபவளாய் இருக்க வேண்டும். "அன்பு காரணமாகத் தான் அடைந்த கணவனுக்கு வாழ்க்கைத் துணைவியாய் அவன் சொல்வழி நின்று, அவனைத் தெய்வமாகக் கொண்டொழுகும் ஒருத்தியும், அவ்வாறே அவளைத் துணைவியாகக் கொண்டு அவளுக்கு வழித்துணையாய், மற்றவர்களுக்கெல்லாம் உற்றவிடத்து உறுதுணையாய், அறவழி நிற்பான் ஒருவனும் ஒன்றுபட்டு, ஒருவரை ஒருவர் விட்டு நீங்காது வாழவேண்டும் என்பதே திருக்குறளின் துணிபாகும்" என்பர் மொ.அ. துரை. அரங்கசாமி.

இல்வாழ்வுதான் அழியாப் புகழைத் தரும். ஒருவனுக்கு அமையும் மனைவியானவள் கற்புநெறியில் தன்னைக் காத்துக் கொண்டு, தன் கணவனோடு பிள்ளைகளையும் காக்க வேண்டும். அதோடு தாய்வீடு மற்றும் புகுந்த வீடு ஆகிய இருவீட்டாரின் புகழையும் காப்பவளாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் தன் வாழ்வில் வள்ளுவர் சுட்டிய வாழ்நெறியைப் பின்பற்றினால் இல்வாழ்க்கை என்பது இன்பமாக இருக்கும். இல்லற வாழ்வில் பேதம் பார்க்காது கணவனைத் தெய்வமாகக் கருத வேண்டும் (குறள் 55). மனிதர்கள் சுயநலவாதிகள். தெய்வம் மட்டும்தான் நன்மை, தீமைகளுக்குச் சரியான பலனைக் கொடுக்கும். கடவுள் - பக்தன் நிலையில் கணவன், மனைவி உறவு இருக்க வேண்டும். இந்த உறவு மட்டும்தான் என்றும் பிரியாதது. பிரிக்க முடியாதது. எனவேதான் வள்ளுவர் இச்சொல்லாடலைப் பயன்படுத்தியுள்ளார். ஆணுக்குப் பெண் சரிசமமாக விளங்கும்

தற்காலச் சூழலையும் மனத்திற்கொண்டு, புரிதல் மற்றும் விட்டுக் கொடுத்தல் போன்ற பண்புகள் இலாமையால் குடும்ப வாழ்வில் ஏற்படும் விரிசல்களுக்கு (Divorce) அன்றே தீர்வு சொல்லியுள்ளார் வள்ளுவர் எனில் மிகையில்லை.

## மக்கட்பேறு

உலகில் பெறக்கூடிய செல்வங்களில் எல்லாம் உயர்வானது மக்கட்பேறு. அதிலும் அறிவிற் சிறந்த நன்மக்களைப் பெறுதல்தான் உண்மையான செல்வம் என்கிறார். மக்கட்பேறு என்பதில் பிள்ளைகளுக்குப் பங்கில்லை. மாறாக முழுப் பொறுப்பையும் பெற்றோர்களின் மேல் சார்த்தி விடுகிறார். அவரவர்கள் செய்யும் வினைப் பயனையே காரணமாக்குகின்ற தோடு பண்பில்லாத மக்களைப் பெறுவதால் ஏழேழு பிறவிக்கும் துன்பம் தொடரும் என்கிறார். இதன்வழி மக்களிடையே அறச் செயல்களைச் செய்யும் நல்லெண்ணத்தை விதைக்கிறார். தந்தையைப் போன்ற பழக்க வழக்கங்களும் செயல்பாடுகளும் இல்லையென்றால் மகனின் பிறப்பில் ஐயம் தோன்றலாம் என்கிறார். தான்பெற்ற பிள்ளையை யாரும் ஐயுறமாட்டார். பிறர் சந்தேகிக்கவும் விடமாட்டார். பிறப்பு முறையில் மரபணு நெறியாகச் சில குறைகள் இருப்பது இயல்பு. இந்நிலையை (அறவழியிலான) வளர்ப்பு முறையால் போக்க வேண்டும் என்பதனை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறார்.

அவையத்து முந்தியிருக்கச் செய்து, சான்றோன் எனக் கேட்டு மகிழ்கின்றவர்களாய்ப் பெற்றோர்களை முதன்மைப் படுத்தும் வள்ளுவர் பிள்ளைகளுக்கென்றும் சில கடமைகளைச் சுட்டுகிறார். இதன்வழி அறவழியில் ஒழுகி உலகோர் போற்றும் சான்றோனாகப் பிள்ளைகள் சிறந்து விளங்க வேண்டும் என்றும் பிள்ளைகளின் உயர்நிலையின் மூலம் பெற்றோர்களின் உன்னத நிலையை உயர்த்த வேண்டும் என்றும் சுட்டுகிறார்.

மேற்கண்டவற்றிலிருந்து பின்வரும் முடிவுகளைப் பெறமுடிகின்றது.

* உறுதிப் பொருட்கள் மூன்றையும் இல்லறத்திற் காகப் படைக்கிறார்.
* இல்வாழ்க்கையை அறவழியில் நடத்தச் செய்து நாட்டு நலனுக்கு வழி கோலுகிறார்.

- இன்றைய நவீன சமூகத்திற்கும் பொருந்துகின்ற கருத்துகளை அன்றே கூறியுள்ளார்.
- உலகின் தேவை அனைத்தையும் இல்லறம் என்பதிலேயே அடக்கிவிடுகிறார்.

## துணை நூல்கள்

1. டாக்டர் மு. வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. மொ.அ. துரை அரங்கசாமி, திருக்குறள் நெறியும் திருவள்ளுவர் நெறியும், பாரி நிலையம், சென்னை, ப. 65.

※ ※ ※

# அறன் எனப்படுவது......?

கமலா சுதன்

ஆயிரம் உண்டிங்கு நூல்கள். ஆயினும் திருக்குறளுக்கு ஈடாக உலகில் எந்த நூலையும் கூறமுடியாது. திருக்குறளைப் போல் ஒட்டு மொத்தமாய் வாழ்க்கையைக் காட்டக்கூடிய இன்னொரு நூல் இன்று வரை தோன்றவில்லை என்கின்றனர் ஆய்வு மேற்கொண்ட அறிஞர்கள். குடும்ப வாழ்வின் சிறப்பே அறம் செய்து வாழ்வது தான் என்கிறார் திருவள்ளுவர். அறம் செய்யத் துறவறம் சிறந்த வழி என்று பல்வேறு மதங்களும் வலியுறுத்துகையில் இல்லறத்தில் இருந்து கொண்டே அறம் செய்து வாழலாம் என்று அழுத்தமாய்க் கூறிய ஒரே நூல் திருக்குறள். துறந்தார் பெருமையையும், அறத்தையும் முன் நிறுத்தி இல்லறத்திற்கான இயல்புகளை அடுக்கடுக்காய் அள்ளித் தந்திருக்கிறார்.



## அன்பும் அறனும்

தாமரைப் பூவிலே தேன் எடுத்துச் சந்தன மரத்திலே கட்டப்பட்ட கூட்டிலே வைத்த தேன் போன்றது இல்லற வாழ்வு

என்பது சங்கப் புலவர் வாக்கு. நல்ல கணவனும், நல்ல மனைவியும் இணைந்து நடத்தும் இல்லறமே வீடுபேற்று இன்பம். கணவன் - மனைவி பிரித்தால் பொருள் தராத இரட்டைக் கிளவி போல் வாழ வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் பாவேந்தரின் "குடும்ப விளக்கு" போல் இருக்க வேண்டும். அவர்கள் பெற்று எடுக்கும் பிள்ளைகளோ நாற்சீர் போல் ஆண்பிள்ளையும், முச்சீர் போல் பெண் பிள்ளையும் இருக்க வேண்டும் என்று குறளையே உதாரணம் காட்டி மகிழ்கிறார் இரா. இளங்குமனார். கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் குறையாமல் அன்பு செலுத்திக் கருத்தொருமித்துப் பிறருக்குச் செய்யும் அறமே பண்பும், பயனும் உடையதாயிருக்கும் என்கிறார் திருவள்ளுவர்.

## இல்லது என்? இல்லவள் மாண்பானால்

மனைவியின் சிறப்பே இல்வாழ்வின் சிறப்பு என்பதால் மனையையும் இல்லத்தையும் ஆளும் சிறப்பு அவளுக்கு உண்டு. அன்பு, அமைதி, அடக்கம், அறம் குடி கொண்ட பெண் மனையை ஆளுகிற போதுதான் வீடு அருமையாய் இருக்கும். மனைவி என்பவள் எல்லாவிதக் குணநலன்களும் உடையவளாக அமைந்துவிட்டால் மதியாதவர்கள் முன்கூட ஓர் ஆண் ஏறு போல் பீடு நடை போடலாம். 1330 அருங்குறள்களில், ஒன்றில் கூட வள்ளுவர் பெண்ணை இழித்துக் கூறவில்லை. அறத்துப் பாலில் பெண்ணின் பெருந்தக்க யாவுள? எனும் கேள்வியை எழுப்பி (54), பொருட்பாலில் பெண்ணே பெருமை உடைத்து (907) என்று சுட்டிகாட்டி, இன்பத்துப்பாலில் பெண்ணின் பெருந்தக்கது இல் (1137) எனப் பெண்ணின் பெருமையை நிலை நிறுத்துகிறார்.

## தம்மின் தம்மக்கள் அறிவுடைமை

பெண் என்பவள் அமிழ்தத்தால் ஆனவள். இல்லற வாழ்வில் அவள் உலகிற்கு வழங்கும் மக்கள் அமிழ்தம் என்றும், அம்மக்கள் பேசும் சொல் அமிழ்தம் என்றும், அவர்கள் கைபட்ட உணவும் அமிழ்தம் என்றும் மொத்தத்தில் உயிர் தளிர்க்கச் செய்வது அமிழ்தம் என்கிறார். மாநிலம் சிறக்க மக்கட்பேறு வேண்டும் அதுவும் அறிவறிந்த மக்களைப் பெறுவதே பெரும்பேறு. நம் சொத்தாய்க் குழந்தைகள் வேண்டும் அவர்கள் தம்மைவிட அறிவாளியாய் அமைந்து விட்டால் பெற்ற பொழுதைவிடப் பெரிய இன்பம் காணலாம் (1105, 61, 63, 64, 68, 69).

### அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு

உடம்புக்கு உயிர் வேண்டும். அந்த உயிருக்கு ஓர் உயிராக அன்பு வேண்டும் (80). உடலும் உயிரும் போல் அன்பும் வாழ்க்கையும் வேண்டும். அன்பைப் புரிந்து கொண்டால் உடம்புகூட உனக்குச் சொந்தமில்லை (72). இது அன்புக்குக் குறள் தரும் அருமையான விளக்கம். அன்பு நிறைந்த இல்லத்தில் சிக்கல்கள் வர வழியில்லை.

### அகன் அமர்ந்து செய்யாள் உறையும்

இல்லறத்தை நல்லறமாய்ப் போற்றி வாழகூடியவன் விருந்தினரை முதலில் உபசரித்துப் பின் எஞ்சிய உணவைத் தான் உண்டு மகிழ்வோடு வாழ்வான். அவனுடைய நிலத்தில் விதைகூட விதைக்கத் தேவையில்லை. அப்படியென்றால் அவனுடைய நிலம் எப்படி விளையும்? தாம் வாழ்ந்த காலத்தில் இல்லறத்தில் சிறந்து விளங்கிய வள்ளல்கள் பலரை வள்ளுவர் நேரில் கண்டிருக்கிறார். அவர்கள் விருந்தினரைப் போற்றுவதிலேயே உழைப்பும் நேரமும் கழிந்து விடுவதைக் கண்ட வள்ளுவர் ஓர் உண்மையை புரிந்து கொண்டார். விருந்து உபசரிப்பவர்கள் தங்கள் நிலங்களைத் தாங்களே உழுது பயிரிடுவதில்லை. விருந்துண்டு செல்பவர்கள் நன்றிக் கடனாக உழுது பயிரிட்டுச் செல்வதை அறிந்தார். அது அளித்த வியப்பே கலை நயத்துடன் குறளாக (85) வெளிப் பட்டது.

### ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

மனைவியைப் போல் கணவனுக்கும், கற்பு நிலையானது என்பதை, உன் மனைவியைப் பார், அவளைப் போல் நீயும் கற்புடையவனாய் நடந்து கொள் என்று

> **ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
> **தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு** *(குறள் 974)*

என்ற குறள் மூலம் சுட்டிக்காட்டுகிறார். இல்லறத்தில் ஒழுக்கத்தை இருவருக்கும் பொதுவாய் வைத்தார். நல்ல குடியில் பிறந்து பழி பாவங்களுக்கு அஞ்சி நடந்து தன் குடியை உயர்வு செய்பவன் பெருமையைப் போல் உலகில் வேறெதுவும் இல்லை என்கிறார் திருவள்ளுவர்.

### லுக்கிரிஷிசும் திருவள்ளுவரும்

"மனத்துக் கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்" என்ற வள்ளுவரின் கருத்தை லுக்கிரிஷிஸ் என்ற கவிஞர், மனித

உரிமைகள் என்ற அடிப்படையில் சாதி, சமயம், மொழி, இனம், நாடு ஆகியவற்றைக் கடந்த நிலையில் மனித இனத்தின் நன்மையை மட்டும் கருத்தில் கொண்டு "தூய உள்ளம் உடையவர்களே உலகில் நலமாக வாழ முடியும் என எடுத்துரைக் கிறார்". சமய எதிர்ப்பாளரான இவருடைய கவிதைகளில் புலன்கள் ஆன்மா, உள்ளம் ஆகியவற்றால் வரம்பில்லா இன்பத்தை நுகர்ந்து மகிழ்வதற்குரிய நெறி முறைகள் இடம் பெற்றுள்ளதால் அறங்கூறும் அறவோராகத் தோன்றாமல் சிற்றின்பவாதியாகக் காட்சியளிக்கிறார். காதலைப் பற்றி அவர் கூறும் கருத்து அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதன்று. ஒருவன் ஒருத்தியைக் காதலித்து அவளோடு தன் வாழ்க்கைய இறுகப்பிணைத்துக் கொண்டு வாழ்வது இக்கவிக்குப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றுகிறது. தெருவில் திரியும் பொதுமகளிர் தரும் இன்பம் எளிதில் கிடைக்கக் கூடியது, துன்பமற்றது என்பது லுக்கிரிஷஸ் சித்தாந்தம். ஆனால் வான்மறை தந்த வள்ளுவரோ, ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த குறிக்கோள் வாழ்வினை அறத்துப்பாலிலும், இன்பத்துப் பாலிலும் வலியுறுத்திக் கூறுகிறார். வரைவின் மகளிர் தரும் இன்பத்தை (913) மிகவும் இழித்துக் கூறுகிறார். பெண் உரிமைக்குப் பெரிதும் குரல் கொடுத்த தந்தை பெரியார்,

> பெண்ணைக் கொள்ள ஆணுக்கு உரிமையிருந்தால் ஆணைக் கொள்ளப் பெண்ணுக்கும் உரிமை வேண்டும்; ஆணைத் தொழுதெழப் பெண்ணுக்கு நிபந்தனை இருந்தால் பெண்ணைத் தொழுதெழ ஆணுக்கும் நிபந்தனை இருக்க வேண்டும்

என்றார். புலனுகர்ச்சியால் பெறுவது மகிழ்ச்சி. உள்ளத்தால் பெறுவது மனநிறைவாகிய இன்பம். இதனை மனநலம் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். "அறத்தான் வருவதே இன்பம்" என்ற வள்ளுவர் மனிதன் நலமாகவும் இன்பமாகவும் வாழ்வதற்குத் தேவையான அறநெறியினை வகுத்துக் காட்டியுள்ளார். ஆனால் மனித வாழ்க்கையின் இலட்சியம் அதைவிட உயர்ந்தது. அதை அடைவதற்குரிய வழிமுறைகளை வள்ளுவத்தில் வகுத்துக் காட்டியுள்ளார். வள்ளுவரின் அறநெறிக் கோட்பாடு ஒப்புயர்வற்று விளங்குகிறது.

## இன்ப வாழ்வு

இல்லற வாழ்விற்கு அறம் பொருள் இன்பம் இம்மூன்றும் தேவை.

> தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
> அம்மா அரிவை முயக்கு (குறள் 1107)

கணவனை மனைவியோ, மனைவியைக் கணவனோ பிரிந்து இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டாலும் ஒருவர் நெஞ்சில் ஒருவர் நீங்காமல் நிறைந்து இருக்க வேண்டும். முன்னும் பின்னும் கூடாமலும் குறையாமலும் இருபுறமும் பாரம் சமமாக இருக்கக் கூடிய காவடியைப் போல் கணவன், மனைவி இருவரும் குடும்பப் பாரத்தைத் தாங்க வேண்டும் (1196). இருவரும் ஒருவருக்கு ஒருவர் குறையாத விருப்புடையவராக அமைந்து நடத்தும் இல்வாழ்வுக்கு ஈடு இணையில்லை (1193). அத்தகைய இல்வாழ்வு விதையில்லாக் கனியை விரும்பி சுவைப்பது போல் என்கிறார் பொய்யா மொழியார் (1191).

வாய்ச் சுவைக்கு இனிப்பும் காரமும் தேவைப்படுவது போல் இல்லற இன்பத்திற்கு ஊடலும் அதன்பின் கூடலும் வளர் நிலைத் தேவை (1330). அது மட்டுமல்ல உப்பு போல் ஊடலும் அளவோடு இருத்தல் வேண்டும். கூடினால் இரண்டுமே கெட்டுப் போகும் (1302). உடற்கலப்பைக் காட்டிலும் உள்ளக் கலப்பே உயர்ந்தது. "புணர்ச்சி பழகுதல் வேண்டா" (785) என்ற குறள் இதனை அறிவுறுத்துகிறது. கணவன் மனைவியைச் சேர்த்து வைக்கும் காதலை வானவில் என்ற அறிஞர் அண்ணா இன்பம் இல்லாத இல்லம் ஓர் இருண்ட வீடு, அதனால் இடரும், இன்னலும் அதிகரிக்கின்றன. தந்தி தளர்ந்த வீணையிலிருந்து இனிய நாதம் எங்ஙனம் கிளம்ப முடியும்? என்றார்.

நாம் உதவி செய்து வாழ்ந்தால்தான் உயிர் வாழ்வதாக பொருள் (ஒத்ததறிவான் உயிர் வாழ்வான்). நீர் நிறைந்த ஊருணியாக, பயன்மரமாக இருப்போம். பசித்தவனுக்கு உணவு கொடுப்போம். நேற்றுவரை எப்படியோ, இன்றாவது புகழோடு தோன்றுவோம்.

அருளை வாழ்வில் சேர்த்து இருளை நீக்க வேண்டு மென்றால் திருக்குறள் படித்து இல்லறத்தை நல்லற மாக்குவோம்.

## துணை நூல்கள்

1. மங்கள மனையறம், இரா. இளங்குமரனார் உரை, பக். 10, 14 - 17, 20, திருவள்ளுவர் தவச்சாலை வெளியீடு, 2000.
2. நெய்வேலி, முத்தமிழ்ச் சான்றோர் பேரவை நடத்திய சொற்பொழிவில் இரா. இளங்குமரனார் உரை, 2003.

3. திருக்குறள் நீதி இலக்கியம், (இலத்தீன் மொழி நீதி இலக்கியம்), முதற் பதிப்பு - 1971, இரண்டாம் பதிப்பு - 1977, மு. வரதராசனார், சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு, பக். 201 - 203, 284, 385.

4. பொன் மொழிகள், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா முதற்பதிப்பு - 1995, மறுபதிப்பு - 2002, சரவணன் ஆப்செட் பிரிண்டர்ஸ், பக். 33, 45.

5. திருக்குறள், 49, 1106, 64, 61, 63, 68, 69, 80, 72, 85, 92, 974, 34, 913, 55, 1193, 1191, 1330, 1302, 785, 214, 215, 216.

※ ※ ※

# திருவள்ளுவர் கண்ட இல்லறச் சமூகம்

கா. காந்தி

மனிதன் தன் இனத்தொடு கூடி வாழக் கற்றுக் கொண்ட காலத்தில் உண்டான மாற்றங்கள், வளர்ச்சிகள், ஒற்றுமைகள், முரண்கள், கோட்பாடுகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மனித இனப்பண்பைக் கூறுவது சமூகம் என்பர். பண்டை வாழ்வியல் கருத்துகள், பழக்கவழக்கங்கள், பயன்கள் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், ஆக்கத்திற்கும் சான்றுகளாக இருந்தன. பல இல்லங்கள் இணைந்ததே சமூகம். முதலில் இல்லறத்தில் அறத்தை வளர்த்துப்பின் அதைச் சமூகம் முழுவதும் பரவச்செய்தல் என எண்ணிய வள்ளுவர் அறத்துப்பாலில் முதற்கண் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு என இல்லறத்தில் உறுப்பினருக்கு இருக்க வேண்டிய நல்லுறவைக் கூறும் அதிகாரங்களை அமைத்துள்ளார். காமத்துப்பாலிலும் இல்லறத்தின் உறவுகளும் உணர்வுகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.



### சமூகம்

சமூகம், சமுதயம், சமுதாயம், சமூகம் என்ற நான்கு சொற்களுக்குத் தமிழ் லெக்சிகன் தமிழ் அகராதியில் கூட்டம் அல்லது திரள் என்று பொருள் உள்ளது. சமூகம் என்பதற்கு ஒரு சாதி அல்லது ஒரு இனத்தார் என்று பொருள் கொள்கின்றனர். இந்த ஆய்வு சமூகம் என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தி மக்கள் கூட்டத்தின் பொதுவான சிந்தனையை வெளிப்படுத்த முற்படுகிறது.

### இல்லறம்

இல் + அறம் = இல்லறம் என்ற சொல் அமைப்பானது வீட்டிலிருந்து அறவாழ்க்கையை மேற்கொள்வதாகும். இதனைச் சமூகவியலார் 'குடும்பம்' என்ற சொல்லின் மூலம் விளக்குவர். திரு.வி.க. 'இல்லறம்' என்ற சொல்லுக்குப் பின்வருமாறு விளக்கம் தருகிறார். "அறம் என்பது ஒரு மரம் போன்றது. திருமணம், பிள்ளைப்பேறு, அன்பு, விருந்தோம்பல், ஒழுக்கம், பொறை, ஒப்புரவு, ஈகை, அருள், தவம், வாய்மை, துறவு, மெய்யுணர்வு முதலான அம்மரத்தின் உறுப்புகளாகிய வேர், பட்டை, கவடு, கோடு, விளார், தளிர், இலை, மலர், காய், கனி முதலியன போன்றன. இவ்வறக்கூறுகள் யாவும், பிறந்து வளர்ந்து பயனளிக்க வேண்டிய தாயகம் இல்லறமாகும்" என விளக்குகிறார். மேற்கூறிய கருத்தைக் கொண்டு இல்லறம் என்பது ஒத்த ஒழுக்கமுடைய கணவன், மனைவியாகிய இருவரும் ஒருவருக்கொருவர் தம் வாழ்க்கையில் இன்பதுன்பங்களைப் பங்கிட்டுத் தம் சந்ததிகளான குழந்தைச் செல்வத்தைப் பேணிக் காத்து கணவன், மனைவி, குழந்தை, மூவரும் சமூகக் கடமையைப் பின்பற்றுவது இல்லறம் ஆகும்.

### இல்லற வாழ்க்கை

திருமணம் புரிந்து இல்லறத்தை நடத்துவது இன்பத்திற்காக மட்டும் அன்று, அறத்திற்காகவுமே. இன்பம் விலக்கப் படுவதன்றெனினும் அறம் மறக்கத்தக்கதும் அன்று. இரண்டும் இணைந்ததே இல்லற வாழ்க்கையாகும். இல்லறத்தோர் பலருக்குத் துணையாக நின்று உதவுதற்குரியவர் என்பதை இல்வாழ்க்கையின் முதலிரு குறள்கள் காட்டும்.

> **இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
> **நல்லாற்றின் நின்ற துணை** *(குறள் 41)*

இல்லறத்தோடு கூடி வாழ்பவன் என்று சொல்லப்படுவன், இயல்பாகவே தன்னைச் சார்ந்திருக்கும் பெற்றோர், மனைவி, மக்கள், ஆகிய மூவர்க்கும் சிறந்த துணையாக இருப்பவனாவான்.

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை** *(குறள் 42)*

துறந்தவர்களுக்கும், வறுமையாளர்களுக்கும், யாருமின்றித் தன்னிடம் வந்து இறந்தவர்களுக்கும் இல்வாழ்வான் என்பவன் துணையாக இருக்கக் கூடியவன். மேற்கூறப்பட்டுள்ள ஒவ்வொரு குறளிலும் மூவகையினர் குறிப்பிடப்படுகின்றனர். முதற்குறளில் இயல்புடைய மூவர் என வள்ளுவர் தொகை, வகையாக மூவரைக் குறிப்பிட்டார். அடுத்த குறளில் துறந்தார், துவ்வாதார், இறந்தாரெனப் பிற மூவகையினரைக் கூறினர். இவ்விரு குறள்களுக்குமே பலவாறு பொருள் கூறப்படுகிறது.

இனி, துறந்தார், துவ்வாதார், இறந்தார் என்பன யாரைக் குறிப்பன என வெவ்வேறு பொருள்கள் கூறப்படுகின்றன. காலத்திற்கேற்றவாறு உரையாசிரியர்கள் வேறுபட்டுக் கூறியுள்ளனர். துறந்தார், என்பதற்குப் பொதுவாக இருவிதமாகப் பொருள் கொள்ளப்படுகிறது. துறந்தோர் துறவியரே என்பதொன்று. களை கண்ணானவரால் துறக்கப்பட்டோர் என்பது மற்றது. மேற்கூறிய பொருளின்படி கணவனால் துறக்கப் பட்ட பெண், பெற்றோரால் துறக்கப்பட்ட குழந்தைகள் ஆகியோரை இச்சொல் குறிக்கும். துவ்வாதார், வாழ்க்கையில் இன்பங்களை நுகர இயலாத நிலையிலிருப்பவர் என்பது தெளிவுபடுத்தப் படுகிறது. மிக்க வறுமையினாலோ குருடு, செவிடு, முடம் முதலான உடற்குறைகளினாலோ, நோயினாலோ, அறிவுக் குறையினாலோ பொருள் தேடவும் வாழ்க்கையின் வளங்களை நுகரவும் இயலாத நிலையிலுள்ளோரே துவ்வாதார் ஆவர்.

இறந்தார் என்பதற்கு மரித்தோர் எனவும் இல்வாழ்க்கை வாய்ப்புகளை இழந்தோர் எனவும் பொருள் கூறப்படுகிறது. மரித்தோர்க்குரிய கடன்களைச் செய்தலும் இல்வாழ்க்கை வாய்ப்புகளை இழந்தோர்க்கு உதவுதலும் கூட இல்லறத்தாரின் கடனாகும். துறவியர்க்கு வேண்டுவனவற்றை அளித்து ஆதரித்தலும் இல்வாழ்வோர் கடமை என்பது வள்ளுவர் கருத்து. இக்கருத்து பல இடங்களில் கூறப்படுகிறது.

**துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்**
**மற்றை யவர்கள் தவம்** *(குறள் 263)*

இல்லறத்தினை மேற்கொண்டவர்கள் துறவிகளுக்கு உணவு முதலான கொடுத்து உதவவேண்டித் தவம் செய்வதை மறந்து விட்டார்கள் என்று வலியுறுத்தி தவம் என்னும் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். துறவறவியலுள்ளும் உரையாசிரியர்கள் சிலர் துறவியரை இயல்புடைய மூவரில் ஒருவர் எனவும் சிலர் 342வது குறளில் குறிப்பிடப்படும் துறந்தோர் எனவும் கொண்டனரே யன்றித் துறவியரை ஆதரித்தல் இல்லறத்தோர் கடன் என்பது அனைவருக்கும் உடன்பாடாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காவியங்களும் துறவியரை வரவேற்று உணவளித்துப் போற்றுதலை ஒரு சிறந்த அறமாகப் போற்றுகின்றன. இதனை,

> அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
> துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
> விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை *(சிலம்பு 16. 71-73)*

என்று சிலப்பதிகாரம் விளக்குகிறது. துறவோர்க்கெதிர்தல் இங்குக் குறிப்பிடப்படும் நான்கு அறங்களில் ஒன்றாகும்.

"மணிமேகலை காவியத்தலைவி சென்ற பிறவியில் சாதுக்கரன் என்னும் துறவியை வரவேற்று உணவளித்துப் பின் இறக்கும்போது அச்செயலை நினைத்த நல்வினையின் பயனாகவே அப்பிறவியில் பலருக்கு உணவளிக்கத் தக்கதாக அமுதசுரபியைப் பெற்றாள் எனக் கூறப்படுகிறது. துறவியரை உபசரித்தல் அக்காலத்துச் சிறந்த அறமாகப் பலராலும் கருதப் பட்டது. சங்ககாலப் புலவர்கள் துறவோரை வரவேற்று வணங்கு மாறு அரசர்க்கு அறிவுரை கூறியுள்ளதைப் புறநானூறு,

> இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
> நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே *(புறம் 6:19-20)*

என விளக்குகிறது. இவ்வாறு அக்காலத்தில் பரவியிருந்த கருத்தையொட்டியே வள்ளுவரும் துறவோரை உபசரித்தல் இல்லறத்தோர்களின் கடமைகளில் ஒன்று"[2] என வலியுறுத்தி யுள்ளார்.

## இல்லறத் தலைமை

இல்லற வாழ்க்கை என்றாலே தலைமைப் பண்பு கணவனாகிய தலைவனுக்கே உரியதாக உள்ளது. ஆனால் வள்ளுவத்தில் இல்லறம் நடத்தும் முழுமைப் பங்கு யாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது ஆய்வுக்குரியது. 'இல்வாழ்க்கை' அதிகாரத்தில் ஆண்களுக்கே முதன்மையிடம் கொடுப்பதைப் போலத் தோன்றும். குடும்பத்தார் கடமை பொருளீட்டல்.

பெண்ணுக்குரிய கடமை வருவாய்க்குத் தகுந்தவாறு குடும்பத்தை நடத்துதல் இருவருக்குமான பொதுக்கடமை தம்மக்களை உரிய வழியில் வளர்த்தல். அவர்கள் செய்ய வேண்டிய கடமைகள் பற்றி வலியுறுத்தும் போது, இருவருக்கும் சமமாகவே விரித்துரைக் கிறார். சான்றாக, இல்லத்தலைவியும், தலைவனும் இணைந்துதான் விருந்தினர்களை உபசரிக்க இயலும் என்ற மரபை, கடமையாகக் குறிப்பிடலாம். அதுபோலத்தான், குடும்பத் தலைவியும் தலைவனும் இணைந்து தெய்வத்தை வணங்குதல், குடும்பத் தலைவி கணவனை வணங்கும் இயல்புடையவளாக இருப்பதால், அவன் தலைவனுக்குத் தாழ்ந்தவளாகக் கருதப்பட மாட்டாளா என்ற வினா எழுவது இயல்பாகும். வள்ளுவத்தில் இடம்பெறும் குடும்பத்தலைவி தன்னுடைய கணவனின் உயர்வால்தான் தன் குடும்பத்திற்குச் சிறப்பு உண்டாகிறது என எண்ணுகிறாள். அவ்வுயர்ந்த எண்ணமே, கணவனைத் தன்னிலும் உயர்ந்தவனாக அவளை எண்ணச் செய்கிறது. அந்த எண்ணத்தின் வெளிப்பாடே தாழ்ந்து விளங்குதலாக மாறுகிறது. வள்ளுவர்க்குக் குடும்பத் தலைவியைத் தலைவனை விடத் தாழ்ந்தவள் என்று சுட்டுவது நோக்கமில்லை. இருவருக்கும், குடும்பத்தில் சமபங்கு கொடுக்க வேண்டும் என்பதே அவரின் கருத்தாகும். வள்ளுவர் குடும்பக் கடமைகளைப் பொதுவாய்ச் சுட்டுகிறார். சில கடமைகள் இருவரும் தனித்துச் செய்ய வேண்டியதாகும். அவற்றை மட்டும் பிரித்துக் குறிப்பிடுகின்றார்.

குடும்பத் தலைவிக்குத் தன்னையும், தன் கற்பையும் காத்துக் கொண்டு தன் கணவனையும் தம் மக்களையும் காத்தல் இன்றியமையாதது. பொது இடங்களில் கணவனை ஏறுபோல் பீடுநடை உடையவனாக நடக்கச் செய்கிறாள். காரணம், குடும்பத்தைச் செம்மையுற நடத்துவதால், மற்றவர்களின் முன்னிலையில் சிறப்பைப் பெறுகிறான் குடும்பத்தலைவன். இத்தகு சிறப்புப் பொருந்திய குடும்பத் தலைவியே குடும்பம் சிறக்கத் துணையாக இருப்பாள். அவள் எல்லாக் கடமைகளிலும், அறநெறிகளிலும், கணவனுக்கு எப்போதும் துணையாக இருப்பதினால்தான் 'வாழ்க்கைத் துணைநலம்' என ஓரதிகாரம் வகுத்து அதில் வாழ்க்கைத் துணையின் சிறப்பினை வலியுறுத்துகிறார்.

### மக்கள் பேறு

பெற்றோர் தம்மக்களையே பெரும் பொருளாய்க் கருதுதல் வேண்டும். இல்லங்கள்தோறும் குழந்தைகள் செல்வமாய்க் கருதப்படவேண்டும் என்பதே வள்ளுவர் கருத்தாகும். பச்சிளங்

குழந்தைகளால் பெற்றோர் பெறும் இன்பத்தை அவர் மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளதைக் கீழே காணலாம்.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ் *(குறள் 64)*

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு *(குறள் 65)*

குழலினிதி யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் *(குறள் 66)*

சிறுகுழந்தை கையில் தொட்டளைந்த உணவு கூழேயாயினும் பெற்றோர்க்கு அது அமுதத்தைவிட இனியதாய் இருக்கும். குழந்தைகளை அணைத்தல் அல்லது குழந்தைகள் வந்து தம்மேலணைதல் பெற்றோர்களுக்கு உடற்கின்பமாகும். குழந்தைகளின் சொற்களைக் கேட்டல் செவிக்கின்பமாகும். தம்மக்களின் மழலைச்சொல் கேளாதவரே குழலோசை இனிமை யுடையதாயிருக்கிறது யாழோசை இனிமையுடைய தாயிருக்கிறது என உணர்கின்றனர். "இவ்வாறு புனைந்து ரைத்த வள்ளுவர் பெற்றோர் குழந்தைகளை எத்தகைய அன்புடன் பேணி வளர்த்தல் வேண்டுமென எதிர்பார்ப்பார் என்பதை ஊகிக்கலாம். மேலும் பெற்றோர் தாமே குழந்தைகளைத் தூக்கியும் உணவூட்டியும் மொழி பயிற்றியும் வளர்ப்பதையே விரும்புவார். குழந்தைகளைப் பெரும்பாலும் தாதியர் அல்லது பணியாட்கள் பொறுப்பில் விடுவதை விரும்பமாட்டார் எனலாம்.

இளங்குழந்தைகளினால் பெற்றோர் அடையும் இன்பத்தைப் பலவாறு புகழ்ந்து பாராட்டுதலும் குழந்தைகளைச் செல்வமாய்ப் போற்றுதலும் பண்டைக் காலத்தில் எங்கும் பரவியிருந்த இயல்பேயாகும். புறநானூற்றில் பாண்டியன் அறிவுடைய நம்பியும் பலவகை வளத்தையுடையோராய், நாட்டிலுள்ள பலருடன் உண்ணும் செல்வர்கட்கும் இடையே குறுகுறுவென நடந்து வந்து, கையை நீட்டி, நெய்யுடைய உணவினை, இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும் மெய்பட விதிர்த்தும் உள்ளத்தை மயக்கும் மக்கட்செல்வம் இல்லாவிடின் அவர் தம் வாழ்நாளிற் பயனில்லையெனப் பாடினான் (புறம் 188). 'குழவிதளர் நடைகாண்டலினிதே' அவர் மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே' என்றெல்லாம் குழந்தைச் செல்வத்தை[3] இனியவை நாற்பது என்னும் பதினெண்கீழ் கணக்கு நூல் குறிப்பிடுகிறது.

பெற்றோர் இளங்குழந்தைகளை மிகவும் பாராட்டி அன்புடன் வளர்த்தல் இயல்பு என வள்ளுவர் எண்ணினார். அத்துடன் அவர்களை நல்லறிவுடையவராகக் கல்வியில் சிறந்தவராக, நற்பண்புகள் வாய்ந்தவராக வளர்த்தல் வேண்டு மென்று எதிர்பார்த்துக் குறளில் வரும் நன்மக்கட் பேறு, அறிவார்ந்த மக்கட்பேறு, 'பண்புடைய மக்கள்' என்ற தொடர்களைச் சுட்டிக் கூறியுள்ளார்.

## இல்லறத்தின் சிறப்புகள்

காமத்துப்பாலில் காதல் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் வள்ளுவர் அதே பகுதியிலேயே குடும்ப வாழ்க்கையைச் சேர்த்துக் கூறுவதை விட்டுத் தனியாக அறத்துப்பாலில் இல்வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இதற்கு விளக்கமாகத் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' எனும் நூலில் "காமத்துப்பாலில் காதலர் ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்து வாழும் வாழ்க்கையைக் காண்கிறோம். ஆனால், அறத்துப்பாலின் இல்வாழ்க்கையில் காண்பது வேறு. காதலர் இருவரும் தம்மை மறந்து பிறரிடத்தில் செலுத்தும் அன்பு ஆண், பெண் இருவரின் இருவேறு மனங்கள் ஒன்று மற்றொன்றில் கரைந்துபோகும் தன்மையைக் காமத்துப்பால் கூறுகிறது. கணவனும் மனைவியு மாகிய இருவர் ஒரு மனம் உடையவராய் உலக நன்மை கருதி வாழும் தன்மையை இல்லறம் காட்டுகின்றது.

இல்லறம் நடத்தும் கணவனும், மனைவியுமாகிய இருவரும் ஒத்த மனம் உடையவர். ஆகையால் இன்பதுன்ப உணர்வுகளையும் மற்ற மனநிலைகளையும் மறைத்து வாழும் வாழ்க்கைக்கு இல்லறத்தில் இடமில்லை. ஒருவர் குறை மற்றொருவருக்கு நன்கு புலப்படும். ஆகையால், இன்னும் தெளிவாக மனநிலை விளங்க இடமுண்டு. மனம் வாழும் நிலையையும் அதற்குரிய அறநெறியையும் தனிவாழ்க்கை வாயிலாக விளக்க வந்த வள்ளுவர், முதலில் இல்வாழ்க்கையைக் குறிப்பிட்டு[4] பிறகு அதன் சார்பானவற்றையும் விளக்கியுள்ளார்.

"அறத்துப்பாலில் இல்லறம், துறவறம் என்ற இருபெரும் பிரிவுகளில் அனைத்துச் சிறப்புகளையும் கூற விரும்புகிறார் முப்பாலார். இல்லறம் அமைப்பதற்கு முன்பு காதலர் மேற்கொள்ளும் களவு வாழ்க்கைக்கும் அறத்துப்பாலுக்கும் நேரடித் தொடர்பில்லை. இரண்டாவது, தலைவன், தலைவி இருவரிடையே அமையும் களவு, கற்பு ஆகியவை பற்றிக் கூறும்போது காமம் சுவையானதாகும். அவர்கள் துணையுடன் நிகழ்பனவற்றைப் பற்றிக் கூறும் பகுதியே இல்லறவியல். இதுவும்,

தலைவன்-தலைவியிடையே உருவான கற்பு வாழ்வே எனினும், ஊடல், கூடல் முதலான இன்பச் சுவைகளை இப்பகுதியில் கூறுவதைத் தவிர்க்க வேண்டியே, காமம் தவிர்த்த பிறவற்றைப் பிற்பகுதி குறிப்பிடும். குடும்பம் என்ற அமைப்பின் அனைத்துச் செய்திகளையும் அறத்துப்பாலில் வள்ளுவர் கூறுகிறார். களவு வழிக்கற்பு வாழ்க்கை, நேரடிக் கற்புவாழ்க்கை எதுவாயினும் ஒரு குடும்பம் எவ்வாறு நடைபயில வேண்டுமென்பதை இல்லறவியல் பகுதி கூறுகிறது"[5] எனவே, 'குடும்பம்' பற்றிய இல்லறவியற் செய்திகள் பொதுவானவை என்று வலியுறுத்தியுள்ளார்.

## முடிவு

திருவள்ளுவர் தந்த இல்லற அமைப்பில் ஈடுபடும் தலைவனும் தலைவியும் ஒருவருக்கொருவர் உயர்ந்தவர்கள் இல்லை. பெண்ணைத் தாழ்மைப்படுத்திக் கூறவேண்டிய நோக்கமுமில்லை. எனவே குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும் இருவரும் சமபங்கு உடையவர்களாகவே கருதப்படுகின்றனர். தாயின் அரவணைப்பால் மழலைச் செல்வங்களைப் பேணிக் காப்பது சாலச் சிறந்தது என்று குழந்தை வளர்ப்புப் பற்றி வலியுறுத்தியும், இல்லறத்தாருடைய கடமைகளையும் உள்ளத்துணர்வுகளையும் சமூக நோக்கில் நுணுகி ஆய்ந்துள்ளார் என்பது இவ்வாய்வுக் கட்டுரைமூலம் தெளிவுபடுத்தப்படுகிறது.

## அடிக்குறிப்புகள்

1. திரு.வி.கலியாணசுந்தரம், பெண்ணின் பெருமை (அ) வாழ்க்கைத் துணை, சென்னை 1975, ப. 203.
2. காமாட்சி சீனிவாசன், குறள் கூறும் சமுதாயம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1975, ப. 60.
3. மேலது ப. 79.
4. மு. வரதராசன், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பாரிநிலையம், சென்னை, 1959, பக். 315-316.
5. தாமரைச்செல்வி, திருக்குறள் காட்டும் தமிழர் சமுதாயம், செயராம் பதிப்பகம், புதுச்சேரி, 2001, ப. 59.

※ ※ ※

# வளமான இல்லறத்திற்கு வள்ளுவர் தரும் காமத்துப்பால்

**வாசுகி**

திருக்குறள் ஒரு தெய்வநூல், உலகப் பொதுமறை நூல் என்று ஒருசேர அனைவரும் கூறுகின்றனர். அதை அறம், பொருள், இன்பம் என அழகாகப் பாங்காகப் பிரித்து வாழ்க்கைக்கு அடிப்படைத் தத்துவத்தை, எந்நாட்டவர்க்கும், எவ்வினத்தவர்க்கும், எம்மொழியினர்க்கும், அன்றும், இன்றும், என்றும் பொருந்தும் வகையில் திருவள்ளுவர் படைத்ததால்தான் இதனை உலகமே ஏற்றுக் கொண்டுள்ளது. அதனால்தான் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூலில் திருக்குறள் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. முதல் நூல் இரண்டும், சமய நூல் என்கின்ற போது, திருக்குறள் ஒன்றுதான் அதிகமான எண்ணிக்கையில் மொழிபெயர்க்கப்பட்ட வாழ்வியல் நூலாகும்.



வள்ளுவர் இந்த வாழ்வியல் நூலில் இல்லறம் என்னும் நல்லறத்தில் வளமாக, நலமாக வாழும் வழிகளைக் காமத்துப் பாலில் கச்சிதமாகச் சித்திரித்திருக்கின்றார்.

காமத்துப்பால் ஓர் உயர்வான, சிறப்பான பகுதியாகும். ஆனால் காமம் என்ற சொல்லைத் தவறாகப் புரிந்து கொண்டு அதைப் படிக்காமலே இருந்தவர் பலர்; இருப்பவர் பலபேர். "கமம் நிறைந்து இயலும்" என்றார் தொல்காப்பியர் (தொல். சொல். உரி. 355). மனத்தில் நிறைந்த இன்பமாகிய கமம் என்பது காமம் என்று மாறியிருக்கலாம். அது பிறகு குறிப்பிட்ட ஒரு பொருளில் உடல் வழி உள்ளம் பெறும் இன்பம் என்ற பொருளில் காலப்போக்கில் வழக்காற்றில் வந்திருக்கக்கூடும். உண்மையான அன்பைத் தெய்வத்தின் மேல் காட்டும்போது "காதலாகிக் கசிந்து" என்று தானே மாணிக்கவாசகர் பாடியிருக்கின்றார். "எனைத்து ஒன்று இனிதே காண் காமம்தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல்" என்று வள்ளுவரும் வளமாகக் கூறியுள்ளார். ஓரறிவிலிருந்து, ஆறறிவு வரை உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் உண்டாகும் இயற்கையான உணர்ச்சியே காமம் ஆகும். இது உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவானதாகும். இதனையே,

> எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும் (தொல்.பொருள். பொருளியல் 29)

என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

இந்த இன்பம் என்ற காமம் இல்லையெனில் உலகத்தோற்ற மில்லை. காமம் என்பது ஆழ்ந்த அன்பின் அடிப்படையில் உண்டாவது. ஆனால் பிற்காலத்தில் இது தவறான பொருளில் பயன்படுத்தும் நிலையைப் பெற்றது. நாற்றம் என்ற சொல் தொடக்கக் காலத்தில் நறுமணம், வாசனை என்ற பொருளில் பயன்பட்டது. ஆனால், அந்தத் தமிழ்ச் சொல், வாசம் என்ற வடசொல் புகுத்தப்பட்டபோது எதிர்மறைப் பொருளுக்குத் தள்ளப்பட்டது. ஆக இழிவுப் பொருளைப் பெற்றது. சரசம் (சரசலீலை) என்ற வடசொல் தமிழில் நுழைந்த பிறகு காமம் என்ற சொல் இழிவுப் பொருள் பெறும்படி சீரழிக்கப்பட்டது. மிருகத்தன உணர்வு, விலங்கின் வற்புறுத்தும் உடல் அணைவு - என்ற பொருளுக்கு அது உரிமையாக்கப்பட்டது. மற்றொரு காரணமும் சொல்லலாம். வாத்சாயனர் என்ற வடமொழி நூலாசிரியர் காமசூத்திரம் என்ற நூலை எழுதினார். அன்பின் ஐந்திணை என்ற தமிழின் கோட்பாட்டிற்கு மாறாகப் பெண்ணின் விருப்பத்திற்கு எதிராக ஆண் அவளை வலிந்து பணியவைத்து இன்பம் நுகர்தல் போன்ற, அப்புணர்வுக்குப் பொருந்தாத பல செய்திகளை அந்நூலில் அவர் கூறியுள்ளார். ஆகவே காமசூத்திரம் என்ற வடசொல்லின் அடிப்படையில் தமிழ்ச்

சொல்லான 'காமம்' என்பதற்குத் தாழ்வான பொருளைப் பலரும் உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டனர். இதன் காரணமாகவும் 'காமம்' என்ற சொல் வெறுத்து ஒதுக்கப்படும் நிலைமையைப் பெற்றது. காமத்தின் அடிப்படையில் இணையும்போது, அன்பு வலுப்படுகிறது, வாழ்வின் உறுதியான அடித்தளமாகின்றது. அந்த வகையில் கணவனும், மனைவியும் உயிரும், உடலுமாகப் பிரிக்க இயலாப் பந்தத்தால், கட்டுண்டு பின்னிப் பிணைந்துவிடுகின்றனர். இதைத்தானே 1122ஆம் குறளில் திருவள்ளுவர் தெளிவாக்கு கின்றார். அப்படிப்பட்ட பிணைப்பால் பிறந்த குழந்தைகளும், மக்கள் செல்வங்களும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காத ஆழ்ந்த அன்பினைப் பெற்றவர்களாக இருக்கின்றார்கள். அதனால்தான் Blood is thicker than water என்று கூறுவர். அதைவிட வலுவாக நடைமுறைப் பழமொழி Sex is thicker than blood என்பதை அனுபவத்தில் உணரலாம். மேலும் காம இன்பம் மேலுலக இன்பத்தைவிட உயர்ந்தது என்று கருதியதால்தான் தொல்காப்பியம் 'காமப்பகுதி கடவுளும் வரையார்' என்றது (புறத்திணை 28). இப்படிப்பட்ட தெய்வீகத் தன்மை கொண்ட காமம் என்ற உயர் நிலைச் சொல், இழிநிலை உணர்வாக மாற்றம் பெற்றது. உண்மைப் பொருளான உயர்நிலைக் காதலையே காமத்துப்பால் என அமைத்தார் திருவள்ளுவர்.

வள்ளுவர் காமத்தைப் பொது இன்பம் எனக் கூறாது நிலை பேரின்பம் என்கின்றார். "காமம்" உயர் நிலை இன்பச் சொல்லாகும். காலத்தின் கோலத்தால் பெருமை குன்றிச் சிறுமை கொண்டமையால், காமத்துப்பால், இன்பத்துப் பாலாகிவிட்டது என்பதுதான் உண்மை. ஏனென்றால் இன்பம் என்பது பொதுவானது. ஆனால் காமம் என்பது கணவனுக்கும், மனைவிக்கும் மட்டுமே ஏற்படும் உண்மை அன்பின் நிறைவாகும். அதனால்தான் இன்பம் என்ற சொல்லாட்சி மூன்றாம் பாலில் இரண்டு தடவைதான் கையாளப்படுகின்றது. அதே சமயம் காமம் என்ற சொல்லோ 46 இடங்களில் இடம்பெற்றுள்ளது. அது மட்டுமல்ல; இன்பம் இடம்பெற்ற இடத்தில் காமமும் இணைந்தே இடம் பெற்றுள்ளதன் மூலம் (1166, 1130) காமத்தின் பெருமையைப் பூரணமாக உணரலாம். ஆக இல்லறத்தின் அடித்தளமே 'காமம்'தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

காமத்தால் ஒன்றிணைவதே இல்லறமாகும். இயற்கையில், ஆண்பால், பெண்பால் என இருபால் படைத்து, இவ்விருபாலார் இணைவதற்கு அடிப்படைப் பாலமாகப் பால் உணர்வைப் படைத்து, துய்க்கும் வகையினையும் இயற்கையாக, இயல்பாக,

வைத்து உலகையே சுழற்சியுடன் இயங்கச் செய்யும், அற்புதப் படைப்பாற்றலின் விந்தையே விந்தை. ஆக, காமம் என்பது ஜீவசக்தி. இது உன்னத உந்து சக்தி. உயிரினங்கள் அனைத்துக்கும் தேவையான இச்சாசக்தி. ஆண்டவன் அளித்த தெய்வீக சக்தி.

அந்த உயிர்ச்சக்தியால் இல்லறத்தை, இயற்கையாக, இயல்பாக, தெய்வீகமாகக் கொண்டு வாழ்பவர், வாழ்வில் சிறப்படைய எண்ணுபவர்கள் எல்லோரிலும் தலைசிறந்தவ ராவர் என்று

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை** *(குறள் 47)*

என்ற குறளில் தெளிவாக்குகின்றார். இல்வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவை அன்பான, சிறப்பான, உயர்வாக வாழ்க்கைத் துணை நலம். அதனால்தான் இல்வாழ்க்கைக்கு அடுத்து, வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தை உணர்ந்து வைத்துள்ளார். அதனை வாழ்க்கைத் துணைவி, அல்லது வாழ்க்கைத் துணைவன் என்று பால்பிரித்துக் கூறாது, பொதுவாக வாழ்க்கைத்துணை என்றார். கணவனுக்கு மனைவி துணை, மனைவிக்குக் கணவன் துணை என்பதனால் பொதுவாக இப்படிப் பகர்ந்துள்ளார். இப்படிக் காமத்தால் கணவன் மனைவி இணைந்து அதன் பயனாகப் பரிசாகக் கிடைக்கும் மக்கள் செல்வத்தைப் பெறுவதும், கணவன், மனைவியின் முக்கியக் கடமை என்பதை "தம்பொருள் என்பதம் மக்கள்" என்ற குறள்வழி உணரலாம். அதனால்தான் வாழ்க்கைத் துணை நலத்துக்கு அடுத்த அதிகாரமாக "மக்கள் பேறு" என்று சரியாகக் கணித்து, அதிகாரத்தை வகைப்படுத்தியிருக்கிறார். இந்த இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு என்ற மூன்றுக்கும் அடிப்படைத் தேவை அன்பு. அதனால் தான் அன்புடைமையை அடுத்த அதிகாரமாக அமைத்துள்ளார்.

ஆகவே அன்பினால், கணவன், மனைவி என்ற உடலும், உயிரும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. உடலில்லாது உயிர் இருக்க முடியாது உயிரில்லாது உடல் இயங்க முடியாது.

உயிரில்லா உடல் பிணம். உடலில்லா உயிர் ஆவி. தனித்தனியாகக் கடனாற்ற முடியாது. கணவன் இல்லாமல் மனைவி இல்லை. மனைவி இல்லாமல் கணவன் இல்லை. இந்தத் தொடர்பு பிரிதல் அறியாத் தொடர்பு. இந்தத் தொடர்பு பிரிக்க இயலாத் தொடர்பு. உடல் உயிர் பிணைந்த தொடர்பு. இதனை,

**உடம்பொடு உயிரிடை என்னமற்ற அன்ன**
**மடந்தையொடு எம்மிடை நட்பு** *(குறள் 1122)*

என்கிறார். ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வதே, இணைபிரியாது வாழ்வதே, இல்லறம் காட்டும் நல்லறமாகும்.

கணவன், மனைவி கூடும் வாழ்வில் ஐந்து வகை நெறிப்பாடுகள் திணைகளாக உள்ளன. அவற்றைப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்று தொல்காப்பியர் வழங்கினார் (அகத் 14). அப்படி ஒவ்வொரு திணைக்கும் 5 அதிகாரங்களாக 25 அதிகாரங்களைத் தந்துள்ளார் வள்ளுவர்.

புணர்தல் என்கின்ற காம உணர்வில் ஒருவரை ஒருவர் புகழ்ந்து, மகிழ்ந்து அன்பைப் பரிமாறி வாழ்வது இல்லறமாகும். அன்பைப் போற்ற வேண்டும். அன்பை வாரி வழங்க வேண்டும். அப்படிப்பட்ட அன்பான வார்த்தை களால் நன்மை பயக்குமே யன்றித் தீமை பயக்காது. இன்பத்தில் பேரின்பம் பிறக்கும். வள்ளுவத் தேவனார் பெண்களைக் குறிப்பிடும்போது பொருளாள், மகளிர் மடந்தை, மடவார், மலரன்ன கண்ணாள், மனை, மனையாள், மாணிழை, மாதர், வாழ்க்கைத் துணை, அணியிழை, அரிவை, ஆயிழை, இல், இல்லாள், இவள், ஒண்தொடி, ஒண்ணுதல், ஒளியிழை, கண்ணிறைந்த காரிகை, குறுந்தொடி, சேயிழை, திருநுதல், துணை, பனிமொழி, பூவண்ணக் கண்ணாள், பெண், பெண்டகை, பெண்டிர் பேதை, அசையியல், அசைவலி என்றெல்லாம் அன்பாக அழைக்கச் சொல்லித் தருகிறார். ஒவ்வொரு சொல்லும் பொருள் நிறைந்ததாகும். இவற்றில் சில, பெண்ணின் சிறப்பை உணர்த்துகின்றன. ஒரு சில அவளுடைய கடமையை அறிவிக்கின்றன. மனையாள், இல்லாள் என்ற சொற்கள் வீட்டின் அனைத்துப் பொறுப்புகளுக்கும் அவள் உரியள் என்பதை அறிவிக்கின்றன. துணை, வாழ்க்கைத்துணை ஆகிய சொற்கள், அவள் கணவனுக்கு எல்லா விதத்திலும் துணையாக இருக்கும் கடமையைச் செய்ய வேண்டும் என்பதை அறிவிக்கின்றன.

உதாரணமாக, அசையியல் என்று ஒரு கணவன் அழைத்தால், அம்மனைவி எத்தகைய இனிமையானவளாக இருக்க வேண்டும். அழைப்பவனும் எத்தகைய நய உணர்ச்சிமிக்கவனாக இருத்தல் வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. அதேபோல் அசைவளி என்றழைப்பது அவள் தென்றலாய் விளங்குவதால்தான், தென்றல் போல் அன்ன நடை நடப்பதால்தான். மென்மையாக விளங்குவதால் தான் அவ்வாறு அழைப்பது அவன் கடமை. அந்த அழைப்பைப் பெறுவது அவளின் கடமையாகும்.

அசையியற்கு உண்டுஆண்டுஓர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும் (குறள் 1098)

என்கின்றார் திருவள்ளுவர். இவ்வாறு அழைக்கும் அழகிலேயே அவளின் நாகரிக வாழ்க்கைத்தரம் தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது. வள்ளுவர் கண்ட இரண்டு முத்தான செயல்களாவன:. ஒன்று அவன் நினைக்கின்றான், இரண்டு தன் துணையை நினைத்துப் பூரிக்கின்றான். அவர் பெண்களை மட்டும் வர்ணிக்கவில்லை. அவர் காட்டிய மனைவியால் சுட்டப்படும் கணவன் கொண்கன், கொண்டான், கொழுநன், இனியர், உற்றார், கலந்தார், கள்வன், காதலன், கேள் துணை நச்சியார், நயந்தவர், நயப்பித்தார், பரிந்தவர், பெட்டார், பேணியார், மணந்தார், வீழ்வார், வேண்டியவர், வேந்தர் என்றெல்லாம் காமம் சொட்டச் சொட்ட, இனிக்க இனிக்க வழங்கப்படுகின்றான். இத்தகைய கனிவான சொற்களைக் கேட்கும்போது ஒருவருக்கொருவர் பசைபோல் ஒட்டிக் கொள்ளத்தானே செய்வர். மயக்கத்தகும் சொற்களால் மயங்கத் தானே செய்வர். இதனால் கிடைக்கும் நன்மை என்ன? இவ்வாறு கொஞ்சி அழைக்கும்போது பிணக்கு இருப்பினும் மறந்து, வாழ்வின்பத்தை சுவைபடக் காண்பர் என்பது உறுதி. மேலும் வேறு துணை தேடிச்செல்லும் எண்ணம் ஏற்பட வாய்ப்பேது. எய்ட்ஸ் என்ற நோய் ஏது? ஆகவே அன்பாக, குழைவாக, இனிமையாக அழைப்பது முதல், பழகுதல் வரை பணிந்த மொழியே கனிந்த வாழ்வாகும் என்பதை உணர்த்துகின்றது.

காமம் உடல் சம்பந்தப்பட்டதென்றால் குறிப்பிட்ட காலம் வரை தொடரும். உள்ளம் சம்பந்தப்பட்டது என்றால் இறுதி நாள் வரை தொடரும். உண்மைக் காமம் ஆத்மா சம்பந்தப்பட்டது. இது பிறவிதோறும் தொடரும். இப்படி உடலும், உயிருமாக வாழும் தம்பதிகள் எல்லாப்பிறப்பிலும் இதேபோன்று கணவன், மனைவியாகப் பிறக்க வேண்டும் என்ற எண்ணத்தில்

இம்மை மாறி மறுமையாயினும்
நீயாகியார் எம் கணவனை
யானாகியர் நின் நெஞ்சுநேர் பவளே

என்று (குறுந். 49) பாடப்பட்டுள்ளது. அதனால்தான் தலைவன் இப்பிறவியில் பிரியமாட்டோம் என்றவுடன் அடுத்த பிறப்பில் பிரிவு வரும் என்று எண்ணி அஞ்சிய தலைவியின் கண்களில் கண்ணீர் வருகின்றது. இதே கருத்தை,

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்நிறை நீர்கொண்ட டனள் (குறள் 1315)

என்று செந்நாப்புலவர் செப்புகின்றார். இப்படிப் பிரிவு என்ற சொல்லே அவளை வாட்டுகின்றது என்றால், அது உண்மை காமத்தால் ஏற்பட்ட பிணைப்பேயாகும்.

கணவன் பொருளீட்டும் வகையில், வீட்டின் வறுமையைப் போக்கும் வகையில், மனைவியைப் பிரிந்து செல்கின்றான். ஆனால் மனைவியால் தாங்க முடியவில்லை. பிரிவுத்துயர் குறித்து 100 பாடல்கள் உள்ளன. உதாரணத்திற்கு ஒன்று.

**சிறுமை நமக்குஒழியச் சேண்சென்றார் உள்ளி**
**நறுமலர் நாணின கண்** *(குறள் 1231)*

என்று சிறப்பாகச் செப்புகின்றார் திருவள்ளுவர். தலைவியைப் பிரிந்த தலைவனுக்கும் இதே நிலைதான். உண்மையான அன்பும், ஆசையுமே இப்பிரிவு நோய்க்குக் காரணமாகும். இப்படி ஒத்த எண்ணம் கொண்ட குடும்பமே வள்ளுவருக்குரிய இலட்சிய குடும்பமாகும். தொல்காப்பியக் கணவன் வேறு, திருவள்ளுவரின் இலட்சியக் கணவன் வேறு.

தலைவனைப் பிரிந்து பின் கூடும் இன்பம், பகுத்துண்டலுக்கு நிகரான மகிழ்ச்சி என்கின்றார் நாயனார். படிக்கப் படிக்கத் தீராத நூலறிவு போலத் தீரத்தீரத் தீராதது காமம் என்கின்றார். கல்வியைப் பற்றித் திருவள்ளுவர் பலவாறு வற்புறுத்திக் கூறுகிறார். கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை போன்ற அதிகாரங்களில் தொடர்ந்து எடுத்துரைக்கிறார். அதுமட்டு மன்று. நட்பு என்ற அதிகாரத்தில் "நவில்தொறும் நூல்நயம் போலும்..." (குறள் 783) என்ற குறளை உவமை மூலம் உணர்த்து கிறார். கற்க வேண்டியது ஒருவனுடைய இன்றியமையாத கடமை. இந்தக் கடமையை அவர் காமத்துப் பாலிலும் உவமையாக உள்ளத்தில் நுழைக்கிறார்.

செந்நிற அணிகலன்களை அணிந்த இவளிடம் பொருந்தும் தோறும் காதல் உணர்தல், நூற்பொருள்களை அறிய அறிய அறியாமை கண்டாற் போன்றது என்று அவர் கூறுகிறார்.

**அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு** *(குறள் 1110)*

என்பது அந்தக் குறள். இப்படிப் படிப்புக் கடமையை இன்பத்துடன் இணைத்துக்காட்டுகிறார் அவர். உணவு பங்கிடுதல் போன்று சமமான பங்கேற்புடன் வாழ்வில் ஈடுபட வேண்டும். ஏனென்றால் காமம் இருவருக்கும் பொதுவானது. ஆகையால் கடமை உணர்வோடு பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்ற புதிய பார்வையை, நல்ல பார்வையைப் பொய்யில்

புலவரிடம் காணலாம். பழந்தமிழ்ப் புலவர்களும் பிறரும் ஒரு கடமை உணர்வை மேற்கொண்டிருந்தனர். தம்மிடம் உள்ள உணவைப் பலருக்குப் பகுத்துக் கொடுத்தல் என்பதே அந்தக் கடமையாகும். குமணனிடம் பெரும் பொருள் பெற்றப் புலவர் பெருஞ்சித்திரனார், அதனைப் பலருக்குப் பங்கிட்டுத் தரும்படி தன் மனைவிக்கு அறிவுறுத்துகிறார். இந்தக் கருத்து திருவள்ளுவருக்கு உடன்பாடான ஒன்று. அரசனின் உடமைகள் நான்கு என்றார் அவர். அவை இயற்றல், ஈட்டல், காத்தல், காத்த வகுத்தல் என்பவை. நான்காம் கடமையான காத்த வகுத்தல் என்பது பகுத்துண்ணும் பண்பாடே. "பகுத்து உண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள் 322) என்பது திருவள்ளுவர் காட்டும் கடமை நெறி. பிற்காலத்துக் காரல் மார்க்ஸ் கொள்கையாக வகுத்த அந்தக் கடமையைத் திருவள்ளுவர் காமத்துப் பாலிலும் வற்புறுத்துகிறார். அதை உவமையாகக் காட்டி, உள்ளத்தில் பதிய வைக்கிறார். தன் தலைவியைத் தழுவுதல் தம் வீட்டிலிருந்து, தான் ஈட்டிய பொருளைப் பகுத்துக் கொடுத்து உண்டாற் போன்றது என்று உவமையாகக் கூறி உணர்த்துகிறார்.

தம்இல் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு (குறள் 1107)

என்பது அந்த அருங்குறளாகும்.

இயற்கையான தேவை கொண்ட உடலைப் புறக்கணிக்காது, இரு உடலின் சேர்வில் முழு அன்பினை, இணைத்து வைக்கின்றார் திருவள்ளுவர். தொல்காப்பியம் கூறும் "இன்பம் என்பது தானமர்ந்து வருஉம் மேவற்றாகும்" என்பது எதிர்நிலைப்பாடாகும்.

கணவனும் மனைவியும், விரும்புவராகவும், விரும்பப் படுபவராகவும் இருத்தல் வேண்டும். இப்படி அமைந்த கணவன், மனைவியே காதல் இன்பம் எனப்படும் விதையில்லாப் பழத்தைப் பெற்றவர் ஆவர். இந்த உயர் கருத்தை, "தாம் வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே காமத்துக் காழ்இல் கனி" (குறள் 1191) என்ற குறளில் தெரிவிக்கிறார். 1192, 1193 குறள்களிலும் இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றார். இப்படி எத்தனையோ அற்புதமான கருத்துகள் குறளில் கொட்டிக் கிடக்கின்றன. ஒருவரிடம் ஒருவர் ஊடல் கொள்ளும்போது அங்குச் சினம் இல்லை, வெறுப்பு இல்லை. குறும்புத்தனமான இன்பமே நிழலாடுகின்றது. அவ்வூடலைக் கணவனும் சுவைக்கின்றான்; விரும்புகிறான்; இன்புறுகிறான். என்பதை,

**ஊடுக மன்னோ ஒளிஇழை யாம்இரப்ப**
**நீடுக மன்னோ இரா** *(குறள் 1329)*

என்ற பாடலில் திருவள்ளுவர் தெளிவுறுத்துகின்றார்.

**ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்**
**கூடியார் பெற்ற பயன்** *(குறள் 1109)*

என்ற குறளில் பிணங்குவது, பின் உணர்வது, பின் கூடி இன்பம் பெறுவது, சிறந்த இணையர்பெறும் தெய்வீகப் பயன் என்றும் குறிப்பிடுகின்றார்.

அறநூல் எழுதிய செந்நாப்போதார் குடும்பத் தலைவனும், நாட்டின் தலைவனும் பரத்தர்களாக வாழ்வதை விரும்பவில்லை. பெண்மைக்குரிய பரத்தை என்ற சொல்லுக்கு ஆண்பால் சொல்லைச் சங்க இலக்கியம் எடுத்துக் கூறவில்லை. திருக்குறளே 'பரத்தன்' என்ற ஆண்பால் சொல்லை உருவாக்கியுள்ளது.

**பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு** *(குறள் 1311)*

என்ற குறள் மூலம் காமத்தில் ஆணாக இருப்பினும் பெண்ணாக இருப்பினும் ஒரே அளவுகோல் கொண்டு அறிந்து ஆண் கற்பினையும் வலியுறுத்தியது பெரிதும் போற்றுதற்குரியது.

பொய்யா மொழியார், தெய்வத் திருக்குறளில் காமத்துப் பாலில் முறையான இல்லறமே நல்லது என்றார். காமமே இல்லற வாழ்க்கைப் பிணைப்பின் உண்மை இரகசியம் என்பதை உணர்த்தி அதன் மூலம் தெய்வீகத் தன்மை கொண்ட இல்லறம் என்ற நல்லறம் பெறலாம் என்பதை உணர்த்துகின்றார். அதனை அவரவர், அவரவர்கள் வாழ்வில் கடைப்பிடித்து, நல்வழியில் வாழ்ந்து எய்ட்ஸ் இல்லா நல்வாழ்வு வாழ்வோமாக.

※ ※ ※

# இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை

அ. தேவகி
து. மதியழகன்



மனிதன் விண்ணைத் தொடுமளவிற்கு உயர்ந்து விட்டான்; வேற்றுக் கிரகங்களுக்குச் செல்லும் நிலைக்கும் வித்திட்டு விட்டான்; நினைத்தபடி எல்லாம் சாதித்து விட்டான்; நிழலான கற்பனைகளுக் கெல்லாம் கூட வடிவம் கொடுக்க ஆரம்பித்து விட்டான். மனிதனின் இத்தகைய வளர்ச்சியினால் சமுதாயத்தில் அவன் மதிப்பு நாளுக்குநாள் கூடி வருகிறது. சர்வதேசங்களிலும் அவன் சாதனை அளவிடற்கரியதாகிறது. மனிதன் மேலும் தன் அறிவாலும், ஆற்றலாலும் உலகைச் சுருக்கி, உலகுடன் ஒன்றி, முன்னேறிக் கொண்டிருக்கிறான். அவன் மருத்துவ அறிவியலின் துணைக்கொண்டு, புதிய உலகினைப் படைக்கும் முயற்சியில் பிறப்பு, இறப்பினைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டு இயற்கைக்கு இணையான ஆற்றல் பெற்றவனாகவும் திகழ்கின்றான். இப்படி அவனது புறவாழ்க்கையில், எல்லாம் அவனது கைகளுக்குள் அடங்கி, அவனது ஆணைக்குக் கட்டுப்பட்டு

நடப்பதாயுள்ளன. ஆனால் அவனது அகவாழ்க்கையில் அனைத்துமே அவன் கைகளை மீறிய நிலையில் அவனது கட்டுப்பாட்டிற்குள் அடங்காமலிருக்கின்றன. காரணம், புறவாழ்க்கையில் ஆண்-பெண் இருவரும் தங்களுக்குத் தேவையானவற்றைக் கற்று, பெற்று, அதன்படி நடக்கவும் செய்கின்றனர்; ஆனால் அக வாழ்க்கையில் வாழ்க்கைக்குத் தேவையான அறப் பண்புகளைக் கற்றுக் கொள்வதும் இல்லை; வளர்த்துக் கொள்வதும் இல்லை. அதிலிருக்கும் நியதிகளை ஏற்று நடந்து கொள்வதுமில்லை. இதன் காரணமாகத்தான் புறஉலகில் ஆயிரம் பேர்களுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ளும் அவர்களுக்கு அகவாழ்க்கையில் ஐந்து பேர்களுடன் கூடக் கூடி வாழமுடிவதில்லை.

இல்லறத்தின் மாண்பினைப் பேணாதவர்கள், புற உலகில் புகழினை நிலைநாட்டுவது என்பது நெருடலுக்கு இடம் கொடுப்பதாயுள்ளது. நாம் பெரிய விருட்சமாக வானளாவி வளர்ந்துவிட்டாலும் கூட, அடிப்படையில் வேரிலிருந்து தோன்றியவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது; நாம் கிளையில் அமர்ந்துகொண்டு மரத்தை வெட்டுபவர்களாவும் விளங்கக் கூடாது. இச்செயல்கள் அனைத்தும் நமக்கே ஊறு விளைவிப்பதாகிவிடும். ஆகவே நாம் அடிப்படையில் பின்பற்றத் தவறிவிட்ட அறவுரைகளை ஏற்று, அறப்பண்புகளை வளர்த்து இல்லறம் என்னும் நல்லறத்தின் ஆரோக்கியத்தைப் பேணுபவர்களாக விளங்குதல் வேண்டும். இதன் மூலமே மனிதன் முழுமை பெற முடியும். இதற்கான முயற்சிகளை நாம் மேற் கொள்ளும் அளவில் நம் கண்முன் வந்து நிற்பது திருக்குறள். இல்லற வாழ்வின் இனிமையை அறவுரையாக எடுத்துக் கூறும் நூல்கள் பல இருப்பினும், அவற்றுள் அன்றும் இன்றும், என்றும் எளிமையான, சிறந்த கருத்துகளை வழங்கி ஏற்றம் பெற உதவும் முதல் நூலாகத் திருக்குறள் விளங்குகிறதெனில் அது மிகை யாகாது.

'மனிதனை மனிதனாக்கும்' முயற்சியினைத் திருக்குறள் மேற்கொண்டுள்ள காரணத்தினால்தான் அது இன்றைய வாழ்விற்கும் பொருந்துவதாகிறது. மனிதன் வாழும் காலந் தோறும் திருக்குறளுக்கு இடமுண்டு என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. கால மாற்றத்தின் விளைவாக அளவற்ற பல தரப்பட்ட நூல்களையும், அறிவியல், தொழில்நுட்ப நூல்களையும் படிக்கும் மனிதன், எளிய நூலான திருக்குறளைப் பழக்கத்தில் கொள்ளாமலிருப்பது வருந்தத் தக்கது. இன்றைய பரபரப்பான சூழ்நிலையில் வாழும் மனிதன் மனநலத்தைப் பேண

முடியாமல் பாதிப்பிற்குள்ளாகும் போது மன அமைதியைத் தேடி ஆன்மீகம், தியானம், யோகா என்று பலவற்றிலும் பயிற்சி பெறுவதில் ஆர்வம் காட்டுகிறான். திருக்குறள் போன்ற அறநூல்களைக் கைவிட்டதன் விளைவே இது. இளமையிலிருந்தே இதைக் கைக்கொள்ளப் பெற்றிருந்தால் வளர்ந்த நிலையில் வெவ்வேறு மனப் பயிற்சிகளை நாடிச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. திருக்குறளைப் பள்ளி, கல்லூரியில் கற்றதோடு, பயன்படுத்தாமல் நிறுத்திவிட்டதால் தான், இன்று நாம், குடும்பம், சமுதாயம் என்றவளவில் துன்பப்பட நேரிடுகின்றது. இத்துன்பத்தைக் களைந்திட நமக்கு இன்றும் துணைநிற்கிறது திருக்குறள்.

நம் வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் துன்பங்கள், சந்தேகங்கள் ஆகியவற்றைப் போக்கிக் கொள்ளவும், வாழும் நெறிமுறைகள் பற்றி அறிவுத் தெளிவினைப் பெறவும் 'வாழ்வியல் ஆலோசனைகள்' வழங்கும் பெட்டகமாக இந்நூல் செயல்படுகிறது. எந்தக் காலக்கட்டத்தில், எந்த இடத்தில், எத்தகைய மனிதர்கள் வாழ்ந்தாலும் அவர்களின் இயல்புகள், நடத்தைகள் இந்நூலில் உள்ளபடிதான் இருக்கமுடியும், இருக்க வேண்டும் என்பதை அன்றே உணர்ந்து எழுதியிருக்கிறார் தெய்வப்புலவர். மனிதனின் இன்றைய 'ஹைக்கூ' கவிதை இரசனைக்கேற்ப அன்றே திருக்குறளைக் குறைந்த 'அடிகளில்' தந்து, நிறைந்த பொருள் தரும் அளவில் 'வாமனனாக' உலகையே அளந்து நிற்கிறார் வள்ளுவப் பெருமான். இத்தகைய திருக்குறள் காட்டும் இல்லறம், இன்றைக்கும் பொருந்தும் நிலை இங்குச் சிறப்பாக ஆக்கம் பெறுகின்றது.

திருக்குறளில் தொட்ட இடமெல்லாம் வாழ்க்கை விளக்கங்கள் இடம் பெற்றிருக்கின்றன. எனினும் 'இல்லறவியலில்' இடம்பெற்றிருக்கும் 20 அதிகாரங்கள் இல்லறத்தின் நல்லறத்தை எடுத்தியம்புவதாகச் சிறப்புப் பெறுகின்றன. வள்ளுவரின் வழிநின்று வாழ்வோர்க்குக் குறள் காட்டும் 'இல்லறம்' இன்று மட்டுமல்ல என்றும் நலம் பயப்பதாகவே அமையும் என்பது திண்ணம்.

> இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றின் நின்ற துணை (குறள் 41)

இக்குறள் கூறும் கருத்தாவது, ஒருவன், தன்னை நாடி நிற்கும் பெற்றோர், மனைவி, மக்களை நெறி தவறாமல் காக்கும் நிலையான, துணையாவான் என்று குறிப்பிடுகிறது. இன்றைய தலைவன் இல்லறக் கடமையைத் துறந்துவிட்டான்; அறத்தைக்

கைவிட்டுவிட்டான்; தன்னை மறந்து தவறிழைக்க ஆரம்பித்து விட்டான். இதன் விளைவாகவே இந்நாளில், முதியோர் இல்லங்கள், மணமுறிவுகள், குழந்தைகள் 'மறியிடைப்படுத்த மான்பிணை' போல வாழவேண்டிய நிலைமாறி அம்மாவிடம் சிறிது காலம், அப்பாவிடம் சிறிது காலம் என்று வாழும் அவலங்கள்... இப்படி அனைத்துமே நிகழ்கின்றன; இல்லறத்தின் ஆரோக்கியம் சிதைக்கப்படுகின்றது. ஆகவே இல்லறக் கடமை ஆற்றுபவன் நல்லறங்களை அறிந்து அதன் பண்பிலிருந்து விலகாமலிருக்கத் திருக்குறளின் சேவை இன்று மட்டுமல்ல என்றும் தேவை என்பது உணரப்படுகிறது.

அன்பு என்கின்ற பண்பையும், அறன் என்கின்ற பயனையும் சிறந்த இல்வாழ்க்கை மூலமாகவே அடைய முடியும். இதைத் தான்

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது** *(குறள் 45)*

என்று குறள் குறிப்பிடுகிறது. இத்தகைய அன்பும், அறனும் இன்றைய இல்லங்களில் பேணப்படாத காரணத்தாலே குடும்பங்களில் சண்டை, சச்சரவுகளும், குழந்தை வளர்ப்பில் சிக்கல்களும் நிறைந்து நிகழ்கால, எதிர்காலச் சமுதாயங்கள் பாதிப்புக்குள்ளாவதைக் காணமுடிகின்றது. மேலும் அன்பும், அறனும் கிடைக்கப் பெறாத நிலையில் இளைய சமூகத்தினர் மனமுறிவு, உளச்சிக்கல் போன்றவற்றிற்கு ஆளாகின்றனர். தீவிரவாதம், வன்முறை போன்ற செயல்கள் அவர்களைத் திசை திருப்புவதாயும் உள்ளன. இதனால் வாழ்க்கைப் பயன், சமூகப் பயன் ஏதுமின்றி நாடு சிக்கல்களுக்கு ஆளாவதைக் காண முடிகின்றது. இதைத் தவிர்க்க நாம் குறளின் கருத்தை ஏற்று நடப்பதோடு அதை என்றும் போற்றிக் காக்க வேண்டும். இதை உணர்த்தும் வகையிலேயே அன்றைய நாளிலிருந்தே திருமண நிகழ்வின் போது வாழ்த்திற்குரிய பரிசுப்பொருளாக திருக்குறள் இடம் பெற்று வருவது அறியத்தக்கது.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்** *(குறள் 50)*

இக்குறளின் மூலம் நெறி தவறாமல் இல்லறத்தை மேற் கொண்டால் ஒருவன் தெய்வ நிலைக்கு ஒப்பவைத்து மதிக்கப் படுவான் என்பது உணர்த்தப்படுகிறது. தேவருலகையும், தெய்வ நிலையையும் தரும் இல்லறமாகிய நல்லறத்தைக் கால மாறுதலால், மனிதன் தலைகீழாய் மாற்றி வாழ்ந்து கொண்டிருக் கின்றான். தன்னைத்தானே தெய்வ நிலைக்கு உயர்த்திக் கொண்டு

இல்லறத்தில் பாழ்பட்டுக் கிடக்கின்றான். அத்துடன் இன்றைய சமூகத்தில் போலித்துறவிகள் தங்களைத் தெய்வத்திற்கு இணையாக வெளியுலகத்திற்குக் காட்டிக் கொண்டும், அக வாழ்க்கையில் தவறிழைத்துத் தண்டனை அனுபவிப்பவர் களாகவும் விளங்குகின்றனர். இத்தகைய போலித் துறவிகளிடம் வீழ்ந்து கிடக்கும் சமூகத்தினருக்கு விழிப்பு ஏற்படுத்தும் அளவிலும் திருக்குறள் வழிகாட்டுவதாகிறது. இதன்வழிச் சிறந்த இல்லறம் பேணாத நிலையில் இறைநிலைக்கு இடமில்லை என்பதை மக்களுக்கு உணர்த்தி அவர்களை நெறிப்படுத்தக் குறள் துணைநிற்பதைக் காண முடிகிறது.

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல் *(குறள் 52)*

இக்குறளின் வழி இல்லறத்தை நடத்திச் செல்வதற்கு உதவும் பெண்களின் பெரும்பங்கு உரைக்கப்படுகிறது. இல்லறத்தைப் பேணும் அருங்குணங்கள் பெண்களிடம் இல்லாவிட்டால், அந்த இல்லத்தில் என்ன வளம் இருந்தாலும் அதனால் பயனில்லை என்பது உரைக்கப்படுகிறது. இன்றைய நிலையில் இல்லத்தின் மகிழ்ச்சி ஆண்-பெண் இருவருக்கும் பொதுவானதாகவே உள்ளது. வள்ளுவர் குறிப்பிடும் வாழ்க்கைத் துணைநலம் இருவருக்கும் பொதுவானதாகவே பொருள் கொள்ள வேண்டியுள்ளது. மேலும் இன்றைய நிலையில் ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமமாகப் பங்கு வகிக்கும் வாழ்க்கை இடம் பெறுகிறது. ஆண்-பெண் இருவரும் பொறுமை, விட்டுக் கொடுத்தல், சகிப்புத் தன்மை, விருந்தோம்பல், அறம்பேணல் ஆகியவற்றை யார், யார் எப்பொழுது பின்பற்ற வேண்டுமோ அதை அப்பொழுது பின்பற்றிச் செயல்படுத்துதல் வேண்டும். இல்லறம் முழுமை பெற இருவரும் துணை நிற்க வேண்டும் என்னும் புதிய கருத்தினைப் பெறக் குறள் வழிகாட்டுவதா யுள்ளது.

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை *(குறள் 55)*

இக்குறள் காட்டும் கருத்து எக்காலத்திற்கும் பொருந்தும் கருத்தாய் உள்ளது. கணவனை மதித்து நடக்கும் மனைவியின் பெருமையை இக்குறள் கூறுவதாய் உள்ளது. இந்நாளில் மனைவி கணவனைத் தொழ வேண்டும். மழையைப் பெற வேண்டும் என்பது கூட அவசியமில்லை. காரணம் இன்று அறிவின் துணைக்கொண்டு பெண்கள் ஆற்றும் கடமைகள் பலவாகப் பெருகிவிட்ட காரணத்தால், கணவனைப் போற்றிக் காத்து

இல்லறக் கடமையாற்றுவதில் சில இடர்ப்பாடுகள் தோன்றவே செய்கின்றன. இவற்றிற்கிடையில் கணவனை மனிதனாக, அவன் உணர்வுகளை ஏற்று நடந்து, அவன் ஆற்றும் இல்லறக் கடமைக்குத் துணைநின்று, விட்டுக் கொடுத்து வாழும் பொறுமையான மனைவியாக ஒருத்தி விளங்கும் நிலையில் இல்லறத்தில் பூகம்பம் வெடிக்காமல் காக்கும் நிலைக்கு அவள் உயர்த்தப்படுவாள் என்பது தெளிவு. பெண்கள், அவர்களின் பெருமையை உணர்ந்து அதன்படி நடக்கத் திருக்குறள் இன்றும் தேவைப்படுகிறது.

**சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை** *(குறள் 57)*

பெண்களை வீட்டில் அடைத்து வைத்துக் காப்பதால் அவர்களின் கற்பைக் காப்பாற்றிவிட முடியாது. அதை அவள் காக்க வேண்டும் என்பதே இதன் கருத்து. திருவள்ளுவரின் இக்குறளானது பெண்களின் இன்றைய நிலைக்கு மிகவும் பொருத்தமுடையதாகிறது. இன்றைய நிலையில் பெண் கல்வி மற்றும் பெண்கள் பணியாற்ற வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாக உள்ளது. இந்நிலையில் பெண்களுக்குக் கட்டுப்பாடுகள் விதித்து வெளியே அனுப்பாமல் இருப்பதும், ஆண்கள் குறுகிய நோக்கோடு பெண்களை வீணாகச் சந்தேகப் பட்டு அடைத்து வைத்துக் காப்பதும் தேவையில்லாதது ஆகிறது. ஏனெனில், இன்று உலகமே வீட்டினுள் இருக்கும் தொலைக் காட்சிப் பெட்டியினுள் அடைப்பட்டுக் கிடக்கிறது. எனவே இன்றைய நிலையில் பெண்களை வீட்டினுள் அடைத்து வைத்திருந்தால் அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஆபத்து ஏற்படும் சூழலே அதிகமாயுள்ளது. இத்தகு நிலையில் நம் பண்பாடு, கலாச்சாரப் பெருமைகளை உளவியல் கல்வியாக அவர்களுக்குப் போதித்தும், வளர்ந்து வரும் சமூகத்திற்கு ஏற்பப் பாலியல் பாடத்தைச் சரியான முறையில் அவர்களுக்குக் கற்பித்தும், தங்களின் நிறைத்தன்மையினை அவர்களாகவே பேணும் அளவில் உருவாக்கியும் சமூகத்தை எதிர்கொள்ளச் செய்ய வேண்டும். இதுவே இன்றைய உலகிற்குப் பயனுடையதாய் இருக்கும் என்றவளவில் குறள் விளக்கம் அமைந்து அதன் தேவையை உணர்த்துகின்றது.

இன்றைய மனிதனின் தேவைக்கு ஏற்ப, மனிதனை மனிதனாக்கும் கல்வி, சமுதாயக் கல்வி, இல்லறக் கல்வி, முதியோர் கல்வி, உளவியல் கல்வி, நாட்டுநலக் கல்வி ஆகிய பலவகையான கல்விக் கருத்துகளைத் திருக்குறள் எடுத்துக் கூறிச் சிறப்புப்

பெறுவதாகிறது. வாழ்க்கையில் நமக்குச் சிக்கல்கள் ஏற்படும் பொழுதெல்லாம் தெளிவு பெறும் பொருட்டு, திருக்குறளை எடுத்து வள்ளுவர் கூறியுள்ள வழிவகைகளை மேற்கொள்ளல் வேண்டும். இங்ஙனம் நாம் செயல்படும் போதுதான் திருக்குறள் உடல்நலம், மனநலம் பேணும் அருமருந்தாய் விளங்குவது தெரியவரும். இத்தகு முறையில் சமுதாய நலம் பேணும் திருக்குறள், அது போதிக்கும் பாடம், அதன் சேவை என்றென்றும் தேவை என்றளவில் மனதில் நீங்கா இடம் பிடிக்கிறது.

## துணை நூல்கள்


1. புலியூர்க் கேசிகன், 'திருக்குறள் – பரிமேலழகர் உரை', பூம்புகார் பிரசுரம், சென்னை - 13. முதற்பதிப்பு - 1976.
2. மு. வரதராசனார், (பொதுப்பதிப்பாசிரியர்) 'திருக்குறள் – நீதி இலக்கியம்', திருக்குறள் ஆராய்ச்சி - 2, சென்னைப் பல்கலைக்கழகம் - 1971.
3. மு. வரதராசனார், 'வாழ்க்கை விளக்கம்', பாரிநிலையம் சென்னை - 1978.

# இன்றைய தேவை: அறவியல் நோக்கிலான வள்ளுவம்

அ. அறிவுநம்பி

திருக்குறளைப் பலரும் பல்வேறு கண்ணோட்டத்துடன் பார்த்து வருகின்றனர். அதனை அறநூல் என்பார் பலர். சிலர் அரசியல் நூல் என்றும் வேறு சிலர் பொருள் நூல் என்றும் ஒருசாரர் காமத்துப்பாலை முன்வைத்து காதலிலக்கிய நூல் என்றும் பலபடப் பகருவர். எவ்வாறாயினும் திருக்குறள் காலங்கடந்த பெற்றிமையை உடையது என்பது உண்மை. எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் தனித்தன்மையைக் குறள் மட்டுமே கொண்டுள்ளது. இன்றைக்கும் திருக்குறள் தேவைப்படுகிறது. அருங்குறளின் ஏனைய கூறுகளைவிட அறிவியல் நெறிகளே நடப்பியலுக்கு இன்றியமையாதன. அறவியல் நெறிகளைத் தான் வள்ளுவம் அடிநாதமாகவும் அடித்தளமாகவும் கொண்டுள்ளது. 'அறம் பாடிற்றே ஆயிழை கணவ' என்றச் சங்கச் சொல்லாடல் குறளையே கருதிற்று என்பாரும் உளர். உயர்ந்த நீதி இலக்கியமாகக் கருதத்தக்க வள்ளுவத்தை அறவியல் நோக்கில்



உணர்வது காலத்தின் தேவையாகும். அதனையே இக்கட்டுரை முன்வைக்கிறது.

### வள்ளுவ அறம்

வள்ளுவத்தின் பிழிவு அறச்சாறுமட்டுமே. வசதி கருதி அல்லது காலமரபு கருதி மூன்று பால்களாகத் திருக்குறள் வடிவமைக்கப்பெற்றிருக்க வேண்டும். அடிமுதல் நுனிவரை 'அறம்' மட்டுமே மணக்கும் நுல்தான் குறள். "அறம் என்பது இரண்டு வகைப்படும். முதலாவது வகை காலத்துக்கேற்ப மாறுபடும் இயல்புடையது. சத்திரம் கட்டுதல் ஒரு காலத்தில் அறமாகக் கருதப்பட்டிருக்கலாம். போக்குவரத்து வசதி என்பதே இல்லாத அப்பழங்காலத்தில் சத்திரம் கட்டுதல் என்பது அறம்தான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் காலம் மாறிவிட்டது. காலையில் கங்கையில் மூழ்கிவிட்டு மாலையில் இராமேச்சுரத்தில் புனலாடக்கூடிய வேகத்தில் பயணம் நடைபெறும் இக்காலத்தில் சத்திரம் கட்டிவைப்பது அறமன்று என்று கூறினால் தவறு ஒன்றுமில்லை. இதுபோன்றே பல அறங்கள் காலாந்தரத்தில் மாறுபடும் இயல்புடையன.

இரண்டாம் வகை எக்காலத்தும் யாவர்க்கும் பொதுவான அறங்கள், அவை என்றும் மாறுபடுவதில்லை. இவற்றை அடிப்படையான அறங்கள் என்று கூறலாம். கவிஞன் மாறாத இந்த அடிப்படை அறங்களிலேயே தன் கருத்தைச் செலுத்துகிறான். அதனால்தான் அந்த நூல் தோன்றி ஆயிரம் ஆண்டுகள் கழித்தும் கூட அவைதம் மதிப்பில் குறையாமல் சமுதாயத்தில் உலவி வருகின்றன." என்பர். பரத்தமை, புலாலுண்ணல், கள் அருந்துதல் ஆகியவை பிழையாகக் கருதப் பெறாத சங்கமரபினைத் திருவள்ளுவர் மறுதலித்து அவற்றை நீக்குதலே அறமென்கிறார். குறளின் அறக்கருத்துகளை எவரும் மறுதலித்ததில்லை., இவ்வகையில், அடிப்படை அறங்களையே வள்ளுவம் பேசுகிறது என்பது வெள்ளிடைமலை.

முப்பாலின் மூன்றாம்பால் இல்லறத்தைக் குறிப்பது என்பர். களவு, கற்பு என்ற தமிழரின் அகவாழ்க்கைக் கூறுகளையும் இன்னபிற தமிழ்மரபுகளையும் கொண்டதே காமத்துப்பால் என்பது பொதுவான செய்தி. அறநோக்கில் வள்ளுவத்தைக் காணின் வேறு சில செய்திகளும் வெளிச்சம் பெறும். அறத்துப்பால் எனப்பெறும் முதலாம் பாலில் இல்லறத்தார்க்கும், துறவறத்தாருக்குமான அறங்களை வள்ளுவம் பேசிவிட்ட பிறகு காமத்துப்பால் எனத் தனிப்பகுதி தேவையா என்ற வினாவையும் எழுப்பிக் கொண்டு காணுவோம். அறத்துப்பாலில் மங்கலம்

ஆகிய மனைமாட்சியைச் சொன்ன வள்ளுவர் நன்கலமாய் மக்கட் பேற்றையும் குறிப்பார். இல்வாழ்க்கை, மக்கட்பேறு, வாழ்க்கைத் துணைநலம், விருந்தோம்பல் போன்ற கூறுகளைத் தவிர்த்து இல்வாழ்க்கைக்கான இணையை மட்டும் முன்வைக்கிறது. இல்லறம் என்பது வேறு; அறவழி இல்லம் என்பது வேறு என்னும் சிந்தனையின் வெளிப்பாடே காமத்துப்பால் சிலம்பில் இல்லறத்தார் கடமைகளாகத் துறவோர்க்கு எதிர்தல், அந்தணர் ஓம்பல், அறவோரைப் போற்றல், விருந்து பேணல் என்பன பேசப் பெறும். இவை இல்லறத்தின் ஒருபகுதிச் செயல்பாடுகள். இல்லறம் அறவழியில் உருவாகு மாற்றை விளக்குவதே மூன்றாம் பால். அதனால்தான் பெற்றோர், கண்டோர், குழந்தைகள், விருந்தினர், துறவோர், அறவோர் யாரும் இடம்பெறவில்லை. நிகழ்வுகள் யாவும் ஆடவன் ஒருவனுக்கும் நங்கை ஒருத்திக்குமான கூறுகளே. சங்க இலக்கிய மரபில் பாலை எனப்பெறும் பிரிவை எழிலுறப் பேசுவார் திருவள்ளுவர். ஆனால் சங்கமரபில் பரத்தையோடு வேரோடு நீக்கிப் பாடுவார். அஃதே அறவியல் நோக்கிலான இல்லற அமைப்பாகும். தமிழ் இலக்கியங்கள் எதும் சுட்டாத 'பரத்த' என்ற சொல்லை ஊடற்கருவியாக்குவார் முப்பால் நூலார். ஆனால் மறந்தும் பரத்தையைக் கூறவேயில்லை. இந்த முப்பாலின் மூன்றாம்பாலில், காட்சி, ஐயம், தெளிதல் போன்ற தமிழ் அகமரபுகளை விடாமலும், பிரிவு, ஆற்றாமை, ஊடல், கூடல் போன்ற கூறுகளைத் தவிர்க்காமலும் காமத்துப் பாலை நெய்துள்ள வள்ளுவர் பரத்தைமையைத் தவிர்த்திருப்பது அறநோக்கிலேதான், பரத்தமையினால்

1. உடற்கேடு
2. பொருளியல் சரிவு
3. (தலைவிக்கு) உள நலக்கேடு

போன்றவை உருவாகும். இவையாவும் அறவாழ்விற்கு எதிரிகள். எனவே அறவழி ஈதென்று சுட்டவரும் திருவள்ளுவர் மிகமிகக் கவனமாகப் பரத்தையின் சுவடுகூடப் பதியாவண்ணம் - சொல் முதலாகப் பழக்கம் ஈறாக - மடைமாற்றிப் பாடுகின்றார். சுருங்கச் சொல்லின் பரத்தமையைக் கொண்டோரின் வாழ்க்கை அறவழிப்பட்ட வாழ்க்கையில்லை. அஃது இல்லறமாகாது என்பதே வள்ளுவரின் உள்ளக்கிடக்கை. இஃது அவருடைய காலத்திற்கு மட்டுமில்லை. இக்காலத்திற்கும் உரியதுதானே!

தனிமனித அறங்கள், இல்லறத்தார் அறங்கள், துறவிகட்கான அறங்கள், சமுதயத்தார் அறங்கள் எனத் தனித்தனியே பார்க்கக்கூடிய அளவு அறங்களைப் பரிமாறி

யுள்ளார் வள்ளுவர். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தம்முள் காதல் வயப்பெற்று இல்வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். களவில் தொடங்கிக் கற்பில் இல்லறம் உருவாகும். களவுக்காலச் செயல்பாடுகள், கற்புக்காலச் செயல்பாடுகள் போன்றவற்றைச் சங்க இலக்கிய மாந்தர்களைப் போலவே மேற்கொள்ளும் திருக்குறள் தலைவனும் - தலைவியும் பழம் மரபுகளிலிருந்து மாறுபாடு கொள்ளும் ஒரே இடம் பரத்தமைதான். பரத்தமையை மறுதலிக்கும் இல்வாழ்க்கை மட்டுமே அறவாழ்வும், உரிய வாழ்வுமாகும். பரத்தமையால் முன்னர்ககூறிய உடல்நலக்கேடு, பொருளாதாரச் சீர்கேடு, மனநலக்கேடு இவற்றுடன் சமுதாயத்தால் இழிந்த மகனாகக் கருதப் பெறும் கேடும் உடன்சேரும். அதனால்தான் இன்றைய தேவையாக அறவழிப் பட்ட இல்லறத்தைச் சமைக்கக் கூறும் வள்ளுவத்தை முன்வைக்க வேண்டியுள்ளது. இன்றைக்குத் தென்படும் ஆட்கொல்லி நோய்களுக்கு இல்லத்தில் இடந்தரக் கூடாது எனில் பரத்தைக்கு இடந்தரக்கூடாது என்பதுதான் வள்ளுவம்,

இங்கே இன்னொரு வினாவை இறக்குமதி செய்யலாம்.

பரத்தையர் பார்வை விழுந்து
காமத்துப்பால் திரிந்துபோகாமல்
நீ ... பாதுகாத்தது சரிதான்: ஆனால்
வரைவின் மகளிர், பெண்வழிச் சேறல்
பற்றியெல்லாம் நீ பேசியவை சரியா[2]

வள்ளுவரிடம் ஈரோடு தமிழன்பன் கேட்கும் வினா இது. இதற்கும் விடைதேடுங்கால் அறவியலே விடைதரும் சாவியாகிறது. இல்லறத்தில் பரத்தமையை ஒழிக்கக் கூறும் வள்ளுவர் நாட்டில் அனுமதிப்பாரா? மாட்டார். இல்வாழ்க்கைத் துணையை இழந்த ஆடவனோ படை, தூது, ஒற்றுப் போன்ற காரணங்களுக்காக நெடியநாள் இல்லைத் துறந்த ஆண்மகனோ தன் தேவைக்காக வரைவின் மகளிரை நாடின் பின்செய்வது என்ன என்ற தன்காலச் சிக்கலை வள்ளுவர் எண்ணுகிறார். பெண்ணொருத்தியின் பேச்சை நம்பித் தன் மாட்சிமைப்பட்ட வாழ்வை மண்ணுக்குள் புதைத்துக் கொண்ட இராவணனைப் போன்றாரை நினைக்கும் வாய்ப்பும் வள்ளுவருக்கு ஏற்பட்டிருக்கிறது. 'பெண்வழிச் சேறல்' அதனால் விளைந்தது. இல்லறத்தில் பரத்தையின் நுழைவுதரும் கேட்டைவிடச் சமூகத்தில் வரைவின் மகளிரால் விளைவுகள் கொடுமையானவை. இல்லறத்துக்குள்ளேயே பிறமகள் கூடாடெனில் சமுதாயத்தை விட்டு அவளை அறவே நீக்கலே அறம் என்பதே வள்ளவத்தால் முன்வைக்கப் பெறுகின்றது. சமூக நோய்களை ஒழிக்க வள்ளுவ

மருத்துவரின் வழிகாட்டலே வரைவின் மகளிரை அழிப்பது. அவர்கள் சமுதாயக் களைகள் என்பதாலும் ஆட்சியில் இருப்பாரே அவர்களை நீக்க இயலுமென்பதாலும் பொருட்பாலில் 'வரைவின்மகளிர்' அதிகாரம் இடம்பெறுகிறது. இதன்வழி 'ஓவாப்பிணி'யற்று இயலும் நாடு அமையும். குறளின் மூன்றாம் பாலில் இல்லத்திருந்தும் இரண்டாம் பாலில் சமுதாயத்திலிருந்தும் காமநங்கையர் அகற்றப்பெற வேண்டுமென்பதைக் குறள் எடுத்துரைக்கின்றது. ஆளுபவன் பரத்தமையில் ஆழ்ந்தால் என்னவாகும் என்பதற்குப் பல இலக்கியங்கள் சான்று கூறுகின்றன. பரத்தமையை நீக்கிய அரசனே 'இறை' ஆவான். ஏனெனில் 'மன்னன் எவ்வழி; குடிகள் அவ்வழி' என்பது பயில்மொழி. எனவேதான் ஆட்சியாளனைப் பேசும் பொருட்பாலில் உரிய இடமென்று கருதிய இடத்தில் இவ்வதிகாரங்கள் பொருத்தப்பெற்றுள்ளன. 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' எனப் புறப்பாட்டில் (55) மதுரை மருதனிளநாகனார் மொழிவதும் உடன்வைத்து எண்ணத் தகுந்தது. இதனால் பொருட்பெண்டிர் (913), மாயமகளிர் (918), இருமனப் பெண்டிர் (920) என்றெல்லாம் அவர்கள் குறிக்கப் பெறுவர். அத்தகைய 'பெண்வழிச் சேறல்' குறளில் குறிக்கப் பெறுவதை அறவியல் கண்ணோட்டத்தில் உணருதல் வேண்டும். அறத்துப் பாலிலும் காமத்துப் பாலிலும் பெண்மைய, பெண்டிரை ஏத்துகின்ற பொய்யாமொழிப் புலவர் சமுதாய நெறிகளை வலியுறுத்தும் பொருட்பாலில் குறிப்பிட்ட பெண்களைச் சாடுவதற்கு ஒரே காரணம் அவர்கள் நோய்க்கிருமிகள் என்பதே. சமுதாயமே அவர்களைத் தவிர்க்க வேண்டுமெனும் போது இல்லறத்தில் அவர்களுக்கு என்னவேலை? அதனைத்தான் பொருட்பாலில் வள்ளுவர் பேசுகிறார். அவருடைய வழிகாட்டலில் நாட்டையாளும் இராசாவும் வீட்டையாளும் இராசாவும் நடைபோட வேண்டும் அவ்வாறிருப்பின் 'எந்த ராசாவுக்கும் எதுவும் வராது'

**சான்றெண்:**

1. அ.ச. ஞானசம்பந்தன், புதிய கோணம், ப. 155.
2. தமிழன்பன், வணக்கம் வள்ளுவ, ப. 30

## நூற்பட்டியல்


1. அ.ச. ஞானசம்பந்தன், புதிய கோணம், கம்பன் திருநாள் மலர், காரைக்குடி, ப. 155.
2. தமிழன்பன், வணக்கம் வள்ளுவ, பூம்புகார் பதிப்பகம், சென்னை, ப. 30.


✻ ✻ ✻

# இன்றைய குடும்பச் சிக்கல்களும் வள்ளுவர் தரும் தீர்வுகளும்

**வீ. பாலமுருகன்**

சமுதாயத்தின் அடிப்படையாய்க் குடும்பம் விளங்குகிறது ஆணும் பெண்ணும் திருமணத்தால் இணைந்து கணவன் மனைவியாகி வாழ்வது குடும்ப வாழ்வின் தனிச் சிறப்பாகும். குடும்பம் செவ்வனே அமைவதற்குத் தலைவன், தலைவியரான தந்தை, தாய்க்குப் பல பொறுப்புகள் உள்ளன. இரு மாடுகள் சேர்ந்து வண்டியை இழுப்பது போல் கணவனும் மனைவியும் இணைந்து இல்வாழ்க்கைத் தேரை இழுக்க வேண்டியுள்ளது. இதனால் தாய், தந்தையரை மையமிட்டே ஒரு குடும்பத்தின் சிறப்பு அமைகிறது எனலாம்.



**குடும்பம்**

கணவனும் மனைவியும் ஒரு வீட்டில் இல்லத்தில் அன்பால் இணைந்து, பிள்ளைகளைப் பெற்று, பெருஞ் செல்வத்தையும், மக்களையும் உருவாக்க உறைந்து வாழும் இடமே குடும்பமெனலாம்.

"குடும்பம்" என்ற சொல்லுக்கு உறவு; ஓர் இல்லத்தில் உள்ளோர்; வீடு, மனை, குலம், குடி இனத்தார்; ஒரு குடிசையில் உள்ளோர் என்று அகராதிகள் பொருள் விளம்புகின்றன.

மனித சமுதாயத்தின் அடிப்படை "குடும்பம்" என்று சமூக இயலார் குறிப்பிடுவது இங்கு எண்ணத்தக்கது. குடும்பம் என்ற பெயரைக் குறிக்கும் "பேமிலி" என்ற ஆங்கிலச்சொல் 'பேமுலஸ்' என்ற இலத்தின் மொழியிலிருந்து தோன்றியது என்றும், அதற்கு வேலைக்காரர்கள் என்று பொருள்படும் என்றும் சமூகவியல் கூறும்[1].

கணவன், மனைவி, பிள்ளை - கணவனைப் பெற்ற மாமன், மாமியார், கணவனோடு உடன் பிறந்தவர்கள் - இவர்கள் ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பு, பாசம், தியாகம், விட்டுக் கொடுக்கும் தன்மை ஆகிய நற்பண்புகள் நிறைந்த ஓரிடமே குடும்பம் என்று சொல்வது மிகவும் பொருத்தமானதாகும்.

## குடும்பம் உருவாகும் விதம்

சமுதாயத்தின் ஓர் அங்கமாக விளங்குவது குடும்பம். ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் நிகழ்ந்து அன்பால் இணைந்து வாழ்க்கை நலம் மேற்கொண்ட பிள்ளைகள் பெற்று ஒரு குடும்பத்தில் முதியோர்கள் கணவன், மனைவி, உடன் பிறந்தவர்கள் சேர்ந்து ஒரு தலைமையின் கீழ் வாழ்வது கூட்டுக் குடும்பமாகும். முன்பு கூட்டுக் குடும்ப நிலை போற்றப்பட்டது. இன்று வளர்ந்து வரும் நாகரிகத்தின் காரணமாகவும் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார வேறுபாடுகள் காரணமாகவும் கூட்டுக் குடும்ப நிலை சிதைவுற்றுத் தனிக்குடும்பமாக மாறி வருகின்றது. கூட்டுக்குடும்பங்களில் சிக்கல்கள், பிரச்சினைகள், காரணமாகத் தனிக்குடும்பமாவதும் உண்டு. தனிக்குடும்பம் நடத்துவதில் சிக்கல்கள் பல தோன்றுகின்றன. பெரியோர் சொல் கேளாமை, குடும்ப வாழ்க்கை புரியாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் தனிக்குடும்பங்களில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதற்கான தீர்வுகளை வள்ளுவர்,

**பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்**
**பேரா இடும்பை தரும்** (குறள் 892)

என்ற குறள் மூலம் அறிவு ஆற்றல் மிக்க பெரியாரைப் பெற்ற பிள்ளைகள் மதித்து நடக்க வேண்டும். அவ்வாறு அவர்கள்

மதித்து வாழ்ந்தால் குடும்பங்களில் சிக்கல்கள் ஏற்படாமல் இருக்கலாம் எனத் தீர்வுகளைச் சுட்டிக்காட்டுகிறார்.

## திருக்குறளில் குடும்பம்

திருக்குறளில் குடும்பம் (1029) என்ற சொல் ஓர் இடத்திலும், 'குடி' என்ற சொல் (171, 502, 601, 602, 604, 608, 609, 632, 681, 793, 794, 887, 888, 992, 952, 953, 954, 955, 957, 1022, 1023, 1024, 1025, 1027, 1030) என்று 26 இடங்களிலும், 'குலம்' என்ற சொல் (956, 958, 959, 960) என்று நான்கு இடங்களிலும் குறிக்கப்பட்டுள்ளன.

மேலும் வீட்டை, குடும்பத்தைக் குறிக்கின்ற 'இல்' என்ற சொல்லும் (1021-1044), இல்லாண்மை என்ற சொல்லும், (1026) இவை போன்றே தலைவனையும், தலைவியையும் குறிக்கின்ற சொற்களும் குடும்பம் சார்ந்தவையாக அமைந்துள்ளன.

தலைவன்: ஆண்மகன். வீட்டின், அதாவது குடும்பத்தின் தலைமகன் ஆவான். அவனை வள்ளுவர் தற்கொண்டான், கிழவன், இல்வாழ்வான், காதலர், நயந்தவர், கொண்கன், கண்ணன், கேளிர், கொழுநன், காதலன் என்று பல பெயர்களால் சுட்டுகிறார்.

தலைவி: இல்லத்தை ஆளும் தலைவியை இல்லாள், இல்லவள், மாண்புடையாள், வாழ்க்கைத் துணை, பெண், பெண்டிர், மகளிர், கண்ணிறைந்த காரிகை, வளத்தக்காள், மனையாள், மனை என்று அழைக்கிறார்.

குடும்பத்தில் இரு பாலினராலும், சிக்கல்கள் வருவதுண்டு. இச்சிக்கல்களுக்கு வள்ளுவர் ஆங்காங்கே தீர்வுகளையும் சுட்டிக் காட்டுகின்றார்.

## ஆண்களால் ஏற்படும் சிக்கல்கள்

இன்றைய காலக்கட்டச் சூழ்நிலையில் குடும்பம் என்று எடுத்துக் கொண்டாலே பல பிரச்சனைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு குடும்பத்தில் பொறுப்புள்ள தலைவன் தீய பழக்க வழக்கங்களில் செல்வதாலும், போதைப் பொருள்கள், பரத்தையரிடம் செல்லல் போன்ற தவறான பாதைகளில் செல்வதாலும் (வாழ்க்கையில்) குடும்பத்தில் சிக்கல்கள் உருவாகும்.

தீய பழக்கங்களினால் அடையும் கேடுகளைச் சுட்டிக்காட்டி (937, 939) அச்சிக்கல்களுக்குத் தீர்வு தருகிறார் வள்ளுவர்.

அடுத்துக் கள்ளினால் விளையும் இடர்ப்பாடுகளைச் சுட்டிக்காட்டுகிறார். அது போன்றே வரைவின் மகளிரால் உண்டாகும் தீமைகள், துன்பங்கள் போன்றவற்றை விலக்கி (914, 917) அறிவைச் சரி செய்து கொள்ளுமாறு தீர்வுகளை அடுக்கிக் காட்டுகிறார்.

## பெண்களால் ஏற்படும் சிக்கல்கள்

காலங்காலமாகவே பெண்கள் என்றாலே பிரச்சினை தான். காரணம் ஆணாதிக்க நிலை. சங்ககாலம் தொட்டே பெண்களை அடக்கி ஆள்வதையும், அவர்களுக்குப் படிப்புரிமை தடுக்கப்படுவதையும் காண்கிறோம். ஆனால் இன்றைய சமுதாயத்தில் கல்வியறிவு பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்கிச் சம அந்தஸ்தை நல்கினாலும் கீழ்த் தட்டு மக்கள் அந்த உயர்வைத் தவறான முறையில் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி**

என்று பாரதியின் வாக்கின்படி பெண்கள் வாழ்ந்தாலும், சில பெண்கள் இல்லறம் என்ற நல்லறத்தைத் துறந்து வாழ்கின்ற நிலையினையும் அதனால் வீதிக்கு ஒரு தங்கும் விடுதி செயலாற்றப்படுவதையும் காணுகின்றோம்.

இன்றைக்கும் சில பெண்கள் திருமணம் என்றாலே வெறுத்து ஒதுங்கும் நிலை காணப்படுகிறது. காரணம் வறுமை, தன்னைத் திருமணம் புரியவரும் மாப்பிள்ளைமார் கேட்கும் வரதட்சணையைக் கண்டு தற்கொலைக்கு ஆளாகின்றனர். சில பெண்களின் திருமணமே நின்று விடுகிறது.

இளமையில் திருமணம் அழகானது. திருமணமல்லாத வாழ்வு முழுமையுறாது. வள்ளுவர் இச்சிக்கலுக்குத் தீர்வாக (1007, 1010) நமக்கு எடுத்துச் சொல்லியிருப்பதாக எண்ணுவதும் நன்றாம்.

நல்ல அழகான பெண்ணொருத்தி திருமணம் செய்து கொள்ளாது முதுமை அடைவது வள்ளுவருக்கு உடன் பாடல்ல என்பதனை,

அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று" *(குறள் 1007)*

என்ற குறட்பாவால் உணர்த்துகிறார்.

### மகப்பேற்றுச் சிக்கல்

குழந்தையின்மை என்பது இன்றைய சூழலுக்கு மிகப்பெரிய .பிரச்சனையாகவே கருதப்படுகிறது. திருமணம் முடிந்து ஒரு வருடம் ஆகிவிட்டாலே போதும். அவனுக்கு குழந்தையில்லை என்று சமுதாயம் அவர்களை அவலநிலைக்குத் தள்ளுகிறது, இன்னும் சொல்லப் போனால் ஒரு புறம் குழந்தை வரம் கிடைப்பதே மிகப் பெரிய வரப்பிரசாதம். இதில் ஆண் குழந்தை என்றால் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறார்கள், பெண் குழந்தை என்றால் கள்ளிப்பாலை ஊற்றிக் கொன்று விடுகின்றனர். இல்லையெனில் குப்பையில் வீசுகின்றனர். காரணம் ஆணாதிக்க நிலை என்று கூறலாம். குடும்ப உறவுகளில் பிறக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்ற சிக்கலுக்கு,

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல்கேளா தவர்

என்ற குறட்பாவின் மூலம் வள்ளுவர் குழந்தைகள் பேசும் மொழியைக் கேட்பதே மிகப்பெரிய மகிழ்ச்சி; இவற்றில் ஆணா, பெண்ணா, என்ற விவாதம் நமக்குத் தேவையில்லை என்று தீர்வு சொல்கிறார்.

### குடும்ப உறவுகளில் சிக்கல்கள்

குடும்ப உறவுகளில் கணவன், மனைவி இருவருக்கும் இடையே வாழ்க்கை இன்பத்தைப் புரிந்து வாழாமையால் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும் *(குறள் 1327)*

என்ற குறட்பாவின் மூலம் ஊடலில் தோற்றுப் போனவனே வென்றவனுக்குச் சமம் என்கிறார் வள்ளுவர். இச்சிக்கலுக்குத் தீர்வுகாண விழைபவர்கள் காமத்துப்பாலைச் சரியான முறையில் படிப்பின், சிக்கலில்லா குடும்பத்தை மட்டுமல்ல; நல்லதோர் அறிவு நிறைந்த சமுதாயத்தையும் உருவாக்க இயலும்.

### பேராசையால் எழும் பெருஞ்சிக்கல்

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்றார் புத்தர். பேராசை பெரும் நஷ்டம் என்ற பழமொழியையும் நாம் அறிவோம். இன்றைய குடும்பங்களில் கணவன் மனைவி இருவரும் இன்பத்தை முழுமையாக அடைகின்றனரா என்பது பெரும் கேள்வியாக அமைந்து குடும்பத்தில் பெருஞ்சிக்கலாக அமைகிறது.

"பாலொடு ............ நீர்" (1121), "கண்டு ..............உள" (1101) என ஐம்புலன்களாலும் இன்பம் நுகர வேண்டிய இருவர் திருமணம் முடிந்த ஒரு சில நாட்களிலேயே செல்வத்தை நாடி அயல்நாடு சென்று விடுகின்றனர்.

குடும்ப வாழ்வில் பாலுணர்ச்சிக்கும் முக்கிய இடமுண்டு. இந்த உணர்வினால் இருவருக்கும் இடையே அன்பார்ந்த வாழ்வு அமையும். இவ்வுணர்வுகளை ஊடல், கூடல் எனும் வெளிப்படுத்தும் வாயில்கள் அமையாது, குடும்பச் சிதைவுகள் நடைமுறையில் அமைவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

எனவே அன்பிற்கு முதன்மை தந்து "உப்பமைந்தற்றால்.. ..... விடல்" (1302) "ஊடுதல்............ பெறின்" (1330) என்ற குறட்பாக்கள் வழி நடந்தால் பாலுணர்வால் வரும் இச் சிக்கல்களுக்கு எளிதில் தீர்வு காணமுடியும்.

காமத்துப்பாலில் வரும் தலைவனும் தலைவியும் அடையும் இன்பம், துன்பம் அனைத்தையும், ஆழ்ந்து நோக்கின் பேராசை கொண்ட உள்ளம் பேரன்பில் மூழ்கிக் குடும்பம் சிதைவுறாது தடுக்க வழியுண்டாகும்.

### தனிமனித ஒழுக்கம்

குடும்பத்தில் பெற்றோர் உருவாக்கும் தனிமனித ஒழுக்கமே சமுதாயம் சீர்மையாக இருக்க உதவுமெனலாம்.

கண்டதே காட்சி, கொண்டதே கோலம், என்று குடும்பத்தில் உள்ள ஒருவன் வாழும்போது குடும்பத்திற்குப் பழியுண்டாக வழியாகிறது. "பொருளில்லா ............ யாங்கு" (247) என்று கூறினும் குடும்பத்தலைவன் அறமுறையில் பொருளீட்ட வேண்டும் என்று வற்புறுத்துவதை இங்கு எண்ண வேண்டும். இதனை,

> **பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
> **வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்** *(குறள் 44)*

என்ற குறட்பாவால் அறியலாம்.

## பொருளாதாரச் சிக்கல்

குடும்பத்தில் வேலையின்மையால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுச் சிக்கல் ஏற்படுகிறது. அதற்கு மாணவர்களைப் பார்த்து, மக்களைப் பார்த்து,

> **வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
> **யானையால் யானையாத் தற்று** *(குறள் 678)*

என்கிறார் வள்ளுவர். ஒருவன் தொழிலைச் செய்கின்ற போது அதனோடு தொடர்புடைய இன்னொரு தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். இக்குறட்பாவும் இச்சிக்கல்களுக்குத் தீர்வாக அமையும் (676)

சமூகம் என்ற கட்டமைப்பில் குடும்பம் என்ற அமைப்பை உருவாக்கி இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கட்டாயத் தேவையின் அடிப்படையில் வாழ்வதே நலமாகும். அப்படி வாழ்பவனே சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனிதனாக மதிக்கப்படுகின்றான்.

இன்றைய குடும்பங்களில் ஆண்மகனால் ஏற்படும் சிக்கல், பெண்மகளால், ஏற்படும் சிக்கல், குடும்பச் சிக்கல், கணவன்-மனைவி உறவுநிலைச் சிக்கல், பொருளாதாரச் சிக்கல், மகப்பேற்றுச் சிக்கல், பேராசையால் ஏற்படும் சிக்கல், தனிமனித ஒழுக்கம் ஆகிய சிக்கல்களுக்கு வள்ளுவர் தம் குறட்பாவின் மூலம் விரிவான முறையில் தீர்வுகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார் என்பதை நாம் அறியமுடிகிறது.

## துணை நூல்கள்

1. முனைவர் ப.ச. ஏசுநாதன், திருக்குறளில் குடும்பம், பக். 1-2.

2. முனைவர் இரா. கஸ்தூரிராசா, திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறி, பதிப்பு நவம்பர் 2001, சென்னை-2.

3. டாக்டர் சுப. அண்ணாமலை, திருக்குறள் சிந்தனை, பொருட்பால், முதல் தொகுதி, வானதி பதிப்பகம், பதிப்பு 1994, சென்னை - 17.

⁂

# வள்ளுவரின் வாசிப்பும் விழைவும் - இல்லறம்

*சி. கலைமகள்*

## 1.0 வள்ளுவர் வாசித்த சமூகம்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மொழி வரலாற்றில் சங்ககாலம் முதல் தமிழ்ச் சமூகவரலாறு அறியப்படுகிறது. சங்ககாலச் சமூகம் இனக்குழுச் சமூகத்தையும் தொடக்க நிலவுடைமைச் சமூகத்தையும் தன்னகத்தே கொண்ட பழஞ்சமூகம் ஆகும். இதில் திருவள்ளுவர் வாழ்ந்த சமூகம் சற்றுப் பின் அமைந்த காலம் என்று கூறலாம். எனவே வள்ளுவர் அறிந்திருந்த தமிழ்ச் சமூகம் என்பது சங்கச் சமூகமும், அவரது காலச் சமூகமும் ஆகும். எனவே வள்ளுவரின் சமூக வாசிப்பில் 1. தொல்காப்பியமும் (தொல்.) சங்க இலக்கியங்களும் நமக்கு அறிவித்த சங்கச் சமூகமும், 2. அதில் இடம்பெறாது ஆனால் வள்ளுவரால் அறியப்பட்ட சமூகமும் அடங்கும். அச்சமூகங்களொடு வள்ளுவர் விரும்பி உடன்பட்ட கருத்துகளும் உடன்படாது புதிய சமூகத்தை - சமூக



மாற்றத்தை உருவாக்க விரும்பிய அவரது விழைவும் திருக்குறளாக வடிவம் பெற்றுள்ளன எனலாம். வள்ளுவரின் இந்த வாசிப்பு 1. இலக்கிய வாசிப்பு, 2. வாழ்க்கை வாசிப்பு என்ற இரு நிலைகளில் அமைந்துள்ளது. இக்கட்டுரையில் இல்லறம் நோக்கிய அவரது வாழ்க்கை வாசிப்பும், அதில் அவரது விழைவும் மட்டும் ஆராயப்படுகிறது.

## 2.0 வள்ளுவரின் வாழ்க்கை வாசிப்பு

வள்ளுவர் தம் கால மற்றும் தமக்கு முற்பட்ட காலச் சமூகத்தை வேர்முதல் நுனிவரை வாசித்து அறிந்துள்ளார். அதன் விளைவாகவே எல்லா நிலையில் உள்ள மனிதனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று அவர் விழைகிறார். அதனால் தான் திருக்குறள் உலகப் பொது மறையாகியது.

## 3.0 இல்லறம்

வள்ளுவர் விழைந்த வாழ்க்கைக் கோட்பாடு என்பது முப்பால் பாகுபாட்டில் தனிமனிதனைச் சார்ந்த கல்வி, ஒழுக்கம், அரசு (அரசன்), நாடு, இல்வாழ்க்கை என்று பல பொருட் கூறுகளைக் கொண்டுள்ளது. எனினும் அவையாவற்றிலும் இல்லறத்தைச் சமூக அறமாக்க வேண்டும் என்ற அவரது விழைவே மேலோங்கியுள்ளது எனக் கருத முடிகிறது.

## 4.0 வள்ளுவர் வாசித்த இல்வாழ்க்கையும் விழைந்த இல்லறமும்

### 4.1 அறத்துப்பால்

வள்ளுவர் அறிந்த சங்க காலத்தில் இல்வாழ்க்கை என்பது ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழும் பேரின்பம். அது புறத்தாருக்குப் புலனாகாது அகம் என்று அழைக்கப்பட்ட உள்ளத்து உணர்வு. இது மனைவியோடு கூடியும் ஊடியும் வாழும் இன்பத்தை மட்டும் தருமே ஒழிய அறத்தையும் பொருளையும் தராது என்று திட்டவட்டமாக அறிவுறுத்தப் பட்ட ஒன்று.[1]

அறம் என்பது சமுதாயத்தில் ஆணின் புற வாழ்க்கைக் கூறுகளில் ஒன்றாக இருந்து கொடை, தருமம் என்று விளக்கப்பட்டது (புறநானூற்றில் அறம் பற்றிய செய்திகள்).

மகளிர் நோக்கில் தலைவன் தன்னைவிட்டுப் பிரியாது இருந்து அருளுதலே அவன் செய்யும் அறமாகக் கருதப்பட்டது.[2]

இன்பம் நோக்கிய இல்வாழ்க்கை, அறத்தை நோக்கியதாக மலர வேண்டும் என்று விழைந்த வள்ளுவர் 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'[3] என்று இல்வாழ்க்கையை இல்லறமாக்குகிறார்.

அதனாலேயே முதல் நான்கு அதிகாரங்களில், திருக்குறளின் முதல் விளக்கமாக இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தை அமைத்துள்ளார். தொடர்ந்து, ஒரு குடும்பத்தின் உறுப்பினர்களாகிய வாழ்க்கைத் துணை நலம், நன் மக்கட்பேறு ஆகியோரையும் விளக்குகிறார்.

இம்மூவரும் சார்ந்த தனிக் குடும்பமாகிய இல்லறத்தின் செயல்பாடுகளையே - வாழ்க்கை முறைகளையே முப்பாலிலும் அவர் விளக்குகிறார்.

வள்ளுவர் அறிந்த சங்கச் சமூகத்தில் இல்லாளின் மாண்புகளாக, 'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும், மெல்லியற் பொறையும், நிறையும், வல்லிதின் விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் பிறவும் வலியுறுத்தப் படுகின்றன.[4]

இப்பண்புகளை ஆணும் கடைப்பிடித்தால் தான் சமுதாயம் சிறப்படையும் என்று ஆணுக்கும் உரியதாக்கி அப்பண்புகளின் பரப்பை விரிவுப்படுத்துகிறார். இதன் விளைவாகவே விருந்தோம்பல், பொறையுடைமை, பிறனில் விழையாமை போன்ற அதிகாரங்களைப் படைத்துள்ளார்.

சங்கச் சமூகம் விளக்கிய ஓர் இல்லறத்தில் வரக்கூடிய இன்னொரு உறவு பரத்தைமை. அதைவிட இழிவானதொரு உறவு பிறன்மனை நயத்தல். குறிக்கோள் நோக்கில் வடிவமைக்கப்பட்ட சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்தாது மறைத்த ஒரு உறவு இது. சமூகத்தைச் சீர்கெடுக்கும் இவ்வுறவை அறிந்த வள்ளுவர் அதைக் கடிகிறார். பரத்தைமையை ஒருவன் தவிர்க்க வேண்டும் என்பதைப் பொருட்பாலில் நல்லொழுக்கமாகக் கூறும் வள்ளுவர் பிறன்மனை நயத்தலை அறத்துப்பாலில் கூற விழைவது கருதத்தக்க ஒன்று. ஏனெனில் பிறன்மனை நயவாமையை ஒருவன் அறமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று விரும்புகிறார். இதை வலிமையாக அறிவுறுத்த 'அறன் வரையான் அல்ல செயினும் பிறன் வரையான் பெண்மை நயவாமை நன்று (150) என்று, 'நீ

அறம் நீங்கிய செயலைச் செய்தாலும் செய்; ஆனால் பிறன்மனை நயத்தலை மட்டும் செய்யாதே' என்று கூறுகிறார்.

இப்பிறன்மனை நயத்தலில்லாத இல்லமே 'புகழ்புரிந்த இல்லம்' ஆகும் (59) என்று விளக்குகிறார்.

'காமம் சான்ற கடைக்கோட்காலை, ஏமம் சான்ற மக்களொடு துவன்றி அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"[5] என்று அமைந்த தாம் கண்ட சமூகத்திற்கு ஏற்ப வள்ளுவரும் இல்வாழ்வான் மனைவி மக்களொடு சேர்ந்து, அவர் ஒவ்வொருவரும் சிறந்த அறங்களை வாழ்க்கைச் செயல்களாகக் கடைப்பிடித்து, இறுதியில் பற்று நீக்கி (துறவு 35), மெய்யுணர்வுற்று (36), அவாவறுத்து (37) வாழவேண்டும் என்று அறத்துப்பாலை அமைத்துள்ளார். எனவே அறத்துப்பால் முழுவதுமே இல்லறத்தாருக் குரியதாவே படைக்கப்பட்டுள்ளது என்று கருத இடமுள்ளது.

## 4.2 பொருட்பால்

வீரமும், கொடையும், புகழுமே பெருஞ் செல்வமாகக் கருதப்பட்ட சமூகப் பார்வையிலிருந்து மாறி வள்ளுவர் அறிவும் (கல்வி, கேள்வி முதலியன), பண்பும் (செங்கோன்மை, மடியின்மை போன்றன), உணர்வும் (நட்பு, மானம், பெருமை ...), தொழிலும் (இறைமாட்சி, அமைச்சு, ஒற்று, உழவு....), ஒழுக்கமும் (சுற்றந்தழால், வரைவின் மகளிர், பிறன்மனை நயவாமை....) ஆகிய வாழ்க்கை ஒழுக்கங்களே வாழ்க்கைப் பொருளாக அமைய வேண்டும் என்று விழைந்துள்ளார். இவற்றில் சுற்றந் தழால், குடிசெயல்வகை ஆகிய இல்லறக் கடமைகளை மேலே கூறியது போல் கிழவோளுக்கு உரியதாக இருந்ததை ஆணுக்கும் உரியதாக்க விரும்புகிறார்.

ஒரு கணவன் ஒரே ஊரில் வாழ்ந்தாலும், தாம் வாழும் சேரிக்கு வந்தாலும், தம் மனைவியை ஏதிலாளர் பிணம் போலப் பார்த்த பரத்தமை கொடுமை' கூடாது என்பதற்காகவே பரத்தையரைத் தழுவுதலை இருட்டறையில் ஏதில் பிணம்தழுவுவதற்கு ஒப்பாகக் (913) காட்டுகிறார்.

இவ்வாறு இல்வாழ்வான், தனிமனிதன், ஆண், பெண் என்று வேறுபடுத்தாமல் எல்லோருக்கும் மேற்குறிப்பிட்ட

அறிவும், பண்பும், தொழிலும் முதலிய அனைத்து ஒழுக்கங்களுமே வாழ்க்கைப் பொருளாகக் கருதப்பட வேண்டும் என்று விரும்புகிறார்.

## 4.3 காமத்துப்பால்

வள்ளுவர் தன்னை ஒரு சிறந்த அக இலக்கியக் கவிஞனாக வெளிப்படுத்திக் கொண்டது காமத்துப்பாலில் தான். எனினும் அதிலும் தன்னை இல்லறத்தைச் செம்மைப்படுத்தும் சமுதாயச் சிற்பியாகவே காட்டிக் கொள்கிறார்.

இல்வாழ்க்கை எல்லோருக்கும் உரியது. அதில் உயர்வு தாழ்வு இல்லை. சமுதாயத்தை வடிவமைக்கும் இல்லறத் தாரின் கடமைகளில் அரசனின் குடும்பத்திற்கும் ஆண்டியின் குடும்பத்திற்கும் வேற்றுமை இல்லை என்று வள்ளுவர் கருதுகிறார். எனவேதான் சங்க இலக்கியத்திலிருந்து மாறுபட்டுத் தலைவன் தலைவி என்ற சொல்லைப் பயன்படுத்தாது தவிர்த்துள்ளார்.[6]

ஊடுதல் காமத்திற்கு இன்பம் என்றாலும் பெண்ணின் புலவியை உணர்ந்து ஊடலைத் தீர்க்காத கணவனிடம் அவள் ஊடுதல் கூடாது என்று அறிவுறுத்துகிறார். 'நோதலும் எவன் மற்று நொந்தாரை அஃதறியும் காதல் இல்லா வழி' (1308), 'நீரும் நிழலது இனிதே புலவியும், வீழுநர் கண்ணே இனிது' (1309). இல்லையெனில் அது பிரிவுக்கு வழிவகுத்துவிடும் என்று கருதியுள்ளார்.

மேற்குறிப்பிட்டவற்றால் வள்ளுவர், 1. இல்வாழ்க்கையே ஒரு சிறந்த சமுதாயத்தை வடிவமைக்கிறது. 2. இல்லறத்தின் உறுப்பினர்களாகிய கணவன், மனைவி, மக்கள் ஆகிய மூவரும் சமுதாய அறத்தைக் கடைப்பிடித்து (அறத்துப்பால்) வாழ்க்கைப் பொருளாகக் கருதப்படும் அறிவு, பண்பு, தொழில், ஒழுக்கம் முதலியவற்றைக் (பொருட்பால்) கைக்கொள்ள வேண்டும். 3. அப்போது அவர்கள் சமுதாயத்தின் உறுப்பினர்களாகவும் ஆகின்றனர். 4. எனவே, 'இல்லறமே சமூக அறம் ஆகிறது' என்று கருதி வள்ளுவர் இல்லறத்தின் விளக்கமாக முப்பாலையும் வடிவமைத் துள்ளார் என்பது அறியப்படுகின்றது.

## அடிக்குறிப்புகள்


1. கலித்தொகை, தஞ்சைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984, பாடல் எண் 92 (1-16).
2. மேலது, பாடல் எண்கள் 9, 38.
3. திருக்குறள் பரிமேலழகர் உரை, கழக வெளியிடு, சென்னை, 1956.
4. தொல்காப்பியம் பொருளதிகாரம், கற்பியல், கழக வெளியீடு, சென்னை, 1980, நூற்பா எண். 11.
5. தொல்காப்பியம், மேற்படி, நூல், நூற்பா எண் 51.
6. குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே.சா., பதிப்பு, சென்னை 1937, பாடல் எண் 231.

# சமுதாய நோக்கு

# சமுதாயத்தில் வள்ளுவர் சுட்டும் அன்பு

பி.டி. கிங்ஸ்டன்

## சமுதாயம்

தனி மனிதர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அமைப்பு சமுதாயம். சமூக அமைப்பாக்கத்திற்கேற்ப ஒரே செயலெதிர்ச் செயல்களை மேற்கொள்ளும் பெரும் எண்ணிக்கையில் அடங்கிய தனி நபர்களைக் கொண்டது அது. சமுதாயம் என்பது பொதுவான உடற்கூறியல்புகளையும், பொதுவான விருப்பார்வங்களையும், பொதுவான வாழ்க்கை நோக்கங்களையும், பொதுவான விதிகளையும் கொண்டுள்ளது. உறுப்பினர்களை ஒன்றிணைக்கும், சிறியதும், பெரியதும், நிரந்தரமானதும் ஆகிய அமைப்பே சமுதாயம் என்பது சமூக வியலாளர்கள் கருத்து.



தமிழ்ச் சான்றோர் அன்றைய சமுதாயத்தின் இயற்பிற்கும் மரபிற்கும் ஏற்ப மக்கள் வாழ்க்கை முறைகளைப் பாகுபாடு செய்துள்ளனர். தொல்காப்பியர்,

வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாகலான

என்று கூறுகிறார். இதற்குப் பேராசிரியர் "வழக்கென்று சொல்லப்படுவது உயர்ந்தோர் வழங்கிய வழக்கமே; என்னை, உலகத்து நிகழ்ச்சியெல்லாம் அவரையே நோக்கினமையின், அவரையே நோக்குதலென்பது அவராணையான் உலக நிகழ்ச்சி செல்கின்ற தென்றவாறு" என்று கூறுகின்றார்.

## அன்பு

காலத்தின் பொருளையும் பிறருக்குத் தேவைப்படும் போது கொடுக்கும் தன்மையே அன்பின் அடிப்படை. இது அகத்தே உணரும் மென்மையான உணர்வு; இதற்குப் புறவடிவம் இல்லை. வார்த்தைகளால் வருணிக்க முடியாதது; உருவம் இல்லாத உணர்வு; இவ்வுலகில் பிறவி எடுத்ததன் பயன் வாழ்வாங்கு வாழ்ந்து உடலும் உயிரும் செம்மையடைந்து சிறப்படைவது.

அன்புதான் மனித சமுதாயத்தின் அடிப்படை. அன்பு தான் ஒருவரையொருவர் விரும்புகின்ற ஆசையை உண்டாக்குவது. அந்த ஆசையினால் தான் நட்பு என்கின்ற உறவு தானாகவே உண்டாகிறது. அதனால்தான் சமுதாயம் அமைகிறது என்று, அன்பு எனும் . . . . (அன்புடைமை, 74) குறள் கூறும். அன்போடு இயைந்த . . . . (அன்புடைமை. 73) அன்புடைமைதான் மனிதனை மனிதனாக்கும்.

அரிய பிறவியாகிய மனிதப் பிறவிக்கு அன்போடு கூடிய வாழ்க்கைதான் அதன் எலும்போடு பிறந்த குணம் என்று கூறுகிறார் வள்ளுவர்.

## அன்புதான் வாழ்க்கைக்குச் செழிப்புண்டாக்குகிறது

நெஞ்சகத்தில் அன்பில்லாதவர்களுடைய வாழ்க்கை, நீர்ப்பசை இல்லாத கெட்டியான நிலத்தில் முளைத்துவிட்ட மரம் உயிரேர்டிருந்தாலும் வற்றிப்போய்ச் செழிப்பில்லாமல் இருப்பதுபோல், அன்பு அகத்து இல்லா . . . . (அன்புடைமை, 78) வாழ்க்கை நடந்தாலும் இன்பம் இருக்காது.

அன்பும் அருளும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றுபவையே. தொடர்புடையோரிடத்து நிகழும் அன்பு தொடர்பிலார் மாட்டும் அருளைத் தோற்றுவிக்கிறது. தொடர்பில்லாரிடத்து ஏற்படும் அருள் பின் அவருடன் நெருங்கிப் பழக அன்பாக நட்பாக மாறுகிறது.

**அருள்என்னும் அன்பீன் குழவி பொருள்என்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு**

எனக் குறிப்பிடுகிறார்.

சான்றாண்மைக்குரிய குணங்களில் அன்பு முதலிடம் வகிக்கிறது.

**அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையொடு**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்** *(குறள் 983)*

என்று குறிப்பிடுகிறார் வள்ளுவர்.

## இல்லற வாழ்க்கையில் அடிப்படை அன்பு

இல்லற வாழ்க்கையில் கணவன், மனைவி இருவரும் ஒருவருடன் ஒருவர் மிக அன்பாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடும் வள்ளுவர், எதைச் செய்தாலும் அன்போடும் தரும நியாயம், தவறாமலும் செய்தால் அதுதான் இல்வாழ்க்கையின் தன்மை. அதனால் தமக்கும் உலகத்துக்கும் நல்ல பயனுண்டாகும் என்பதை, அன்பும் அறனும் . . . . . . (குறள் 45) என்கிறார்.

இனிமை, நீர்மை எனும் இரண்டு பண்புகளும், அன்பின் வழித் தோன்றுவதாகும். அன்புள்ளம் கொண்டவர் யாவரிடமும் இனிமையாக நடப்பர்; இன்சொல் பேசுவர்; இனிமையாகக் காட்சியளிப்பர். அன்பு கொண்டவரிடம் சினம் தோன்றுவதில்லை; அன்பினால் உயர்வு தாழ்வு நீங்கி ஒற்றுமை வளரும். அனைவரும் ஒற்றுமையாக வாழும் பக்குவத்தை இன்றைய சமுதாயம் பெற்றுவிட்டால் வன்முறைகள் நிகழா.

அன்பில்லாதவன் துணையில்லாதவனாகவும் தானே வெல்லக்கூடிய திறமையற்றவனாகவும் மாறிவிடுவதால் பலமுள்ள பகைவனை எதிர்க்க இயலாது என்று குறிப்பிடுகிறார்.

**அன்புஇலன் ஆன்ற துணைஇலன் தான்துவ்வான்**
**என்புரியும் ஏதிலான் துப்பு**

## அன்பும் – தோழமையும்

முகமும் முகமும் மகிழ்ந்து வருவது மட்டும் நட்பாகிவிடாது. நெஞ்சமாகிய அகமும் அகமும் ஒத்து மகிழும்படி பொருந்துகின்ற உறவுதான் நட்பு என்று கூறுகிறார். நட்பு நெஞ்சாகிய அகம் ஒத்துப் போக வேண்டுமென்றால் அன்பு இருத்தல் வேண்டும்.

நண்பன் மனங்கோணாமல் தேவையான போதெல்லாம் உதவி புரிந்து தாங்கி நிற்கும் தன்மைதான் நல் நட்பின் அடையாளம். ஒருவர் மீது நாம் அளவு கடந்த அன்பு வைத்திருந்தால் மட்டுமே நம்மால் நண்பனை அனுசரித்துப் போக முடியும்.

பழைய நண்பர்கள் குற்றம் செய்துவிட்டாலும் அவர்களிடத்தில் எப்போதும் போலவே அன்புவிடாமல் நடந்து கொள்பவர்கள் பகைவர்களாலும் பாராட்டப் படுவார்கள்.

அன்பு பிறர்மாட்டு விருப்பமுடைமை. அது நேயத்தைத் தருகிறது. அதுவே ஆர்வம் எனப்படுகிறது. நம் நெஞ்சு கருதிய பொருள்மேல் தோன்றுகிற பற்றுள்ளமே ஆர்வம். அந்த ஆர்வம், நட்பைத் தருகிறது. அஃதாவது தோழமையைத் தருகிறது. 'நண்பு' என்ற சொல் 74,998 ஆகிய இரு குறட்பாக்களில் 'தோழமை' என்ற பொருளிலேயே பயிலப்பட்டுள்ளது. அத்தோழமை சிறந்த மானுடச் சிறப்பு (Human Values) வாய்ந்தது. இதை 'அன்பு ஈனும்' (74) என்ற குறளில் கூறுகிறார்.

அன்பு நேரிடையாகத் தோழமையைத் தருவதில்லை, மற்றவரிடம் ஆர்வத்தைத் தந்து அதன் வழியாகத் தோழமையைப் பெறச்செய்கிறது.

## அறமும் அன்பும்

அறம் என்கிற அமைப்பு முறைக்கும், அன்பு சார்புடையது, அடிப்படையானது. அறத்தின் மற்றொரு கூறான வீர வாழ்க்கைக்கும் அன்பே துணையாக நிற்கிறது.

**அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை** *(குறள் 78)*

அறத்திற்கும் சார்புடையது அன்பு என்பதால், அன்பற்றதற்கு மாறுபட்டது அறம் என்பது பெறப்படுகிறது. அன்பற்ற மனித வாழ்க்கை மனவளர்ச்சியற்று இயக்கமின்றி முன்னேற்றமிழந்து - சிறப்பற்றுப்போகும். எனவே அன்பற்ற நிலையை அறம் என்கிற 'அமைப்பு முறை' தனது பல்திறன் கொண்ட பகுதிகளில் மூலமாக அமைந்திருத்தலாகும் (குறள் 77).

## அன்புடையார் அடையும் பயன்

"அருளென்னும் அன்பீன் குழவி" (குறள் 757) எனக் கூறி அன்பினின்றும் அருள் தோன்றுவதாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**அன்புற்றும் அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு** *(குறள் 75)*

உலகத்தை இன்பமாக அனுபவித்துப் புகழ் பெற்றவர்களுடைய சிறப்பெலாம் அவர்கள் அன்பைக் கடைப் பிடித்து நடந்தது கொண்டதினால் தான் என்று கூறுகிறார்.

அன்புதான் வாழ்க்கைக்குச் செழிப்புண்டாக்குகிறது. அன்பிருக்கிற உடல்தான் உயிருள்ள உடல். அன்பில்லாத உடல் வெறுந்தோலால் மூடப்பட்ட எலும்புகள் தான் என்பதைக் குறளில்,

அன்பின் வழியது உயிர்நிலை அஃது இலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (குறள் 80)

என்கிறார். அன்புடையவர்கள் தான் தூதுவர்களாகச் செல்ல முடியும்.

தூது சென்று பேசக் கூடியவனுடைய தகுதிகள் எவையென்றால், தூது அனுப்புகிறவர்களிடத்தில் அன்புடையவர் களாக இருப்பதுதான்.

காதல்

உடம்பொடு உயிரிடை என்ன மற்றுஅன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு (குறள் 1122)

காதலன் தன் காதலியின் மீது உயிருக்குச் சமமாக அன்பு வைத்திருக்கிறான்.

'நீ போதாய் யாம் வீழும்' (1123) என்ற குறளில், நீ சென்றால் என் உயிர் பிரியும் எனக் காதலியின் மீது அன்பு மிகுந்திருத்தல் காண்கிறோம்.

காதலி, காதலனை நினைத்துக் கொண்டிருக்கிறாள். காதலி கண்ணில் காதலன் உள்ளேயும் போகாமல் விழிகளுக்கும் இமைகளுக்கும் இடையிலேயே இருந்து கொண்டிருக்கிறான் என்றால் காதலன் மீதான அன்பையே வெளிக்காட்டுகிறது.

கண்களை மூடினால் என் காதலர் மறைந்து விடுவார் என்றும் காதலி சூடான உணவுகளை உண்ண அஞ்சுவதும் காதலர் மீதான அன்பை வெளிப்படுத்தும்.

காதலிக்கிற மனைவிக்குக் காதலிக்கப்படுகிற கணவன், செய்கிற அன்பு, உயிர்வாழ இன்றியமையாத மழைக்காக வானத்தையே பார்த்துக் கொண்டிருக்கிற மனிதருக்கு மழை பெய்வதைப் போன்றது.

**வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
**வீழ்வார் அளிக்கும் அளி** (குறள் 1192)

பரிமேலழகர் கூறுவதைப் போல 'அன்பு' தொடர்புடையார்கண் காதல் உடைமை அன்று. தன்னைச்

சார்ந்தோர் மாட்டும், தொடர்பற்றவர் இடத்தும் ஊடுருவிப் பாய்கின்ற நமது மனத்தின் திறனே அன்பு. சுருங்கக் கூறின் 'நான்' என்ற சுயநல வட்டத்தைக் கடந்து மற்றவர் நலன் நாடுகிற பொதுநலப் பாங்கிற்கு வழி வகுக்கும் வலிவு மிகுந்த மனத்தின் ஆற்றல் தான் குறள் கூறும் அன்பு ஆகும்.

மனத்தால், எண்ணிச் செயலால் நிகழ்த்துவது அறம்; அறத்தின் மனத்தளவான பகுதியே அன்பு; அறத்தின் செயலாக்க உறுப்பே அன்பு; இந்த மறுமலர்ச்சி பெற்ற அன்பின் இலக்கணத்தைத் திருவள்ளுவர்தான் முதன் முதலாகத் தருகிறார். யாக்கை அகத்து உறுப்பு அன்பில வர்க்கு. . (79) என்பது அக்குறள்.

மக்கள் வாழ்க்கையின் உயர்நிலை அன்பின் வழியத்தாகும் (குறள்80). இயைபு பெற்ற கூட்டிணைவு வாழ்க்கையை அமைப்பதற்கு மனித மனத்தின் செயல் திறனுடைய உறுப்பாகத் திகழ்வது அன்பு. உடலோடு உயிர் இயைந்திருப்பதைப் போலவே மக்கட் சமுதாயத்துடன் இயைந்திருப்பது அன்பாகும் (குறள் 73). அன்பு என்பது, தமக்குரியது என்று எதனையும் கருதாமையாகும். தன் உடைமை, செயல், பயன், உடம்பு, எலும்பும் கூடப்பிறர்க் குரியது எனக் கருதுகிற உள்ளத்திறன் அன்பு (குறள் 72). அன்பு இன்றி மக்களது கூட்டுச் சமுதாய வாழ்க்கை இல்லை.

அன்பற்ற வாழ்க்கை, பாலை நிலத்தின்கண் காய்ந்து நிற்கும் மரம் தளிர்த்ததைப் போல் ஆகும்; யாருக்கும் அன்பற்ற வாழ்க்கையால் பயனில்லை (குறள் 89).

## துணை நூல்கள்

1. டாக்டர் தி. முருகரத்தினம், திருக்குறள் காட்டும் சமுதாயம், திருக்குறள் ஆய்வக வெளியீடு-5, மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1975.

2. திருக்குறள், பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம்.

* * *

# THIRUVALLUVAR'S SOCIAL REALISM TO THE MODERN WORLD

**M. Muthukumar**

Realism gives a true impression of actuality in art and literature as it appears in reality. It is " the conscience of literature, confesses that it owes a duty, some kind of reparation, to the real world - a real world to which it submits itself unquestioningly."[1] According to M.H. Abrams, realism is applied "to designate a recurrent mode, in various eras and literary forms, of representing human life and experience in literature."[2] However, it is an artistic creed depicting life with complete and objective honesty.

Social realism is a distinct term, used to describe a realistic, objective and socially detailed contemporary reality with some moral values. This article finds the relevance of Thiruvalluvar's social realism to the modern world. The message of Thiruvalluvar is for all humanity and is more relevant and needed at present than at any other time. It is more than or equal to *Arthasastra* of Kaudilya and *Needhi Sastra* of Manu.



Thiruvalluvar, with his everlasting classic literary work, has conquered the whole world. He never advocates his fancy and imagination. From the comprehension of the human values depicted in Thirukkural, it is sure that he had a realistic instinct for and a keen insight into the motive of human nature.

**Social Evils and Solutions**

Thirukkural stands beyond time and space as a bright beacon for all mankind; its universal appeal transcends all social barriers. Today, the world is clouded with problems like enmity, violence, terrorism, corruption, robbery, poverty and so on. As Mu. Varadarasan says,

> Today human bodies have increased in crores; but not human sense. In other words, those who seem to be people have increased, not those who live as people. So, there are confusions, conflicts, problems and war without rest in the world even today; Happiness, love, peace and virtue have become unknown things today.[3]

'Here is God's plenty' in Thirukkural to solve all existing social problems.

First of all, to have a peaceful society, a country should be free from three things; namely starvation, diseases and enemies. Poverty, ill-health and enmity are the dominant evils in the present human society. Thiruvalluvar says,

> **That is a 'land' whose peaceful annals know,**
> **Nor famine fierce, nor wasting plague,**
> **nor ravage of the foe**[4] *(Kural 734)*

Such a kind of society exists where there is real faith, love, and fraternity. To have such a peaceful society, everyone must have the great power of virtue *(Araṃ)*. To have 'virtue' one must have five pillars viz. love, modest, altruism, compassion and truthfulness. If all are virtuous, there will not be enmity any where in the world.

> **Love, modesty, beneficence, benignant grace,**
> **With truth, are pillars five of perfect virtue's resting place**[5]
> *(Kural 983)*

Humanity sustains men of virtue, whenever violence, enmity, and war arise, the world goes to dust. Mankind has experienced two world wars in one century. This was told two thousand years ago.

**The world abides; for 'worthy' men its weight sustain**
**Were it not so, 't would fall to dust again**[6] *(Kural 996)*

Terrorism and intrusion in a neighbour's land are great social evils today. The whole world has witnessed the fall of W.T.C. due to the terrorists' attack and so many similar evil deeds. History has shown the fall of great tyrannies and evil persons. Evil deeds never bring a world of perfect happiness. So, Thiruvalluvar's advice is,

**Though god thy soul forget, plot not thy neighbour's fall,**
**Thy plans shall 'virtue's power' by ruin to thyself forestall**[7]
*(Kural 204)*

**You ask, what is the good and perfect way,**
**'tis path of him who studies nought to slay**[8] *(Kural 324)*

All the evil deeds happening in society have 'money-mysticism' as the main reason. Those who are after money should know that real weath is the wealth of mind. It is the mind that makes heaven of hell and hell of heaven.

**The wealth of mind man owns, a real worth imparts,**
**Material wealth man owns endures not, utterly departs"**[9]
*(Kural 592)*

Robbery is a universal evil; it exists in all countries. Thiruvalluvar has rightly given what happens in the life of one who coverts other's possessions.

**With soul unjust to covert other's well-earned store,**
**Brings ruin to the home, to evil ope(n)s the door**[10] *(Kural 171)*

According to Thiruvalluvar, there is no pain greater than poverty in society that makes one to covert other's things. Only the virtuous can bear it; not all. Hence there is nothing that afflicts one like poverty.

**You ask what sharper pain than poverty is known;**
**Nothing pains more than poverty, save poverty alone**[11]
*(Kural 1041)*

Gambling is another social problem many are indulging in. The result of gambling is,

**Clothes, wealth, food, praise, and learning, all depart**
**From him on gambler's gain who sets his heart**[12] *(Kural 939)*

To avoid the problem of disease, Thiruvalluvar has given one medicine that prevents and cures all diseases. He says,

**No need of medicine to heal your body's pain,**
**If, what you ate before digested well, you eat again**[13]

*(Kural 942)*

Regarding poverty, Thiruvalluvar says, only Agriculture can make a country rich and reduce poverty and starvation. This is given as,

**Who ploughing eat their food, they truly live;**
**The rest to others bend subservient, eating what they give**[14]

*(Kural 1033)*

Society becomes perfect and proper, when there is a good family relationship, lack of which leads to many divorces today. To avoid that, Thiruvalluvar says,

**If love and virtue in the household reign,**
**This is of life the perfect grace and gain**[15] *(Kural 45)*

To avoid all existing social problems in the world, all must have 'virtue'. This great power virtue **(Aram)** can give individual success and social harmony. For instance, Gandhiji succeeded with his two weapons "Truth and non-violence", the two sides of virtue. Thiruvalluvar explains what is virtue as,

**This virtue when, his footsteps sliding not through envy, wrath,**
**Lust, evil speech - these four, man onwards moves in ordered path**[16] *(Kural 35)*

**According to him, the man of truth,**
**lives in souls of all mankind**[17] *(Kural 294)*

## Conclusion

With the great power of 'virtue', Thiruvalluvar gives a solution to all social evils. He addresses all mankind of all times and his philosophy is universal, relevant to every generation. His work gives paths to social harmony and universal integration. It has relevance today to the modern world to overcome the social problems that clouded the whole of humanity, for mankind is very the same, and nothing is lost out of Nature, though everything is altered. It requires infinite space and time to fully accomplish its design. It has ninety-three 'world' references throughout; hence, it is written for the whole of humanity.

The epigrammatic style has exploded all aspects of human life and society. Time cannot wither it, nor can space hold its infinite variety. Let the noble truths of human social values depicted in Kural be disseminated throughout the world to solve its problems. It is an

ageless, eternal, everlasting work of art, never be written again. So, let all in human society follow one principle of 'virtue' that,

> **So learn, that you may full and faultless learning gain,**
> **Then in obedience meet to lessons learnt remain**[18]
>
> *(Kural 391)*

## REFERENCES


1. **Realism,** Damian Grant, London: Methuen & Co., Ltd. 1974. p.14.
2. **A Glossary of Literary Terms,** 7th Ed., M.H. Abrams, New Delhi; Harcourt India Private Limited, 1999, p. 260.
3. **Thiruvalluvar or Vazhkai Vilakkam,** Dr. Mu. Varadarasan, Chennai; Thaaka Publication, 1979, p. 34.
4. **Thirukkural,** with Translation in English by Rev. Dr. G.U. Pope et. al. Madras; The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, Ltd., 1976, p. 198.
5. Ibid, p. 263.
6. Ibid, p. 267.
7. Ibid, p. 54.
8. Ibid, p. 86.
9. Ibid, p. 159.
10. Ibid, p. 46.
11. Ibid, p. 278.
12. Ibid, p. 252.
13. Ibid, p. 252.
14. Ibid, p. 276.
15. Ibid, p. 13.
16. Ibid, p. 10.
17. Ibid, p. 78.
18. Ibid, p. 105.


*** *** ***

# THE NEED FOR INCLUSION OF THIRUKKURAL IN THE CURRICULUM

**E.R. Subrahmaniyam**

A sizable segment of Indian society has, as a consequence of colonial rule, distanced itself from the religio-philosophical ethos and understanding of the past heritage. Even the post colonial system of education has not taken care of the problems.[1] Looking at our society with a clinical detachment an intellectually honest observer will notice bribery and corruption, greed and cheating in mony matters, dishonesty insocial as well as business relations, callousness and insensitvity to others' suffering, selfishness and a lack of concern for others' well being. too many divisions of caste and community, region and religion, frequent absence of strong ethical convictions in powerful and influential individuals, absence in most individuals of a strong emotional attachment to the nation and the people. Negative traits are rather predominant.[2] Everyday wer come across media reports about morallyd degenerate acts of individuals, voilence, mindless killing by extremists, atrocities on women, abuse and exploitation of the poor and the weaker sections. malfunctioning of all domains from economics to education is evident.

Thre is a lot of unrest among students particularly in colleges and universities. Lack of rapport between students and teachers, frequent boycott of classes on some issue or other, the menace of ragging, eve tesing, voilent clashes among rival groups of students etc., are vitiating the campus environment. We should understand where the shoe pinches. Now-a-days students are increasingly under the influcne of T.V. and films. They are watching the exploits being shown on the screen and are being distracted from studies. They are exposed to murders and various other violent situations. Teachers are shown in a poor light. The students become insensitive to the finer nuances of cultural life. T.V. channels are consciously preventing the younger generation from acquiring power by luring them away from studies. Almost all the shows on T.V. tend to be based on films and film stars appear on the screen and advise the younger generation. In fact it is too bad students are so much influenced that they discuss only movies or the exploits of film personalities. The younger generation remian mesmerized by what actors do and say.

Gandhiji's perceptions in education focus on moral values and ethics. In a global scenerio of erosion of values, it would be difficult to have individuals in society who would strive to halt the process of value deteroration unless and until schools produce young persons with the right aims and objective of human life. This should also give a clear indication of what should be the curriculum of education in years to come and how the same can contribute in developing the culture of peace within communities, amongst religions, countries and eventually globally. The trend of focusing only on specified examination-oriented subject areas should be discarded.[3]

We should produce outstaning individuals, cultural and educated, historically literatre and farsighted, visonary and intellectually brillinant, moral and disciplined, forceful and fearless, human as well as ruthless and filled with the zeal to make India great. Who will orchestrate the moral revolution? Who is going to educate and inspire large numbers of our youth to overcome their self and society destructive patterns of behaviour?

The University Education Commission headed by Dr. S. Radhakrishnan (1948-49) gave importance to the incultation of ethical values among students not only in college but also in Universitites. The report says "our belief is the education from its ovwn nature must be ultimately conceived with values which are independent of time or a particular environment.[4]

The Education Commission (1964-66) headed by Prof. D.S. Kothari while declaring that "knowledge with a lack of essential values may be dangerous" emphatically staed "what we would like to

emphsise is the need to pay attention to the inculcation of right values in students at all stages of education. The Secondary Education Commission (Modaliyar Commission, 1952-53) and the Committee on Religious and Moral Instruction (1959) recommended the introduction of religious and moral instruction and emphasized their role in the growth and building of character of individuals human beings which extends their influence in society. The Sri Prakasa Committee desired inclusion of the live and preachings of the great religious leaders and their philosophies in the education system.

The Rama Murthy Commission report (1990) emphasized inculcation of appreciation of India's cultural heritage and the legacy of creation of knowledge and its applications for the benefit of human beings over the centuries. The National Policy on Education (NPE-86) urged that the gap betwen the formal education system and India's rich and varied cultural tradtion should be bridged bthrough an enrichjment of the curricula and making education a forceful tool for the cultivation of social and moral values.[5]

The UNESCO charter states "since wars begin in the minds of men, it is in the minds of men that defences of peace must be constructed."[6] Moral education and acquainatnce with the true culture of all people throught the ages may be assigend a place in the curriculum for our won good, for the good of Inidan society and for the good of human kind. The Thirukkural of Thiruvalluvar is the most outstanding and inspiring popular work in general ethics, political prinicples and happy married life. It is the grate treasure house of wisdom in Tamil and the gift of Tamilnadu to the world. It is on a par with the Bhagavagita dn the Dharmapada. The author Thiruvalluvar is generally assigned tothe first century A.D. He is said to have been a weaver from Mylapore in Chennai. The title of the work is based on the Kural metre in which the couplets are written. The Thirukkural is divided into three secions dealing with three goals of people, Aram, Porual and Kama corresponding to the three Purusharthas Dharam (virtue), Artha (wealth) and Kama (love) respectively. Threre are 1330 kural couplets divided into 133 chapters each containing 10 kurals. In its essence THirukkural is a treatise par excellene on the art of living. Thiruvalluvar diagnoses the intricacies of hiuman nature with such penetrating insight, perfect mastyry and consummate absorbing of the most subtle concepts of modern psychology that one is left wondering at his depths. His precriptions leavened by godliness, ethics, morality, and humannerss are sagacious and practical to the core. They cut across castes, creeds, elimes and ages and have a freshness which makes one feels as if they are meant for the present times.[7]

Speaking one the forece of virtue the great Tamil poet 0 Reformer says "Virute consists in avoiding envy, lust, wrath, harsh

words - these four". "There is nothing more profitable than what virtue can afford. There is no loss worse than forgetting it" Advocating endurance the Saint says "Though others do us no good, it is good that we feel keenly for their ill deed and do no vicious action in return". "Let us overcome by our righteousness those who have in their pride done us great injustice". On the wealth of self controal Thiruvalluvar says. "The wound caused by burning will heal in course of time. The tongues' caustic reproach will never heal". THe really great are those who are humble. modest, free fom insolent pride and who are considerate towards all other fello wbings. They will uphold traditon, display a cultured approach and utter only soft words.

Spaking on 'not doing harm' the Saint says, "To punish wrong doers is todo them great good and thereby make them feel ashamed of their action". "What one has felt as great harm, that he must avoid oding to others" Stating that Gratitude is a quality of virtue he says. "Forget not the friendship of the spotless great, forsake not the friendship of helpers in times of dire need or great distress". Dwelling on the topic of 'earning' saint Thiruvalluvar says, "learning is an imperishable wealth to a man, while all the rest is nothing but trash to him."[8] Real knowledge translated into action becomes culture and ethics. The law of life should be love as it binds and builds. Thirukkual was written 2000 years ago but the statement in couplets concerning a person's activities are relevant evn today as morals cannot be subjected to alternations[9]. There may be many religious but morality is one. There is every need to include Thirukkual in the curriculum. If young boys and girls in schools and colleges are exposed to noble thoughts and right approaches it will leave a lasting impression which will evolve indue course of time as they grow and face the world around them. Right education is the key to peae and prosperity.

## REFERENCES

1. The Hindu open page supplement, June 5, 2001.
2. The Hindu open page supplement, August 8, 1998.
3. The Hindu open page supplement, April 11, 2000.
4. The Hindu open page supplement, April 11, 2000.
5. The Hindu Speaks on Education, 1997, p. 218.
6. The Hindu open page supplement, October 16, 2001.
7. Awakening Inidans to India, Chinmaya Mission Trust, Mumbai.
8. Thirukkural in English, Published by International Institute of Tamil Studies, 1999.
9. The Hindu Speaks on Religious values, 1999, p. 254.

* * *

# வள்ளுவம் காண விரும்பிய சமுதாயம்

**நாராயண துரைக்கண்ணு**

பிறப்பின் அருமை பெருமைகளைச் சற்றும் உணராது, புகழீட்டவும் முனையாது, வாழும் முறைமையினை நன்கறிந்து வாழ்ந்திட முற்படாதது மட்டுமன்றி, அறிவார்ந்த மக்களைப் பெற்றும், ஒழுக்கத்தின் வழி நின்று ஒப்புரவு ஓம்பியும், தீமையான பழக்க வழக்கங்களி னின்று தம்மைத் தவிர்த்தும் வாழ்ந்திட முனையாது, பிழைப்பினைக் கருதி, சிறுமையுற வாழ்ந்திடும் மக்களினம் தடுமாறிடும் நிலை மாறிட, வள்ளுவம் இக்காலத்திற்கு மட்டுமன்றி எக்காலத்திற்கும் துணை நின்றிடல் வெளிப்படை.

## வாழ்வாங்கு வாழ்தல்

வாழ்ந்திட உரிய நெறிமுறைகளி னின்று பிறழ்ந்திடாது, வாழும் முறைமை யினை நன்கறிந்து, மேன்மையுற வாழ்ந்திடு வோர் தெய்வத்திற்கு ஒப்பாக வைத்து மதிக்கப்படுவர் என்று குறள் கூறுவதிலிருந்து பிறப்பின் பயனுடைய புகழினை எய்திடல் வேண்டும் என்பது வள்ளுவரின் விழைவும், வேட்கையுமாகும் என்பதை நன்கு உணரலாம். இக் கருத்தினையே,



**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

என்ற குறளின் மூலம் தெளிவுற அறியலாம்.

## அறிவார்ந்த மக்கட்பேறு

சமுதாயம் நாளும் அறிவின் வயப்பட்டு, முன்னேறுதல் வேண்டும் என்ற பேரவாவினைக் கொண்ட வள்ளுவப் பெருந்தகை,

**தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது**

என்ற குறளின் மூலம் தம்மைக் காட்டிலும் தம்முடைய மக்கள் அறிவில் மேம்பட்டு விளங்கிடல் வேண்டும் என்று தெளிவுறத் தெரிவித்துள்ளர்.

## ஒழுக்கத்தின் உயர்வு

**ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்**

என்ற குறளின் மூலம் சமுதாயம் ஒழுக்கத்தின் வழி நடை பயின்று, பிறப்பிற்குப் பெருமை வந்து எய்துமாறு வாழ்ந்திடல் வேண்டும் என்பதுடன், அவ்வொழுக்கமே உடைமையாகும் என்று கூறுவதிலிருந்தும், ஒழுக்கத்தினின்று பிறழ்ந்தால், பிறப்பே இழிவாகும் என்று உறுதிபடக் கூறுவதிலிருந்தும் வள்ளுவம் ஒழுக்கமுள்ள சமுதாயத்தையே பெரிதும் விரும்பியது என்பதை அறியலாம்.

## ஒப்புரவு கொண்டொழுகுதல்

சமுதாயம் உயர்ந்தோங்க வேண்டுமெனில், ஒருவருக் கொருவர் உதவிடும் நற்பண்பு கொண்டோராய் ஒழுகுதல் வேண்டும். உதவிடும் நற்பண்பால் துன்பமே வரினும் அதற்கெனத் தன்னையே விலையாகக் கொடுக்கவும் தயங்காது முன் வருதல் வேண்டும் என்பதை,

**ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்**
**விற்றுக்கோள் தக்க துடைத்து**

என்பதை மேற்கூறும் குறள்வழி வள்ளுவம் வலியுறுத்திக் கூறுவதைக் காணலாம். தன்னுயிர் போல் பிற உயிர்களையும் எண்ணிக் கருணை கொண்டு ஒழுகுபவன் எஞ்ஞான்றும் துன்பம் உறுதலில்லை என்பதை,

**மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப**
**தன்னுயிர் அஞ்சும் வினை**

என்ற குறளின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## புகழ் பெற வாழ்தல்

நிலையாக எதனையும் தன்னகத்தே கொண்டு இயங்காத உலகத்தில் புகழ் ஒன்றே நிலைத்து நிற்கும் பேராற்றலை யுடையது என்பதை உணர்ந்து, புகழீட்டிப் பெருமையுற வாழ்ந்திட முனைதல் வேண்டும்.

புகழ்எனின் உயிரும் கொடுக்குவர்
பழி எனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்

என்ற புறநானூற்றுக்கு வலிவு சேர்க்குமாறு அமைந்துள்ள

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்

என்ற வள்ளுவத்தினை எண்ணிப் புகழீட்டி வாழ்ந்திட முனைதல் வேண்டும். மேலும், தூய மனத்தினை உடையவராய் மனித இனத்தின் வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாது இம் மன்னுயிரைக் காப்பது போன்று ஒழுகுதல் என்ற மாண்பு அமையுமானால் அஃது அனைத்து வகைப் புகழையெல்லாம் அளிக்கவல்லது என்பதையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

## தீய பழக்க வழக்கங்களினின்று விடுபடல்

இளமையும், வளமையும் கொண்ட இன்றையச் சமுதாயம் பெரிதும் ஒழுக்கத்தினின்று பிறழ்ந்து காணப்படுதல் கண்கூடு. மதியினை மயக்கும் மதுவினைத் தொடர்ந்து அருந்துவது என்பது உயிரை மாய்த்துக் கொள்ளச் சிறிது சிறிதாக நஞ்சினை உண்பதற்கு ஒப்பாகும் என்று பொதுவாகக் கூறிய வள்ளுவம் அதை மீறி உண்ணத் தலைப்பட்டால் ஒழுக்கமுடைய அறிஞர்களால் அவர்கள் எண்ணப்படாத வராகும் நிலை ஏற்படும் என்றும் கீழ்க் காணும் தம் குறள்களால் உறுதிபட உணர்த்துவதைக் காணலாம்.

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்

சிறுமை பல எய்துமாறு செய்வதுடன் புகழினை அழித்து, வறுமை எய்திடச் செய்யும் சூதினை அறவே தவிர்த்திடல் வேண்டும் என்பதை,

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல்

என்ற குறளின் மூலம் நன்கறியலாம். உடலுறவில் நாட்டம் உள்ளது போல், பொய்யுறக் கூடி பழகும் பொருட் பெண்டிருடன் இன்பம்

துய்த்தல் என்பது உறவற்ற பிணத்தினை இருட்டறையில் தழுவுவதற்கு ஒப்பாகும். இதை,

> பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
> ஏதில் பிணந்தழீஇ யற்று

என்ற குறளின் மூலம் உணர்ந்து கொள்ளலாம். ஒழுக்கத்தினை உயிராக எண்ணி, மானிட வாழ்வியலைப் பெரிதும் நெறிப்படுத்தக் கடுமையாகக் கூறும் வள்ளுவத்தின் உயர்வினை எண்ணியெண்ணி இறும்பூதெய்தலாம்.

### மாண்புடைய மக்களரசு

ஆட்சி புரிவோர் எதன் பொருட்டும் அஞ்சாத துணிவுடன் இலங்கியும், வறுமையினைக் கண்டு மனமிரங்கி, இன்னார், இனியர் என்று பாராது, எல்லார்க்கும் உதவிடும் ஈகைப் பண்பு கொண்டொழுகியும், அறிவுடைமையுடன் ஊக்கமுடைமை கொண்டும் விளங்கிடுதல் வேண்டும். அத்துடன் நில்லாது, மக்களுக்கு நலம் பயக்கும் பன்னெடுங்காலத் திட்டங்களை வகுத்து, அதற்கான பொருளை நேரிய வழியில் ஈட்டிக் குறைவு நேர்ந்திடா வண்ணம் காத்து, உரிய வழிவகையறிந்து, முறைப்படி செலவீடு செய்து, அரசினை நல்லரசாகவும், வல்லரசாகவும் இயக்குதல் வேண்டும் என்பதையும் கூறிட முனைந்தது. வள்ளுவம் நல்லாட்சியின் அமைதிக்குக் குந்தகம் நேரும் வண்ணம் மிகக் கொடிய குற்றம் புரிவோரைக் கொலைத் தண்டனை மூலமும் தண்டித்துச் சமுதாய நலத்தைக் காக்க வேண்டும் என்பதையும் நமது பல்வேறு அதிகாரங்களில் அறுதியிட்டு உறுதிபடக் கூறுவதைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

பொருளீட்டலில் மிகவும் நாட்டம் கொண்டு, பொய்ம்மையுற வாழும் இன்றைய மானிடம் வாழ்வாங்கு வாழ்ந்து, அறிவார்ந்த நன் மக்களை ஈன்று, ஒப்புரவு கொண்டொழுகி, தீமை பயத்தலான பழக்கங்களைத் தவிர்த்து ஒழுக்கத்தின் வழிநின்று, புகழீட்டி வாழ்தல் வேண்டும் என்றும், மாண்புடைய மக்களைக் காக்கும் அரசு வளமான நலன்களை நல்குமாறு அமைவதுடன் கொடுமைகளைக் களைந்து, அஞ்சுதலின்றி, அறிவுடைமையுடனும், ஊக்கமுடைமையுடனும் செயல்படுதல் வேண்டும் என்றும் நிலைத்த அறத்தினையே பேசுவதால், 'வள்ளுவம்' இக்காலத்திற்கு மட்டுமன்றி எக்காலத்திற்கும் துணையாக நிற்கும் என்பதை இச்சமுதாயம் ஐயத்திற்கு ஒரு சிறிதும் இடமின்றி அறிந்து, தெளிந்து, ஒரு தலையாக வள்ளுவத்தைப் போற்றி அதன் வழி வாழ்ந்து, 'மண் பயனுற வேண்டும்' என்ற கருத்தினை அகத்தினில் கொண்டு புகழொடு வாழத் தலைப்படுதல் வேண்டும்.

※ ※ ※

# இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை சமுதாய நோக்கு

*சி.கே. இரவிசங்கர்*

*ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஈரடி வெண்பாக்களால், 1330 அரும்பாக்களைப் புனைந்து, அவற்றை முப்பாலாகத் தொகுத்து வள்ளுவப் பெருந்தகை வழங்கிச் சென்றுள்ள அட்சய பாத்திரம் 'திருக்குறள்' எனும் கருத்துப் புதையல். அது மொழி, மதம், இனம், நாடு என அனைத்தும் கடந்து 'எல்லை தாண்டிய தமிழ் இலக்கிய உலகப் பொது மறை' ஆகும்.*

*எந்நோக்கில் இருந்து பார்த்தாலும் அந்நோக்கத்திற்குத் தகுந்த போக்கையும், எந்தக் கேள்வியைக் கேட்டாலும் அக் கேள்விக்குத் தகுந்த பதிலையும், எந்தச் சிக்கலைக் கூறினாலும் அச் சிக்கலுக்குத் தகுந்த தீர்வையும் தரவல்ல 'அமுத சுரபி' திருக்குறள் ஆகும்.*

*முக்காலமும் உணர்ந்த மாமுனியான திருவள்ளுவர் இயற்றிய குறள், காலத்தை வென்ற காவியம். எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய மறைபொருளின் 'சமுதாய நோக்கு' பற்றி, இங்குக் காண்போம்.*

தசாவதாரத்தில் ஓர் அவதாரமாக வாமன அவதாரம் எடுத்த திருமால், தம் ஈரடிகளால் விண்ணையும் மண்ணையும் அளந்து மூன்றவாது அடியால் மகாபலியின் சிரத்தை அழுத்திச் செருக்கை அகற்றினார். பொய்யாமொழிப் புலவரான வள்ளுவரோ தம் ஒன்றேமுக்கால் அடிக்குறளால் மூவுலகையும் முக்காலமும் ஆள்கிறார் என்பதே சத்திய வாக்கு ஆகும்.

புலால் உண்ணுதலையும், உயிர்ப்பலி இடுதலையும், கள் உண்பதையும் சங்ககாலச் சான்றோர்கள் கூட கடிந்துரைக்க வில்லை. நவநாகரிகம் வளர்ந்துவிட்ட இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில் வாழும் மக்கள் கூடப் புலால் உண்பதையும் உயிர்ப்பலி கொடுப்பதையும் மது அருந்துவதையும் தவறாக நினைத்து ஒதுக்குவதில்லை. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 'கொல்லாமை' மற்றும் 'கள்ளுண்ணாமை' போன்ற அரிய அத்தியாவசிய சமுதாயக் கோட்பாடுகளை உலகிற்கு வற்புறுத்திய முதல் தெய்வப் புலவர் தமிழ்த் தாய் ஈன்றெடுத்த தவப்புதல்வரான திருவள்ளுவரே ஆவார். பிற்காலப் புலவர்கள் மட்டுமல்லாது தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் வள்ளுவரின் சமுதாய நோக்கை மிகவும் வியந்து பாராட்டுகின்றன.

## வள்ளுவர் நோக்கில் 'கொல்லாமை'ச் சமுதாயம்

இந்த உலகச் சமுதாயம் அன்பை அடிப்படையாய்க் கொண்டது. சாதாரண ஈ, எறும்பு கூட இயற்கையின் படைப்பே. எனவே, மனித சமுதாயத்தைப் போலவே அனைத்து உயிரினங்களுக்கும் வாழும் உரிமை உண்டு. பிற உயிரினங்களுக்கு ஊறு விளைவிப்பது கூடாது எனப் புரட்சிக் குரல் கொடுக்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

"ஊன் உண்டு உடல் வளர்த்தேனோ...?! என்ன பாவம் செய்தேனோ...?! என்று வள்ளலார் சுவாமிகள் கலங்கிக் கண்ணீர் வடித்துள்ளார்.

> **உயிர்க்கொலையும் புலைப் பொசிப்பும் உடையவர்கள்**
> **உறவினத்தார் அல்லர்; அவர் புற இனத்தார்...**
> *(திருவருட்பா - 4160 - 6 - 57- அருள் விளக்கமாலை - 71)*

என்று வள்ளுவர் காட்டிய வழியில் உயிர்க் கொலையையும் புலால் புசிப்பதையும் வெறுப்பதோடு, அதைச் செய்வோர் உறவினரே ஆனாலும் அவர்கள் புற இனத்தாரே ஆவர் எனப் புறந்தள்ளுகிறார் வள்ளலார். அத்தோடு முதலாம் நூற்றாண்டில் வாராது வந்த மாமணியாக வந்த அவதாரச் சித்த புருடர் -

திருவள்ளுவர் என்கிறது திருவருட்பா. இவ்வாறாக, அன்பையும் அகிம்சையையும், சீவ காருண்யத்தையும் ஆணிவேராகக் கொண்டு வலுப்பெற்றது நமது மனித சமுதாயம் ஆகும். இதையே வள்ளுவரும் தம் பொதுமறையில், அறத்துப்பால் துறவறவியல் - 'கொல்லாமை' மற்றும் 'புலால் உண்ணாமை' எனும் அதிகாரங்களில் 20 முத்தான குறட்பாக்களில் வலியுறுத்துகிறார்.

அன்னியக் கலாச்சாரப் படையெடுப்புக் காரணமாக, நமது சமுதாய மக்கள் தங்களின் சீவகாருண்யத்தை மறந்து வருகின்றனர். மனித சமுதாயம் இயற்கையால் தனக்கு அளிக்கப் பட்ட பகுத்தறிவை மறந்து, எல்லை தாண்டிய பயங்கரவாதம் போல் பிற உயிர்களைப் பலியிட்டுக் கொன்று தின்று வருகிறது. இவ்வுலகில் அனைத்து உயிரினங்களும் மனிதனுக்காகவே படைக்கப்பட்டுள்ளன என்ற தவறான கண்ணோட்டத்தில் ஊறிப் போன மானிட சமுதாயம் பிற பிராணிகளை வதைத்து உண்ணவும் ஆரம்பித்தது.

பிராயச்சித்தமே இல்லாத மகாபாதக பாவச் செயல், பிற உயிர்களைக் கொல்வது ஆகும். உயிர்க் கொலை புரிவோரைப் 'புலையர்' என இகழ்கிறார் திருவள்ளுவர். இதையே,

**கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்**
**புன்மை தெரிவார் அகத்து** *(குறள் 329)*

என்று சமுதாய நோக்கில் குரல் கொடுக்கிறார். பிற உயிரினங்களுக்குத் தீங்கு விளைவித்துக் கொல்லும் தன் கொடிய செயல்களுக்கு மனச்சாட்சி இடம் கொடுக்காததால், மனிதன் தான்செய்யும் பிராணிக் கொலைகளை இறைவனுக்காகவே செய்வதாகக் கூறித் தனது பாவத்திற்கு நியாயம் கற்பிக்க முயல்கிறான். இவ்வாறாக, ஒரு சில மனிதர்களின் சுயநலத்திற்காக உருவாக்கப்பட்டதே திருக்கோயில்களிலும் வழிபாட்டுத் தலங்களிலும் உயிர்ப் பலி கொடுக்கும் வழக்கம் ஆகும்.

ஓர் உயிரைப் பலியிட்டுச் சாந்தி முதலியன செய்வதால் எது கிட்டினும், மேன்மையுள்ளோர் உயிர்ப் பலியிடும் பாவத்தைச் செய்ய மாட்டார்கள் என்கிறார் வள்ளுவர். இதையே,

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை (குறள் 328)

என்று சுட்டிக் காட்டுகிறார் வள்ளுவர்.

கோயில் என்பது இறைவனின் உறைவிடம் ஆகும். அது மிகவும் தூய்மையாக இருக்க வேண்டியது அவசியம். அதனுள்

பறவைகளையும் பிராணிகளையும் பலியிட்டுக் கோயிலினுள்ளேயே சமைத்து உண்பது கடுமையான துர்நாற்றத்தை விளைவிப்பதுடன் அதன் தூய்மையும் கெட்டுவிடுகிறது. மொகலாயர்கள், அவர்களைத் தொடர்ந்து வெள்ளையர்களும் நம் நாட்டை வசப்படுத்திக் கொண்டபோது, மானிடப் பண்பு மற்றும் கலாச்சாரம் ஆகியவை அடியோடு அழிந்து போய் விட்டன. அதனால் காலங்காலமாகக் 'கொல்லாமை'யைக் கடைப்பிடித்து வந்த மக்கள், அசைவ உணவிற்கு மாறினர். ஆயினும் பல தலைமுறைகளாக அண்ணல் காந்தி வகுத்துத் தந்த அகிம்சா தர்மத்தையே பலரும் கடைப்பிடித்து வந்ததால், தங்கள் சுவைக்காகப் பிற உயிர்களைக் கொன்றபோது அவர்களது மனச்சாட்சி அவர்களைக் கடுமையாக உறுத்தி வந்தது. அதனைச் சமாளிப்பதற்காகத் தெய்வத்திற்காகவே உயிர்ப்பலி இடுவதாகக் கூறிய மனிதனுக்கு மோசமான நவ நாகரீக கலாச்சாரமும் கைகொடுத்தது.

ஆயிரம் வேள்விகளால் கிட்டும் மேன்மையை விட, புலால் உண்ணாமல் இருப்பதே மிகப் பெரிய புண்ணியம் என்கிறார் வள்ளுவர்.

**அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத்து உண்ணாமை நன்று** *(குறள் 259)*

எனவே, ஒரு சமுதாயம் சிறப்பான வகையில் பண்பாட்டோடு முன்னேற வேண்டுமானால், கொல்லாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். 'புலால் உண்ணும் ஆசையினால்தான் கோயில்களில் உயிர்ப்பலி நடக்கிறது' என்பதை உணர்த்தும் வகையில்,

**தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்** (குறள் 251)

என்று சாடுகிறார். மேலும்,

**உயிர்ப்பலி இடாதவனையும் புலால் உண்ணாதவனையும்**
**அனைத்து உயிர்களும் போற்றி வணங்கும்**

என்ற பொருள்படும் வகையில்

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்** *(குறள் 260)*

என்று சமுதாய நோக்கில் வழக்காடுகிறார் வள்ளுவர்!

### பாவம் செய்வதா சமுதாய உரிமை!

"உயிர்ப்பலி இட அனைத்துச் சமுதாயத்தினருக்கும் உரிமை உண்டு. தங்களுக்குப்பிடித்தமான பிராணிகளை காணிக்கையாக்கி வழிபட்டுக் கொன்று தின்பது தமிழனின் தொன்று தொட்ட நாகரீகக் கலாச்சாரம். . !" என்று சிலர் அறிந்தோ அறியாமலோ பேசி வருவது, சமுதாயத்தைச் சீரழிக்கவே செய்யும். அன்பையே உயிர் மூச்சாகக் கொண்டிருக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கு, மேற்கண்ட சொற்கள் கீழ்ச் சொற்கள் ஆகும்.

### பண்பாட்டின் சின்னம் – 'கொல்லாமை'

மதம், இனம், மொழி, காலங்களுக்கு அப்பாற்பட்டது கொல்லாமை எனும் சீவகாருண்யம் ஆகும். ஓர் இந்துவோ, கிறிஸ்தவரோ, முஸ்லீமோ எவர் உயிர்ப்பலி இடுவதற்காக ஒரு பறவையையோ விலங்கையோ வெட்டினாலும் அந்த உயிரினம் துடிதுடித்துத்தான் உயிரை விடுகிறது. இவ்விதம் உயிர் பிரிவதற்கு முன்பு, அந்த உயிரினம் துடிதுடித்து, அது படும் கொடிய வேதனையை வார்த்தைகளால் வடிக்க இயலாது.

பறவைகளும் பிராணிகளும் பலியிடப்படுவதால், நமது சந்ததிகள் பல தலைமுறைகளுக்குப் பாதிக்கப்படுகின்றன. சிறுகுழந்தைகள் புற்று நோய் மற்றும் சிறுநீரகக் கோளாறுகளால் இறப்பதற்கு முற்பிறப்பு உயிர்வதைப் பாவங்களே காரணம் என்கிறது ஆன்மீகம். இதையே வள்ளுவரும் உறுதிப் படுத்துகிறார்.

**உயிருடம்பின் நீக்கியார் என்ப செயிர் உடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர்** *(குறள் 330)*

என்று செப்புகிறார் வள்ளுவர்.

### அறிவியல் பூர்வமான குறள்

வள்ளுவரின் வாக்கை மெய்ப்பிக்கும் வகையில், உலக சுகாதார மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "உலகில் புற்றுநோயால் பாதிக்கப் பட்டோரில் நூற்றுக்கு எண்பது சதவிகிதம் பேர் புலால் உண்பவர்களாகவே இருக்கிறார்கள்" என்று கூறுகிறது. ஆகையால், புலால் உண்ணுதல் மற்றும் உயிர்ப் பலியிடுதலால் இம்மையிலும் தீராத நோய் - மறுமையிலும் தீராத நோய்.

## குறள் காட்டும் வழியில் தமிழகம்

உயிர் வதையைத் தமிழக அரசு தடை செய்துள்ள விதம், குறள்காட்டும் வழியில் ஒட்டு மொத்த தமிழகத்தையும் இட்டுச் செல்வதோடு, ஏராளமான மக்களை 'உயிர்வதை' எனும் பாவத்தில் இருந்து தடுக்கும் சட்டம் ஆகும். இதனால் ஓர் ஆடு அல்லது கோழி உயிர்ப் பிச்சை பெற்றால் கூட அது மகத்தான புண்ணியம் ஆகும்.

## சமுதாய விழிப்புணர்ச்சியில் வள்ளுவம்

'துறவறத்தின் மேன்மையைப் போற்றும் வள்ளுவர், 'துறவித் தோல்' போர்த்திய போலிச் சாமியார்களைச் சாடுவதிலும் சமுதாய நோக்கினைக் கடைப்பிடிக்கிறார். தேசத்திற்கும், சமுதாயத்திற்கும் மிகப் பெரிய சாபக்கேடு இத்தகைய 'போலிச்சாமியார்கள்' என்பதை,

> **நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
> **வாழ்வாரின் வன்கணார் இல்** *(குறள் 276)*

என்று உணர்த்துகிறார். சமுதாய விழிப்புணர்ச்சிக்கு வள்ளுவம் போன்ற அருமருந்து வேறு உண்டோ!

## சமத்துவச் சமுதாயம் உணர்த்தும் வள்ளுவம்

உயிரினங்களில் எந்த ஏற்ற தாழ்வும் கிடையாது; சாதி, மதம், இனம், மொழிப் பாகுபாடுகள் அற்ற மானிட சமுதாயமே மகத்தான சமுதாயம் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்துகிறார் வள்ளுவர். இந்த உண்மையை வலியுறுத்தும் வகையில்,

> **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
> **செய்தொழில் வேற்றுமை யான்** (குறள் 972)

என்று உணர்த்துகிறார்.

## சமுதாய நோக்கில் கள்ளுண்ணாமை

தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் என அனைவராலும் போதைத் திரவியமாய், மது - சோமபானம், சுராபானம், கள்.. எனப் பற்பல பெயர்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட குடியைக் விட்டொழிக்க ஓர் அதிகாரத்தை ஒதுக்கியவர் வள்ளுவர். காலத்தை எல்லாம் கடந்த மிகப் பழமையான நம் புராதன நூல்களில், 5 வகைத் தவறுகள் - மகாபாதகங்கள் என வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றில் உயிர் வதை மற்றும் மது உண்பது ஆகிய இரண்டும் மிகக் கொடிய மகாபாதகங்களாக

சித்திரிக்கப்படுகின்றன. இத்தகைய பாவச் செயல்களைச் செய்யாமல் இருந்தாலே சமுதாயம் முன்னேறும் என்பது வள்ளுவர் வாக்கு. ஏழை எளிய மக்களின் வாழ்வையே நாசமாக்கி விடும் இத்தகைய குடிப்பழக்கம் மக்களால் அறவே ஒதுக்கப்பட வேண்டும். அரசாங்கமும் உயிர்ப்பலியை வள்ளுவர் வாக்கின் அடிப்படையில் தடை செய்தது போல மதுவிற்கும் தடை விதித்துப் பொய்யாமொழிப் புலவரின் வாக்கை மெய்ப்பிக்க வேண்டும்.

மது உண்ணும் மயக்கத்தால் உறவுமுறைகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. மது உள் புகுந்ததும் அறிவு வெளியேறி, தாரத்திற்கும் மகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் பெற்ற மகளையே பலவந்தப் படுத்திய மகாபாதகர்கள், சமுதாயத்தையே நிர்மூலம் ஆக்குகிறார்கள். அது மட்டுமன்றி, சம்பாதிக்கும் பொருள் முழுவதும் மதுவிலேயே மூழ்கிப் போக, குடும்பம் வறுமையினால் சின்னாபின்னம் ஆகிறது.

மிகக் கொடிய கொலைகளைச் செய்தவனை மகனாக ஈன்றெடுத்த தாய், அந்த நிலையிலும் தன் மகனை விட்டுக் கொடுக்காமல் பாசத்தின் காரணமாக மருகுவாள். ஆனால், தன் மகன் 'குடிகாரன்' என்பதை ஒரு தாய் உணர்ந்தால் அவனை அடியோடு வெறுத்து ஒதுக்கி விடுவாள். தெய்வத்தின் உண்மைச் சொரூபமான தாயாலேயே ஒதுக்கப்பட்ட குடி மக்களால் ஒரு சமுதாயம் எப்படி மேம்பட முடியும்?

**ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்**
**சான்றோர் முகத்துக் க்ளி** *(குறள் 923)*

என்று சாடுகிறார்.

ஒரு சமுதாயம் மேம்பட வேண்டுமானால், வள்ளுவர் காட்டிய வழியில் மதுவைத் தடை செய்யவேண்டும். ஏனெனில் ருசி கண்ட பூனையைத் திருத்த முடியாது போல, கள்ளுண்ட குடி மக்களை, அதன்பிடியில் இருந்து மீட்பது மிகக் கடினம். எனவே, 'குடி'க்கு இடம் கொடுக்காமல் அரசாங்கமே வள்ளுவர் வழியில் மது விலக்கைக் கடுமையாக அமுல் செய்தால் சமுதாயம் நிச்சயம் மேம்படும். இதே கருத்தின் அடிப்படையில்,

**களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்**
**குளித்தானைத் தீத்துரீஇ யற்று** (குறள் 929)

என்று அறிவுறுத்துகிறார் வள்ளுவர்.

## குறள் வழியில் சூழ ஒழித்த தமிழகம்

பற்பல துன்பங்களை அள்ளித்தந்து மிகக் கொடிய வறுமையில் தள்ளும் சூதாட்டத்தை வேரறுக்க வேண்டும் என்கிற பொருளில், சமுதாய நோக்கில்,

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல் *(குறள் 934)*

என்று பொருளாதார மேம்பாட்டிற்கு வழி கூறுகிறார் வள்ளுவர்.

நம் தமிழகமும் சூதொழிந்த தமிழகமாக வள்ளுவர் செப்பிய பொய்யா மொழியைச் சமுதாய முன்னேற்றம் மூலம் மெய்ப்பித்துள்ளது.

## பண்பாடு போற்றும் வள்ளுவ சமுதாயம்

ஒரு சமுதாயம் ஆக்கப்பூர்வமான முறையில் செழித்தோங்க வேண்டுமெனில், அந்தச் சமுதாயம் 'பண்பாட்டின் தொட்டில்' போல் விளங்கவேண்டும் என்பதைப் பசுமரத்தாணி போல் உணர்த்துகிறார் வள்ளுவர். பெண் உரிமை காக்கும் வள்ளுவர் பண்பு - கற்பு போன்றவை பெண்களுக்கும் மட்டு மல்லாமல் ஆண்களுக்கும் பொருந்தும் என்பதை வலியுறுத்துகிறார். சமுதாயத்தில் பண்பாடு காக்கப் பட வேண்டுமெனில் ஆண் - பெண் பண்பு நலன் மட்டுமல்லாது அன்பும் இருபக்கமும் இழைந்தோட வேண்டும். குடும்பத்தில் ஒருவர் அன்பு, பாசத்துடன் விளங்க, மற்றொருவரோ பாராமுகமாக இருந்தால் அன்பு மட்டுமல்லாது பண்பும் தடம் புரண்டு விடும். எனவே அன்பும் பண்பும் கலந்து ஓங்கும் இல்லற சமுதாயத்தை வடிவமைக்கும் வகையில்,

ஒருதலையான் இன்னாது காமம் காப்போல
இருதலை யானும் இனிது *(குறள் 1196)*

என்று போதிக்கிறது குறள்.

## முப்பாலில் தோய்ந்த சமுதாய நோக்கு

ஆக, 'இக்கால உலகிற்குத் திருக்குறளின் தேவை' என்ற அடிப்படையில் நோக்கினால் அறத்துப்பால் பொருட்பால் இன்பத்துப்பால் என முப்பாலிலும் கலந்த தேவாமிர்தமாகச் 'சமுதாய நோக்கு' மிளிர்கிறது. வள்ளுவரின் எண்ணம், சொல், செயல், அனைத்திலுமே சமுதாயம் முன்னேற வேண்டும் என்ற உந்துதல் தணியாத தாகமாக, நீறு பூத்த நெருப்பாகக்

கழன்றுகொண்டே இருப்பதை, அவரது பற்பல அதிகார அகராதிகள் எடுத்துரைக்கின்றன.

ஒரு சமுதாயம் முன்னேற வேண்டுமானால், மேற்கண்ட மகா பாதகங்களைக் களைவதோடு, மக்கள் சமுதாயத்தைக் கட்டிக் காக்க, ஆட்சியாளர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறை (அதிகாரம் : அமைச்சு), உழவுத் தொழிலின் மேன்மை (அதிகாரம் : உழவு), மக்களிடையே சுய கட்டுப் பாட்டை அறிவுறுத்துதல் (அதிகாரம் : ஒழுக்கமுடைமை), கல்லாமையின் கொடுமை, கள்ளாமையின் மேன்மை, குடி செயல் வகையின் மேன்மை - எனப் பற்பல அதிகாரங்களின் மூலம் சமுதாய நோக்கை நோக்கித் தனது குறள் அதிகாரங்களைப் பரப்புகிறார் வள்ளுவர்.

நம் அன்றாட வாழ்விற்கு மூச்சு எப்படி அத்தியாவசியத் தேவையோ, அதே போல இக்கால உலகிற்குப் பொய்யாமொழியான திருக்குறள் நிச்சயம்தேவை. சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லக் குறள் காட்டும் வழியில் நிழலாக நாம் பின் தொடர்ந்தால் நம் நிழலும் நம்மை மதிக்கும்.

* * *

# வள்ளுவரின் பெண்மையும் இக்காலப் பெண்ணியப் பார்வையும்

சி. அழகர்



திருவள்ளுவர் வாழ்ந்த காலம் ஒரு நிலவுடைமைச் சமூகமாகும். அச்சமூகத்தில் பெண்கள் இல்லத்திற்குரியவர்களாக மட்டுமே இருந்துள்ளனர். ஆண்கள் புற உலகில் செல்வாக்குடன் ஆதிக்கம் பெற்றும் இருந்துள்ளனர். அச்சமூகச் சூழலில் அறம் உரைக்கப் பாடிய திருக்குறளில் அக்காலப் பெண்களின் வாழ்வியல் நிலையும் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருக்குறளில் இடம்பெற்றுள்ள பெண்மைக் குணமான கற்பு, ஒழுக்கம், கணவன் மனைவி உறவு, இல்லத்தைப் பேணும் பண்பு முதலானவற்றை இக்காலப் பெண்ணியப் பார்வையில் இங்குக் காணலாம்.

## கற்புத்தன்மை

> பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
> திண்மையுண் டாகப் பெறின் *(குறள் 54)*

இல்வாழ்வில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப் பெற்றால் அம் மனைவியை விட வேறு செல்வம் கிடையாது.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள் 56)

கற்புநெறியில் தன்னையும் காத்துக் கொண்டு,தன் கணவனையும் காப்பாற்றித் தகுதியமைந்த புகழையும் காத்து, உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண் எனக் கூறப்பட்டுள்ளது. புராதனப் பொதுவுடைமைச் சமூகத்தில் பாலியல் வேறுபாடு இல்லாமல் உறவு வைத்து வாழ்ந்து வந்துள்ளனர். நிலவுடைமை வர்க்கம் தோன்றிய பின் சொத்துக்களைத் தம் வாரிசுக்குத்தான் கொடுக்க வேண்டும் என நினைத்து நிலவுடைமையாளர்கள் தம் குழந்தைதான் என்பதை நிரூபிக்கப் பெண்களைக் கற்பு என்னும் கோட்பாட்டில் நிலை நிறுத்தியுள்ளனர். இங்குதான் ஆணாதிக்கச் சமூகம் தோற்றம் பெறுகிறது. அக் கற்புக் கோட்பாட்டை வள்ளுவரும் தம் குறட்பாக்களில் கூறியிருப்பதால், அதை ஓர் ஆணாதிக்கச் சமூகக் கருத்தியலாகவே காண முடிகிறது. அக் கற்புக் கோட்பாடு இன்று மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்துள்ளது. "கற்பு என்ற கருத்தாக்கம் தேவையான ஒன்று என்பதை 95.5% மக்கள் கற்பு என்பது தேவையில்லாத சமுதாயக் கட்டுப்பாடு என்றும் அது மாயை என்றும், வெற்றுப் பந்தம் என்றும் கணித்துள்ளனர்."[1] திருவள்ளுவர் வாழ்ந்த காலம் ஓர் ஆணாதிக்கச் சமூகமாகவே இருந்துள்ளதை அறிய முடிகிறது.

### கணவன் – மனைவி உறவு

பண்டைக் காலச் சமூகத்தில் ஆண்கள் மிகுதியாக உழைப்பில் பங்கெடுத்ததால் அவர்களே சமூகத்தில் முதன்மையானவர்களாகக் கருதப்பட்டுள்ளனர். வள்ளுவர் வாழ்ந்த காலக் கட்டத்திலும் அதே நிலை என்பதால் பெண்கள் கணவனின் உழைப்பைச் சார்ந்தே வாழ வேண்டிய சூழல் இருந்துள்ளது. அந்நிலையை வள்ளுவர் தன் படைப்பில் பதிவு செய்துள்ளார்.

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு (குறள் 58)

பெண்கள் கணவரைப் போற்றித் தம் கடமைகளையும் செய்வாரானால் பெருஞ் சிறப்புடைய மேல் உலக வாழ்வைப் பெறுவர் எனக் கூறப்பட்டுள்ளது. கணவனை வணங்கி அவனுக்கு ஏவல் பணி செய்யும் ஓர் அடிமைப் பெண்ணாக வற்புறுத்தப் படுவதைக் காண முடிகிறது.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (குறள் 55)

கடவுளை வழிபடாது கணவனைத் தொழும் பெண் பெய் எனக் கூறின் மழை பெய்யும் என்பது கற்பு பற்றிய நடைமுறை விளக்கம். தெய்வத்தை விடக் கணவன் அதீத சக்தி படைத்தவனாகக் காட்டப்பட்டுள்ளான். இது ஆண்களின் சமூக மேன்மையைக் காட்டுகிறது. பெண்கள் கணவனை வணங்கி, ஏவல் பணி செய்வதைத் தவிர சமூகத்தில் பிற பணிகளில் பங்கெடுத்ததாகக் காட்டப்படவில்லை.

## இல்லமும் பெண்ணும்

தந்தை வழிச் சமூகத் தோற்றத்திற்குப் பின் பெண்களின் இயக்கத்தை இல்லறத்தில் நிலை நிறுத்தியுள்ளனர். அவர்களுக்கு 'இல்லாள்', 'மனையாள்', 'வீட்டுக்காரி' என்ற இடம் கொடுத்து அவர்களை இல்லத்தில் அடைத்துள்ளனர். வீட்டில் கணவன், பிள்ளை, விருந்தினர் இவர்களிடம் பரிவுடனும், பணிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் என நீதி போதிக்கப்பட்டுள்ளது.

> மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
> எனைமாட்சித் தாயினும் இல் (குறள் 52)

இல்லறத்திற்குத் தேவையான நற்பண்பு பெண்ணிடம் இல்லா விட்டால் அவள் எவ்வளவு சிறப்புடையவளாக இருந்தாலும் பயனில்லை.

> இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
> இல்லவள் மாணாக் கடை (குறள் 53)

மனைவி நற்குணம் பொருந்தியிருந்தால் வளமான வாழ்வு அமையும். மாறுபட்ட குணம் பொருந்திய மனைவி அமைந்தால் வாழ்க்கை பயனற்றதாகும். "நற்குணம் பொருந்திய மனைவி அமையாவிட்டால் வாழ்க்கை சூன்யமாகிவிடும். இந்தப் பண்பு மற்றும் நற்குணம் என்பது ஆணின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வரையறுத்துள்ளனர்."[2] ஆண்களிடம் பண்பாட்டை எதிர்நோக்கும் சமூகம் அதை வற்புறுத்தவில்லை. ஆனால் பெண்களிடம் பண்பாட்டையும் மரபையும் வற்புறுத்தியுள்ளனர். பெண்களை இல்லத்திற்குரியவர்களாகக் கூறிவிட்டு இல்லச் சுமைகளிலிருந்து ஆண்கள் விலகிக் கொள்கின்றனர்.

## பெண்ணை இழிவுபடுத்தல்

பெண்கள் இல்லத்தில் அடைபட்டுக் கிடப்பதால் அவர்களுக்கு வெளியுலக அனுபவம் இருப்பது இல்லை என்றும், ஆதலால் அவர்களிடம் சிந்தனைத் திறன் குறைவாக இருக்கும்

என்றும், அவர்களின் பேச்சையோ கருத்தையோ கேட்டு நடப்பது கேடு விளையும் என ஆணாதிக்கச் சமூகத்தினர் கருதியுள்ளனர். அக்கருத்து குறளிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்**
**வேண்டாப் பொருளும் அது** *குறள் 901*

மனைவியை விரும்பி அவள் சொன்னபடி நடப்பவர் சிறந்த பயனை அடைய மாட்டார். கடமையை விரும்பியவர்க்கு வேண்டாத பொருளும் அதுவே எனக் கூறப்பட்டுள்ளது.

**தையல் சொல் கேளேல்** *ஆத்திசூடி 62*

எதார்த்தத்திலும், இலக்கியங்களிலும் பெண்களுக்குக் கருத்துரிமை கொடுக்காமல் இல்லப் பொம்மையாகவே வைத்துள்ளனர். சமூகத்தில் பெண்களுக்கு எந்தவகையான மேன்மையும் கொடுக்காமல் அடித்தட்டு நிலைக்கே அவர்கள் தள்ளப் பட்டுள்ளனர்.

"வள்ளுவப் பேராசானுக்கு அவன் காலத்து நிலப் பிரபுத்துவக் கருத்தான பெண், ஆண் ஏற்றத் தாழ்வுக் கருத்தைத் தாண்ட முடியவில்லை. அதற்கு முதல்தரமான எடுத்துக்காட்டு பெண் வழிச் சேரல் அதிகாரம்" எனப் ப. ஜீவானந்தம் கூறியுள்ளார். "வள்ளுவர் காலத்தில் அரசு தோன்றிவிட்டது. நிலவுடைமை அமைப்பு நிலைத்து விட்டது. வள்ளுவர் அரசுக்கும் நிலவுடைமை அமைப்புக்கும் சேவை செய்பவராகவே விளங்கினார். நிலவுடைமை அமைப்பை உடைக்க அவர் விரும்பவில்லை. அதை நிலைநாட்ட அரசனுக்கும் நிலவுடைமையாளர்களுக்கும் அறிவுரை கூறினார். அதை உடைக்க விடாது காப்பதற்கு அறம் வகுத்தார். இவற்றால் நிலவுடைமைச் சமுதாயத்தைப் பேணுவதற்குத் திருக்குறள் இலக்கண நூலாக விளங்குகிறது."[3] நிலவுடைமையை விரும்பியதால் ஆணாதிக்கக் கருத்தியலும் இடம்பெற்றுள்ளது. பெண்ணை இல்லாள் என்று கூறுகின்றனர். ஆனால் இல்லத்தின் நலனுக்கான ஆலோசனை கூறியதாகக் காட்டப்படவில்லை.

நிலவுடைமைச் சமூகத்தில் வாழ்ந்த திருவள்ளுவர் அச்சமூகத்தில் பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட கற்புக்கோட்டைப் பதிவு செய்துள்ளார். நிலவுடைமை வர்க்கத்தினர் அக்கோட்பாட்டைச் சுயநலத்திற்காகத் தோற்றுவித்துள்ளனர் என ஆராயப்பட்டுள்ளது. குடும்பத்தில் உழைப்பை ஆண்களுக்குக் கொடுத்து மனைவியைக் கணவனைச் சார்ந்து வாழவைத்து, கணவனையே கடவுளாகவும் வணங்க வைத்துள்ளனர். இல்லத்தில்

உள்ள பெண்களுக்கு மரபுகளை வலியுறுத்தி, ஆண்களுக்கு அம் மரபுகள் வலியுறுத்தப் படாமல் உள்ளதைக் குறள்வழிக் காண முடிகிறது. இல்லாள் எனக் கூறப்பட்ட பெண் இல்ல வளர்ச்சிக்கு எந்த ஆலோசனையும் கூறியதாகக் காட்டப்படவில்லை. திருவள்ளுவர் காட்டும் பெண்மை மரபைப் பின்பற்றும் பெண்மையாகவே அமைந்துள்ளது. பெண்ணியப் பார்வையில் இதனை ஆணாதிக்கச் சிந்தனையாகவே அறியமுடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. முனைவர் பிரேமா - "கற்புக் கலாச்சாரம்," ப.104.
2. இராயகரன் - "ஆணாதிக்கமும் பெண்ணியமும்", ப.205.
3. முனைவர் சு. துரை - "மார்க்சிய நோக்கு", ப.84.

※ ※ ※

# இன்றைய இளைஞர்களுக்குத் திருவள்ளுவரின் வாழ்வியல் நெறிகள்

**தா. டைட்டஸ் ஸ்மித்**

## இன்றைய இளைஞர்கள்

இன்றைய இளைஞர்களுக்குத் திருவள்ளுவர் கூறும் வாழ்வியல் நெறிகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் அறிவியல் வளர்ச்சி காரணமாகச் சமுதாய அமைவுகளில் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கூட்டுக் குடும்ப அமைப்பு சிதைந்து, தனிக் குடும்ப அமைப்பு மேலோங்கி உள்ளது. பழைய மரபுகளும், சிந்தனைகளும் உடைக்கப்பட்டுப் புதிய சித்தாந்தங்களும், புதிய மரபுகளும் படைக்கப்பட்டுள்ளன.



இவ்விதமான சமுதாயச் சூழ்நிலைகளில்தான் இன்றைய இளைஞர்கள் வளர்கின்றனர். வேலை காரணமாக வெளிநாடுகளுக்கும், பிற மாநிலங்களுக்கும் இளைஞர்கள் செல்கின்றனர். பொருள் சம்பாதித்தல் ஒன்றே அவர்கள் வாழ்வின் குறிக்கோளாக மாறி உள்ளது. இதனால் பிற சமூகச் சூழல்களாலும் பாதிப்படைகின்றனர்.

இவ்விதமான சூழலில் வாழ்கின்ற இருபத்தொன்றாம் நூற்றாண்டு இளைஞர்களுக்கு இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவள்ளுவரின் வாழ்வியல் நெறிகளை நினைவூட்ட வேண்டிய காலக்கட்டத்தில் நாம் உள்ளோம்.

திருவள்ளுவர் இளைஞர்களுக்குத் தேவையான நெறிகளைச் சுட்டிக்காட்டிச்சென்றுள்ளார். அவர் காட்டும் வாழ்வியல் நெறிகளைக் கீழ்க்காணும் வகையில் நாம் அறிந்து கொள்வோம்.

1. அன்புடைமை
2. பகுத்தறிதல்
3. வாய்மை
4. குற்றங்கடிதல்
5. வினைத் தூய்மை
6. கள்ளுண்ணாமை
7. வெகுளாமை

**1. அன்புடைமை**

அன்பு என்பது வாழும் உயிர்களுக்குப் பொதுவான ஒன்றாகும். இது இயற்கையான உணர்வுகளில் ஒன்று. அதனால் தான் மனிதப் பிறவி விழுமியது என்று ஆன்றோரால் போற்றப் பெற்றது. அன்பு வழி வாழ்க்கை வேண்டும். அவ்வழியே வளரும் வாழ்க்கை பண்பும் பயனும் உடையதாகும்.

அன்பு உடையவர் பற்றியும், அன்பு இல்லாதவர் பற்றியும் வள்ளுவர் குறிப்பிடும் போது,

> அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு *(குறள். 72)*

என்று கூறுகின்றார். அதாவது அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர் எனவும், அன்பு உடையார் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர் எனவும் குறிப்பிடுகிறார். மற்றொரு குறளில் அன்பின் தன்மையை,

> அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு
> என்பு தோல் போர்த்த உடம்பு *(குறள். 80)*

என்று குறிப்பிடுகிறார்.

உடலில் உயிர்நிலை பெறுவது அன்பின் வழிபட்டதே யாகும். ஒருவருக்கு உயிர் இருக்கிறது என்பதற்கு அடையாளமே அவ்வன்புதான். அன்பு இல்லாதவருடைய உடம்பு எலும்பும், தோலும் போர்த்தப்பட்ட உடல் ஆகும். எனவே அன்பைப் பேண வேண்டும் என்பது திருவள்ளுவரின் சீரிய சிந்தனையாகும்.

## 2. பகுத்தறிதல்

அறிவுச்சிந்தனை இன்று பல நிலைகளில் மேம்பாடு அடைந்துள்ளது. பல துறைகளில் நாம் முன்னேறி உள்ளோம். திருவள்ளுவர் இந்த அறிவுச் செல்வத்தைக் கண்டடையும் வழிமுறைகளையும் கூறியுள்ளார்.

> எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு *(குறள். 423)*

என்றும்,

> எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு *(குறள்.355)*

என்றும்,

> சென்ற இடத்தான் செலவிடா தீதுஒரீஇ
> நன்றின்பால் உய்ப்பது அறிவு *(குறள். 422)*

எச்சிந்தனைகளானாலும் அச்சிந்தனைகளின் உண்மைப் பொருளை ஆய்ந்து அறிவதுதான் அறிவு. எனினும் வள்ளுவர் 422 ஆம் குறளில் மனத்தைச் சென்ற இடத்தில் விடாமல் தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும் என்று குறிப்பிடுகிறார். கற்றல் மட்டுமே அறிவு அல்ல. நன்மை, தீமைகளையும் அறிவதே அறிவு என்பதைத் திருவள்ளுவரின் சிந்தனையாய்க் கொள்ளலாம்.

## 3. வாய்மை

'வாய்மை' இன்று மறைந்து போன ஒன்றாகக் காணப்படுகிறது. வாய்மை மனிதனுக்குத் தேவையான பண்பாக இருந்தாலும் கூட அது பல சமயங்களில் பின்பற்றப்படுவதில்லை. வாய்மையின் தன்மையைத் திருவள்ளுவர்,

> வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
> தீமை இலாத சொலல் *(குறள். 291)*

> பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கும் எனின் *(குறள். 292)*

என்கிறார்.

அதாவது 'வாய்மை' என்பது பிறருக்கு எந்தவிதத் தீங்கும் செய்யாத சொற்களைச் சொல்வதுதான். பொய்யான சொற்களால் நன்மை விளையாது; பொய்யான சொற்களும் குற்றம் தீர்ந்த நன்மையை விளைவிக்குமானால் வாய்மை என்று கருதத்தக்க இடத்தைப் பெறுவனவாம் என்று கூறுகிறார்.

இந்நிலையினைத்தான் வள்ளலார்,

**உள்ஒன்று வைத்துப் புறம்ஒன்று பேசுவோர்**
**உறவு கலவாமை வேண்டும்**

என்று கூறுகின்றார்.

எனவே வாய்மையை மனித வாழ்வினில் கடைப்பிடித்தால் அது பலவிதமான நன்மையை உண்டாக்க வல்லதாகும்.

### 4. குற்றங்கடிதல்

ஒருவன் எவ்வளவு உயர்ந்த நிலையில் நின்றாலும், தன் உயர்வைத் தானே வியந்து தற்பெருமை கொள்ளக் கூடாது. அது அறிவுக் கண்ணை மறைக்கக் கூடியது. அவ்வாறு மறைத்தால் உண்மை விளங்காமல் போகும். பல தவறுகள் செய்து அழிவு தேடிக் கொள்ள நேரும்.

செய்த குற்றம் சிறிதே ஆனாலும், அதைப் பெரிய குற்றமாகக் கருதி மனம் வருந்துவது சான்றோர் பண்பு. குற்றம் வராமல் காக்கும் ஆற்றல் வளரும். குற்றம் வராமல் காத்துக் கொண்டால், வாழ்க்கைக்குத் தீங்கு நேராது.

**தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பழிநாணு வார்** *(குறள். 433)*

### 5. வினைத்தூய்மை

செய்கின்ற அல்லது செய்யப் போகின்ற செயல் புகழையும் நன்மையையும் தருமா என்று ஆராய்ந்து செய்ய வேண்டும். எவ்வளவு துன்பப்படுவதாக இருந்தாலும் தெளிந்த அறிவுடையவர்கள் இழிவான செயல்களைச் செய்ய மாட்டார்கள் என்பது வள்ளுவரின் வாக்கு. எனவேதான் அவர்,

**ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை** *(குறள். 656)*

என்கிறார். அதாவது பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும்; சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவுற்ற செயல்களை ஒருவன் செய்யக் கூடாது என்கிறார். எனவே வினைதனை மேற்கொள்வோர் இக்குறளினை நினைவில் கொள்ளுதல் நலம் பயக்கும்.

### 6. கள்ளுண்ணாமை

இன்றைய காலகட்டத்தில் கள் என்ற போதைப் பொருள் நவநாகரீகமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. வள்ளுவர் கள்ளுண்பவர்களின் நிலையைக் கீழ்க்கண்ட வகைகளில் குறிப்பிடுகின்றார்.

1. மதிப்பை இழந்து விடுவார்கள்.
2. பகைவரும் அஞ்சமாட்டார்கள்.
3. சான்றோரின் உறவும் போய்விடும்.
4. மற்றவர்கள் முன்பு குற்றவாளியாக நிற்க நேரிடும்.

மேலும் அவர்,

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்;என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி (குறள் 923)

என்ற குறளில் பெற்ற தாயின் முன்பாக மகன் கள்ளுண்டு மயங்குதல் துன்பம் தருவதாகும். அதனால் அந்த மகனைத் தாய் வெறுத்து ஒதுக்குவாள். அப்படியானால் தாயே வெறுத்து ஒதுக்கும்போது மற்ற சான்றோர்கள் அவனை எப்படி சகித்துக் கொள்வார்கள் எனக் கேட்கிறார். ஆகவே கள்ளுண்ணாமை நன்று என்கிறார் வள்ளுவர்.

7. வெகுளாமை

வலியார் மேல்சினம் பிறப்பது உண்டு; ஆனால் அப்போது அது பலிக்காது. மெலியார் மேல்சினம் பிறந்தால் அது அவர்களை வருத்தும்.

சினம் பலிக்காத வலியார் இடத்தில் மட்டும் சினம் கொள்ளாமல் காத்துக் கொள்வது போதாது. அங்கே சினம் காப்பதும் காவாமையும் ஒன்றுதான். சினம் பலிக்குமிடத்தில் காத்துக் கொள்வோனே சினம் காப்பவன். இது அருளுடையார் செயல் என்பார் திருவள்ளுவர்.

செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான்; அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்? (குறள் 301)

செல்லா இடத்துச் சினம்தீது; செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற (குறள் 302)

சினத்தை விடப் பெரிய பகை வேறு இல்லை. படையிடமிருந்து ஒருவன் தன்னைத் தான் காத்துக் கொள்ள விரும்பினால் சினம் வராமல் மனத்தைக் காத்துக் கொள்ள வேண்டும்; காக்கத் தவறினால் சினம் தன்னையே கொன்றுவிடும். ஆகவேதான் சினம் யாரிடம் உள்ளதோ அவர்களையே அழித்துவிடும் என்பது வள்ளுவர் வாக்கு. சினங்கொள்ளாமல் வாழ வழி வகுப்போம்.

எனவே இன்றைய இளைஞர்கள் திருவள்ளுவரின் வாழ்வியல் நெறிகளைத் தம்முடைய வாழ்வில் பின்பற்றினால் அவர்கள் வாழ்வு மேன்மை அடையும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

* * *

# வள்ளுவம் காட்டும் வாழ்வியல் நெறி

நா. தனராசன்

திருக்குறள் நீதி நூல் மட்டுமன்று அது ஒரு வாழ்வியல் நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல, இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினர்க்கும் வழிகாட்டும் புரட்சி நூல். வள்ளுவத்தின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங் களைத் தந்து, இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது.

## பொருண்மைச் சிறப்பு

சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும் தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியமான வள்ளுவத்தில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது. வள்ளுவம் 'தமிழனுக்குரியது' என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவர்க்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதி 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு',' எனப் புகழ்ந்துரைத்தார். வள்ளுவப் பொருட்



சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ் நாகனார் 'எல்லாப் பொருளும் இதன் பால் உள'[2] என்று தெளிந்துரைத்துள்ளார். இவை வள்ளுவத்தின் காலமும் எல்லையும் கடந்து நுண்பொருட்சிச் சிறப்பை உணர்த்துவன.

## வாழ்வியல் பதிவு

வள்ளுவம் தான் தோன்றிய காலத்தொடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச்சொல்லிக் கொடுக்கிறது. வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்கிறது. வள்ளுவம் இலக்கியம் என்னும் நிலையில் நின்று விடாமல் மனித வாழ்வியல் கூறுகளை காட்டும் பதிவுகளாக உள்ளது. இதனை

> சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுகவேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகத்திருக்குறள் படைக்கப் பட்டுள்ளது[3]

என்னும் அறிஞர் கருத்தினால் அறியலாம் வள்ளுவத்தில் உள்ள ஒவ்வொரு குறளும் மனித வாழ்க்கையின் நெறிகளை, வழிமுறைகளைத் தருவன.

> மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் - வாழ்க்கை, வழி நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது திருக்குறள்[4]

என்னும் முத்தமிழ் அறிஞரின் கருத்தும் வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூல் என்பதை உறுதிப்படுத்துகிறது.

## முதன்மைப் பயன்

உயிரினத்தின் உச்சியில் வாழும் இன்றைய மனிதனை, அவனது வாழ்க்கையைப் பகுத்து நோக்கி, அறம், பொருள், இன்பம் ஆகிய முதன்மைப் பயனை அறிய வைத்துப் பயனுடைய வாழ்க்கை வாழ வள்ளுவம் வழி காட்டுகிறது. எதிலும் விரைவும், ஓட்டமும் காட்டும் இந்த நூற்றாண்டு மனிதனுக்கு உள்ளத்தை உறுதிப்படுத்தவும் வாழ்வியல் பொருண்மைத் தெளிவுபெறவும் வள்ளுவர் வாக்கு ஊன்றுகோலாய் இருக்கிறது.

## பன்முகப்பார்வை

தனி மனிதநிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்னும் தளங்களில் மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய பணிகள், எனப் பன்முகக் கூறுகளை ஒழுங்குற அமைத்து ஒரு

முழுமையான வாழ்வியல் கருத்தாக்கத்தை வள்ளுவம் தந்துள்ளது.

தமிழ்ச் சமுதாயத்தில் காலங்காலமாய் இருந்து வந்த மரபுத்தளைகளை உடைத்து, மனிதப் பழக்க வழக்கங்களை மாற்றித் தனிமனிதத் தூய்மையை உருவாக்க வள்ளுவர் முயன்றுள்ளார்.

## மரபுகளைத் தகர்த்தல்

மது அருந்துதலும் புலால் உண்ணுதலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கம் என்னும் நிலையை மாற்றி மனித மனத்தினை, வாழ்வின் பயனைத் தடம்மாற்றும் தவறுகள் என வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

> இலங்கு இழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய மணம் கமழ் தேறல் மடுப்ப நாளும் மகிழ்ந்து இனிது உறைமதி பெரும[5]

எனவும்

> சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே பெரியகட்
> பெறினே யாம்பாடத் தான் மகிழ்ந்தது உண்ணும் மன்னே[6]

என்றும் கள்ளுண்டுகளித்தலையும், கள்ளுண்ணல் பெருமித வாழ்வாக இருந்த மரபுகளையும் பின்பற்றக் கூடிய ஒழுக்கமாய்க் காட்டும் வழக்கினை மாற்றி அதனைச் சமுதாயத் தீமையாக உரைத்தவர் வள்ளுவர்.

'உண்ணற்க கள்ளை' என்றும் அது 'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதது' எனவும் 'நஞ்சுண்பார் கள் உண்பவர்' என்றெல்லாம் மது அருந்துதலின் தீமையை உணர்த்தித் தனிமனித வாழ்வு சிறக்கும் நெறியைக் காட்டியுள்ளார் வள்ளுவர் எனலாம்.

புலால் உண்பது மனித நெறி அல்ல என்பது வள்ளுவரின் கருத்தாக உள்ளது. இன்றைய மனிதர்களின் உணவு முறையில் சைவ உணவே சிறந்தது என்பதை அறிவியல் ஆய்வுகள் மூலம் மேலைநாட்டு உணவியல் வல்லுனர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். தெய்வப் புலவர் வள்ளுவர் 'புலால் மறுத்தல்' என்னும் அதிகாரத்துள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதனை விளக்கமுறச் செய்துள்ளார்.

> **கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
> **எல்லா உயிரும் தொழும்**

என்னும் குறட்பா மனிதன் உயர்வதற்கான வழியைக் காட்டுகிறது. இன்றைய தமிழக அரசு உயிர்க்கொலை, உயிர்ப் பலி கூடாது எனச் சட்டம் கொண்டு வந்துள்ள நிகழ்காலச் சூழலில் வள்ளுவரின் வாழ்வியல் நெறி வெற்றி பெற்றுள்ளதாகவே கருதலாம். அன்பு, பண்பு, நட்பு போன்ற வாழ்வியல் இலக்குகளை எளிய முறையில் மனித மனம் ஏற்கும் வகையில் உரைத்துத் தனி மனித வாழ்க்கையை வள்ளுவர் பண்படுத்தியுள்ளார்.

## அறநெறிப்பட்ட வாழ்க்கை

மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாக அமைய வேண்டும். மனித மனங்களை விரிவுபடுத்தி அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்காகவும் உள்ளது.

மனமாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது. அதுவே அறங்களில் முழுமை. மனித வாழ்க்கை நெறி என்கிறார்.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற**

என்னும் குறட்பா இதனை உணர்த்துகிறது. அறம் என்பது பற்றிய இலக்கிய மரபுசார் கருத்தாக்கத்தை வள்ளுவர் மாற்றியமைக்கிறார்.

> அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாத இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல்'

என்னும் காப்பியக் கருத்தினை மறு ஆய்வு செய்து அறத்திற்குப் புதிய விளக்கங்களைத் தந்தவர் வள்ளுவர். மனத்தூய்மை, ஈகை, காதல் என்னும் தூயநெறிகளை வாழ்வியல் அறமாகக் கொள்ள வேண்டியதின் தேவையை உணர்த்தியுள்ளார்.

## வாய்மை

திருக்குறள் அன்பு, பண்பு, இன்சொல், நன்றியறிதல் என மனித மாண்புகளை விளக்குகிறது. இவற்றைப் பின்பற்றுவோர் பேற்றினையும் ஒதுக்கியவர் அடையும் இழிவினையும் திறம்படக் காட்டுகிறது. 'வாய்மை' என்பதே தலையாய அறம் என்கிறது வள்ளுவம். பொய்மை கோலோச்சும் இக்கால மனித சமுதாயத்திற்கு வள்ளுவர் கருத்துக்கள் மலர்ச்சியை உண்டாக்கும்

மருந்தாகக் கொள்ளலாம். அறங்களில் எல்லாம் வாய்மையே சிறப்புடையது என்பதை

> **பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
> **செய்யாமை செய்யாமை நன்று**

என்னும் குறட்பாவால் அறிய முடிகிறது.

### மும்மை அறம்

மனிதர்களின் வாழ்க்கை நெறியை உயர்த்தும் கோட்பாடாக வள்ளுவம் மூன்று அறங்களைப் பின்பற்றுமாறு வலியுறுத்துகிறது.

1. ஆன்மீக அறம்; 2. ஈதல் அறம்; 3. காதல் அறம்

கடவுளை 'அறிவு, ஆற்றல், அப்பாற்பட்ட நிலை' என்றும் கருதுகோள் நிலையில் வைத்து மனித ஒருமைக்கும் சமுதாய அமைதிக்கும் வள்ளுவர் குறள் வழிக் குரல் கொடுத்துள்ளார். முதற் குறட்பாவில் 'உலகு' என நினைவூட்டி உலகளாவிய நேயத்தை மறைமுகமாக உணர்த்தியுள்ளார். கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் சண்டையிட்டுக் கொள்ளும் மனிதனுக்கு, அவனது மனமாற்றத்திற்கு வள்ளுவம் ஒரு புதிய ஆன்மீக அறத்தை தந்துள்ளது. இதனை,

> வள்ளுவம் கடவுளை நம்புகிறது. ஆனால் அது ஆணும் அல்ல; பெண்ணுமல்ல. வள்ளுவம், காட்டும் கடவுளுக்குக் கோபுரங்கள், கோட்டைகள் இல்லை. வள்ளுவத்தின் கடவுளுக்குக் கணக்கும் இல்லை; வழக்கும் இல்லை. அது பேரறிவு; தூய்மையான அறிவு; குணங்களின் திருவுரு; இன்பத்தின் திருவுரு; அன்பின் திருவுரு; அறத்தின் அடையாளம்![8]

என்னும் அறிஞர் கருத்தும் இதனைத் தெளிவுபடுத்தும்.

### ஈதலறம்

மனிதப் பண்பினை உயர்த்தும் ஒரு நெறி ஈகை. பிறருக்குக் கொடுத்து மகிழும் மனம் பெற்றால் மனிதன் பக்குவம் அடைந்தவனாகிவிடுவான். போட்டியும், பொறாமையும் அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணமும் மனிதனை மிருக நிலைக்குக் கொண்டு செல்லும். ஈகைக் குணம் ஒன்றே மனிதனை மாண்புடையவனாக்கும். வள்ளுவர் ஈகைக் குணமே உயிரின் ஊதியம் என்பர்.

**ஈதல் இசைபட வாழ்தல்; அதுவல்ல**
**ஊதியம் இல்லை உயிர்க்கு**

கொடுத்துப் புகழடையும் வாழ்க்கையே பயனுடைய வாழ்க்கை என்பதைக் குறள் உணர்த்துகிறது.

### காதலறம்

காமத்துப்பால் அறவழிப்பட்ட காதலுறவுகளை எடுத்துரைத்துள்ளது. காதலையும், ஆண்-பெண் உறவையும் வள்ளுவர் நெறிப்படுத்தியுள்ளார். காமத்துப்பாலில் காதல், காதலர் உறவு நிலை ஆகியவற்றை இனிமை பயக்கப் பாடி, அன்பெனும் நெறிக்குள், மனங்களின் சங்கமத்திற்குள், மாசுபடாத வாழ்வியல் படிநிலையை வடித்துத் தந்துள்ளார். களவையும் கற்பையும் வகைப்படுத்தி 'மனிதம்' அடையும் வாழ்க்கை நெறியை வள்ளுவர் தந்துள்ளார்.

பிறன்மனை நயத்தலையும், பரத்தையர் உறவையும், பெருங்குற்றமாகச் சொல்லி அன்புடைய காமத்தைச் சமுதாய அறமாகத் தந்துள்ளார்.

### ஆண் – பெண் சமனியம்

ஆண் - பெண் உறவு நிலை, திருமணத்திற்கு முன்னும் பின்னுமாகக் காதல் நிலை ஆகிய செய்திகளைக் குறள் விரிவாகப் பேசுகிறது. ஆண் - பெண் சமத்துவம் வள்ளுவரின் கொள்கையாகக் காணப்படுகிறது.

ஆண் மேலாதிக்க காலத்தில், அதற்கெதிரான, துணிவுடைய சிந்தனைகளை வழங்கியுள்ள வள்ளுவரின் அணுகுமுறை புரட்சிகரமானது. பெண்களின் உரிமைக்காகவும், உலகியல் மாற்றத்திற்காகவும் அவர் பாடுபட்டுள்ளார். பெண் ஆணுக்கு இணையானவள். ஆற்றல் மிக்கவள் என்பதை,

சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை

என்று ஆற்றலும் அறிவும் நிறையும் மிக்க பெண்களை உலகுக்கு உருவாக்கித் தந்தவர் வள்ளுவர் எனலாம். இத்தகைய வள்ளுவரின் வழிகாட்டல்தான் பிற்காலத்தில் பாவலன் பாரதியை 'வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்' என்று பாட வைத்தது எனலாம்.

### சமுதாயக் கொடுமைகள்

சாதி, மதத்தின் பெயரால் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் சமுதாயக் கொடுமைகள். இதனை மாற்ற வள்ளுவரின்

குறட்பாக்கள் முனைந்துள்ளன. பிறப்பால் இனம் பிரித்த வருணாசிரம முறையை வள்ளுவம் எதிர்க்கிறது. பிறப்பால் அனைவரும் ஒன்றே என ஓங்கி ஒலிக்கிறது.

> **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா**
> **செய்தொழில் வேற்றுமை யான்**

என்னும் குறட்பா வள்ளுவரை ஒரு சமுதாயப் புரட்சியாளராக அடையாளம் காட்டுகிறது.

## பகுத்தறிவு நோக்கு

வள்ளுவரைத் தமிழ்கூறும் உலகில் தோன்றிய முதல் 'பகுத்தறிவாளர்' எனக் கூறலாம். எந்தவொரு கருத்தையும், சிந்தனையையும் உள்ளவாறு ஏற்காமல் பகுத்து நோக்கி, உள்ளத் தெளிவு பெற்று ஏற்க வேண்டும் என்பதே வள்ளுவர் கொள்கை.

> **எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு**

> **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு**

என்னும் குறட்பாக்கள் இதற்குச் சான்றாகும்.

## மானுடத்தின் மலர்ச்சி

வள்ளுவரின் நெம்புகோல் அடிகள் மானுடத்தின் மலர்ச்சி எனலாம். மரபுகளைத் தகர்த்துப் புதுமையை நிலை நிறுத்துவதுப் வள்ளுவரின் சமுதாயப் பணியாக இருக்கிறது.

> **அந்தணர் என்போர் அறவோர்**
> **அன்பின் வழியது உயிர்நிலை**

> **மனநலம் மன்னுயிர்க்குக் காக்கம்**
> **அறத்தால் வருவதே இன்பம்**

என்றெல்லாம் உயரிய சிந்தனைகளை வழங்கி மனித வாழ்க்கையை மலர்ச்சியடையச் செய்தவர் வள்ளுவர் ஒருவரே எனலாம்.

### அடிக்குறிப்புகள்

1. பாரதியார், **பாரதியார் கவிதைகள்,** வானதி பதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1883, ப. 39.
2. மதுரைத் தமிழ் நாகனார், திருவள்ளுவ மாலை, **திருக்குறள் – பரிமேலழகர் உரை,** கழக வெளியீடு, சென்னை, 1964, ப. 408.

3. ந. முருகேச பாண்டியன், 'திருவள்ளுவர் என்ற மனிதர்', வள்ளுவம் இதழ் (வைகாசி - ஆனி) திருக்குறள் பண்பாட்டு ஆய்வு மையம், விருத்தாசலம், மே - 2000.
4. மு. கருணாநிதி, 'திருக்குறள் என் சிந்தனையை நெய்திருக்கும் செந்நூல்', கோட்டம் முதல் குமரி வரை, குமரி முனை திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மலர், ப. 8.
5. மாங்குடி மருதனார், மதுரைக் காஞ்சி, கழக வெளியீடு, சென்னை, பாடல் வரிகள், 778-782.
6. புறநானூறு, கழக வெளியீடு, சென்னை, பாடல் எண். 235.
7. சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை, பாரி நிலையம், சென்னை, எட்டாம் பதிப்பு, 1987, ப. 306.
8. குன்றக்குடி அடிகளார், வள்ளுவத்தின் சமயவியல், வள்ளுவம் இதழ் (பங்குனி - சித்திரை), திருக்குறள் பண்பாட்டு ஆய்வு மையம், விருத்தாசலம், மார்ச்சு 1999, ப. 11.


※ ※ ※

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| Agreement in Dravidian Languages | 100.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| பெரியாரின் பண்பாட்டுப்புரட்சி | 25.00 |
| வ. உ. சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள் | 30.00 |
| தமிழக நாட்டுப்புறக் கலைகள் | 55.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| சங்ககாலக் காசு இயல் | 30.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழில் மருத்துவ இதழ்கள் | 50.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |
| Social Heritage of Tamils | 75.00 |

Pub.No. 476 **இக்கால உலகிற்குத் திருக்குறள் - 2** 85.00